மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி - 627012

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI - 627012

தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்

DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION

TIRUNELVELI

காப்பியங்கள்

இளங்கலை இரண்டாமாண்டு

நான்காம் பருவம்

2025

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012

Learning Objectives	
The Main Objectives of this Course are to :	

- தமிழ் மொழியில் உருவான காப்பிய மரபின் தொன்மையை மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்
- பல்வேறு மதங்கள் சார்ந்த காப்பியங்களையும் மதக் கொள்கைகளையும் மாணவர்கள் அறிந்து கொள்தல்
- மணிமேகலையில் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றிய மணிமேகலை குறித்து அறிந்து கொள்ளுதல்
- மைய மாநில அரசுகள் சார்ந்து நடத்தப்படும் தேர்வுகளுக்கு மாணவர்கள் தயாராகுதல்
- சமகாலத்தில் சேர்ந்த தமிழ் மொழி போன்ற படைப்பாளர்களின் சமகால குறுங்காப்பியங்களை படைக்கும் திறன் பெறுதல்

காப்பியங்கள்

அலகு:1	காப்பிய உருவாக்கம் - சிலப்பதிகாரம், மணிமேகலை
	காப்பியம்- செல்விளக்கம் - தமிழ்க் காப்பிய மரபு - தனிநிலை, தொடர்நிலைச் செய்யுள் - காப்பியமாக வளர்ச்சி பெறுதல் - காப்பிய இலக்கணம் - பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் - காப்பியக் கட்டமைப்பு, சிலப்பதிகாரம் - வேட்டுவ வரி, ஆராய்ச்சிகுறவை. மணிமேகலை - சிறைக்கோட்டம்அறக்கோட்டம் ஆனகதை
அலகு:2	சீவகசிந்தாமணி
	சீவகசிந்தாமணி - பூமகள் இலம்பகம், சூலாமணி - நகரச்சருக்கம்.
அலகு:3	கம்பராமயணம், பெரியபுராணம்
	கம்பராமாயணம் - கடல்தாவு படலம் (1- 35), பெரியபுராணம் - கண்ணப்பநாயனார் புராணம்
அலகு:4	தேம்பாவணி, சீறாபுராணம்
	தமிழ்காப்பியமரபை உள்வாங்கிய படைப்புகள் - தேம்பாவணி நாட்டுப்படலம், சீறாப்புறாணம் - சுரத்திற் புனலழைந்தபடலம்
அலகு:5	இராவணக்காவியம் - தமிழ்ஒலி
	தற்கால காப்பிய மரபு - இதிகாச பாடுபொருள் - இராவணக்காவியம் - தமிழகக்காண்டம் - தாய்மொழிபடலம்(1 - 11) தமிழ்ஒலி வீராயி (குறுங்காவியம்) முழுவதும். தற்கால ஊடகங்களில் காப்பியக் கட்டமைப்பை கண்டறியும் வகையில் வகுப்பறையை பயன்படுத்துதல்.

பாடநூல்கள்

சிலப்பதிகாரம் - ந.மு.வேங்கடசாமி நாட்டார், ராமையா, பதிபகம் சென்னை.
மணிமேகலை - ந.மு.வேங்கடசாமி நாட்டார், சாரதா பதிபகம் சென்னை.
சீவகசிந்தாமணி - உ.வே.சா. (பதி) கழக உரை, சென்னை 1959
சீறாபுராணம் - ாநச்சிகுளத்தார் உரை, த்ரீ எம் பதிப்பகம், சென்னை 1974.
தேம்பாவணி - எம்.ஆர். அடைக்கலசாமி. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை 1992.
கம்பராமயணம் - அ.ச.ஞானசம்பந்தம், கம்பன்டிரஸ்ட், கோவை, 2004
பெரியபுராணம் - குமரகுருபரன் பிள்ளை(பதி) சிரீ காசிமடம், திருப்பனந்தாள் 1964.
இராவணகாவியம் - புலவர் குழந்தை, திராவிடப்பண்ணை பதிபகம். சென்னை.
வீராயி (குறுங்காவியம்) - தமிழ்ஒளி, புகழ் புத்தகாலயம், சென்னை.

அலகு 1

காப்பியம்

காப்பியம் என்பது இலக்கியத்தில் செய்யுள் வடிவங்களில் ஒன்று இதனைப் பெருங்காப்பியம் என்றும். சிறுகாப்பியம் என்று பகுக்கப்பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றோடு ஓர் ஒப்பில்லாத் தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றப்படுவது பொருங்காப்பியமாகும். வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைபொதி பாடல்கள் என்று இது விரிந்து வளர்கிறது. நான்கு பொருள்களும் இடம் பொறாமல் சில பொருட்கள் மட்டும் இடம் பெறும் கதை நூல் சிறுகாப்பியமாகும்.

தமிழின் பழைய இலக்கியங்கள் தனிப்பாடல் திரட்டுகளாவே உள்ளன. தமிழ் மொழியில் 3 அடி முதல் 782 அடியுள்ள நீண்ட பதட்டு வரையில் உள்ள தனிப்பட்டுகளே சங்கஇலக்கியமாக உள்ளன. தொடக்கத்தில் நாட்டுப்புறப்பாடல்களின் ஓசையமைப்பையும் பொருள் வகையையும் ஓட்டி வளர்க்கப்பட்ட தனிப்பாடல்களே தமிழ் இலக்கியத்தின் தோற்றமாகும்.

சங்கப் பாடல்களில் நாட்டியக் கலையில் நன்கு தேர்ந்த விறலியர், கூத்தர், பொருநர் என்போர் குறிப்புகள் உள்ளன. ஆயினும் சங்க காலத்தில் கதை தழுவிய நாடகங்களும் கதைகளும் பல இருந்திருக்கக் கூடும். ஆனால் அந்த கதைகள் திரண்டு வளர்ந்து காப்பியங்களாக உருவம் கொள்ளவில்லை கற்றறிந்த புலவோர் அந்தக் கதைகளை எழுதிப்போற்ற மனக்கொள்ளாதது காரணமாக இருக்கலாம்.

காப்பியம் சொல் விளக்கம்

காப்பு ு இயம் ஸ்ரீ காப்பியம் ஆகியது பழய மரபுகளைக் குறிப்பாக இலக்கண மரபுகளைக் காத்து நிற்பது காப்பியம் என்ற பொருளில் தமிழில் இச்சொல் முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இயம்பு என்பது சொல் எனப் பொருள்படும் ஒரு வினைச்சொல் இசைக் கருவிகளை இயம் என்பது பண்டைய கால வழக்கு பல இசைக்கருவிகளை இயக்கிக் கொண்டு குன்றுதோறாடும் முருகன் குறும் பல்லியத்தின் எனப் போற்றப்படுகிறான். பல இசைக் கருவிகளால் இயம்புவோர் இயலார். தொல்காப்பியம் என்னும் நூலின் பெயரில் ‘‘காப்பியம்’’ என்னும் சொல் உள்ளது. தொல் ு காப்பு ு இயம் என்பது தொல்காப்பியம் இது தமிழில் இருக்கும் மொழியியலி வாழ்கியல் தொன்மையை இயம்பும் நூலாகும் இவற்றால் ‘‘காப்பியம்’’ என்பது தூய தமிழ்சொல் என்பது பெறப்படும்.

பாகுப்பாடு

காப்பியத்தை ஐம்பெருங்காப்பியங்கள் என்றும் ஐஞ்சிறு காப்பியங்கள் என்றும் பிற்காலத்தில் பாகுப்பாடு செய்துள்ளனர். இந்தப் பாகுப்பாடு தோன்றிய காலம் கருத்தில் கொள்ளத்தக்கது. தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரயுகத்தை அடுத்துதான் காப்பிய இலக்கியம் எழுச்சிப் பெற்றது அதற்கு வித்திட்டவர் இளங்கோ அடிகள் ஆவார். இவர் எழுதிய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்திற்கு முன் பல காப்பியங்கள் இருந்திருக்கலாம் என்று அறிஞர்கள் கூறினாலும். தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் காப்பியம் தொல்காப்பியமாகும். அதன் அடியொற்றியே பல காப்பியங்கள் தமிழ் இலக்கியத்தில் வளர்ந்துள்ளது.

ஐம்பெருங்காப்பியம் என்னும் தொடரை 14-ம் நூற்றாண்டு மயிலை நாதர் குறிப்பிடுகிறார் தணிகையுலா நூல் வழங்கியுள்ள தான் அடிப்படையில் இருந்தப் பாகுபாடு தோன்றியது.

தமிழ்க் காப்பிய மரபு

காப்பியம் என்றாலே தமிழர்களுக்குச் சிலப்பதிகாரம், சிந்தாமணி மதலான ஐம்பெருங் காப்பியங்களும், சூலாமணி, நீலகேசி முதலான ஐஞ்சிறு காப்பியங்களுமே நினைவுக்கு வரும் அதனை தொடா்ந்து. பெரியபுராணம், கம்பராமயணம், வில்லிபாரதம் முதலான பலவும் நம் நினைவுக்கு வருவதுண்டு 20-ம் நூற்றாண்டில் பாரதியாரின் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனின் பாண்டி பரிசு, புலவா் குழந்தையின் இராவண காவியம், கண்ணதாசனின் ஏசு காவியம் போன்றனவும் காப்பியங்களாகவே எண்ணப்படுகிறது.

தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம் இவை மட்டுமே தமிழ்நாட்டுக் கதைகளை மூலக் கருவாக கொண்டு இயற்றப்பட்டுள்ளன. மற்றவை சமசுகிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாவோ உள்ளது.

காப்பிய மரபு

காப்பிய இலக்கணங்களாகச் சொல்லப்பட்டவற்றைப் பின்பற்றிய காப்பியக் கவிஞர்கள் பலரும், சில இயல்புகளை ஒரே மாதிரியாகத் திரும்பத் திரும்ப அமைத்தனர். அவை காப்பிய மரபுகள் ஆயின. எடுத்துக்காட்டாக மலை, கடல், நாடு, வளநகர், பருவம் என்னும் வருணனைகளைத் தனித்தனியே நாட்டுப் படலம், நகர்ப் படலம் எனப் பகுத்து விரிவாகப் பாடினர். இவை காப்பியக் கதைப் போக்கிற்குப் பெரிதும் துணை செய்யாத நிலையிலும் இம் மரபுகள் காப்பிய அமைப்பில் வேரூன்றி விட்டன.

காப்பியத்தைத் தொடங்கும் போது வாழ்த்து, வணக்கம், வருபொருள் கூறுவதும் மரபாக உறுதிப்பட்டது. காப்பியத்தின் முதல் சொல் பெருமைக்குரிய சொல்லாக அமைய வேண்டும் என்பது கூட மரபு ஆனது. எடுத்துக்காட்டாக, கம்பராமாயணம் உலகம் யாவையும் எனத் தொடங்குகிறது. பெரியபுராணம் உலகெலாம் உணர்ந்து எனத் தொடங்குகிறது.

காப்பியத்தினுள் தலையாய அறக் கருத்துகளைப் பாவிகமாக (உட்பொதிவாக) வைப்பது அல்லது வெளிப்படையாகச் சொல்வது மரபு ஆயிற்று.

இயற்கையிறந்த நிகழ்வுகளும் (ஸுரிநசயெவரசயட), எதிர்வரும் நிகழ்வுகளை உணர்த்துவதான கனவு, நிமித்தம், வான்மொழி (அசரீரி) ஆகியவையும் காப்பியங்களில் இடம்பெறுவது மரபாயிற்று.

காப்பியங்களில் கதைநிகழ்ச்சி, இடையில் தொடங்கப் பெறுவதும், பல கலைகள் குறிக்கப்படுவதும், இசைப்பாடல், கட்டுரை ஆகியவை இடம் பெறுதலும் மரபாகக் காணப்படுகின்றன.

தொடர்நிலைச் செய்யுள்

ஒரு செய்யுளும் அடுத்த செய்யுளும் சொல்லாலோ, பொருளாலோ ஒன்றற்கு ஒன்று தொடர்புடையதாக அமையும் செய்யுள் வகை, தொடர்நிலைச் செய்யுள் எனப்படும்.

முன்நின்ற செய்யுளோடு எவ்விதப் பொருள் எதிர்பார்ப்பும் நெருக்கமும் இன்றிப் பல செய்யுள்கள் அடுத்தடுத்து அமையத் தொகுக்கப்படும் தொகைநிலைச் செய்யுளிலிருந்து வேறுபட்டு, ஒன்றை ஒன்று அவாவி (எதிர்பார்த்து) நிற்குமாறு தொடர்ந்து அமையும் வகையாதலின் இது தொடர்நிலைச் செய்யுள் எனப் பெயர் பெற்றது.

சொற்றொடர் முடிவு ஒரு செய்யுளுக்குள்ளேயே முடிந்துவிடும் முத்தகச் செய்யுள்களும், சொற்றொடர் முடிவு ஒன்றுக்கு மேற்பட்ட செய்யுள்களில் தொடர்ந்து சென்று நின்று பொருள் முடிவு பெறும் குளகச் செய்யுள்களும் இத்தொடர்நிலைச் செய்யுள் வகை நூல்களின் பகுதியாக அமைவது இயல்பு.

தொடர்நிலைச் செய்யுள் இருவகைகளை உடையது. அவை பொருள் தொடர்நிலைச் செய்யுள், சொல் தொடர்நிலைச் செய்யுள் ஆகியனவாகும்.

பொருளினும் சொல்லினும் இருவகை தொடர்நிலை (தண்டியலங்காரம் : 6)

காப்பிய வளர்ச்சி மற்றும் காப்பிய இலக்கணம்

காப்பியம்

ஒரு சமுதாயம் ஒரு குறித்த காலத்தில் எவ்வகை இலக்கியத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்குமோ, எவ்வகை இலக்கியத்தைக் கற்று மகிழ்ந்து இன்புறுமோ அவ்வகை இலக்கியம் அக்காலத்தில் உண்டாவது இயல்பு. சமுதாயத்தின் நிலைக்கும் சூழ்நிலைக்கும் அவற்றில் உண்டாகும் இலக்கியத்திற்கும் மிக நெருங்கிய, விட்டு விலகாத தொடர்புண்டு என்பர் எஸ்.வையாபுரிப் பிள்ளை. அதன்படி, காப்பியங்கள் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் அக்காலத் தேவைக்கேற்பத் தோன்றியுள்ளன.

காப்பியம் என்னும் சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி ”நால்வகை உறுதிப் பொருள்களையும் கூறுவதாய்க் கதை பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்” என்று பொருள் கூறுகிறது. காப்பியம் என்பது உயர்ந்த குறிக்கோள் உடைய தலைவனின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் தொடர்நிலைச் செய்யுள் எனலாம். காப்பியம் என்னும் சொல் சீவக சிந்தாமணியில் முதன் முதலில் இடம் பெற்றுள்ளது. இதனைக் ‘காப்பியக் கவிகள்’ (சீவக.சிந். - 1585) என்னும் சொல்வழி உணரலாம்.

காப்பிய இலக்கணம்

தமிழில் கிடைக்கப் பெற்ற முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் காப்பியத்திற்குரிய இலக்கணம் எதையும் வரையறுக்கவில்லை. கி.பி.12ஆம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்காரம் என்னும் நூலே காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. ‘பெருங்காப்பிய நிலை பேசுங்காலை’ எனத் தொடங்கிக் ‘கற்றோர் புனையும் பெற்றியது என்ப’ என முடிவுறும் நூற்பாவில் அந்நூல் காப்பிய இலக்கணத்தை விரிவாகக் கூறுகிறது. அந்நூற்பா வருமாறு:

பெருங்காப்பிய நிலை பேசுங்காலை

வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றில் ஒன்று

ஏற்புடைத்தாகி முன்வர இயன்று

நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்

தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்.....

இந்நூற்பா உணர்த்தும் காப்பிய இலக்கணப் பொருளாவது:

(1) வாழ்த்து, வணக்கம், வருபொருள் ஆகியவற்றில் ஒன்றினைப் பெற்று வரும்.

(2) அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் கொண்டதாகக் திகழும்.

(3) தன்னேரில்லாத தலைவனை உடையது.

(4) மலை, கடல், நாடு, நகர், பருவம், இருசுடர் ஆகியவற்றை உள்ளடக்கி வரும்.

(5) நன்மணம் புரிதல், பொன்முடி கவித்தல், புனல் விளையாட்டு, சிறுவரைப் பெறுதல், புலவியில் புலத்தல், கலவியில் கலத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறுதல் வேண்டும்.

(6) மந்திரம், தூது, செலவு, போர், வெற்றி ஆகியவற்றைப் பெற்று வரும்.

(7) சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் உட்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றைப் பெறும்.

(8) இலக்கிய நயமும் பாவமும் பெற்று விளங்கும்.

(9) கற்றோரால் இயற்றப் பெறுவதாக அமையும்.

காப்பியக் காலம்

காப்பியக் காலம் எனத் தமிழில் எக்காலத்தையும் அறுதியிட்டுக் கூறவியலாது. கி.மு. 2ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரம் தொடங்கி, கால இடைவெளி விட்டுக் காப்பியங்கள் தோற்றம் பெறுவதைக் காப்பியங்களின் கால வரலாறு உணர்த்துகின்றது. ஒரே சீராக அன்றி, நெருங்கியும் இடைவிட்டும் இருபதாம் நூற்றாண்டு வரை காப்பிய இழை காணப்பெறுகின்றதெனக் கூறுவர்.

காப்பிய வகைகள்

தமிழில், பெருங்காப்பியம், சிறுகாப்பியம், வளர்ச்சிக் காப்பியம், கலைக் காப்பியம் எனக் காப்பியம் பல வகைப்படும்.

பெருங்காப்பியம்

பெருங்காப்பியம் என்பது தண்டியலங்காரத்தில் கூறப்படும் இலக்கணங்களோடு கவிஞர்களால் இயற்றப்பெறுவது. ஐம்பெருங் காப்பியங்கள் எனப் போற்றப்பெறுவன சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியனவாம்.

சிறு காப்பியம்

சிறு காப்பியம் என்பது தண்டியலங்காரத்தில் கூறப்படும் பெருங்காப்பிய இலக்கணத்தில் ஏதேனும் சில குறைந்து வருவதாகவோ அல்லது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள் ஏதேனும் ஒன்று குறைந்து வருவதாகவோ கவிஞர்களால் இயற்றப்பெறுவது ஆகும்.

பிற்காலத்தில் இக்காப்பியங்கள் தொடர்நிலைச் செய்யுளின் வகையைச் சார்ந்தது என்றும், தொடர்நிலைச் செய்யுளிலும் பொருள் தொடர்நிலையைச் சார்ந்தது என்றும் அறிஞர்கள் கருதினர்.

உதயணகுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி, நாககுமார காவியம் ஆகியவை சிறுகாப்பியங்களாகும்.

வளர்ச்சிக் காப்பியம்

இக்காலத்தில் இலக்கியத் திறனாய்வாளர்கள் காப்பியங்களை இருவகைப் பிரிவுகளாகப் பாகுபடுத்தியுள்ளனர். ஒன்று வளர்ச்சிக் காப்பியம், இரண்டு கலைக் காப்பியம்.

வளர்ச்சிக் காப்பியம் (வளர்நிலைக் காப்பியம்) என்பது பழங்கதை நிகழ்ச்சிகள் வாய்மொழியாகப் பரவிப் பல கிளைக் கதைகளைத் தன்னுள் கொண்டு உருப்பெறுவது' ஓர் இனம் அல்லது மக்கள் கூட்டத்தால் உருவாக்கம் பெற்ற கவிஞரால் இலக்கிய வடிவமாகப் படைக்கப்பெறுவது.

பிற முதன்மையான காப்பியங்கள்

பெருங்காப்பிய இலக்கணத்தோடு பொருந்திய கம்பராமாயணம், பெரிய புராணம் போன்றனவும், வில்லிபுத்தூரார் பாரதம், சீறாப்புராணம், தேம்பாவணி போன்றனவும் முதன்மையான காப்பியங்களுள் அடங்கும். இவற்றைத் தவிர வேறு சில காப்பியங்களும் தமிழில் காணப்படுகின்றன. 20ஆம் நூற்றாண்டில் இரட்சணிய யாத்திரிகம், பாரதசக்தி மகா காவியம், இராவண காவியம், பூங்கொடி போன்ற காப்பியங்களும் மிகச் சிறந்த காப்பியங்களாகத் திகழ்கின்றன. சான்றாக,

மகாபாரதம், இராமாயணம், ஹோமரின் இலியதம் போன்ற காப்பியங்களைக் குறிப்பிடலாம்.

கலைக் காப்பியம்

கலைக் காப்பியம் என்பது கவிஞர் தம் கற்பனையில் விளைவது. கற்பனைக்கு ஏற்றவாறு கதாபாத்திரங்களையும் அவற்றின் அடிப்படையில் நிகழ்ச்சிகளையும் கொண்டு இலக்கிய வடிவமாக வடிவெடுப்பது. இதற்குச் சான்றாக, 20ஆம் நூற்றாண்டில் உருப்பெற்ற காவியங்களான பாரத சக்தி மகா காவியம், இராவண காவியம் போன்ற காப்பியங்களைக் குறிப்பிடலாம்.

வேட்டுவ வரி

கடுங்கதிர் திருகலின் நடுங்கஞர் எய்தி

ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப

நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்தாங்கு

ஐயை கோட்டத் தெய்யா வொருசிறை

வருந்துநோய் தணிய இருந்தனர் உப்பால்

1 உரை 5

கடுங்கதிர் திருகலின் - அங்ஙனம் அடைந்தவர், ஞாயிற்றின் வெவ்விய கதிர்கள் முறுகுதலால், நடுங்கு அஞர் எய்தி ஆறு செல் வருத்தத்துச் சீறடி சிவப்ப நறும்பல் கூந்தல் குறும் பல வுயிர்த்து ஆங்கு - மணமுள்ள பலவாக முடிக்கப்படும் கூந்தலையுடைய கண்ணகி வழிச்செல் வருத்தத்தினால் மிக்க துன்பத்தினை அடைந்து சிறிய அடிகள் சிவத்தலினால் வல்லா நடையோடும் குறுகப் பலவாக மூச்செறிதலின், ஐயை கோட்டத்து எய்யா ஒருசிறை வருந்து நோய் தணிய இருந்தனர் - அத்துன்பந் தணியும் வண்ணம் கொற்றவையின் கோயிலில் யாவரும் அறியாத ஒரு பக்கத்து இருந்தனர்

நடுங்கு அஞர் - நடுங்குதற்கேதுவாகிய துன்பம் மிக்க துன்பம். வருந்துநோய் என்பதும் அது. உயிர்த்து - உயிர்த்தலின் என்க. ஆங்கு - அசை அப்பொழுதென்றுமாம். கூந்தல் திருகலின் வருத்தத்து அஞர் எய்திச் சிவப்ப உயிர்த்தலின் அடைந்தவர் நோய் தணியக் கோட்டத்து ஒரு சிறை இருந்தனர் என்க.

வழங்குவில் தடக்கை மறக்குடித் தாயத்துப்

பழங்கட னுற்ற முழங்குவாய்ச் சாலினி

6 உரை 7

வழங்கு வில் தடக்கை மறக் குடித் தாயத்து - அம்பினை வழங்கும் வில்லை யேந்திய பெரிய கையையுடைய மறவர் குடியிற் பிறந்த உரிமையை உடைய, பழங்கடன் உற்ற முழங்கு வாய்ச் சாலினி - முன்பு நேர்ந்த கடனைக் கொடுத்துப் போந்த ஒலிக்கும் வாயினையுடைய தேவராட்டி

வழங்கும் வில் - அம்பை வழங்கும் வில் என்க. தாயும் - உரிமை. முழங்கு வாய் - கொக்கரிப்பினையுடைய வாய். சாலினி - தேவராட்டி. பழங்கடன் - ஊரார் நேர்ந்த கடன்.

தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்

கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப

இடுமுள் வேலி எயினர்கூட் டுண்ணும்

நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடிக்

8 உரை 11

தெய்வம் உற்று மெய்ம்மயிர் நிறுத்துக் கை யெடுத்து ஓச்சிக் கானவர் வியப்ப - மறவர் வியக்கும் வண்ணம் தெய்வத் தன்மையை அடைந்து மெய்ம்மயிர் சிலிர்த்துக் கைகளை எடுத்து உயர்த்தி, இடு முள் வேலி எயினர் கூட்டுண்ணும் நடுவூர் மன்றத்து அடிபெயர்த்து ஆடி - முள்வேலி இடப் பெற்ற மறவர் கூடி ஒருங்கு உண்ணுதலையுடைய ஊர் நடுவில் உள்ள மன்றத்திலே கால்களைப் பெயர்த்து ஆடி

கானவர் வியப்ப ஆடி என்க. வேலியை உடைய ஊர் எயினர் கூட்டுண்ணுமூர் என இயைக்க. கூட்டுண்டல் - கவர்ந்த பொருளைச் சேர்ந்துண்டல். நடுவூர் என்பது முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை.

கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன

வல்வில் எயினர் மன்றுபாழ் பட்டன

12 உரை 13

கல் என் பேர் ஊர்க் கண நிரை சிறந்தன - பழங்கடன் கொடாமையின் ஒலியினையுடைய பகைவரது பெரிய ஊர்க் கண்ணே திரண்ட ஆனிரைகள் மிக்கன, வல்வில் எயினர் மன்று பாழ் பட்டன - பகைவரை அழிக்கும் வலிய வில்லினைக் கொண்ட மறவருடைய மன்றுகள் பாழ்பட்டன

மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவாது

அறக்குடி போலவிந் தடங்கின ரெயினரும்

14 உரை 15

மறக் குடித் தாயத்து வழி வளஞ் சுரவாது அறக்குடி போல் அவிந்து அடங்கினர் எயினரும் - மறக்குடியிற் பிறந்த உரிமையை உடைய மறவரும் வழிக்கண் பறிக்கும் வளம் சுரக்கப் பெறாது அறவர் குடிப் பிறந்தோர் போலச் சினங் குறைந்து செருக்கு அடங்கி விட்டனர் '

வழிவளம் - வழிப்போவாரைப் பறிக்கும் வளம். மறக்குடித் தாயத்து எயினர் அடங்கினர் என்க. இனி, தாயத்து வழிவளம் என்பதற்குத் தாயமாகிய வழிவளம் எனலுமாம் ' ஈண்டு அத்து அல்வழிக்கண் வந்ததென்க. இது முன்னிலைப் புறமொழி.

கலையமர் செல்வி கடனுணி னல்லது

சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்

16 உரை 17

கலை அமர் செல்வி கடன் உணின் அல்லது - கலையாகிய ஊர்தியினையுடைய கொற்றவை தான் கொடுத்த வெற்றியின் விலையாகிய உயிர்ப்பலியை உண்டாலல்லது, சிலை அமர் வென்றி கொடுப்போள் அல்லள் - நும் வில்லிற்குப் பொருந்திய வெற்றியைக் கொடாள்

சிலை அமர்வென்றி எனபதற்கு வில் விரும்பும் வென்றி எனப் பொருள்கொண்டு, உடையான தொழில் உடைமைமேல் ஏற்றப்பட்டது எனக் கூறினும் பொருந்தும்.

மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்

கட்டுண் மாக்கள் கடந்தரு மெனவாங்கு

18 உரை 19

மட்டு உண் வாழ்க்கை வேண்டுதிர் ஆயின் கட்டு உண் மாக்கள் கடந்தரும் என ஆங்கு - வழிப்போவார் வளனைப் பறித்து உண்ணும் மறவர்காள் நீவிர் கள்ளுண்டு களிக்கும் வாழ்க்கையினை விரும்புவீராயின் கொற்றவைக்கு நேர்ந்த கடனைத் தம்மின் என்று சொல்ல '

கட்டல் - பறித்தல். மாக்கள் - விளி. தாருமென்பது தருமெனக் குறுகிற்று. ஆங்கு - அசை. இனி, எயினர் குடிப் பெண் ஒருத்தியைக் கொற்றவை கோலங் கொள்வித்தல் கூறுகின்றார்.

இட்டுத் தலையெண்ணும் எயின ரல்லது

சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்

20 உரை 21

இட்டுத் தலை எண்ணும் எயினர் அல்லது சுட்டுத் தலை போகாத் தொல்குடிக் குமரியை - தாம் கருதிய பகைஞர் தலையைத் தாம் அறுத்திட்டு எண்ணுவதல்லது பகைவர் கருதுவது முடிவு போகாமைக்குக் காரணமாகிய மறவரது பழைய குடிக்கண் பிறந்த குமரியை

தம் வன்மையாற் பிறரை அழித்தற் குரியரே யன்றிப் பிறர் தம்மை அழித்தற் குரியர் அல்லர் என்பதாம். சுட்டு - கருத்து. இனி, தலைகள் அரிந்து வைக்கப் பிறரால் எண்ணப்படுமதல்லது நோயாற் செத்துச் சுடப்பட்டுப் போகாத குடி எனலுமாம்.

சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்

குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி

இளைசூழ் படப்பை இழுக்கிய வேனத்து

வளைவெண் கோடு பறித்து மற்றது

முளைவெண் திங்க ளென்னச் சாத்தி

22 உரை 26

சிறுவெள் அரவின் குருளை நாண் சுற்றிக் குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி - சிறிய வெள்ளிய பாம்பின் குட்டியாகப் பண்ணிய பொன் நாணால் குறுகிய நெளிந்த கூந்தலை நீண்ட சடையாகச் சுற்றிக் கட்டி, இளை சூழ் படப்பை இழுக்கிய ஏனத்து - கட்டு வேலி சூழ்ந்த தோட்டப் பயிரை அழித்த பன்றியின், வளை வெண் கோடு பறித்து - வளைந்த வெள்ளிய

கொம்பினைப் பிடுங்கி, மற்று அது முனை வெண்டிங்கள் என்னச் சாத்தி - அதனை இளைய வெள்ளிய பிறை என்னும்படி சாத்தி

குமரியைக் கூந்தலைக் கட்டி என்றது, 1"முதன்முன் ஐவரிற் கண்ணென் வேற்றுமை, சினைமுன் வருத றெள்ளி தென்ப" என்னுஞ் சூத்திரத்துத் "தெள்ளிது" என்பதனாற் கொள்க. "அரவின் குருளை" என்றதனை, 2 நாயே பன்றி புலிமுய னான்கும், ஆயுங் காலைக் குருளை என்ப" என்னும் சூத்திரத்து "ஆயுங்காலை" என்பதனாற் கொள்க. சுற்றிக் கட்டி யென்க. இனி, கூந்தலைச் சடையாகக் கட்டி நாணினைக் குருளையாகச் சுற்றி என்னலுமாம். படப்பை ஆகுபெயர். இனி, படப்பை இழுக்கிய ஏனம் என்பதற்குப் படப்பைக்கண் பட்ட ஏனம் என்றுமாம்.

மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற

மாலை வெண்பற் றாலிநிரை பூட்டி

வரியும் புள்ளியு மயங்கு வான்புறத்து

உரிவை மேகலை உடீஇப் பரிவொடு

27 உரை 30

மறங் கொள் வயப்புலி வாய் பிளந்து பெற்ற - தறு கண்மையை உடைய வலிய புலியினை வாயைப் பிளந்து கொண்ட, மாலை வெண்பல் தாலி நிரை பூட்டி - ஒழுங்காகக் கோத்த வெள்ளிய பல்லினாலாகிய தாலியை வரிசைப்படக் கட்டி, வரியும் புள்ளியும் மயங்கு வான் புறத்து உரிவை மேகலை உடீஇ - கோடுகளும் புள்ளிகளும் கலக்கப் பெற்ற தூய புறத்தினையுடைய தோலினை மேகலையாக உடுத்து

பல்லொழுங்கை நிரைத் தாலியாகப் பூட்டி யெனலுமாம். உரிவை - உரி.

உரிவை மேகலை உடீஇப் பரிவொடு

கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்

30 உரை 31

பரிவொடு கரு வில் வாங்கிக் கையகத்துக் கொடுத்து - வருத்தத்துடன் வயிர வில்லை வளைத்து அவள் கைக்கண் கொடுத்து

பரிவு - அன்புமாம். வில் வாங்கி என்பதற்கு வில்லை எடுத்து எனலும் அமையும். வாங்குதல் - எடுத்தல்.

திரிதரு கோட்டுக் கலைமே லேற்றிப்

32 உரை 32

திரிதரு கோட்டுக் கலைமேல் ஏற்றி - முறுக்குண்ட கொம் பினையுடைய கலையின்மீது இருக்கச் செய்து

திரிதல் - முறுக்குதல். 1 “திரிமருப்பிரலை” என்பது காண்க. ஊரில் திரிதரும் எனலும் ஆம்.

பாவையுங் கிளியுந் தூவி யஞ்சிறைக்

கானக் கோழியும் நீனிற மஞ்ஞையும்

பந்துங் கழங்குந் தந்தனர் பரசி

33 உரை 35

பாவையும் - மதனப்பாவை முதலியனவும், கிளியும் தூவி அம் சிறைக் கானக் கோழியும் நீல் நிற மஞ்ஞையும் - கிளியும் சிறு மயிரினையுடைய அழகிய சிறகினையுடைய காட்டுக் கோழியும் நீலநிறம் பொருந்திய மயிலும், பந்தும் கழங்கும் தந்தனர் பரசி - பந்தும் கழங்கும் ஆகிய இவற்றைக் கொடுத்துத் துதித்து

தூவி - சிறகின் மயிர் ’ சூட்டும் ஆம். தந்தனர் - முற்றெச்சம்.

பவண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்

புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்

பூவும் புகையும் மேவிய விரையும்

ஏவல் எயிற்றியர் எந்தினர் பின்வர

36 உரை 39

வண்ணமும் சுண்ணமும் தண்ணறும் சாந்தமும் - வண்ணக்குழம்பும் பொற்பொடியும் குளிர்ந்த மணமுள்ள சந்தனமும், புழுக்கலும் நோலையும் விழுக்கு உடை மடையும் - புழுக்கப்பட்டனவும் எள்ளுண்டையும் நிணத்தொடு கூடிய சோறும், பூவும் புகையும் மேவிய விரையும் - மலர்களும் புகையும் விரும்பிய மணப்பொருள்களும் ஆய இவற்றை, ஏவல் எயிற்றியர் ஏந்தினர் பின் வர - பணி செய்யும் மறப்பெண்கள் தாங்கினராய்ப் பின்னே செல்ல

வண்ணம் - தோள் முதலியவற்றில் நிறமெழுதுங் குழம்பு. புழுக்கல் - அவரை, துவரை முதலியன. நோலை - எள்ளுண்டை. விழுக்கு - நிணம். மடை - சோறு. ஏந்தினர், முற்றெச்சம்.

ஆறெறி பறையுஞ் சூறைச் சின்னமும்

கோடும் குழலும் பீடுகெழு மணியும்

கணங்கொண்டு துவைப்ப அணங்குமுன் னிறீஇ

40 உரை 42

ஆறு எறி பறையும் சூறைச் சின்னமும் - வழிபறிக்குங் கால் கொட்டும் பறையும் சூறைகொள்ளுங்கால் ஊதும் சின்னமும், கோடும் குழலும் பீடு கெழு மணியும் - கொம்பும் புல்லாங்குழலும் பெருமை பொருந்திய மணியும் ஆய இவை, கணங்கொண்டு துவைப்ப அணங்குமுன் நிறீஇ - தம்மிற் கூடி ஒலிப்ப இவற்றை அவ் வணங்கின் முன்னே நிறுத்த

கோடு - துத்தரிக்கொம்பு என்ப ' சங்குமாம். நிறீஇ என்பதனை நிறுத்தவெனத் திரிக்க. ''அணங்கு மெய்ந்நிறீஇ'' எனப் பாடங்கொண்டு, அக் குமரிமேல் அணங்கை யேற்றி என்றுரைப்பர் அரும் பதவுரையாசிரியர்.

விலைப்பலி யுண்ணும் மலர்பலி பீடிகைக்

கலைப்பரி யூர்தியைக் கைதொழு தேத்தி

43 உரை 44

விலைப்பலி உண்ணும் மலர்பலி பீடிகை - தான் தந்த வெற்றியின் விலையாகிய பலியினை யுண்ணுகின்ற விரிந்த பலி பீடத்தை முதலிற் றொழுது, கலைப்பரி ஊர்தியைக் கை தொழுது ஏத்தி - பின்னர் விரைந்த செலவினையுடைய கலையை ஊர்தியாகவுடைய கொற்றவையைக் கையால் வணங்கி நாவாற் போற்றி

பலியுண்ணும் பீடிகை பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது உண்ணும் ஊர்தியை எனலுமாம். மலர்ப்பலி பீடிகை எனப் பாடங்கொண்டு, மலர்ப்பலி பீடிகை என்றது கோட்டத்தை எனவுரைப்பர் அரும்பதவுரை யாசிரியர். ஏத்துதல் சாலினியின் தொழில். பீடிகைக்கு அருகே உள்ள தலைஊர்தியைத் தொழுது எனலுமாம். கலைப் பரியூர்தி - தெய்வ வுருக்கொண்ட குமரி.

இணைமலர்ச் சீறடி இனைந்தனள் வருந்திக்

கணவனோ டிருந்த மணமலி கூந்தலை

இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி

தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து

ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய

திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப்

45 உரை 50

இணைமலர்ச் சீறடி இனைந்தனள் வருந்திக் கணவனோடு இருந்த மணமலி கூந்தலை - தம்முள் ஒத்த மலர்போலும் சிறிய அடிகள் வருந்தினவளாய்த் துன்புற்றுத் தன் கணவனொடு தங்கி யிருந்த மணம் நிறைந்த கூந்தலையுடைய கண்ணகியைச் சுட்டி, இவளோ - இப் பெண், கொங்கச் செல்வி - கொங்கு நாட்டிற்குச் செல்வமாயுள்ளவள், குடமலை யாட்டி - குடமலை நாட்டினையாளும் செல்வி, தென்தமிழ்ப் பாவை - தென்றமிழ் நாட்டின் பாவை, செய்த தவக் கொழுந்து - உலகோர் செய்த தவத்தின் கொழுந்து போல்வாள், ஒரு மா மணியாய் உலகிற்கு ஓங்கிய திரு மா மணி எனத் தெய்வம் உற்று உரைப்ப - இவ்வுலகிற்கு ஒப்பற்ற முழு மாணிக்கம் போன்று உயர்ந்த அழகிய பெண்மணி என்று சாலினி தெய்வத்தன்மை அடைந்து இவளை மிகுத்துக் கூற

சாலினி கண்ணகிக்கு மேல் நிகழ்வது கூறினாள். கண்ணகி இன்னதன்மையளாதலைக் ‘‘கொங்கிளங் கோசர்’’ என்னும் உரை பெறு கட்டுரையா னறிக.

பேதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டியென்று

அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி

விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப

51 உரை 53

பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி என்று - அது கேட்ட கண்ணகி இம் மூதறிவுடையாள் மயக்கத்தாற் கூறினாள் என்று, அரும்பெறற் கணவன் பெரும்புறத்து ஒடுங்கி விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப - பெறுதற்கரிய கணவனது பெரிய புறத்தே மறைந்து புதிய புன்முறுவல் தோற்றினவளாய் நிற்க

தமது பெருமையினைப் பிறர் கூறுங்கால் நாணுதல் பெரியோர் இயல்பு. ‘‘விருந்தின் மூரல்’’ என்றார், இவள் நெடுநாள் முறுவல் ஒழிந்திருந்தாள் என்பது தோன்ற. நாணினால் மறைந்தாள் என்க.

மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி

நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்

54 உரை 55

மதியின் வெண்தோடு சூடும் சென்னி - பிறையாகிய வெள்ளிய இதழைச் சூடும் சென்னியினையும், நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்து - நெற்றியினைத் திறந்து விழித்த இமையாத கண்ணினையுமுடைய

மதி - ஈண்டுப் பிறை ’ இன்சாரியை அல்வழிக்கண் வந்தது.

பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி

நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து

56 உரை 57

பவள வாய்ச்சி - பவளம் போன்ற வாயினையுடையாள், தவள வாள் நகைச்சி - வெள்ளிய ஒளி பொருந்திய நகையினையுடையாள், நஞ்சு உண்டு கறுத்த கண்டி - நஞ்சினை உண்டதனாற் கறுத்த கண்டத்தினையுடையாள்

நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து

அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்

57 உரை 58

வெஞ்சினத்து அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள் - கொடிய சினத்தினையுடைய வாசுகி என்னும் பாம்பாகிய நாணைப் பூட்டி நெடிய மேருவாகிய வில்லை வளைத்தவள்

அரவு நாண் என்பதற்கேற்ப மலை வில் என உரைக்கப்பட்டது. வில்லை வளைத்து நாண் பூட்டியவள் எனப் பிரித்துக் கூட்டுக.

துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி

59 உரை 59

துளை எயிற்று உரகக் கச்சு உடை முலைச்சி - நஞ்சு பொருந்தும் துளையுள்ள எயிற்றினையுடைய பாம்பாகிய கச்சணிந்த முலையினையுடையாள்

கரியின் உரிவை போர்த்தணங் காகிய

அரியின் உரிவை மேகலை யாட்டி

61 உரை 62

கரியின் உரிவை போர்த்து அணங்கு ஆகிய அரியின் உரிவை மேகலை யாட்டி - யானையின் தோலைப் போர்த்துப் வருத்துந் தன்மையுடைய சிங்கத்தின் தோலை மேகலையாக உடுத்தவள்

அணங்கு - வருத்தம்.

சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி

வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை

63 உரை 64

சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி இடப் பக்கத்துச்- சிலம்பும் வலப் பக்கத்து வீரக் கழலும் ஒலிக்கும் சிறிய அடிகளையும், வலம்படு கொற்றத்து வாய் வாட் கொற்றவை - மேலான வெற்றியையும் வினை வாய்க்கப் பெறும் வாளினையுமுடைய கொற்றவை

இடப்பாகம் கொற்றவையும் வலப்பாகம் சிவபெருமானும் ஆய உருவமாகலான் ''சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி'' என்றார். வலம் - மேன்மை.

இரண்டுவே றுருவில் திரண்டதோள் அவுணன்

தலைமிசை நின்ற தையல் பலர்தொழும்

65 உரை 66

இரண்டு வேறு உருவில் திரண்ட தோள் அவுணன் - தலையும் உடலும் இருவேறு வடிவினையுடைய திரண்ட தோளினையுடைய அவுணனது, தலைமிசை நின்ற தையல் - தலையின் மீது நின்றவள்

இரண்டு வேறு உருவு - உடலின் வேறுபட்ட கடாவின் தலையுடைய வடிவு. அவுணன் - மகிடாசுரன். விக்கிரமாசுரன் என்பாரு முளர்.

தலைமிசை நின்ற தையல் பலர்தொழும்

அமரி குமரி கவுரி சமரி

சூலி நீலி மாலவற் கிளங்கிளை

66 உரை 68

பலர் தொழும் அமரி - யாவரும் வணங்கும் இறப்பில்லாதவள், குமரி - இளமை பொருந்தியவள், கவுரி - கௌர நிறத்தையுடையவள், சமரி - போரில் வல்லவள், சூலி - சூலம் ஏந்தியவள், நீலி - நீலநிறமுடையோள், மால் அவற்கு இளங்கிளை- திருமாலுக்கு இளையவள்

இளங்கிளை - இளையவுறவினர் ’ இச் சொல், தம்பி, தங்கை, மைத்துனர், தோழர் முதலிய இளைய முறையினர் பலரையுங் குறிக்க வழங்கும். அமரி - அலங்கரித்தலில்லாதவள் ’ குமரி - அழிவில்லாதவள் ’ கிளை - கிளி போல்வாள் எனலுமாம். கிளை - கிள்ளை.

ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்

பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை

ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை

69 உரை 71

ஐயை - தலைவி, செய்யவள் - திருமகள், வெய்ய வாள் தடக்கைப் பாய்கலைப் பாவை - கொடிய வாளினைப் பெரிய கையின்கண் தாங்கிய தாவும் கலையை ஊர்தியாகவுடைய பெண், பைந்தொடிப் பாவை ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை - ஆராயும் கலைகளை உணர்ந்த பாவை, பசிய வீரவளையை அணிந்தவள், அரிய அணிகலங்களை அணிந்த பாவைபோல்வாள்

ஐயை என்பதற்கு வென்றி மகள் எனவும், அருங்கலப் பாவை என்பதற்கு இரத்தினப் பாவை எனவும் கூறுவாரு முளர்.

தமர்தொழ வந்த குமரிக் கோலத்து

அமரிளங் குமரியும் அருளினள்

வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே’

72 உரை 74

தமர் தொழ வந்த குமரிக் கோலத்து அமர் இளங் குமரியும் - திருமாலும் நான்முகனும் முதலியோர் வணங்கத் தோன்றிய கன்னியின் கோலத்தினையுடைய யாவரும் விரும்பும் அக் குமரியும், அருளினள் வரியுறு செய்கை வாய்ந்ததால் எனவே-இவள் கொண்ட வரிக்கோலம் வாய்ப்புடையது என்று கண்டோர் கூற அருளினாள்.

தொழ வந்த குமரி - கொற்றவை. இளங்குமரி - எயினர் குலக் கன்னி. தமர் தொழ வந்த குமரியும் என இயைத்து, மறவர் தொழவந்த என்றுரைத்தலுமாம். சாலினி கொண்ட கோலம் வாய்ப்புடைத்தென்று அருளினாள் என்பர் அடியார்க்கு நல்லார். சாலினி உற்று நிறுத்து ஓச்சி வியப்ப ஆடிக் கடன் தாரும் என, குமரியைக் கட்டிச் சுற்றிச் சாத்திப் பூட்டி உடீஇக் கொடுத்து ஏற்றிப் பரசிப் பின்வரத் துவைப்ப நிறுத்த, ஏத்திக் கூந்தலை, செல்வி, ஆட்டி, பாவை, கொழுந்து, மணி எனத் தெய்வம் உற்று உரைப்ப, கண்ணகி ஒடுங்கி நிற்ப, சென்னியையும் நாட்டத்தையுமுடைய வாய்ச்சி, நகைச்சி, கண்டி, வளைத்தோள், முலைச்சி, ஏந்தி, மேகலையாட்டி, கொற்றவை, தையல் ஆகிய குமரிக் கோலத்துக் குமரியும் அருளினள் என முடிக்க. உரைப்பாட்டுமடை - உரைப்பாட்டை நடுவே மடுத்தல்.

உரைப்பாட்டுமடை.

வேறு

நாகம் நாறு நரந்தம் நிரந்தன

ஆவும் ஆரமும் ஓங்கின எங்கணும்

சேவும் மாவும் செறிந்தன கண்ணுதல்

பாகம் ஆளுடை யாள்பலி முன்றிலே ’

1 உரை 1

‘‘நாகநாறு .... முன்றிலே’’ நாகம் நாறு நரந்தம் நிரந்தன - மணம் நாறும் சுரபுன்னையும் நாரத்தையும் ஒழுங்கு படவுள்ளன’ ஆவும் ஆரமும் ஓங்கின - ஆச்சாவும் சந்தனமும் உயர்ந்து வளர்ந்தன எங்கணும் சேவும் மாவும் செறிந்தன - எவ்விடத்தும் சேமரமும் மாமரமும் நெருங்கின கண்ணுதல் பாகம் ஆளுடையாள் பலி முன்றிலே - நெற்றியிற் கண்ணினையுடைய சிவபெருமானது இடப் பாகத்தை ஆள்பவளாகிய கொற்றவையின் பலிகொள்ளும் முன்றிலின்கண் ’

பலிமுன்றிலின்கண் நிரந்தன, ஓங்கின, செறிந்தன எனக் கூட்டுக. பின்வருவனவற்றையும் இவ்வாறே கொள்க. “எங்கணும்“ என்பதனை எங்கணும் கூட்டுக. ஆரம் - ஆத்தி எனலும், சே - உழிஞ்சில் எனலும் ஆம். ”ஐயுங் கண்ணு மல்லாப் பொருள் வயின், மெய்யுருபு தொகா விறுதி யான” என்ற விதியால் கண்ணுருபு இறுதியிற் றொக்கது.

வேறு

செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்

கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன

பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கிளந்

திங்கள் வாழ்சடை யாள்திரு முன்றிலே

2 உரை 2

‘‘செம்பொன் ...... முன்றிலே’’ செம்பொன் வேங்கை சொரிந்தன - வேங்கை மரங்கள் சிவந்த பொன் போன்ற பூக்களைச் சிந்தின’ சேயிதழ் கொம்பர் நல் இலவங்கள் குவிந்தன - நல்ல இலவமரங்கள் தம் கொம்புகளிலுள்ள சிவந்த பூவிதழ்களை உதிர்த்துக் குவித்தன ’ பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு - புன்க மரங்கள் பழம் பூக்களாகிய வெள்ளிய பொரியைச் சிந்தின ’ இளந்திங்கள் வாழ் சடையாள் திருமுன்றிலே - பிறைதங்கிய சடையை உடையாளது அழகிய முன்றிலின்கண்

பொன் - பொன்போன்ற பூ. குவிந்தன - குவித்தன’ விகாரம். பொங்கர் - பழம்பூ கொம்பு, பொதுளல் எனலுமாம்.

மரவம் பாதிரி புன்னை மணங்கமழ்

குரவம் கோங்கம் மலர்ந்தன கொம்பர்மேல்

அரவ வண்டினம் ஆர்த்துடன் யாழ்செயும்

திருவ மாற்கிளை யாள்திரு முன்றிலே

3 உரை 3

“மரவம் ...... முன்றிலே” மரவம் பாதிரி புன்னை மணம் கமழ் குரவம் கோங்கம் மலர்ந்தன - வெண்கடம்பும் பாதிரியும் புன்னையும் மணம் வீசும் குராவும் கோங்கமும் ஆய இவை பூத்தன’ கொம்பர்மேல் அரவ வண்டு இனம் ஆர்த்து உடன்யாழ் செயும் - அவற்றின் கொம்புகளில் ஒலியினையுடைய வண்டுக் கூட்டம் முழங்கி வீணைபோலப் பாடும்’ திருவ மாற்கு இளையாள் திருமுன்றிலே-திருமாலுக்கு இளையாளுடைய முன்றிலின் கண்

யாழ்செயும் - யாழின் இசைபோலப் பாடும். திருவ என்பதன் கண் அ அசை. இவை முன்றிலின்சிறப்பு.

கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றவிப்

பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ

பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த

விற்றொழில் வேடர் குலனே குலனும்

4 உரை 4

“கொற்றவை .... குலனும்” கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்ற இப் பொற்றொடி மாதர் தவம் என்னை கொல்லோ - துர்க்கை தனக்கு அணியாகச் கொண்டவற்றைத் தான் அணியும் அணியாகக் கொண்டு நின்ற இந்தப் பொன்னாலாய தொடியினையுடைய குமரி முன் செய்த தவம் யாதோ ’ பொற்றொடி மாதர் பிறந்த குடிப் பிறந்த விற்றொழில் வேடர் குலனே குலனும் - பொன் வளையலணிந்த இக் குமரி பிறந்த குடியின்கண் தோன்றிய விற்றொழிலில் வல்ல மறவர் குலமே சிறந்த குலம்

கொற்றவை அணிகொண்டு நின்ற மாதர் - மறவர் தொல்குடிக் குமரி. இதனை, “தொல்குடிக் குமரியைச், சிறுவெள் ளரவின் குருளை நாண் சுற்றி” என்பது முதலாகத் தொடங்கும் அடிகளானுணர்க. சாலினி யென்பர் அடியார்க்கு நல்லார். கொல், ஓ - அசைகள்.

ஐயை திருவின் அணிகொண்டு நின்றவிப்

பையர வல்குல் தவமென்னை கொல்லோ

பையர வல்குல் பிறந்த குடிப்பிறந்த

எய்வில் எயினர் குலனே குலனும்

5 உரை 5

“ஐயை திருவின்...........குலனும்” ஐயை திருவின் அணி கொண்டு நின்ற இப் பையரவு அல்குல் தவம் என்னை கொல்லோ - கொற்றவையின் அழகினை ஒப்ப அழகு கொண்டு நின்ற இந்த அரவின் படம் போன்ற அல்குலினையுடையாள் செய்த தவம் யாதோ, பையரவு அல்குல் பிறந்த குடிப்பிறந்த எய் வில் எயினர் குலனே குலனும் - இக் குமரி பிறந்த குடிக்கண் தோன்றிய அம்பினை எய்யும் வில்லினையுடைய வேடர் குலமே சிறந்த குலம்

திரு - அழகு. பை - படம். அரவுப்பை என மாறுக.

பாய்கலைப் பாவை அணிகொண்டு நின்றவிவ்

ஆய்தொடி நல்லாள் தவமென்னை கொல்லோ

ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த

வேய்வில் எயினர் குலனே குலனும்

6 உரை 6

''பாய்கலைப் பாவை.......குலனும்'' பாய்கலைப்பாவை அணிகொண்டு நின்ற இவ் ஆய்தொடி நல்லாள் தவம் என்னை கொல்லோ - தாவும் கலையை ஊர்தியாக வுடைய கொற்றவையின் அழகினைக் கொண்டு நின்ற இந்த அழகிய வளையலையுடைய பெண்ணின் தவம் எத்தகையதோ' ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த வேய் வில் எயினர் குலனே குலனும் - இக் குமரி தோன்றிய குடியிற் பிறந்த மூங்கில் வில்லினையுடைய மறவர்களது குலமே சிறந்த குலம்

இவை மூன்றும் 1 ''வெறியறி சிறப்பின்'' என்னும் சூத்திரத்து ''வாடாவள்ளி'' என்பதனான், வள்ளிக் கூத்து எனப்படும்' என்னை? ''மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக், கண்ட முருகனுங் கண் களித்தான் - கண்டே, குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப், பிறமக ணோற்றாள் பெரிது'' என்பது வள்ளி, ''ஏவில் எயினர்'' எனப் பாடங்கொள்வர் அரும்பதவுரை யாசிரியர்.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்

கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்

வானோர் வணங்க மறைமேல் மறையாகி

ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய் '

7 உரை 7

''ஆனைத்தோல்........நிற்பாய்'' ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரி உடுத்து - யானையின் தோலை மேலே போர்த்துப் புலியின் தோலை அரைக்கண் உடுத்து, கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால் - காட்டின்கண் எருமைக் கடாவினது கரிய தலையின் மீது நின்றாய்' வானோர் வணங்க மறைமேல் மறையாகி - தேவர் யாவரும் வணங்க வேதங்களுக்கு அப்பாற்பட்ட மறைந்த பொருளாய், ஞானக் கொழுந்தாய் நடுக்கு இன்றியே நிற்பாய் - அறிவின் கொழுந்தாகிச் சலித்தல் இன்றி யாண்டும் நிலைத்து நிற்பவளே இ∴து என்ன மாயமோ

வணங்க மறையாகிக் கொழுந்தாய் நிற்பாய் போர்த்து உடுத்து நின்றாய் இ∴தென்ன மாயமோ என்க. பின் வருவனவற்றையும் இவ்வாறே மாறுக. கானம் என்பதனை எருமைக்கு அடையாக்கினு மமையும். எருமை - சாதிப்பெயர்.

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்

கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்

அரியரன்பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்

விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்

8 உரை 8

''வரிவளைக்கை.....நிற்பாய்'' வரிவளைக்கை வாள் ஏந்தி மா மயிடற் செற்று - வரிகள் பொருந்திய வளையணிந்த கையில் வாளைத் தாங்கிப் பெரிய மகிடாசுரனை அழித்து, கரிய திரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால் - கரிய முறுக்குண்ட கொம்பினையுடைய கலைமான்மீது நின்றாய்' அரி அரன் பூமே லோன் அகமலர்மேல் மன்னும் - திருமாலும் சிவபிரானும் நான் முகனும் ஆகிய இவர்களுடைய உள்ளத் தாமரையில் நிலைபெற்றிருக்கும், விரிகதிர் அஞ்சோதி விளக்காகியே நிற்பாய் - விரிந்த கதிர்களையுடைய அழகிய ஒளிவிடும் விளக்கமாகி நிற்பவளே, இ∴தென்ன மாயமோ

அகமலர்மேல் மன்னும் விளக்காகி நிற்பாய் என்க.

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்

செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்

கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து

மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்

9 உரை 9

''சங்கமும்.....நிற்பாய்'' சங்கமும் சக்கரமும் தாமரைக் கை ஏந்தி - சங்கினையும் சக்கரத்தினையும் தாமரை போன்ற கைகளில் தாங்கி, செங்கண் அரிமான் சின விடைமேல் நின்றாயால் - சிவந்த கண்களையுடைய சிங்கமாகிய சினம் பொருந்திய விடைமீது நின்றாய், கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து - கங்கையினைச் சடைமுடியின்கண் அணிந்த நெற்றிக் கண்ணையுடையோனது இடப் பாகத்து, மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய் - பெண்ணுருவாகி வேதங்கள் போற்ற நிற்பாய் இ∴தென்ன மாயமோ

அரிமான் ஊர்தியென்பார் விடையென்றார் ' விடையும் ஊர்தி யாகலின். இவை மூன்றும் முன்னிலைப் பரவல்.

ஆங்குக்,

கொன்றையுந் துளவமுங் குழுமத் தொடுத்த

துன்று மலர்ப்பிணையல் தோள்மே லிட்டாங்

கசுரர் வாட அமரர்க் காடிய

குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே

10 உரை 10

ஆங்கு - அவ்விடத்து ' கொன்றையும் துளவமும் குழுமத் தொடுத்த - கொன்றை மலரும் துளபமும் சேரக் கட்டிய, துன்று மலர்ப்பிணையல் தோள்மேல் இட்டு - மலர் செறிந்த மாலையைத் தோளின்மீது சூடி, ஆங்கு அசுரர் வாட அமரர்க்கு ஆடிய குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே - குமரியின் கோலத்தொடு அசுரர் வாடும் வண்ணம் தேவர்க்கு வெற்றியுண்டாக ஆடிய மரக்காற் கூத்து ஆடுதற்கு உள்படும்

உள்படும் - ஒருப்படும் ' ஆடும் என்றுமாம். இது வென்றிக் கூத்து.

ஆய்பொன் னரிச்சிலம்பும் சூடகமும் மேகலையும்

ஆர்ப்ப வார்ப்ப

மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல்

வாளமலை யாடும் போலும்

மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல்

வாளமலை யாடு மாயின்

காயா மலர்மேனி யேத்தி வானோர் கைபெய் மலர்மாரி

காட்டும் போலும்

11 உரை 11

''ஆய்பொன் ...... காட்டும் போலும்'' ஆய்பொன் அரிச் சிலம்பும் சூடகமும் மேகலையும் ஆர்ப்ப ஆர்ப்ப - அழகிய பொன்னாற் செய்த பருக்கையினையுடைய சிலம்பும் வளையும் மேகலையும் ஒலிப்ப, மாயஞ்செய் வாள்அவுணர் வீழ நங்கை மரக்கால்மேல் வாள் அமலை ஆடும் போலும் - வஞ்சம் புரிகின்ற வாட்டொழிலிற் சிறந்த அசுரர்கள் அழியுமாறு கொற்றவை மரக்காலின்மீது நின்று வாட்கூத்தினை ஆடா நிற்கும் மாயஞ் செய் வாள்அவுணர் வீழ நங்கை மரக்கால் மேல் வாள் அமலை ஆடும் ஆயின் - வஞ்சம் செய்யும் வாளினையுடைய அசுரர் ஒழிய இவள் மரக்காலின்மீது ஒள்வாள் அமலை ஆடுவாளாயின், காயாமலர் மேனி ஏத்தி வானோர் கை பெய் மலர் மாரி காட்டும் போலும் - இவளுடைய காயாம் பூப் போலும் மேனியைப் போற்றித் தேவர்கள் தம் கைகளாற் சொரியும் மலர்கள் மழையைக் காட்டாநிற்கும்

இது கூத்துள் படுதல். மாயஞ்செய் வாளவுணர் என்றது உண்மை யுருவோடு எதிர்நின்று வெல்ல நினையாது, பாம்பு, தேள் முதலிய வஞ்ச உருக்கொடு வந்ததனால் என்க. இதனை, காய்சின அவுணர் கடுந்தொழில் பொறாஅள், மாயவள் ஆடிய மரக்கால் ஆடலும் என்பதனானுணர்க. இனி, அவரது இயற்கைத் தன்மை கூறியவாறு எனலும் அமையும். பகைவர் ஒழிந்த பின் வாள்வீரர் ஆடுங் கூத்தினை வாள் அமலை யென்பர் தொல்காப்பியர். 1 ''தானை யானை'' என்னும் சூத்திரத்துப் பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோராடும் அமலையும் என்பது காண்க. இத் துறையினை ''ஒள்வாளமலை'' என்பர் வெண்பாமாலையுடையார். கூத்து மலர் மாரியைக் காட்டும் என்றுமாம். போலும் - ஒப்பில் போலி. பின் இரு செய்யுட்களில் வருவனவும் இன்ன.

உட்குடைச் சீறூரொருமகன்ஆ னிரைகொள்ள வுற்ற காலை

வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டும் போலும்

வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டின் வேற்றூர்க்

கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக் காட்டும் போலும்

12 உரை 12

''உட்குடை...........காட்டும் போலும்'' உட்கு உடைச் சீறூர் ஒருமகன் ஆனிரை கொள்ள உற்ற காலை - பகைவர்க்கு அச்சம் விளைத்தலையுடைய சீறூரிடத்துள்ள ஒப்பற்ற வீரன் ஆனிரையைக் கொள்ளத் தொடங்கும்பொழுது, வெட்சி மலர் புனைய வெள்வாள் உழத்தியும் வேண்டும் போலும் - நிரை கவரும் போர்ப் பூவாகிய வெட்சி மலர் மாலையைத் தான் சூட வெள்ளிய வாளையுடைய கொற்றவையும் விரும்பும், வெட்சி மலர் புனைய வெள்வாள் உழத்தியும் வேண்டின் - வெட்சி மாலையைச் சூடக் கொற்றவை விரும்பின், வேற்றூர்க் கட்சியுட் காரி கடிய குரல் இசைத்துக் காட்டும் போலும் - பகைவர் ஊரைச் சூழ்ந்த காட்டிடத்துக் கரிக் குருவி தனது கொடிய குரலால் அவர்க்கு வரும் கேட்டினைக் கூறி உணர்த்தும்

வெள்வாளுழத்தியும் வேண்டுமென்றது அவள் உடன் செல்வ ளென்றபடி. இச் செய்யுளும் அடுத்த செய்யுளும் நிரைகவர்தற்கண் ''கொற்றவை நிலை'' கூறலின் வெட்சிப் புறனடை எனப்படும் ' என்னை? 1 மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த, கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே என்றாராகலான். இனி, வெண்பா மாலை இலக்கணம் நோக்கின் இவை வெட்சித்திணைக் கொற்றவை நிலையின்பாற் படும் ' என்னை? 2 ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக், கூளி மலிபடைக் கொற்றவை - மீளி, அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார், முரண்முருங்கத் தான்முந் துறும் என்றாராகலான்.

வேறு

கள்விலை யாட்டி மறுப்பப் பொறாமறவன் கைவில் ஏந்திப் புள்ளும் வழிப்படரப்

புல்லார் நிரைகருதிப் போகும் போலும் புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப்

போகுங் காலைக் கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையும் கொடுமரமுன்

செல்லும் போலும்

13 உரை 13

''கள்விலை...........செல்லும் போலும்'' கள் விலையாட்டி மறுப்பப் பொறா மறவன் கைவில் ஏந்தி - கள்ளினை விற்பாள் இவன் பழங்கடன் கொடாமையான் கள் கொடாது மறுக்க அதனைப் பொறாத வீரன் கைக்கண் வில்லினைத் தாங்கி, புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரை கருதிப் போகும் போலும் - பறவைகள் தன் பின்னே தொடர்ந்து வரப் பகைவரது ஆனிரையைக் கொள்ளக் கருதிப் போவான், புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரை கருதிப் போகும் காலை - அங்ஙனம் போகுங்கால், கொள்ளுங் கொடி எடுத்துக் கொற்றவையும் கொடுமரம் முன் செல்லும் போலும் - தான் கைக்கொண்ட சிங்கக் கொடியினை எடுத்துக் கொற்றவையும் வில்லின் முன்னே செல்வாள்

புள் வழிப்படர்தல் அம் மறவன் அழிக்கும் பகைவர் ஊனை உண்பதற்கென்க. இனி, ''புள்ளும் வழிப்படர'' என்பதற்குப் புள் நிமித்தம் தன் கருத்திற்கு ஒத்துச் செல்ல எனலும்

பொருந்தும். கொடு மரம் முன்செல்லும் என்றது வில் ஏந்திய அவ் வீரன்முன் செல்லும் என்றவாறு. இனி, கொடியையும் கொடுமரத்தையும் எடுத்து அவ் வீரன்முன் செல்லும் எனினும் பொருந்தும். இது தன்னுறு தொழில்.

வேறு

இளமா வெயிற்றி இவைகாண்நின் னையர்

தலைநாளை வேட்டத்துத் தந்தநல் ஆனிரைகள்

கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல

நல்லியாழ்ப் பாணர்தம் முன்றில் நிறைந்தன

14 உரை 14

''இளமாவெயிற்றி ..... நிறைந்தன'' இளமா எயிற்றி - மாமை நிறத்தையுடைய இளமை பொருந்திய வேட்டுவ மகளே, இவை காண் நின் ஐயர் தலைநாளை வேட்டத்துத் தந்தநல் ஆனிரைகள் - இவற்றைக் காண்பாய் நினது தந்தை முதலியோர் முன்னாளில் வேட்டையிற் கவர்ந்த நல்ல பசுக் கூட்டங்கள் ' கொல்லன் துடியன் கொளைபுணர் சீர் வல்ல நல்லியாழ்ப் பாணர் தம் முன்றில் நிறைந்தன - வேல் வடித்துத் தரும் கொல்லனும் துடி கொட்டும் துடியனும் பாட்டுக்களைத் தாளத்துடன் புணர்க்கவல்ல நல்ல யாழினையுடைய பாணரும் எனப்பட்ட இவர்களுடைய முன்றிலின்கண் நிறைந்துள்ளன

நின் ஐயர் தந்த நிரைகள் முன்றிலில் நிறைந்தன இவைகாண் என முடிக்க. இது, 11 ''படை இயங்கரவம்'' என்னும் சூத்திரத்துக் ''கொடை'' என்னுந் துறைப்பாற்படும்.

முருந்தேர் இளநகை காணாய்நின் னையர்

கரந்தை யலறக் கவர்ந்த இனநிரைகள்

கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்

புள்வாய்ப்புச் சொன்னகணி முன்றில் நிறைந்தன

15 உரை 15

''முருந்தேரிளநகை .... நிறைந்தன'' முருந்து ஏர் இளநகை காணாய் - மயிலிறகின் அடியை ஒத்த அழகிய முற்றாத நகையினையுடையாய் காண்பாய், நின் ஐயர் கரந்தை அலறக் கவர்ந்த இன நிரைகள் - உனது ஐயன்மார் கரந்தையார் அலறும் வண்ணம் கவர்ந்துகொண்டு வந்த பசுக் கூட்டங்கள், கள்விலையாட்டி. நல் வேய் தெரி கானவன் புள்வாய்ப்பச் சொன்ன கணி முன்றில் நிறைந்தன - கள் விற்பவளும் நல்ல உளவறிந்து கூறும் ஒற்றனும் புள் நிமித்தப் பொருத்தம் கூறிய நிமித்திகனும் ஆகிய இவர்களது முன்றிலின்கண் நிறைந்தன

கரந்தையார் - ஆனிரை மீட்போர். வேய் - ஒற்று. புள் - நிமித்தம். கணி - நிமித்திகன் ' சோதிடன்.

வேறு

முகயமல ருண்கண்ணாய் காணாய்நின் னையர்

அயலூர் அலற எறிந்தநல் ஆனிரைகள்

நயனில் மொழியின் நரைமுது தாடி

எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன'

துறைப்பாட்டுமடை.

16 அஉரை 16

''கயமலர் ...... நிறைந்தன'' கயமலர் உண் கண்ணாய் காணாய் - குளத்துக்கண் தாமரை மலர்போலும் மையுண்ட கண்களையுடையாய் நீ காண்பாய், நின் ஐயர் அயலூர் அலற எறிந்த நல் ஆனிரைகள் - நினது ஐயன்மார் பகைவர் ஊர் வருந்திக் கூவும் வண்ணம் அவர்களை எறிந்துகொண்டு வந்த பசுக்கூட்டங்கள், நயன்இல் மொழியின் நரைமுது தாடி எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன -- கொடுஞ் சொல்லினையும் நரைத்த தாடியினையும் உடைய முதிர்ந்த மறவரும் மறத்தியருமாகிய இவர்களுடைய முன்றிலின்கண் நிறைந்துள்ளன

கயமலர் - பெரியமலர் எனலுமாம் ' 1"தடவும் கயவும் நளியும் பெருமை" என்பவாகலான். நயன் இல்மொழி - இனிமையில்லாத சொல். நயனில் மொழியை எயினர் எயிற்றியர்க்கும், நரைத் தாடியை எயினர்க்கும் இயைக்க. இதுவும் மேற்கூறிய செய்யுளும் ஆகிய இரண்டும் "படை இயங்கரவம்" என்னும் சூத்திரத்துப் "பாதீடு" என்னும் துறையின்பாற் படும். இம் மூன்றினையுமே "கொடை" என்னுந் துறைப்பாற் படுத்துவர் அடியார்க்கு நல்லார். இம் மூன்றும் கண்டார் கூற்று.

துறைப்பாட்டு மடை - துறைப்பாட்டுக்களை இடையே மடுத்தல்,

வேறு

சுடரொடு திரிதரு முனிவரும் அமரரும்

இடர்கெட அருளும்நின் இணையடி தொழுதேம்

அடல்வலி எயினர்நின் அடிதொடு கடனிது

மிடறுகு குருதிகொள் விறல்தரு விலையே

17 உரை 17

''சுடரொடு.........விலையே" சுடரொடு திரிதரு முனிவரும் அமரரும் - ஞாயிற்றுடனே சுழன்று திரிதலைச் செய்யும் இருடிகளும் தேவர்களும் ஆகிய இவர்களுடைய, இடர்கெட அருளும் நின் இணை அடி தொழுதேம் - துன்பம் ஒழியும் வண்ணம் அருள் செய்கின்ற நினது இரண்டு திருவடிகளையும் வணங்கினேம் ' அடல் வலி எயினர் நின் அடி தொடு கடன்இது மிடறு உகு குருதிகொள் விறல் தரு விலையே - பகைவரை அடுதலையுடைய வலி மிக்க மறவர் நின் அடியினைத் தொட்டுச் சூளுற்ற வெற்றிக்கு விலையாகத் தரும் கடன் மிடற்றினின்றும் சிந்துகின்ற உதிரமாகும் இக் கடனை நீ கொள்வாயாக

ஞாயிற்றின் வெம்மை உயிர்களை வருத்தா வண்ணம் அதனைத் தாம் ஏற்று இம் முனிவர் சுடரொடு திரிகின்றனர் என்க. இதனை, 1"நிலமிசை வாழ்நர் அமரல் தீரத், தெறுகதிர்க் கனலி

வெம்மைதாங்கிக், காலுண வாகச் சுடரொடு கொட்கும், அவிர்சடை முனிவரும்” என்பதனானும், 2விண்செலன் மரபி னையர்க் கேந்திய தொருகை” என்ற அடியின் விரிவுரையானும் உணர்க. விறல் தருவிலை - நீ தந்த வெற்றிக்கு விலையாகத் தரும் என்க. வேற்றுப்புலம் போகி நல்வெற்றங் கொடுத்துக், கழிபேராண்மைக் கடன் பார்த்திருப்பவளாகலான், விறல்தரு விலைக்கடன் கொள் என்றார் என்க. கடனாகும் குருதியாகிய இதனைக் கொள் எனலுமாம். எயினர் - தன்மையிற் படர்க்கை வந்த வழுவமைதி. பின்வருவனவும் இவ்வாறே கொள்க.

வேறு

அணிமுடி அமரர்தம் அரசொடு பணிதரு

மணியுரு வினைநின மலரடி தொழுதேம்

கணநிறை பெருவிறல் எயினிடு கடனிது

நிணனுகு குருதிகொள் நிகரடு விலையே

18 உரை 18

‘‘அணிமுடி.....அடுவிலையே” அணிமுடி அமரர்தம் அரசொடு பணிதரும் - அழகிய முடிசூடிய தேவர்கள் தம் அரசனாகிய இந்திரனொடு வந்து வணங்குகின்ற, மணி உருவினை நின மலர் அடிதொழுதேம் - நீலமணி போலும் நிறத்தினையுடையாய் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை வணங்கினேம்’ கண நிரை பெறு விறல் எயின் இடுகடன் இது நிணன் உகு குருதி கொள் நிகர் அடுவிலையே - திரண்ட ஆனிரையைப் பெறும் வெற்றியினையுடைய மறவர்கள் பகைவரை அடுதற்குக் காரணமாகிய விலையாக இடுங்கடன் நிணத்தொடு சிந்தும் உதிரமாகும் இக் கடனை நீ கொள்வாயாக

நின என்பதன்கண் ‘‘அ’’ ஆறாம் வேற்றுமையுருபு. எயின் - எயினர். எயின் அடுவிலை இடுகடன் குருதி என இயைக்க.

வேறு

துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய

வெடிபட வருபவர் எயினர்கள் அரையிருள்

அடுபுலி யனையவர் குமரிநின் அடிதொடு

படுகடன் இதுவுகு பலிமுக மடையே

19 உரை 19

‘‘துடியொடு..........மடையே’’ துடியொடு சிறுபறை வயிரொடு துவை செய வெடிபட - துடியுடனே சிறுபறையும் கொம்பும் மிக முழங்க, வருபவர் எயினர்கள் அரையிருள். அடுபுலி அனையவர் - நள்ளிரவில் வருபவர்களாகிய கொல்லும் புலியை யொத்த மறவர்கள், குமரி நின் அடிதொடு படுகடன் - குமரியாகிய நினது அடியினைத் தொட்டுச் சூளுற்ற கடன், இது உகு பலி முக மடையே - மிடற்றினின்றுஞ் சிந்தும் குருதியாகும் ’ இக் கடனை நீ கொள்வாயாக

நிலம் வெடிக்கும்படி வருபவரென்றுமாம். படு - பொருந்திய ’ மிக்க எனினும் அமையும். முகமடை - மிடறு. இதுபலி - இக்கடன் ’ கொள்கவென்பது சொல்லெச்சம். இவை மூன்றும் அவிப்பலியென்னும் துறையின்பாற் படும் ’ குருதிப் பலி யென்பாரு முளர்.

வம்பலர் பல்கி வழியும் வளம்பட

அம்புடை வல்வில் எயின்கடன் உண்குவாய்

சங்கரி அந்தரி நீலி சடாமுடிச்

செங்கண் அரவு பிறையுடன் சேர்த்துவாய்

20 உரை 20

''வம்பலர் பல்கி.....சேர்த்துவாய்" வம்பலர் பல்கி வழியும் வளம்பட - வழிகளும் ஆறுசெல்வோர் நிறையப் பெறுதலான் அவர்தம் பொருளாகிய வளம் உண்டாம் வண்ணம், அம்புடை வல்வில் எயின் கடன் உண்குவாய் - அம்பு பொருந்திய வலிய வில் ஏந்திய மறவரது பலிக் கடனை உண்பாயாக ' சங்கரி அந்தரி நீலி சடாமுடிச் செங்கண் அரவு பிறையுடன் சேர்த்து வாய் - சங்கரி, அந்தரி, நீலி, சடைமுடிக்கண் சிவந்த கண்களையுடைய பாம்பினை இளம் பிறையோடு சேர்த்துச் சூடுபவளே

சேர்த்துவாய் வழிவளம்பட எயின் கடன் உண்குவாய் என்க. முன்னர்க் கொற்றவை கடன் கொள்ளாமையான், "மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவாது" என்றாராகலான், ஈண்டு வழிவளம் படக் கடன் உண்குவாய் என்றார். வம்பலர் - புதியராய் வருபவர். சடாமுடி - வடசொன் முடிபு.

வேறு

துண்ணென் துடியொடு துஞ்சூர் எறிதரு

கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்

விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்

உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்

21 உரை 21

''துண்ணென்.....செய்குவாய்'' துண் என் துடியொடு துஞ்சு ஊர் எறிதரு - கேட்டார் துண்ணென நடுங்குமாறு ஒலி செய்யும் துடியுடனே பகைவர் உறங்குங் காலத்து ஊர்க் கொலை செய்யும், கண்இல் எயினர் இடுகடன் உண்குவாய் - கண்ணோட்ட மில்லாத மறவர் இடும் பலிக்கடனை நீ உண்பாயாக ' விண்ணோர் அமுது உண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டு இருந்து அருள் செய்குவாய் - விண்ணவர் சாவா மருந்தாகிய அமுதமுண்டும் இறப்பவும் எத்தகையோரும் உண்ணவொண்ணாத நஞ்சினை உண்டும் இறவாதே இருந்தருள்வாய்

இருந்து அருள் செய்குவாய் கடன் உண்குவாய் என்க. துஞ்சூர் எறிதலை 1 ''ஊர் கொலை'' என்னும் வெட்சித்திணைத் துறையானறிக.

வேறு

மறைமுது முதல்வன் பின்னர் மேய

பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறர்நாட்டுக்

கட்சியுங் கரந்தையும் பாழ்பட

வெட்சி சூடுக விறல்வெய் யோனே.

22 உரை 22

"பொருள் கொண்டு....செய்குவாய்" பொருள் கொண்டு புண்செயின் அல்லதை யார்க்கும் அருள் இல் எயினர் இடுகடன் உண்குவாய் - வழிப்போவார் பொருளைப் பறித்துக்கொண்டு அவர்க்குத் துன்பம் செய்தல் அல்லது எவரிடத்தும் கருணை இல்லாத வேட்டுவர் இடும் பலிக்கடனை உண்பாயாக ' மருதின் நடந்து - இரு மருத மரங்களின் இடையே நடந்து அவற்றைச் சாய்த்து, நின் மாமன் செய் வஞ்ச உருளும் சகடம் உதைத் தருள் செய்குவாய் - நின் மாமனாகிய கஞ்சன் செய்த வஞ்சத்தால் தோன்றிய உருண்டுவரும் சகடத்தை உதைத்தருளினாய்

அல்லதை - ஐ சாரியை. "சுடரொடு திரிதரும்" என்பது முதல் ஆறுதாழிசைகளும் கொற்றவையைப் பரவுவார் வார்த்தை என்பர் அரும்பதவுரையாசிரியர். 1"மறவர், பொருள்கொண்டு புண்செயினல்லதை யன்போ, டருள்புற மாறிய வாரிடை யத்தம்" என்பது பாலைக் கலி. நிற்று.

வேறு

பொருள்கொண்டு புண்செயி னல்லதை யார்க்கும்

அருளில் எயினர் இடுகடன் உண்குவாய்

மருதின் நடந்துநின் மாமன்செய் வஞ்ச

உருளுஞ் சகடம் உதைத்தருள் செய்குவாய்

23 உரை 23

"மறைமுது முதல்வன்....வெய்யோனே" மறைமுது முதல்வன் பின்னர் மேய - வேதங்களை அருளிய முதிய முதல்வனாகிய சிவபெருமானுக்குப் பின்னோன் ஆகிய அகத்தியன் எழுந்தருளிய, பொறை உயர் பொதியிற் பொருப்பன் - பொறைகளையுடைய உயர்ந்த பொதிய மலையை உடைய பாண்டியன், பிறர் நாட்டுக் கட்சியும் கரந்தையும் பாழ்பட வெட்சி சூடுக விறல் வெய்யோனே - பகைவருடைய முனையிடமும் அவர் நிரை மீட்கும் தொழிலும் பாழ்படும் வண்ணம் வெற்றியை விரும்புவோனாகிய அவன் வெட்சி மாலையைச் சூடுவானாக

பொருப்பனாகிய விறல் வெய்யோன் பாழ்பட வெட்சி சூடுக எனக் கூட்டுக. மறை சிவபிரான் வாய்மொழி யென்பது 1"நன்றாயிருந்த . நீணிமிர்சடை, முதுமுதல்வன் வாய்போகா, தொன்று புரிந்த வீரிரண்டின்" என்பதனாலும் அறியப்படும். மறைமுது முதல்வன் - பிரமன் என்பாருமுளர். அகத்தியன் இறைவனோடு ஒப்பத் தென்றிசை தாழ இருந்ததனால், மறைமுது முதல்வன் பின்னர் என்றார். "பின்னர்" என்றது ஈண்டுத் தம்பி என்னும் பொருட்டன்று ஒப்ப அடுத்த நிலையில் உள்ளோன் என்னும் பொருட்டு, இதனை, 2"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று" என வருவது கொண்டு உணர்க.

3 தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொனமுது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந" என்பதும் ஈண்டும் அறியற்பாலது. இதிலுள்ள "தொன்முது கடவுள்" என்பதற்கு அகத்தியனார் என்று பொருள் கூறுவது சிறப்புடைத்தன்று. பொறை - குன்று, பொற்றை சந்தனம் அகில் முதலிய மரங்களாற் சுமைமிக்க என்றுமாம். கட்சி - காடு' போர்முனை. இத் தாழிசையாறும் கொற்றவையைப் பரவுவார் கூற்று.

கொற்றவை இறைவனுக்குக் கிரியாசக்தி யாகலின் நுதல்விழி, கறைமிடறு, புலியுரி, சூலம் முதலிய கோலங்களும், நஞ்சுண்டல் முதலிய செயல்களும் கூறப்பட்டன. மாயோனுக்குத் தங்கை யாகலின் அவன் செய்கையாகிய மருதினடந்ததும், சகடமுதைத்ததும் சார்த்தி உரைக்கப்பட்டன ' மாயோனும் இறைவற்கு ஓர் சக்தியாதல் உணரற்பாற்று.

இது ப.்.றாழிசைக் கொச்சகக் கலிப்பா.

வேட்டுவவரி முற்றிற்று.

ஆய்ச்சியர் குரவை

அரசனுக்கு நெய் வழங்கும் முறை

'கயல் எழுதிய இமய நெற்றியின்

அயல் எழுதிய புலியும் வில்லும்

நாவல் அம் தண் பொழில் மன்னர்

ஏவல் கேட்ப, பார் அரசு ஆண்ட

மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலில்

காலை முரசம் கனை குரல் இயம்பும்' ஆகலின்,

நெய்ம் முறை நமக்கு இன்று ஆம்' என்று,

ஐயை தன் மகளைக் கூஉய்,

கடை கயிறும் மத்தும் கொண்டு,

இடை முதுமகள் வந்து தோன்றும்-மன்.

பாண்டியன் தன் மீன் கொடிச் சின்னத்தை இமயமலையில் எழுதினான். அதன் பக்கத்தில் சோழன் புலிச் சின்னத்தையும், சேரன் வில் சின்னத்தையும் எழுதினர். இப்படி நாவலந் தண்பொழில் முழுவதும் தன் ஏவலைக் கேட்டு நடக்கும்படி நாடாண்டவன் பாண்டியன். அவன் அரண்மனையில் காலை முரசம் முழங்கும் ஒலி கேட்கிறது. அரண்மனைக்கு இன்று நெய் வழங்கவேண்டிய முறை ''நம்முடையது'' என்று எண்ணிய இடையர் குல முதுமகள் மாதரி தன் மகள் ஐயையை கூவி அழைத்துக்கொண்டு, தயிர் கடைவதற்காக மத்தும் கயிறும் எடுத்துக்கொண்டு சென்றாள்.

உரைப் பாட்டு மடை

(செய்தி சொல்லும் பாட்டு மடங்கி வருவது)

குடப் பால் உறையா' குவி இமில் ஏற்றின்

மடக் கண் நீர் சோரும்' வருவது ஒன்று உண்டு!

உறி நறு வெண்ணெய் உருகா உருகும்

மறி, தெறித்து ஆடா வருவது ஒன்று உண்டு!

நால் முலை ஆயம் நடுங்குபு நின்று இரங்கும்

மால் மணி வீழும்' வருவது ஒன்று உண்டு!

பிறை ஊற்றி வைத்திருந்த குடத்தில் பால் உறையவில்லை. காளை மாட்டின் கண்களில் கண்ணீர் வடிந்தது. உறியில் இருந்த வெண்ணெய் உருகவில்லை. கன்றுக்குட்டி பால் குடிக்கத் தன் தாயிடம் துள்ளி ஓடவில்லை. நான்கு முலைகளை உடைய பசுக்கள் நடுங்கிக்கொண்டு கத்தின. அவற்றின் கழுத்தில் இருந்த மணி அறுந்து விழுந்தது.

இந்த நிகழ்வுகளைப் பார்த்தால் ஏதோ தீங்கு வரப்போகிறது - என மாதரி மகளிடம் கூறினாள்.

கருப்பம்

குடத்துப் பால் உறையாமையும்,

குவி இமில் ஏற்றின்

மடக் கண் நீர் சோர்தலும்

உறியில் வெண்ணெய் உருகாமையும்,

மறி முடங்கி ஆடாமையும்,

மால் மணி நிலத்து அற்று வீழ்தலும்,

வருவது ஓர் துன்பம் உண்டு என,

மகளை நோக்கி, மனம் மயங்காதே!

மண்ணின் மாதர்க்கு அணி ஆகிய

கண்ணகியும்-தான் காண,

ஆயர் பாடியில், எரு மன்றத்து,

மாயவனுடன் தம்முன் ஆடிய

வால சரிதை நாடகங்களில்,

வேல் நெடுங் கண் பிஞ்ஞையோடு ஆடிய

குரவை ஆடுதும் யாம்' என்றாள்-

கறவை, கன்று, துயர் நீங்குக எனவே,

குரவை ஆட்டத்தின் கருப்பொருள்

குடத்தில் பால் உறையாமை. காளை மாட்டின் கண்ணில் கண்ணீர் வடிதல், உறியில் வெண்ணெய் உருஉகாமை, கன்று பால் குடிக்காமல் இவற்றைக் கண்டு வருவது ஓர் துன்பம் உண்டு என்று மனம் மயங்க வேண்டாம். மண்ணிலுள்ள பெண்களுக்கெல்லாம் அணிகலனாக விளங்கும் கண்ணகி காணுமாறு குரவை ஆடுவோம். ஆயர்பாடியில் அன்று எருமன்றத்தில் மாயவனுடன் அவன் அண்ணன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் பிஞ்ஞையோடு ஆடிய குரவை ஆடுவோம்.

கறவை, கன்று ஆகியவற்றின் துயரைக் களைய வேண்டும் என்று வேண்டிக்கொண்டு ஆடுவோம் - என்று மாதரி தன் மகள் ஐயையிடம் கூறினாள்.

கொளு

சுட்டு

காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும், இவ்

வேரி மலர்க் கோதையாள்

நெற்றிச் செகிலை அடர்த்தாற்கு உரிய, இப்

பொன் தொடி மாதராள் தோள்.

மல்லல் மழ விடை ஊர்ந்தாற்கு உரியள், இம்

முல்லை அம் பூங் குழல்-தான்.

நுண் பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும், இப்

பெண் கொடி மாதர்-தன் தோள்.

பொன் பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும்: இந்

நன் கொடி மென்முலை-தான்.

வென்றி மழ விடை ஊர்ந்தாற்கு உரியவள், இக்

கொன்றை அம் பூங் குழலாள்.

தூ நிற வெள்ளை அடர்த்தாற்கு உரியள், இப்

பூவைப் புது மலராள்.

(சொல் பிரிப்பை நீக்கி, இவை குறள் வெண்பா எனக் கண்டுகொள்க)

குரவை ஆட்டத்தின் கொள்கை

எந்தப் பெண் யாருக்கு உரியவள் என்று சுட்டிக்காட்டி நிறுத்துதல்

1. தேன்மலர் சூடிய இவள் காரிக் காளையை அடக்கியவனை விரும்புவாள்.

2. பொன்வளையல் அணிந்த இவள் தோள் நெற்றியில் செஞ்சுழி உடைய காளையை அடக்கியவனுக்கு உரியது.

3. முல்லைப் பூ சூடிய இவள் கொழுத்த காளைமேல் ஏறி வருபவனுக்கு உரியவள்.

4. இந்தப் பெண்ணின் தோள் சின்னச் சின்ன புள்ளி கொண்ட வெள்ளைக் காளையை அடக்கியவனுக்கு உரியது.

5. இந்த மென்முலையாள் பொன்னிறப் புள்ளி கொண்ட வெள்ளைக் காளையை அடக்கியவனுக்கு உரியவள்.

6. கொன்றைப் பூ சூடிய இவள் பலரை வெற்றி கண்ட கொழுத்த காளையை அடக்கியவனுக்கு உரியவள்.

7. காயாம்பூ அணிந்த இவள் தூய வெள்ளை நிறக் காளையை அடக்கியவனுக்கு உரியவள்.

இப்படி ஏழு பெண்களை நிறுத்தி, ஏழு காளைமாடுகளைச் சொல்லிக் காட்டி குரவை ஆடத் தொடங்கினாள்.

ஏழு இசை நரம்பின் பெயர்

ஆங்கு,

தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்

எழுவர் இளங் கோதையார்

என்று, தன் மகளை நோக்கி,

தொன்று படு முறையான் நிறுத்தி,

இடை முதுமகள் இவர்க்குப்

படைத்துக் கோள் பெயர் இடுவாள்

குடமுதல் இடமுறையா, குரல், துத்தம்,

கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என,

விரி தரு பூங் குழல் வேண்டிய பெயரே.

இவ்வாறு ஏழு பெண்களைக் குரவை ஆட நிறுத்தி, அவர்களை ஏறு தழுவக் காளை வளர்த்தவர்கள் என்று சொல்லி அந்த ஏழு பெண்களுக்கும் தான் படைத்த பெயர்களைச் சூட்டினாள்.

தன் மகளை இடப்பக்கம் நிறுத்தி, அவளிடமிருந்து தொடங்கிப் பெயர்களைச் சூட்டினாள்.

1. குரல்,
2. துத்தம்,
3. கைக்கிளை,
4. உழை,
5. இளி,
6. விளரி,
7. தாரம்,

எனப் பெயர் சூட்டினாள்.

யார் எவர் - படைத்துக் கோள் பெயர்

மாயவன் என்றாள், குரலை விறல் வெள்ளை-

ஆயவன் என்றாள், இளி-தன்னை ஆய் மகள்

பின்னை ஆம் என்றாள், ஓர் துத்தத்தை' மற்றையார்

முன்னை ஆம் என்றாள் முறை.

மாயவன் சீர் உளார், பிஞ்ஞையும் தாரமும்

வால் வெள்ளை சீரார், உழையும் விளரியும்

கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள் வலத்து உளாள்,

முத்தைக்கு நல் விளரி-தான்

அவருள்,

வண் துழாய் மாலையை மாயவன் மேல் இட்டு,

தண்டாக் குரவை-தான் உள்படுவாள், கொண்ட சீர்

வையம் அளந்தான்-தன் மார்பில் திரு நோக்காப்

பெய் வளைக் கையாள் நம் பின்னை-தான் ஆம் என்றே,

'ஐ!' என்றாள், ஆயர் மகள்,

குரல் - மாயவன்

இளி - வெள்ளையன் (வெள்ளை நிறப் பலராமன்)

துத்தம் - நப்பின்னை (இராதை) (பிஞ்ஞை)

மற்றையார் முறைப்படி அவர்களுக்கு முன்னே நின்றனர்.

மாயவன் சீர் வரிசையில் பின்னையும் தாரமும் நின்றனர்.

வெள்ளையன் சீர் வரிசையில் உழையும், விளரியும் நின்றனர்.

கைக்கிளை பிஞ்ஞைக்கு இடப்புறம் நின்றாள்.

விளரி முந்தை (அண்ணன்) வெள்ளையனுக்குத் துணையாக நின்றாள்.

துளசி மாலையை மாயவன் மேல் போட்டனர்.

குரவை ஆட்டம் தொடங்கியது.

வையம் அளந்த மாயவன் மார்பில் திருமகள் (நப்பின்னை) சாய்ந்தாள்.

“ஐ” என்று மாதரி ஒலித்தாள்.

ஏழு பேரும் சேர்ந்து கைகளைக் கோத்துக்கொண்டு குரவை ஆடினர்.

கூத்து உள்படுதல்

அவர்-தாம்

செந்நிலை மண்டிலத்தான், கற்கடகக் கை கோஒத்து,

அந் நிலையே ஆடல் சீர் ஆய்ந்துளார், முன்னைக்

குரல்-கொடி தன் கிளையை நோக்கி, ‘பரப்பு உற்ற

கொல்லைப் புனத்துக் குருந்து ஒசித்தான் பாடுதும்,

முல்லைத் தீம் பாணி’ என்றாள்.

எனா,

குரல் மந்தம் ஆக, இளி சமன் ஆக,

வரன்முறையே, துத்தம் வலியா, உரன் இலா

மந்தம் விளரி பிடிப்பாள், அவள் நட்பின்

பின்றையைப் பாட்டு எடுப்பாள்.

அவர்கள் சரியான வட்டத்தில் நண்டுப் பிடி போல் கைகளைக் கோத்துக்கொண்டு சீராக ஆடத் தொடங்கினர்.

முதலில் குரல் என்று பெயரிடப்பட்ட பெண் தன் கிளை (உறவு முறையாள்) துத்தத்தை நோக்கி (மாயவன் தன் உறவு முறையாள் நப்பின்னையை நோக்கி, கொல்லையில் குருந்த மரத்தைச் சாய்த்தவன் சீரை முல்லைப் பண்ணால் பாடுவோம் என்றாள்.

அவள் அவ்வாறு கூறியதும்

குரல் நரம்பு மந்தமாக ஒலிப்பது போலவும்,

இளி நரம்பு சமமாக ஒலிப்பது போலவும்,

துத்தம் நரம்பு வலிமையாக ஒலிப்பது போலவும்,

விளரி நரம்பு மந்தமாக ஒலிப்பது போலவும்

நட்பு நரம்புகள் (நரம்புகளின் பெயர் சூட்டப்பட்ட மகளிர்) பாடத் தொடங்கின.

கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
கொன்றை அம் தீம் குழல் கேளாமோ, தோழீ!

பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவன்
ஈங்கு நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
ஆம்பல் அம் தீம் குழல் கேளாமோ, தோழீ!

கொல்லை அம் சாரல் குருந்து ஒசித்த மாயவன்
எல்லை நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
முல்லை அம் தீம் குழல் கேளாமோ, தோழீ!

தன்னைக் கொல்லக் கன்றுக்குட்டி உருவில் வந்தவனை காய் உதிர்க்கும் வளைதடியாகத் தூக்கி எறிந்து விளாம்பழத்தை உதிர்த்த மாயவன் இன்று நம் ஆனிரைகளைக் காக்க வருவானாகில் அவன் ஊதும் கொன்றைக் காயால் செய்யப்பட்ட குழலின் இசையைக் கேட்கலாமே, தோழி!

பாம்பினைக் கயிறாக்கிக்கொண்டு கடலைக் கடைந்த மாயவன் இன்று நம் ஆணிரைகளைக் காக்க வருவானேஷஆனால் அவன் ஊதும் ஆம்பல் கொடித் தண்டினால் செய்த குழலின் இசையைக் கேட்கலாமே, தோழி!

குருந்த மரமாக நின்ற பகவர்களை ஒடித்த மாயவன் இன்று நம் ஆனிரைகளைக் காக்க வருவானாயின் அவன் ஊதும் முல்லைப் பண்ணைக் கேட்கலாமே, தோழி!

தொழுனைத் துறைவனோடு ஆடிய பின்னை-
அணி நிறம் பாடுகேம் யாம்.

இறும் என் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை ஒளித்தான் வடிவு என்கோ யாம்?
அறுவை ஒளித்தான் அயர, அயரும்

நறு மென் சாயல் முகம் என்கோ யாம்?

வஞ்சம் செய்தான் தொழுனைப் புனலுள்
நெஞ்சம் கவர்ந்தாள் நிறை என்கோ யாம்?
நெஞ்சம் கவர்ந்தாள் நிறையும் வளையும்
வஞ்சம் செய்தான் வடிவு என்கோ யாம்?

தையல் கலையும் வளையும் இழந்தே
கையில் ஒளித்தாள் முகம் என்கோ யாம்?
கையில் ஒளித்தாள் முகம் கண்டு அழுங்கி,
மையல் உழந்தான் வடிவு என்கோ யாம்?

யமுனைத் துறைவன் மாயவனோடு காதல் ஆட்டம் ஆடிய நப்பின்னையின் அழகினைப் பாடுவோம்.

என் மேனி அழகெல்லாம் வளைந்தாடும்படி என் ஆடைகளைக் கவர்ந்து சென்றானே, அவன் சாயல் முகம் கொண்டவள் நப்பின்னை என்று பாடுவோமா?

யமுனை நீரில் நின்ற ஆய்ச்சியருக்கு வஞ்சம் செய்தானே அந்த மாயவனின் நெஞ்சத்தைக் கவர்ந்தாளே, நப்பின்னை, அவள் நிறைதான் நிறை என்று போற்றிப் பாடுவோமா?

ஆடையையும், வளையலையும் இழந்து, நாணத்துடன் கைகளால் தன் கண்களைப் பொத்திக்கொண்டு ஒளிந்துகொண்டாளே. அவள் முகத்ததைக் கண்டு ஆசை கொண்டானே, அவன் அழகுதான் அழகு, என்று போற்றிப் பாடுவோமா?

குரவை - ஆடுவார் நிலை

கதிர் திகிரியான் மறைத்த கடல் வண்ணன் இடத்து உளான்,
மதி புரையும் நறு மேனித் தம்முனோன் வலத்து உளாள்,
பொதி அவிழ் மலர்க் கூந்தல் பிஞ்ஞை: சீர் புறங்காப்பார்
முது மறை தேர் நாரதனார் முந்தை முறை நரம்பு உளர்வார்.

மயில் எருத்து உறழ் மேனி மாயவன் வலத்து உளாள்,
பயில் இதழ் மலர் மேனித் தம்முனோன் இடத்து உளாள்,
கயில் எருத்தம் கோட்டிய நம் பின்னை: சீர் புறங்காப்பார்

குயிலுவருள் நாரதனார் கொளை புணர் சீர் நரம்பு உளர்வார்

ஒரு வகை நிலைப்பாடு

மாயவன் இடப்பக்கம் நின்றான்.

வெள்ளையன் வலப்பக்கம் நின்றான்.

பிஞ்ஞை என்னும் நப்பின்னை ஆடுகிறாள்.

நாரதர் யாழ் இசைக்கிறார்.

குரவைக் கூத்து இப்படி நடைபெறுகிறது.

மாயவன் தம்முன்னினொடும், வரிவளைக் கைப் பின்னையொடும்,

கோவலர் - தம் சிறுமியர்கள் குழல் கோதை புறம்சோர,

ஆய் வளைச் சீர்க்கு அடி பெயர்த்திட்டு அசோதையார் தொழுது ஏத்த,

தாது எரு மன்றத்து ஆடும் குரவையோ தகவு உடைத்தே.

மாயவனும் அவன் முன்னோன் வெள்ளையனும் பார்த்துக்கொண்டிருக்க, நப்பின்னையோடு சேர்ந்து சிறுமியர் கூந்தல் பின்புறம் அசைந்தாடக் குரவை ஆடுகின்றனர். தாதெரு மன்றத்தில் (பூக்கள் கொட்டிக் கிடக்கும் மன்றத்தில்) இவர்கள் ஆடும் ஆட்டம் தகைமை சான்று விளங்கியது.

"உள்வரி வாழ்த்து

பூவை நிலை"

கோவா மலை ஆரம், கோத்த கடல் ஆரம்,

தேவர் கோன் பூண் ஆரம், தென்னர் கோன் மார்பினவே:

தேவர் கோன் பூண் ஆரம் பூண்டான் செழுந் துவரைக்

கோ குலம் மேய்த்து, குருந்து ஒசித்தான் என்பரால்.

பொன் இமயக் கோட்டுப் புலி பொறித்து மண் ஆண்டான்,

மன்னன் வளவன், மதில் புகார் வாழ் வேந்தன்:

மன்னன் வளவன், மதில் புகார் வாழ் வேந்தன்

பொன் அம் திகிரிப் பொரு படையான் என்பரால்,

முந்நீரினுள் புக்கு, மூவாக் கடம்பு எறிந்தான்,

மன்னர் கோச் சேரன், வள வஞ்சி வாழ் வேந்தன்:

மன்னர் கோச் சேரன், வள வஞ்சி வாழ் வேந்தன்

கல் நவில் தோள் ஓச்சி, கடல் கடைந்தான் என்பரால்.

குரவை ஆடும் பெண்கள் எல்லாருமாகச் சேர்ந்து மாயவனையும் மூவேந்தரையும் வாழ்த்திப் பாடுவோம் என்று சொல்லிக்கொண்டு வாழ்த்துகின்றனர்.

கருடப் பறவை மேல் செல்லும் உள்ளத்தில் இருத்தி, மூவேந்தரைப் பாடுவோம் - என்கின்றனர்.

கோக்காத சந்தன மாலையும், கோத்த முத்து மாலையும் தேவர் கோன் இந்திரன் மாலையையும் தென்னவன் தன் மார்பில் சூடிக்கொண்டான். அவனை, குருந்த மரம் சாய்த்த கண்ணன் என்று சொல்கின்றனர்.

புகார் அரசன் வளவன் இமயத்தில் தன் புலிச்சின்னத்தைப் பொறித்தான். அவனைச் சக்கரப் படை கொண்ட திருமால் என்கின்றனர்.

வஞ்சி அரசன் சேரன் கடலில் படையுடன் சென்று கடம்பர்களின் கடம்பு மரத்தை வெட்டினான். அவனைக் கடல் கடைந்த மாயவன் என்கின்றர்.

வடவரையை மத்து ஆக்கி, வாசுகியை நாண் ஆக்கி,

கடல் வண்ணன்! பண்டு ஒரு நாள் கடல் வயிறு கலக்கினையே:

கலக்கிய கை அசோதையார் கடை கயிற்றால் கட்டுண் கை:

மலர்க் கமல உந்தியாய்! மாயமோ? மருட்கைத்தே!

அறு பொருள் இவன்' என்றே, அமரர் கணம் தொழுது ஏத்த,

உறு பசி ஒன்று இன்றியே, உலகு அடைய உண்டனையே:

உண்ட வாய் களவினான் உறி வெண்ணெய் உண்ட வாய்:

வண் துழாய் மாலையாய்! மாயமோ? மருட்கைத்தே!

திரண்டு அமரர் தொழுது ஏத்தும் திருமால்! நின் செங் கமல

இரண்டு அடியான் மூ-உலகும் இருள் தீர நடந்தனையே'

நடந்த அடி பஞ்சவர்க்குத் தூது ஆக நடந்த அடி'

மடங்கலாய்! மாறு அட்டாய்! மாயமோ? மருட்கைத்தே!

மாயவனை முன்னிலைப் படுத்தி அவன் செய்த மாயத்தைப் போற்றுகின்றனர்.

மேரு மலை மத்து, வாசுகிப் பாம்பு கடையும் கயிறு. இப்படி வைத்துக்கொண்டு பால்-கடலைக் கடைந்து அதன் வயிற்றைக் கலக்கினாயே. அத்தகைய உன் வலிமை அசோதை தயிர் கடையும் கயிற்றால் உன்னைக் கட்டி மத்தால் அடித்தபோது கட்டுப்பட்டுக் கிடந்தாயே, அந்த மாயம் எங்களை வியப்படையச் செய்கிறது.

இவன் ஏதுமற்ற பொருள் என்று தேவர்கள் உன்னைப் புகழ்கின்றனர். நீயோ பசி ஒன்றும் இல்லாமலேயே உலகம் முழுவதையும் உண்டுவிட்டாய். அது போதாதா? உறியில் வெண்ணெய் திருடி உண்டாயே, இந்த மாயம் எங்களை வியப்படையச் செய்கிறது. .

தேவர்கள் திருமால் என்று உன்னைப் புகழ்கின்றனர். நீ உன் இரண்டு தப்படிகளால் மூன்று உலகையும் அளந்து காட்டினாய். அப்படிப்பட்ட காலடிகள் பஞ்ச பாண்டவருக்குத் தூதாக நடந்து சென்ற மாயம் எங்களுக்கு வியப்பாக உள்ளது.

மாயவன் புகழ்

"படர்க்கைப் பரவல்"

மூ-உலகும் ஈர் அடியான் முறை நிரம்பாவகை முடியத்
தாவிய சேவடி சேப்ப, தம்பியொடும் கான் போந்து,
சோ அரணும் போர் மடிய, தொல் இலங்கை கட்டு அழித்த
சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே?
திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே?

பெரியவனை மாயவனை' பேர் உலகம் எல்லாம்
விரி கமல உந்தி உடை விண்ணவனை' கண்ணும்,
திருவடியும், கையும், திரு வாயும், செய்ய
கரியவனை காணாத கண் என்ன கண்ணே?
கண் இமைத்துக் காண்பார்-தம் கண் என்ன கண்ணே?

மடம் தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நால் திசையும் போற்ற,
படர்ந்து ஆரணம் முழங்க, பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நா என்ன நாவே?
'நாராயணா!' என்னா நா என்ன நாவே?

மூன்று உலகங்களையும் இரண்டு தப்படிகளால் அளந்த திருவடி தம்பி இலக்குவனோடு காட்டுக்குச் சென்று இலங்கையை அழித்ததே, அந்தச் சேவகன் புகழைக் கேட்காத செவி என்ன பயன் பெற்ற செவி?

உலகளந்த பெரியவனை' மாயம் செய்யும் மாயவனை' உலகமாக விரிந்துள்ள தாமரை வயிற்றறை உடைய விண்ணவனை' கண், அடி, கை, வாய் நான்கும் சிவந்திருப்பவனை, கரியவனை, காணாத கண் என்ன கண்?

கஞ்சனார் வஞ்சம் கடந்தானை, நூற்றுவர்பால் பஞ்ச பாண்டவர்க்குத் தூது நடந்தானை, புகழாத நாக்கு என்ன நாக்கு? நாராயணா என்று சொல்லாத நாக்கு என்ன நாக்கு?

பாண்டியனை வாழ்த்தல்

என்று, யாம்

கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம் நம்

ஆத்தலைப் பட்ட துயர் தீர்க்க! வேத்தர்

மருள, வைகல் வைகல் மாறு அட்டு,

வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்து

இடிப் படை வானவன் முடித்தலை உடைத்த

தொடித் தோள் தென்னவன் கடிப்பு இகு முரசே!

மாதரி சொல்கிறாள்.

குரவை ஆட்டத்தில் கோத்துப் பாடிய தெய்வம் எங்கள் ஆனிரைகளைக் காக்க வேண்டும்.

வேந்தன் நாள்தோறும் பகைவரை அழித்து வெற்றியை விளைவிக்க வேண்டும்.

என வாழ்த்தினர்.

தன் வெற்றியை நிலைநாட்டத் தேவந்திரன் தலைமுடியில் தன் கை வளையலை உடைத்தவன் தென்னவன் முரசு அப்போது முழங்கிற்று.

மணிமேகலை

மணிமேகலை ஒரு சீர்திருத்தக் காப்பியம் என்ற சிறப்பிற்கு உரியது. கொல்லாமை, ஊன் உண்ணாமை, கள் உண்ணாமை ஆகியவற்றை வலியுறுத்துவதோடு அனைத்து உயிர்களிடமும் அன்பு பாராட்ட வேண்டும் என்பதையும் விளக்குகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற்றப்பட்டு அங்குள்ளோர்க்கு அமுதசுரபி கொண்டு மணிமேகலை அவர்களின் பசிப்பிணியை நீக்குவதும் காப்பியத்தின் தனிச்சிறப்பாகும்.

சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை

உதயகுமரன் சம்பாபதியை வணங்கிஇங்ஙனம் வஞ்சினக் கூறுகையில் அவன் கேட்கும்படி, "நீ எம் பெருமாட்டியின் முன் ஆராய்ந்து பாராமற் சூளுறவு மொழிந்தனை ' அதனால் யாதொரு பயனுமில்லை" என்று ஆங்குள்ள சித்திரங்களுள் ஒன்றைப் பொருந்தியுள்ள தெய்வங் கூறிற்று. அவ்வுரை கேட்டு அவன் மனங் கலங்கி வருந்தி, "மணிமேகலையை மறப்பாயென்று முன்னங்கூறிய தெய்வத்தின் மொழியும் வியப்பைத் தருகின்றது' தெய்வத்தன்மை யுள்ளதாக இருத்தலின் அவள் ஏந்திய பாத்திரமும் வியப்பைத் தருகின்றது ' இச் சித்திரம் பேசியதும் வியப்பை விளைக்கின்றது' இவற்றையெல்லாம் மணிமேகலையின் செய்தியை அறிந்துகொண்ட பின்பு அறிவோம்" என்று துணிந்து மீண்டு தன் இருப்பிடத்தை யடைந்தான். மணிமேகலை, "நம் வடிவத்தோடு திரிந்தால் உதயகுமரன் விட்டு நீங்கான் ' ஆகலின் நாம் காயசண்டிகை வடிவங்கொள்ளுதலே நன்று" என்று எண்ணி அவ் வடிவுகொண்டு சம்பாபதியின் கோயிலிலிருந்து அமுதசுரபியைக் கையிலேந்திக் கொண்டு யாங்கணும் சென்று பசித்துவந்த யாவருக்கும் உணவளித்து வருபவள், ஒரு நாள் அந் நகரத்துள்ள சிறைக்கோட்டத்திற் புகுந்து, அங்கே பசியால் வருந்துவோரை அருளுடன் பார்த்து இனிய மொழி கூறி உண்பிப்பாளாயினள். அவள் ஒரு பாத்திரத்திலிருந்தே பலருக்கு உணவளித்தலைக் கண்ட காவலாளர் மிக்க வியப்படைந்து, "இப் பாத்திரத்தின் மேன்மையையும் இவள் செய்கை யையும் அரசனுக்குத் தெரிவிப்பேம்" என நினைந்து சென்று, சீர்த்தி யென்னும் இராசமாதேவியுடன் ஒரு மண்டபத்தில் மிக்க சிறப்புடன் வீற்றிருக்கும் வேந்தனுடைய செவ்வியை நோக்கிச் சேய்மையில் வணங்கி நின்று, "மாவண்கிள்ளி ஊழிதோ றுழி ஒளியொடு வாழி" என்று வாழ்த்தி, "யானைத்தீ யென்னும் நோயால் வருந்தி உடல் மெலிந்து இப் பகுதியிலே திரியும் மடந்தை யொருத்தி சிறைக்கோட்டத்துள்ளே வந்து நின்னை வாழ்த்திக் கையின்கண் பிச்சைப் பாத்திரம் ஒன்றே கொண்டு அங்கு வந்து மொய்க்கின்ற யாவருக்கும் உணவு சுரந்தூட்டு கின்றனள்' இவ் வதிசயத்தைத் தெரிவிக்கவே வந்தோம்" என்றார்.

அதனைக் கேட்ட அரசன், "அம் மங்கையை இங்கே அழைத்து வருக" என்றனன். உடனே காவலாளர் வந்து அதனைத் தெரிவிக்க, அவள் சென்று அரசனைக் கண்டு வாழ்த்தி நின்றனள். அரசன், அரிய தவமுடையாய் ' நீ யார் ? கையிலேந்திய பாத்திரம் எங்கே கிடைத்தது?"" என்ன, அவள், "அரசே! நெடுங் காலம் வாழ்வாயாக' யான் விஞ்சை மகள்' இப் பகுதியிலே வேற்றுருக் கொண்டு திரிந்தேன்' இது பிச்சைப் பாத்திரம்' இதனை அம்பலத்தேயுள்ள தெய்வமொன்று எனக்கு அருளியது ' இது தெய்வத் தன்மையுடையது' யானைத்தீ யென்னும் தீராப் பசிநோயைத் தீர்த்தது' பசியால் மெலிந்தவர்களுக்கு உயிர் மருந்தாகவுள்ளது" என்று கூறினள். பின், அரசன், "யான் செய்ய வேண்டுவது யாது?" என்று கேட்ப, அவள், "சிறைக்கோட்டத்தை யழித்து அறவோர் வாழுங் கோட்டமாகச் செய்தல் வேண்டும்" என்றாள். அரசன், அவள் விரும்பிய வண்ணமே செய்வித்தனன். (இதன்கண் அரசனது பொழில் விளையாட்டுக் கூறுமிடத்துள்ள இயற்கைப்புனைவு முதலியன மிக்க இன்பம் பயப்பன.

முதியாள் திருந்தடி மும்மையின் வணங்கி
மதுமலர்த் தாரோன் வஞ்சினங் கூற
ஏடவிழ் தாரோய் எங்கோ மகள்முன்
நாடாது துணிந்துநா நல்கூர்ந் தனையென.

வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திர மொன்று தெய்வங் கூறலும்
உதய குமரன் உள்ளங் கலங்கிப்
பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி
அங்கவள் தன்றிறம் அயர்ப்பா யென்றே

செங்கோல் காட்டிய தெய்வமுந் திப்பியம்
பையர வல்குல் பலர்பசி களையக்
கையி லேந்திய பாத்திரம் திப்பியம்
முத்தை முதல்வி அடிபிழைத் தாயெனச்
சித்திர முரைத்த இதூஉந் திப்பியம்

இந்நிலை யெல்லாம் இளங்கொடி செய்தியின்
பின்னறி வாமெனப் பெயர்வோன் றன்னை
அகல்வாய் ஞாலம் ஆரிரு ளுண்ணப்
பகலர சோட்டிப் பணையெழுந் தார்ப்ப
மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு
நீல யானை மேலோர் இன்றிக்
காமர் செங்கை நீட்டி வண்டுபடு
பூநாறு கடாஅஞ் செருக்கிக் கால்கிளர்ந்து
நிறையழி தோற்றமொடு தொடர முறைமையின்
நகர நம்பியர் வளையோர் தம்முடன்

மகர வீணையின் கிளைநரம்பு வடித்த
இளிபுண ரின்சீர் எஃகுளங் கிழிப்பப்
பொறாஅ நெஞ்சிற் புகையெரி பொத்திப்
பறாஅக் குருகின் உயிர்த்தவன் போயபின்
உறையுட் குடிகை உள்வரிக் கொண்ட

மறுவில் செய்கை மணிமே கலைதான்
மாதவி மகளாய் மன்றம் திரிதரின்
காவலன் மகனோ கைவிட லீயான்
காய்பசி யாட்டி காயசண் டிகையென
ஊர்முழு தறியும் உருவங் கொண்டே

ஆற்றா மாக்கட் காற்றுந் துணையாகி
ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடனவர்
மேற்சென் றளித்தல் விழுத்தகைத் தென்றே
நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தன ராமென
முதியாள் கோட்டத் தகவையின் இருந்த

அமுத சுரபியை அங்கையின் வாங்கிப்
பதியகந் திரிதரும் பைந்தொடி நங்கை
அதிர்கழல் வேந்தன் அடிபிழைத் தாரை
ஒறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்
விருப்பொடும் புகுந்து வெய்துயிர்த்துப் புலம்பி

ஆங்குப் பசியுறும் ஆருயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்தநின் றூட்டலும்

ஊட்டிய பாத்திரம் ஒன்றென வியந்து
கோட்டங் காவலர் கோமகன் றனக்கிப்
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்

யாப்புடைத் தாக இசைத்துமென் றேகி
நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துதன்
அடியிற் படியை யடக்கிய அந்நாள்
நீரிற் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்

சீர்த்தி யென்னுந் திருத்தகு தேவியொடு
போதவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக்
கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயில் ஆடும்

விரைப்பூம் பந்தர் கண்டுளஞ் சிறந்தும்
புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு
மடமயிற் பேடையுந் தோகையுங் கூடி
இருசிறை விரித்தாங் கெழுந்துடன் கொட்பன
ஒருசிறைக் கண்டாங் குண்மகிழ் வெய்தி

மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவையி∴. தாமென நோக்கியும்
கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொற் றட்டில் தீம்பா லேந்திப்

பைங்கிளி யூட்டுமோர் பாவையா மென்றும்
அணிமலர்ப் பூம்பொழில் அகவையி னிருந்த
பிணவுக்குரங் கேற்றிப் பெருமதர் மழைக்கண்
மடவோர்க் கியற்றிய மாமணி யூசல்
கடுவனூக் குவது கண்டுநகை எய்தியும்

பாசிலை செறிந்த பசுங்காற் கழையொடு
வால்வீச் செறிந்த மராஅங் கண்டு
நெடியோன் முன்னொடு நின்றன னாமெனத்
தொடிசேர் செங்கையிற் றொழுதுநின் றேத்தியும்
ஆடற் கூத்தினோ டவிநயந் தெரிவோர்

நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்
பண்ணியாழ் நரம்பிற் பண்ணுமுறை நிறுப்போர்
தண்ணுமைக் கருவிக் கண்ணெறி தெரிவோர்
குழலொடு கண்டங் கொளச்சீர் நிறுப்போர்

ஆரம் பரிந்த முத்தங் கோப்போர்
ஈரம் புலர்ந்த சாந்தந் திமிர்வோர்
குங்கும வருணங் கொங்கையின் இழைப்போர்
அஞ்செங் கழுநீர் ஆயிதழ் பிணிப்போர்
நன்னெடுங் கூந்தல் நறுவிரை குடைவோர்

பொன்னின் ஆடியிற் பொருந்துபு நிற்போர்
ஆங்கவர் தம்மோ டகலிரு வானத்து
வேந்தனிற் சென்று விளையாட் டயர்ந்து

குருந்துந் தளவுந் திருந்துமலர்ச் செருந்தியும்
முருகுவிரி முல்லையுங் கருவிளம் பொங்கரும்
பொருந்துபு நின்று திருந்துநகை செய்து
குறுங்கால் நகுலமும் நெடுஞ்செவி முயலும்
பிறழ்ந்துபாய் மானும் இறும்பகலா வெறியும்
வம்மெனக் கூஉய் மகிழ்துணை யொடுதன்
செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று

மன்னவன் றானும் மலர்க்கணை மைந்தனும்
இன்னிள வேனிலும் இளங்காற் செல்வனும்
எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியும் மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியும்

ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்
யாங்கணுந் திரிந்து தாழ்ந்துவிளை யாடி
மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்

கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்

பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து

இந்திர திருவன் சென்றினி தேறலும்
வாயிலுக் கிசைத்து மன்னவன் அருளால்
சேய்நிலத் தன்றியுஞ் செவ்விதின் வணங்கி
எஞ்சா மண்ணசைஇ இகலுளந் துரப்ப

வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையுந் தேரும் மாவும்
மறங்கெழு நெடுவாள் வயவரு மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத்தலை வந்தோர்
சிலைக்கயல் நெடுங்கொடி செருவேற் றடக்கை

ஆர்புனை தெரியல் இளங்கோன் றன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி ஊழிதோ றூழி
வாழி யெங்கோ மன்னவர் பெருந்தகை

கேளிது மன்னோ கெடுகநின் பகைஞர்
யானைத் தீநோய்க் கயர்ந்துமெய் வாடியிம்
மாநகர்த் திரியுமோர் வம்ப மாதர்
அருஞ்சிறைக் கோட்டத் தகவயிற் புகுந்து
பெரும்பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி
ஐயப் பாத்திரம் ஒன்றுகொண் டாங்கு
மொய்கொண் மாக்கண் மொசிக்க வூண் சுரந்தனள்
ஊழிதோ றூழி உலகங் காத்து
வாழி யெங்கோ மன்னவ என்றலும்
வருக வருக மடக்கொடி தானென்று

அருள்புரி நெஞ்சமொ டரசன் கூறலின்
வாயி லாளரின் மடக்கொடி தான்சென்று
ஆய்கழல் வேந்தன் அருள்வா ழியவெனத்
தாங்கருந் தன்மைத் தவத்தோய் நீயார்
யாங்கா கியதிவ் வேந்திய கடிஞையென்று

அரசன் கூறலும் ஆயிழை உரைக்கும்
விரைத்தார் வேந்தே நீநீடு வாழி
விஞ்சை மகள்யான் விழவணி மூதூர்
வஞ்சந் திரிந்தேன் வாழிய பெருந்தகை
வானம் வாய்க்க மண்வளம் பெருகுக

தீதின் றாக கோமகற் கீங்கீது
ஐயக் கடிஞை அம்பல மருங்கோர்
தெய்வந் தந்தது திப்பிய மாயது
யானைத் தீநோய் அரும்பசி கெடுத்தது
ஊனுடை மாக்கட் குயிர்மருந் திதுவென

யான்செயற் பாலதென் இளங்கொடிக் கென்று
வேந்தன் கூற மெல்லியல் உரைக்கும்
சிறையோர் கோட்டஞ் சீத்தருள் நெஞ்சத்து
அறவோர்க் காக்கும் அதுவா ழியரென
அருஞ்சிறை விட்டாங் காயிழை உரைத்த

பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்தக்
கறையோ ரில்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க் காக்கினன் அரசாள் வேந்தென்

உரை

1-6. முதியாள் திருந்தடி மும்மையின் வணங்கி - சம்பாபதியில் திருந்திய அடிகளை மும்முறை வணக்கஞ்செய்து, மதுமலர்த் தாரோன் வஞ்சினம் கூற -தேன் பொருந்திய மலர்மாலை களையுடைய உதயகுமரன் வஞ்சினங் கூறுதலும், ஏடு அவிழ் தாரோய் எங்கோமகள் முன் நாடாது துணிந்து நா நல் கூர்ந்தனை என - இதழ்விரிகின்ற மாலையை யுடையவனே எம் தலைமகள் முன்னர் ஆராயாது துணிவுடன் சூளுறவு செய்து நா வறுமை யுற்றனை என்று, வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச் சித்திரம் ஒன்று தெய்வம் கூறலும் கைவல் சிற்பரால் இயற்றப்பட்டு விளங்கிய தொழில் அமைந்த சித்திரம் ஒன்றிற் பொருந்திய தெய்வம் உரைத்தலும் '

மும்மையின் - உளம் உரை உடல் என்னும் முக் கரணங்களால் என்றுமாம்' முறைமையின் என்பதும் பாடம். நா நல்கூர்தலாவது பயனில மொழிதல் வித்தகர்-சிற்பம் வல்லோர்' "வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திரச் செய்கை" (3:167-8) என முன்னர் வந்தமையுங் காண்க. ஒன்று-பொருந்திய' அதிட்டித்த

7-16. உதயகுமரன் உள்ளம் கலங்கி -உதயகுமரன் மனக் கலக்க முற்று, பொதியறைப் பட்டோர்போன்று மெய் வருந்தி சாளரமில்லாத கீழறையில் அகப்பட்டோரைப் போல உடல் வருந்தி, அங்கவள் தன்திறம் அயர்ப்பாய் என்றே மணிமேகலைமீது கொண்ட எண்ணத்தை மறப்பாய் என்றே. செங்கோல்காட்டிய தெய்வமும் திப்பியம் - செங்கோன் முறையை எடுத்துக் காட்டிய தெய்வங் கூறியதும் வியப்புடைத்து, பையர வல்குல் பலர் பசிகளையக் கையிலேந்திய பாத்திரம் திப்பியம் - மணிமேகலை பலருடைய பசியையும் நீக்குதற்குக் கையில் ஏந்திய கடிஞையும் வியப்புடைத்து, முத்தை முதல்வி அடிபிழைத்தாய் எனச் சித்திரம் உரைத்த இதுஊஉம் திப்பியம் எம் தலைவியின் திருவடியில் பிழை புரிந்தாய் என்று இல் வோவியங் கூறிய இதுவும் வியப்புடைத்து, இந்நிலை எல்லாம். இளங்கொடி செய்தியின் பின் அறிவாம் எனப் பெயர்வோன் தன்னை - இவற்றின் உண்மையை யெல்லாம் மணிமேகலையின் செயலால் பின்பு அறிவோமென எண்ணி அங்குநின்றும் மீண்ட உதயகுமரனை '

பொதியறை - புழுக்கறை: சிறு துவாரமுமின்றி மூடப்பட்ட கீழறை' "போதார் பிறவிப் பொதியறையோர்" என்பது காண்க. தெய்வம்-மணிமேகலா தெய்வம். தெய்வம் கூறியதுமென்க. திப்பியம் ஈண்டு வியப்பென்னும் பொருட்டு' தெய்வத்தன்மையுமாம். அரவின் பை யென மாறுக, பை-படம். பாத்திரமும் என எண்ணும்மை விரிக்க முத்தை : விகாரம்.

17-23. அகல்வாய் ஞாலம் ஆரிருள் உண்ண-இடமகன்ற பூமியை நிறைந்த இருளானது உண்ணுமாறு, பகல் அரசு ஓட்டி - கதிரவனாகிய அரசனை ஓட்டி, பணை எழுந்து ஆர்ப்ப பறையெழுந்து ஒலிக்க, மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு-அந்திக் காலமாகிய நெற்றியும் வானிலுள்ள பிறையாகிய மருப்பும் உடைய, நீலயானை- கரிய நிறமுடைய இரவாகிய யானை, மேலோர் இன்றி - பாகர் ஒருவரும் இன்றி, காமர் செங்கைநீட்டி- விருப்பமாகிய துதிக்கையை நீட்டி, வண்டுபடு பூ நாறு கடாஅம் செருக்கி -வண்டு மொய்க்கும் பூவின் மணம் பொருந்திய மதநீரைச் சொரிந்து களித்து, கால் கிளர்ந்து நிறையழி தோற்றமொடு தொடர - காற்றைப் போல எழுந்து காவலைக் கடந்த தோற்றத்துடன் தொடர்ந்து வர

முன்னுள்ள விசேடணங்களால் ''நீலயானை'' என்றது இரவாயிற்று. இராத்திரியை யானையாக உருவகிப்பவர் அதற் கியைபுபடப் பிறவற்றையும் உருவகஞ் செய்கின்றார். ''ஞாலம் ஆரிருள் உண்ண என்பது உண்டற்குரிய வல்லாப் பொருளை, யுண்டன போலக் கூறலுமரபே'' என்பதனான் அமைக்கப்படும். கொல்களிற்றின் செல்கையை அறிவித்தற்குப் பறையறைவித் தலுண்மையின் ''பணையெழுந்தார்ப்ப'' என்றார். ''வெரூஉப் பறை நுவலும் பரூஉப் பெருந்

தடக்கை, வெருவரு செலவின் வெகுளி ‘‘வேழம்’’ என்பது காண்க வென்றி முரசுங் கொள்க. மேலோரின்றி என்றது பாகரை வீசி யென்றபடி’ ”மேலோர் வீசி” என்றார் பிற சான்றோரும், காமர் - காமம் என்னும் பொருட்டு. கடக்களிறு கைவீசிச் செல்லுமாகலின் ‘‘காமர் செங்கை நீட்டி’’ என்றார். பூ -வேங்கைப்பூ ’ ஏழிலைப் பாலையின் மலருமாம்’ யானையின் மதம். அப்பூக்களின் மணமுடையதாதலை, மூ ‘‘விலக்கருங் கரிமதம் வேங்கை நாறுவ’’ ‘‘பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாறக், காத்த வங்குச் நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப், பூத்த வேழிலைப் பாலையைப் பொடிப் பொடி யாகக், காத்தி ரங்களாற் றலத் தொடுந் தேய்த்த தோர் களிறு’’ என்பவற்றானறிக. ‘‘கால்கிளர்ந் தன்ன வேழமேல் கொண்டு’’ என்பதனால் யானை காற்றுப்போற் கிளர்ந்தெழு மென்பதறிக.

பெயர்வோன்றன்னை நீலயானை தொடர வென்சு: இரவு வர என்றவாறாயிற்று.

23-28. முறைமையின் நகர நம்பியர் வளையோர் தம்முடன். நக ரத்திலுள்ள காதலஞ்செல்வர் மகளிர் தம்மோடு முறைமை யாக, மகர வீணையின் கிளை நரம்பு வடித்த இளிபுணர் இன்சீர் எஃகு உளம் கிழிப்ப மகரயாழின் கிளைநரம்பு களைத் தெறித்த இசையுடன் சேர்ந்த இனிய தாள வொற்றாகிய வேல் உளத்தைக்கிழிப்ப, பொறாஅ நெஞ்சில் புகைஎரி பொத்தி-பொறுக்கலாற்றாத உள்ளத்தின்கள் புகைகின்ற காமத்தீயானது மூட்டப்பட்டு, பறாஅக் குருகின் உயிர்த்து அவன் போயபின்-கொல்லன் உலை மூக்கினைப் போல வெய்துயிர்த்து இளங்கோ சென்றபின்னர்

வளையோர்-வளையணிந்த மகளிர். நம்பியரும் வளையோரும் வடித்த இளிபுணர் இன்சீர் என்க. மகர வீணை - மகரயாழ் நால்வகை யாழுளொன்று பதினேழு நரம்புகளையுடையது. கிளை - ஐந்தாம் நரம்பு’ உழை சட்சமாகலின், சட்சக்கிரமத்தில் அதற்கைந்தாவ தாகிய குரல் கிளையாகும்’ அங்ஙனமே இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்பன குரல் முதல் ஒன்றற்கொன்று கிளையாகும் ஆகலின் இவ்வைந்தனையுமே கிளைநரம் பென்றலுமுண்டு ‘‘கிளையெனப் படுவ கிளக்குங் காலைக், குரலே யிளியே துத்தம் விளரி, கைக்கிளை யெனவைந் தாகு மென்ப’’ என்னும் பழைய நூற்பாவுங் காண்க. வடித்தல் - நரம்பை உருவுதல்’ தெறித்தலுக் காயிற்று. இளியென்பது ஏழுநரம்பினுள் ஒன்றன் பெயராதலன்றி, இசையைக் குறிக்கும் பொதுப் பெயருமாம், சீருடன்கூடிய இளியாகிய எஃகு என்க. பறாஅக் குருகு - கொல்லன் உலைமூக்கு பூவா வஞ்சி முதலியன போல வெளிப்படையென்னும் இலக்கணத்தது. அவன் - உதயகுமரன்.

29-35. உறையுட் குடிகை உள்வரிக் கொண்ட - உறைவிட மாகிய சிறிய கோயிலின்கண் வேற்றுருவ மெய்திய, மறுவில் செய்கை மணிமேகலைதான் - குற்றமற்ற செய்கையையுடைய மணிமேகலை, மாதவி மகளாய் மன்றம் திரிதரின்-மாதவியின் மகளாகவே உலக அறவியிற் சுற்றிக்கொண்டிருந்தால், காவலன் மகனோ கைவிடலீ யான் - மன்னவன் புதல்வன் கைவிடான் என நினைந்து, காய்பசி யாட்டி காயசண்டிகை என ஊர் முழுதறியும் உருவங்கொண்டே ஊரிலுள்ளோர் அனைவராலும் நன்கறியப்பட்ட யானைத்தீ நோயினையுடைய காயசண்டிகையைப் போல உருவங்கொண்டு, ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணையாகி-வறியோர்க்கு உதவிபுரியும் அருந்துணையாகி ’

உள்வரி - வேற்றுரு’ பொய்வேடம் விடலீயான்: வினைத்திரி சொல் கைவிடேனென நினைந்து என ஒரு சொல் வருவித்துரைக்க.

36-41. ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன் - வாங்குதலும் கொடுத்தலும் இரப்போர் கடனாம் ஆகலின், அவர் மேற் சென்று அளித்தல் விழுத்தகைத்து என்றே - அவர் எவ் விடத்தும் வலிந்து சென்று கொடுத்தல் சிறப்புடையது என்று, நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தனராமென - நூற்பொருள்களை அறிந்தோர் ஆராய்ந்துரைத்தனர் என்று கருதி, முதியாள் கோட்டத்து அகவயின் இருந்த - சம்பாபதி கோயிலின் உள்ளே இருந்த, அமுதசுரபியை அங்கையின் வாங்கி - அமுதசுரபியை அழகிய கையிற்கொண்டு, பதியகம் திரிதரும் பைந்தொடி நங்கை - நகரத்தின்கண்ணே சுற்றுகின்ற பசிய வளையல்களை யணிந்த மணிமேகலை.

மேற்சென்று -வலிதிற் சென்று. நுனித்தல் - நுண்ணிதின் உணர்தல். என -என்று கருதி. பைந்தொடி மடந்தை என்பதும் பாடம்.

42-46. அதிரகழல் வேந்தன் அடிபிழைத்தாரை - ஒலிக்கின்ற வீரக் கழலையுடைய மன்னவன் அடிக்குப் பிழை செய்தாரை, ஒறுக்கும் தண்டத்து உறுசிறைக் கோட்டம் - தண்டிக்கும் தண்டத்தினையுடைய சிறைச் சாலையின்கண், விருப்பொடும் புகுந்து - விருப்பத்துடன் சென்று, வெய்துயிர்த்துப் புலம்பி -வெய்தாக உயிர்த்து வருந்தி, ஆங்குப் பசியுறும் ஆருயிர் மாக்களை- அவ்விடத்திலே பசியுற்றிருக்கும் அரிய உயிரை யுடைய மக்களை, வாங்கு கையகம் வருந்த நின்று ஊட்டலும்-வாங்குகின்ற கையினிடம் வருந்துமாறு நின்று உண்பித்தலும்.

இறைவனுக்கும் பெரியார்க்கும் பிழைசெய்தாரைத் திருவடி பிழைத்தாரென்று கூறுதல் மரபு. தண்டத்து உறு தண்டத் தினைப் பொருந்தி நுகரும். பசியுற்று வெய்துயிர்த்துப் புலம்பும் மாக்களென மாறுக. ஆருயிர் மாக்கள் என்றது, பெறுதற்கரிய மக்களுயிரைப் பெற்றார் இங்ஙனம் வருந்துகின்றனரே யென இரங்கிக் கூறியபடி. ஈண்டுக் கூறியவாறு "வாங்குநர் கையகம் வருத்துதலல்லது" (11 : 49) "வாங்குகை வருந்த மன்னுயி ரோம்பலின்" (14 : 23) "வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்து" (17 : 5) என முன்னர்ப் போந்தமையுங் காண்க.

47-50. ஊட்டிய பாத்திரம் ஒன்றென வியந்து-இங்ஙனம் பலரையும் உண்பித்த பாத்திரம் ஒன்றே என வியப்புற்று கோட்டங் காவலர் சிறைக்கோட்டங் காப்பவர், கோமகன் தனக்கு அரசனுக்கு இப் பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும் இப் பாத்திரத்தின் தானச் சிறப்பையும் இதனைக் கொண்ட இளங்கொடியின் செயலையும், யாப்புடைத்தாக இசைத்தும் என்று ஏகி உறுதி யுடைத்தாகக் கூறுவோம் எனச் சென்று

கோட்டங் காவலர் வியந்து தானமும் செய்தியும் கோமகனுக்கு இசைத்துமென் றேகி யென்க,

51-56. நெடியோன் குறள் உருவாகி நிமிர்ந்து தன் அடியிர் படியை அடக்கிய-திருமால் வாமன வடிவங்கொண்டு பிள் பேருருவமாய்ப் பூமியைத் தன் திருவடியின்கண் அடக்க அந்நாள்- அற்றைநாளில், நீரிற்பெய்த - பூமியை நீருடன் அளித்த, மூரி வார் சிலை மாவலி மருமான் சீர்கெழு திருமகள் வலிய பெரிய வில்லையுடைய மாவலியின் வழித்தோன்றலாகிய அரசனுடைய புகழ்மிக்க திருமகளாகிய, சீர்த்தி என்னும் திருத்தகு தேவியொடு சீர்த்தி என்னும் பெயருடைய செல்வமிக்க தேவியுடன், போது அவிழ்பூம்பொழில் புகுந்தனன்புக்கு - பூக்கள் விரிந்த அழகிய சோலையிற் சென்று புகுந்து '

குறள் - குறிய வடிவமுடைய வாமனன் காசிபனுக்கும் அதிதிக்கும் பிறந்தவன் திருமாலின் ஐந்தாவது தோற்றமாயவன் இவன் மாபலியிடத்து மூன்றடிமண் இரந்து பெற்று, புவியையும் வானையும் ஈரடியால் அளந்து, மூன்றாமடியைப் பலியின் தலையில் வைத்து அவனைப் பாதலத்தில் இருத்தினன் என்பது வரலாறு அடக்கிய -அடக்க: செய்யிய வென்னும் வினையெச்சம் பெயரெச்சமாக்கோடலுமாம். நீரிற் பெய்த-நீருடன் பெய்த் தாரை வார்த்தளித்த என்றபடி மாவலி: மாபலியென்பதன் திரிபு பாண குலத்தரசர்கள் மாவலியின் வழியினரெனக்

கூறப்படுவர் இன்னோர் வாணகப்பாடி முதலிய இடங்களிலிருந்து அரசுபுரிந் தோராவர். அக் குலத்தரசருளொருவன் மகளென்க.

57-60. கொம்பர்த் தும்பி குழலிசை காட்ட - கொப்பு களிலுள்ள தும்பிகள் வேய்ங்குழ லோசையைக் காட்ட பொங்கர் வண்டினம் நல்லியாழ்செய்ய சோலையிலுள வண்டினங்கள் நல்ல யாழினி சையை முரல, வரிக்குயில் பாட மாமயில் ஆடும் வரிகளையுடைய குயில்கள் பாட அழகிய மயில்கள் ஆடுகின்ற, விரைப்பூம் பந்தர் கண்டு உளம் சிறந்தும்-மணம் பொருந்திய மலர்ப்பந்தரைக் கண்டு மனமகிழ்ச்சி மிக்கும்'

வரி - கீற்று' வரிப்பாட்டுமாம். பந்தரில் ஆடுதலைக் கண்டு என மாறுதலுமாம். “குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய, வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பின், மயிலா டரங்கின்“ (4:3-6) என முன்னர் வந்திருத்தல் அறியற் பாலது.

67-66. புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு - தன் துணையாகிய பேட்டினைப் பிரிந்த குளத்தில் வாழும் அன்னப்புள்ளுடன், மடமயிற் பேடையும் தோகையும் கூடி -மடப்பம் பொருந்திய மயிற்பேடையும் ஆண் மயிலும் சேர்ந்து, இருசிறை விரித்தாங்கு. எழுந்துடன் கொட்பன - இரண்டு சிறகுகளையும் விரித்து ஒருங்கே எழுந்து சுழல்வனவற்றை, ஒரு சிறைக் கண்டாங்கு உள்மகிழ்வு எய்தி -ஆண்டு ஒரு பக்கத்திற் கண்டு மனக் களிப்புற்று, மா மணி வண்ணனும் தம் முனும் பிஞ்ஞையும் -நீல மணிபோன்ற நிறமுடைய கண்ணனும் அவன் முன்னவனாகிய பலதேவனும் நப்பின்னையும், ஆடிய குரவை இ.்.தாமென நோக்கியும் துவரா பதியில் எருமன்றத்தே ஆடிய குரவையாகும் இ.்.து என்று நோக்கி வியந்தும்'

வெண்ணிற முடைமையால் ஆண் அன்னத்திற்குப் பல தேவனும், கருநிறமுடைமையால் ஆண் மயிலுக்கும் பெண் மயிலுக்கும் முறையே கண்ணனும் நப்பின்னையும் உவமைகள். குரவை- வினோதக் கூத்து ஆறினுள் ஒன்று' காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது. கண்ணன் முதலியோர் குரவையாடியதனை,

“மாயவன்றம் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும்

கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர

ஆய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத்

தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே.”

என்பதனானறிக.

67-70. கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப் பாங்குற இருந்த பல்பொறி மஞ்ஞையை - கோங்கம். பூவினுடன் சேர்ந்திருந்த மாங்கனியின் பக்கத்தில் இருந்த பல பொறிகளையுடைய மயிலை, செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்தி - சிவந்த பொற்றட்டில் இனிய பாலை ஏந்திக் கொண்டு, பைங்கின் ஊட்டும் ஓர் பாவையாம் என்றும் உண்பிக்கும் ஒரு அழகிய பெண்ணாகும் என்றும்' பசிய கிளியை

கோங்கலர்க்குப் பாலையுடைய பொற்றட்டும், மாங்கனிக்குக் கிளியும், மயிலுக்குப் பெண்ணும் உவமைகள். மாங்கனிக்குக் கிளி வடிவும் வண்ணமும் பற்றி உவமையாகும்' ”வண்டளிர் மா அத்துக், கிளி போல் காய கிளைத்துணர்” என்பதுங் காண்க மற்றும், மாவடுவிற்குக் கிளி உவமையாதலும், மகடூஉ ஒருத்தி பொன்வள்ளத்திலே பாலையேந்திக் கிளியை உண்பிப்பதுமாகிய கருத்துக்கள் 2”சேடியல் வள்ளத்துப் பெய்தபால் சில காட்டி

ஊடுமென் சிறுகிளி யுணர்ப்பவள் முகம்போல,..டிகயத் தாமரைக் கமழ்முகை கரைமாவின், வடிதீண்ட வாய்விடூஉம் வயலணி நல்லூர" என்னுஞ் சான்றோர் செய்யுளில் அமைந் திருத்தல் காண்க.

71-74. அணிமலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த அழகிய மலர்களையுடைய பூஞ்சோலையில் உள்ளிடத்திருந்த, பிணவுக் குரங்கு ஏற்றிப் பெருமதர் மழைக்கண் மடவோர்க்கு இயற்றிய மாமணி ஊசல் - மதர்த்த நோக்கமுடைய மழை போலும் பெரிய கண்களையுடைய மகளிருக்குச் செய்யப்பட்ட அழகிய மணிகளானாகிய ஊசலில் பெண் குரங்கினை ஏற்றி, கடுவன் ஊக்குவது கண்டு நகை எய்தியும் - ஆண் குரங்கு ஆட்டுவது கண்டு மகிழ்ச்சி யடைந்தும்

பிணவுக் குரங்கு - பெண் குரங்கு' ""பன்றி புல்வாய் நாயென் மூன்றும், ஒன்றிய வென்ப பிணவின் பெயர்க் கொடை" என்னுஞ் சூத்திரத்து, "ஒன்றிய" என்றதனால், பிணவு என்பது குரங்குக்கும் கொள்ளப்பட்டது. கடுவன் ஊசலில் பிணவுக் குரங்கை யேற்றி ஊக்குவது கண்டு நகையெய்தியும் என்க.

75-78. பாசிலை செறிந்த பசுங்காற் கழையொடு - பசிய இலைகள் நெருங்கிய பசிய தண்டினையுடைய மூங்கிலுடன், வால் வீசெறிந்த மராஅம் கண்டு-வெள்ளிய பூக்கள் நெருங்கிய வெண்கடம்பினைக் கண்ணுற்று, நெடியோன் முன்னொடு நின்றனன் ஆம்என - கண்ணன் தன் முன்னோனொடு கின்றனனாம் என்று, தொடிசேர் செங்கையில் தொழுது நின்று ஏத்தியும்-வீரவளை யணிந்த சிவந்த கைகளாற் கும்பிட்டு நின்று துதித்தும்'

முன் - தமையன் ' பலதேவர். கழைக்குக் கண்ணனும் வெண் கடம்பிற்குப் பலதேவரும் உவமைகள். வெண்கடம்பிற்குப் பலதேவர் உவமையாதல் "ஒருகுழை யொருவன்போ லிணர்சேர்ந்த மராஅமும்" "நாஞ்சில் வலவ னிறம்போலப் பூஞ்சினைச், செங்கான் மராஅந் தகைந்தன" என்பவற்றுள்ளும் காணப்படுமாறறிக.

79.92. ஆடற் கூத்தினோடு அவிநயம் தெரிவோர்-கதை தழுவாது ஆடுதலையுடைய கூத்தினோடு பாட்டின் பொருள் தோன்றக் கை காட்டும் அவிநயத்தினை அறிவோரும், நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர் - நாடகக் காப்பியமாகிய நல்ல நூல்களைக் கூர்ந்து ஆராய்வோரும், பண் யாழ் நரம்பில் பண்ணுமுறை நிறுப்போர் - பண்களையுடைய யாழ் நரம்பில் பண்களை முறையே நிறுத்துவோரும், தண்ணுமைக் கருவிக் கண் எறி தெரிவோர் -தோற் கருவியாகிய மத்தளத்தின் முகத்தில் அடித்தலை ஆராய்வோரும், குழலொடு கண்டம் கொளச்சீர் நிறுப்போர்-வேய்ங் குழலுடன் மிடற்றோசையும் பொருந்தும் வண்ணம் தாளவறுதி செய்வோரும், பழு நிய படால் பலரொடு மகிழ்வோர்-முற்றுப் பெற்ற இசைப் பாடல்களைப் பலருடன் பாடி மகிழ்வோரும், ஆரம் பரிந்த முத்தம்கோப் போர்-மாலைகள் அறுபடுதலாற் சிந்திய முத்துக் களைக் கோப்போரும், ஈரம் புலர்ந்த சாந்தம் திமிர்வோர்-ஈரம் உலர்ந்த சந்தனத்தைத் திமிர்வோரும், குங்கும வருணம் கொங்கையின் இழைப் போர் - சிவந்த தொய்யிற் குழம்பைக் கொங்கைகளில் எழுதுவோரும், அம் செங்கழுநீர் ஆயிதழ் பிணிப்போர்- அழகிய செங்கழுநீர் மலரின் அழகிய இதழ்களைக் கட்டுவோரும், நல்நெடுங் கூந்தல் நறுவிரை குடைவோர் - நல்ல நீண்ட குழலில் நறுமணங்களைப் புகுத்தி அப்புவோரும், பொன்னின் ஆடியிற் பொருந்துபு நிற்போர் -பொன்னாலாகிய சுற்றுவட்டத்தினையுடைய கண்ணாடியிற் பொருந்திக் கண்டு நிற்போரும் ஆகிய, ஆங்கவர் தம்மோடு - அவர்களுடன், அகலிரு வானத்து வேந்தனிற் சென்று விளையாட்டு அயர்ந்து - அகன்ற பெரிய விண்ணுலகத்து வேந்தனாகிய இந்திரனைப் போலச் சென்று விளையாட்டை விரும்பிச் செய்து'

நாடகம் - கதை தழுவிவருங் கூத்து. நாடகக் காப்பியமாகிய நன்னூலென்க' இன்பத் துறையில் நிற்பவராகலின் நாடகக் காப்பியங் கூறினார். முன்னின்ற பண் யாழுக்கு அடை யாழ் பேரியாழ் முதலிய நால்வகை யாழ். நரம்பு - குரல், துத்தம் கைக்கிளை, உழை, இளி, விளரி,

தாரம் என்பன. பண் - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்னும் பெரும்பண்களும், அவற்றில் திறங்களும், அவ்விரு கூற்றின் அகநிலை, புறநிலை, அருகியல் பெருகியல் என்னும் இன வேறுபாடுகளும் ஆகிய பண்கள். எறி முதனிலைத் தொழிற் பெயர்' "பண்ணமை முழவின் கண் ணெறியறிந்து" என்பதுங் காண்க. பழுநிய - இசை முற்றிய திமிர்தல் தடவி யுதிர்த்தல்' குடைவோர் - துவரினும் ஓமாலிகையிலும் ஊறிய நன்னீரால் கூந்தலை ஆட்டுவோர் என்றுமாம். அவிநடத் தெரிவோர் முதலாகிய அவர்தம்மோடு சென்று விளையாட்ட யர்ந்து என்க.

93-99. குருந்தும் தளவும் திருந்து மலர்ச் செருந்தியும் - குருந்தும் செம்முல்லையும் அழகிய பூக்களையுடைய செருந்தியும். முருகுவிரி முல்லையும் கருவிளம் பொங்கரும் - மணம் விரிகின்ற முல்லையும் கருவிள மரச்செறிவும், பொருந்துபு நின்று திருந்து நகைசெய்து-அமர்ந்திருந்து இன்ப நகை புரிந்து, குறுங்கால் நகுலமும் நெடுஞ்செவி முயலும் - குறிய கால்களையுடைய கீரியையும் நீண்ட காதுகளையுடைய முயலையும், பிறழ்ந்து பாய் மானும் இறும்பு அகலா வெறியும் -துள்ளிக் குதிக்கின்ற மானையும் குறுங்காடுகளினின்று நீங்காத ஆட்டையும், வம்மெனக் கூஉய் மகிழ்துணையொடு தன் செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று -வாருமென அழைத்துப் பெருந்தேவியுடன் தன் சிவந்த மலர் போன்ற செவ்விய கையாற் காட்டி நின்று'

செருந்தி, கருவிளை யென்பன மர வேறுபாடுகள். பொங்கர் சோலை' சோலை போலும் மரச் செறிவு. இறும்பு - குறுங்காடு வெறி - ஆடு, மகிழ்துணை - இராசமாதேவி. மகிழ்துணையொடு பொருந்துபு நின்று நகைசெய்து வம்மெனக் கூஉய்ச் செங்கை காட்டுபு நின்று என்க.

100-106. மன்னவன்தானும் மலர்க்கணை மைந்தனும் - அரசர் பெருமானும் மலராகிய அம்புகளையுடைய காமவேளும் இன்னிள வேனிலும் இளங்காற் செல்வனும் - இன்பம் பயக்கும் இளவேனிலும் தென்றற் காற்ற கிய செல்வலும் எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும் - நீரை நிறைக்க வேண்டுமாயின் நிறைத்துப் போக்க வேண்டுமாயிற் போக்கு தற்குரிய எந்திரம் அமைந்த கிணறும்செய் குன்றும், வந்து வீழ் அருவியும் மலர்ப்பூம்பந்தரும் - வந்து விழுகின்ற அருவியும் மலர்களாகிய அழகிய பந்தரும், பரப்புநீர்ப் பொய்கையும் கரப்பு நீர்க்கேணியும் - நீர்ப்பரப்பினையுடைய வாவியும் மறைந்திருக்கின்ற நீரையுடைய கிணறும், ஒளித்து உறை இடங்களும் பளிக்கறைப் பள்ளியும் ஒளிந்து வாழ்கின்ற மறைவிடங்களும் பளிக்கறையாகிய இடமும் ஆகிய, யாங்கணும் திரிந்து தாழ்ந்து விளையாடி-எவ்விடத்தும் திரிந்து தங்கி விளையாடி
'

இளவேனில் - சித்திரையும் வைகாசியுமாகிய இரு திங்கள்கள். இளங்கால்-இளந் தென்றற்காற்று, மந்தமாருதம். இளவேனிற் காலத்திலே இளந் தென்றல் வீசாநிற்கக் காமவேட்கை விஞ்ச மன்னவன் விளையாடினான் என்பார், "மன்னவன்றானும் மைந்தனும் வேனிலும் செல்வனும் விளையாடி" என்றார். ""அந்தக் கேணியு மெந்திரக் கிணறும், தண்பூங் காவுந் தலைத்தோன் றருவிய, வெண்சுதைக் குன்றொடு வேண்டுவ பிறவும், இளையோர்க் சியற்றிய விளையாட் டிடத்த, சித்திரப் பூமி வித்தக நோக்கி" என வருவது ஈண்டு அறியற்பாலது.

107-116. மகதவினைஞரும் மராட்டக் கம்மரும்-மகத நாட்டிற் பிறந்த மணி வேலைக்காரரும் மகாராட்டிரத்திற் பிறந்த பொற்கம்மியரும், அவந்திக்கொல்லரும் யவனத்தச்சரும்-அவந்திநாட்டுக் கொல்லரும் யவனநாட்டுத் தச்சரும், தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி-தண்ணிய தமிழ்நாட்டுத் தோன்றிய தொழில் வல்லாருடன் கூடி, கொண்டினிது இயற்றிய கண்கவர் செய்வினை -உள்ளங் கொண்டு நன்கு செய்தமைத்த கண்களைக் கவரும் தொழிற் சிறப்பினையுடைய, பவளத் திரள்கால் பன்மணிப் போதிகை - பவளத்தாற் சமைத்த திரட்சியுடைய தூண்களும் பல்வகை மணிகளாலாகிய போதிகைக் கட்டைகளும், தவள நித்திலத் தாமம் தாழ்ந்த-வெள்ளிய முத்துமாலைகள் தொங்கவிடப்பட்ட, கோணச் சந்தி மாண்வினை விதானத்து - கோணமாகிய சந்தினை யுடைய மாட்சிமைப்பட்ட தொழிலமைந்த மேற்கட்டியும் அமைந்த, தமனியம் வேய்ந்த

வகைபெறு வனப்பின்-பொன்னால் வேயப்பெற்ற வகையமைந்த அழகினையுடைய, பைஞ்சேறு மெழுதாப் பசும் பொன் மண்டபத்து-பசிய சாணத்தான் மெழுகப்படாத பசும் பொன் மண்டபத்தின்கண், இந்திர திருவன் சென்று இனிது ஏறலும் இந்திரச் செல்வத் தினையுடைய மன்னவன் இனிது சென்று ஏறுதலும்

மராட்டம்: மகாராட்டிரம் என்பதன் மரூஉ யவனம் என்புத பரத கண்டத்தின் புறத்ததாகிய ஓர் நாடு. இங்ஙனம் ஒவ்வொரு நாட்டு வினைஞர் ஒவ்வொரு தொழிலிற் சிறந்திருந்தன ரென்பது "யவனத் தச்சருமவந்திக் கொல்லரும், மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும், பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞரும் கோசலத் தியன்ற வோவியத் தொழிலரும், வத்த நாட்டு வண்ணக் கம்மரும்" என்பதனாலும் அறியப்படும். தமிழ் - தமிழ் நாடு' தமிழ் வினைஞர் எனப் பொதுப் படக் கூறினமையின் அவர் பல தொழிலினும் வல்லுநராதல் பெற்றாம். போதிகை- தூணின் மேல் உத்தரம் முதலியவற்றைத் தாங்குங் கட்டை' கோணச் சந்தி . கூடல்வாய். பைஞ்சேறு - கோமயம்' ஆவின்சாணம். பைஞ்சேறு மெழுகிய நன்னகர் என்றா பிறரும். பொன் மண்டப மாகையார் பைஞ்சேற்றால் மெழுகப் படாதாயிற்று' சந்தனத்தால் மெழுகப்பட்ட தென்னலுமாம்' "மங்கல வெள்ளை வழித்து முத்தீர்த்தபின் என வருதல் காண்க. செய்வினையையுடைய மண்டபம், கால் முதலியவற்றையுடைய பொன் மண்டபமென்க

117-130. வாயிலுக்கு இசைத்து மன்னவன் அருளால் - வாயில் காப் போர்க்கு உரைத்து அரசன் பணியால். சேய்நிலத்தன்றியும் செவ்வியின் வணங்கி தூரமான இடத்தில் தாம் நின்ற தன்றியும் முறைமையால் வணக்கஞ்செய்து, எஞ்சா மண் நசைஇ இகல் உளம் துரப்ப - குறையாத நிலத்தை விரும்பி மாறுபாடானது உள்ளத்தைச் செலுத்த, வஞ்சியின் இருந்து வஞ்சி சூடி - வஞ்சி நகரத்தின் கண்ணிருந்து வஞ்சிமாலை சூடி, முறஞ்செவி யானையும் தேரும் மாவும்-முறம் போன்ற காதுகளையுடைய யானையும் தேரும் குதிரையும் மறங்கெழு நெடுவாள் வயவரும் மிடைந்த-பெரிய வாட்படையைக் கையிற்கொண்ட ஆண்மைமிக்க வீரரும் செறிந்த, தலைத் தார்ச் சேனையொடு-முதன்மையாகிய தூசிப் படையோடு மலைத்துத் தலைவந்தோர் பொருதற்குவந்த இருபெரு வேந்தராகிய சேரபாண்டியருடைய, சிலைக்கயல் நெடுங் கொடி வில்லும் கயலுமாகிய நெடிய கொடிகளை, செரு வேல் தடக்கை ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்-போர்புரியும் வேற்படையைக் கொண்ட பெரிய கைகளை யுடைய ஆத்திமலரால் தொடுக்கப்பட்ட கண்ணியையுடைய இளங்கோவினால், காரியாற்றுக் கொண்ட - காரி யாற்றின் கண் கைப்பற்றிய காவல் வெண்குடை வலிகெழு தடக்கை மாவண்கிள்ளி உயிர்களைக் காக்கும் வெண் குடை யினையும் வலிமிக்க பெருங் கைகளையும் உடைய மாவண் கிள்ளி, ஒளியொடு வாழி ஊழிதோ றூழி நீ பல்லூழி காலம் ஒளியுடன் வாழ் வாயாக, வாழி எங்கோ மன்னவர் பெருந்தகை - எம் தலைவனாகிய அரசர் பெருந்தகையே வாழ்வாயாக, கேளிது மன்னோ கெடுகநின் பகைஞர் - நின் பகைஞர் ஒழிக ! அரசே இதனைக் கேட்பாயாக

(48) கோட்டங் காவலர் (50) இசைத்து மென்றேகி, (117) வாயிலுக்கிசைத்து, மன்னவனருளால் (138) மன்னவ என்றலும்என முடியும்' மன்னவனருளால் வணங்கி யென்றலுமாம். பகைவர் மண்ணினை விரும்பி வஞ்சிசூடிப் போருக்குச் செல்லுதல் வஞ்சித் திணையாகும் இதனை, ""எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன், அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே" என்பதனானறிக. வஞ்சியினிருந்து வஞ்சி சூடிச் சேனையொடு தலைவந்தோர் என்க. மலைந்து என்பதனை மலையவெனத் திரிக்க. இளங்கோன்-தம்பியாகிய நலங்கிள்ளி. மாவண்கிள்ளி : பெயர்' மிக்க வண்மையை யுடைய கிள்ளி யென்றுமாம்' இவன் கிள்ளிவளவன் எனப்படு பவன். கிள்ளி : விளி. கிள்ளிவளவன் பகைவனாகிய காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியையும், அவனுக்குத் துணையாக வந்தெதிர்த்த சேர பாண்டியர்களையும் தன் தம்பியாகிய நலங்கிள்ளியால் காரியாறு என்னும் யாற்றின் பாங்கர் வென்றன னென்க. காரியாறு ஓர் நதி என்பதனை, 2 செல்கதிமுன் னளிப்பார்தந் திருக்காரிக் கரைபணிந்து என்பதனானறிக, ஒளி கடவுட்டன்மை' 3"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால் என்பது காண்க: பரிமேலழகரும்

இம் மேற் கோள் கொண்டே "இளையரினமுறைய ரென்றிகழார் நின்ற, ஒளியோ டொழுகப் படும்'' என்னுங் குறளுரையில் "ஒளி -உறங்கா நிற்கவும் உலகங் காக்கின்ற அவரது கடவுட்டன்மை,'' என்றுரைத்தார். மன்னும் ஓவும் அசைகள்.

131-138. யானைத்தீ நோய்க்கு அயர்ந்து மெய் வாடி இம் மாநகர்த் திரியும் ஓர் வம்ப மாதர் - யானைத்தீ என்னும் பசிநோயா சோர்ந்து உடல் வாட்டமுற்று இப் பெரிய நகரத்தின்கண் சுற்றிக்கொண்டிருந்த ஒரு புதிய மங்கை, அருஞ்சிறை கோட்டத்து அகவயிற் புகுந்து - அரிய சிறைச்சாலையில் உள்ளே நுழைந்து, பெரும் பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி - பெரிய புகழுடைய அரசே நினது பெயரை வாழ்த்தி, ஐயப் பாத்திரம் ஒன்றுகொண்டு ஆங்கு மொய்கொள் மாக்கள் மொசிக்க ஊண் சுரந்தனள் - ஒரே பிச்சைப் பாத்திரத்தைக் கொண்டு அங்கு நெருங்குதலையுடைய மக்கள் அனைவரும் உண்ணுமாறு உணவினைச் சுரந்தளித்தனள், ஊழிதோறூழி உலகம் காத்து வாழி எங்கோ மன்னவ என்றலும் ஊழியூழியளவும் உலகினைக் காத்து எம் தலைவனாகிய அரசே வாழ்வாயாக என வுரைத்தலும்'

நோய்க்கு அயர்ந்து -நோயால் அயர்ந்து வம்பு - புதுமை' ஈறு திரிந்தது. பெரும்பெயர்- மிக்க புகழ். மொசிக்க-உண்ண' "மையூன் மொசித்த வொக்கலொடு" என்பது காண்க.

139-145. வருக வருக மடக்கொடிதான் என்று அருள்புரி நெஞ்ச மொடு அரசன் கூறலின் - அங்ஙனமாயின் அவ் விளங்கொடி ஈண்டு வருக வருக என்று அரசன் அருண்மிகுந்த உளத்தி னோடும் உரைத்தலின், வாயிலாளரின் மடக்கொடிதான் சென்று -வாயில் காவலரால் மணிமேகலை அரசன்முன் சென்று, ஆய்கழல் வேந்தன் அருள் வாழிய என - ஆராய்ந்து வீரக் கழலை யணிந்த மன்னவனது அருள் வாழ்க என்று கூற, தாங்கரும் தன்மைத் தவத்தோய் நீ யார் - பொறுத்தற்கரிய தன்மைகளையுடைய தவத்தினை யுடையோய் நீ யார், யாங் காகியது இவ் வேந்திய கடிஞை என்று - நின் கையிலேந்திய இப் பாத்திரம் யாண்டுக் கிடைத்தது என்று, அரசன் கூறலும் -வேந்தன் வினவுதலும், ஆயிழை உரைக்கும் - அவள் கூறுவாள்'

அடுக்கு விரைவு பற்றியது. அழைத்து வருக வென்று வாயிலாளர்க்குக் கூற வென்க. தாங்கருந் தன்மை- பிறராற் பொறுத்தற்கரிய தன்மை.

146-154. விரைத்தார் வேந்தே நீ நீடுவாழி - மணம் பொருந்திய மாலையை யணிந்த மன்னவ! நீ நீடூழி வாழ்வாயாக, விஞ்சை மகள் யான் யான் ஓர் வித்தியாதர மகள், விழவணி மூதூர் வஞ்சந் திரிந்தேன் - விழாவாலாகிய எழில் நிறைந்த இத் தொன்னகரில் வஞ்சத்தால் திரிந்தேன், வாழிய பெருந்தகை அரசர் பெருந்தகை வாழ்க, வானம் வாய்க்க - மழை தவறாது பொழிக, மண்வளம் பெருகுக - புவியில் வளம்பெருகுக. தீதின்றாக கோமகற்கு அரசனுக்குத் தீதீன்றி நன்மை யுண்டாகுசு, ஈங்கிது ஐயக் கடிஞை-இ∴து ஓர் பிச்சைப் பாத்திரம், அம்பல மருங்கு ஓர் தெய்வம் தந்தது உலக வறவியிலுள்ள ஒரு தெய்வத்தாற்றரப் பட்டது, திப்பிய மாயது தெய்வத்தன்மை யுடையது, யானைத்தீ நோய் அரும்பசி கெடுத்தது யானைத்தீ யென்னும் போக்குதற் கரிய பசிநோயைப் போக்கியது, ஊன் உடை மாக்கட்கு உயிர் மருந்து இது என-இ∴து உடம்பு மெலிந்த மக்களுக்கு உயிரை நிறுத்தும் மருந்தாவது என்று கூற

விஞ்சை மகள் என்பதற்கு மந்திரத்தால் உருமாறிய மகள் என்று மணிமேகலைக் கேற்பப் பொருள்கொள்க. வஞ்சத் திரிந்தேன் என்பதற்கும் எனது தீவினையால் திரிந்தேன் என்றும், வேற்றுருக்கொண்டு திரிந்தேன் என்றும் இருபொருள் கொள்க. உடை: வினைத்தொகை' உடையவென்றுமாம்' பிறிதொன்று மில்லாத வென்றபடி

155-158. யான் செயற்பாலது என்இளங்கொடிக்கு என்று வேந்தன் கூற - அரசன் யான் நினக்குச் செய்யவேண்டியது யாது என வினவ, மெல்லியல் உரைக்கும் - அவள் கூறுவாள், சிறையோர் கோட்டம் சீத்து அருள் நெஞ்சத்து அறவோர்க்கு ஆக்கும் அது வாழியர் என - சிறைச்சாலையை அழித்து அருள் உள்ளமுடைய அறவோர் வாழுங் கோட்டமாக்கும் அச் செயலே வாழ்வாயாக என்றுரைக்க ’

இளங்கொடிக்கு முன்னிலையிற் படர்க்கை. ஆக்குமது நீ செயற் பாலதென என்க.

159-162. அருஞ்சிறை விட்டு ஆங்கு ஆயிழை உரைத்த பெருந்தவர் தம்மால் பெரும்பொருள் எய்த - அரிய சிறையிலுள்ளோரை விடுத்து அவ்விடத்தில் மணிமேகலை கூறிய பெருந்தவமுடையோர் களால் பெரும் பொருளை எய்துமாறு, கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம் அறவோர்க்கு ஆக்கினன் அரசாள் வேந்து என்-கறைப்பட்டோரில்லாத சிறைக்கோட்டத்தை அறக்கோட்ட மாக்கினான் அரசு ரியும் வேந்தன் என்க.

பெரும் பொருள் - அறம் ’ ஞானமுமாம். கறையோர் - கடமை (இறை) செலுத்த வேண்டியவர்கள். கறையோரில்லா என்றமையால் அரசன் கறை வீடு செய்தமை பெற்றாம். செங்கோல் வேந்தர் கறைவீடு செய்வராதலை. ‘‘சிறைப்படு கோட்டஞ் சீமின் யாவதுங், கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மின் கோன்முறை யறைந்த கொற்ற வேந்தன்’’ ‘‘சிறையோர் கோட்டஞ் சீமின் யாங்கணுங், கறைகெழு நாடு கறைவீடு செய்ம்மென’’ என்பவற்றானறிக. சிறையோர் கோட்டம் - சிறைக் கோட்டம்.

தாரோன் வணங்கி வஞ்சினங்கூறத் தெய்வங் கூறலும் அவள் உள்ளங் கலங்கி வருந்தி அறிவாமெனப் பெயர்வோன்றன்னை (இரவாகிய) நீலயானை தொடர எ∴கு உளங்கிழிப்ப அவள் பொத்தி உயிர்த்துப் போயபின், மணிமேகலை நுனித்தனரென்று கருதி வாங்கிக் கோட்டம் புகுந்து மாக்களை ஊட்டலும், காவலர் வியந்து கோமகனுக்கு இசைத்துமென்றேகி, திருவன் சென்று ஏறலும், வாயிலுக்கிசைத்து வணங்கி, “மன்னவ, வம்பமாதர் ஊண் சுரந்தனள்“ என்றலும், “வருக வருக என்று அரசன் கூறலின் மடக்கொடி வாயிலாளரிற் சென்று, “நின் அருள் வாழிய“ என “யாங்காகியது” என்று அரசன் கூறலும், ஆயிழை உரைப்பவள் “உயிர் மருந்து இது“ என, “யான் செயற்பாலது என்“ என்று வேந்தன் கூற, மெல்லியல் உரைப்பவள், “நீ செயற்பாலது அறவோர்க்கு ஆக்குமது“ என, வேந்து பெரும்பொரு ளெய்துதற்குக் கோட்டத்தை அறவோர்க்கு ஆக்கினன் என வினை முடிவு செய்க.

சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை முற்றிற்று.

வினாக்கள்

வ.எண்	ஐந்து மதிப்பெண் வினா	LOCF Mapping		
1	காப்பியம் பற்றிசொல் விளக்கம் தருக.	K2	CO2	PO4
2	தொடர்நிலைச்செய்யுள் என்றால் என்ன?	K3	CO3	PO5
3	காப்பியத்தின் இலக்கணம் கூறுக.	K4	CO4	PO1
4	மணிமேகலைவேறுபெயர்களைஎழுதுக.	K5	CO5	PO2
5	ஆய்ச்சியர் குரவை பற்றிவிளக்குக.	K1	CO4	PO3

வ.எண்	எட்டு மதிபெண் வினா	LOCF Mapping		
1	மணிமேகலைகாப்பியம் காதைஅமைப்பைவிவரி.	K2	CO1	PO4
2	ஐஞ்சிறுகாப்பியங்களைதொகுத்துரைக்க.	K1	CO2	PO6
3	மணிமேகலைஏன் சிறைக்கோட்டத்தைஅறக்கோட்டமாகமாற்றினாள் என்பதைபற்றிவிவரி.	K4	CO2	PO5
4	ஐம்பெருங்காப்பியங்களைதொகுத்துரைக்க.	K3	CO4	PO6
5	சிலப்பதிகாரம் வேட்டுவவரிகுறித்துவிளக்குக.	K5	CO1	PO3

அலகு 2

சீவக சிந்தாமணி

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய தமிழ்க் காப்பியங்கள் தமிழ் மண்ணில் தோன்றிய பெண் மக்களைக் காப்பியத் தலைமைப் பாத்திரமாகக் கொண்டிருக்க, இச் சீவக சிந்தாமணி வடநாட்டு வேந்தனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு அமைகிறது. காப்பியக் கதை, கதை மாந்தர்கள், கதைக்களம் முதலானவை தமிழ் மண்ணுக்குச் சொந்தமல்ல' இவை வடவர் மரபு' வடநாட்டார் மரபு' என்றாலும் காப்பிய ஆசிரியர் தமிழர்' தமிழ் நாட்டைச் சார்ந்தவர். தம் சமயச் சார்பு காரணமாக தன் சமயம் சார்ந்த வடமொழிக் கதையை எடுத்துக் கொண்டு, கதைப் போக்கை மாற்றாமல், அதே நேரத்தில் தமிழர் மரபு பிறழாமல் காப்பியத்தைப் புனைந்திருக்கின்ற திறன் அருமையினும் அருமை. இதனால்தான் இக்காப்பியம், சோழர் காலத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததாகச் சேக்கிழார் புராணம் குறிப்பிடுகின்றது.

இன்றும் கூடத் தமிழ் அறிஞர்களால், தமிழ் ஆசிரியர் மற்றும் மாணாக்கர்களால் பெரிதும் போற்றப்பட்டு வருவதற்கான அடிப்படைக் காரணம் இதன் இலக்கியச் சிறப்பும், தமிழ் இலக்கிய மரபுமே என்றால் அது மிகையாகாது.

காப்பியத்தின் காலம்

சீவக சிந்தாமணியின் காலம், ஆசிரியர் வரலாறு முதலானவை அறியப்படவில்லை என இதன் பதிப்பாளர் உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுகிறார். என்றாலும் இதன் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு என்று சிலர் கருதுகின்றனர். கம்பர், இதில் ஒரகப்பை முகர்ந்து கொண்டார் என்பதால் இதன் காலம் கம்பராமாயணத்திற்கு முந்தியதாகலாம் என்பர். சேக்கிழார் காலத்தில், இந்நூல் செல்வாக்குப் பெற்றிருந்தாகச் சேக்கிழார் புராணம் குறிப்பிடுகிறது. எனவே இந்நூலினது காலம். இவற்றிற்கு முற்பட்டதென்பது தெரிகிறது. கம்பராமாயணம் கி.பி. 10ஆம் நூற்றாண்டு என்பது பொதுவான கருத்து. அதற்கு முந்தியது என்பதால் இந்நூலினது காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். இக்காப்பியத்தின் மொழிநடை, விருத்தப்பா அமைப்பு ஆகியவை கொண்டு, இது பெருங்கதைக் காப்பியத்திற்குப் பின்னர் எழுந்திருக்க வேண்டும் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழ்க் காப்பியங்களில் விருத்தப்பாவின் தொடக்கம் சிலம்பில் தோற்றம் பெற்றாலும், தொடக்க காலக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகியன நிலைமண்டில ஆசிரியப்பாவில் அமைந்தனவே. முதன்முதலாக விருத்தப்பாவில் அமைந்த காப்பியம் சீவக சிந்தாமணியே. எனவே, விருத்தப்பாவின் தொடக்கம் சிந்தாமணியே எனலாம். தொடர்ந்து இதன் செல்வாக்கு சூளாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம் முதலானவற்றில் இருப்பதை அறியலாம். காப்பிய இலக்கணம் கூறும் தண்டியலங்காரம் (காவ்யா தர்சம்) நூலில் கூறப்பட்டுள்ள இலக்கணம் முழுவதுமாகப் பின்பற்றப்பட்ட முதல் தமிழ்க் காப்பியம் இதுவே.

காப்பியத்தின் கதை மூலம்

தமிழ்க் காப்பியங்களில் சிலம்பு, மேகலைக்கு அடுத்து எழுந்தவை அனைத்தும் வடமொழிச் சார்புடையனவே. பெரிய புராணம் காப்பிய அமைப்பில் பாடப்பட்டாலும், அதனைக் காப்பியம் என்ற இலக்கிய வகையில் சேர்ப்பதா-வேண்டாமா? என்ற ஆராய்ச்சி இன்னும் நடந்து வருகிறது. இந்திய மொழிகள் அனைத்திலுமே தொடக்க காலக் காப்பியங்கள் வடமொழிச் சார்புடனேயே அமைகின்றன.

இந்நூலுக்கான முதல் நூல் இன்னதென்று ஆசிரியர் குறிப்பிடவில்லை. இதனால் இந்நூலின் மூலநூல் எது என்பது அறியப்படவில்லை என்பார் உ.வே.சாமிநாதையர். ஆயினும், வடமொழியில் சத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஜீவந்தர நாடகம், ஜீவந்தர சம்பு என நான்கு நூல்கள் உள்ளன. இவை சீவகன் சரித்திரம் கூறுவனவே. சமண சமயத்தின் வேதாகமமாகக் கருதப்படும் ஸ்ரீபுராணத்திலும், மகாபுராணத்திலும் இக்கதை சொல்லப்பட்டுள்ளது. இவை, இக்காப்பியத்தின் மூலமாகலாம் என்ற கருத்து நிலவுகிறது. தமிழில் சிந்தாமணி மாலை என்ற நூலொன்றும் அறியப்படுகிறது. சமணர்கள் இந்நூலுக்கான மூலநூல் சத்திர சூடாமணியே என்கின்றனர். என்றாலும், மேற்கண்ட நூலின் கதைக்கும் சீவக சிந்தாமணி கதைக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகளும் உண்டு என்கிறார் உ.வே.சாமிநாதையர். இதற்கான காரணம் தமிழ் மரபுக்கு ஏற்பச் சிந்தாமணி ஆசிரியர் செய்து கொண்ட மாற்றமே எனலாம். வால்மீகி ராமாயணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் உள்ள வேறுபாடு போன்றதே இதுவும் எனலாம். சமண சமயச் சிந்தனைகளைத் தமிழ் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற நோக்கில் இக்கதை தமிழ்க் காப்பியமாகப் பாடப்பட்டிருக்க வேண்டும் என்று கருதலாம். சோழர் காலத்தில் சமண சமயம் அரசர்களாலும், ஆழ்வார்-நாயன்மார்களாலும் நசுக்கப்பட்ட சமூகச் சூழலில் அதன் எழுச்சியைச் சீவகனின் அரசுருவாக்கம் மூலம் மீட்டுருவாக்குவதே இக்கதையை - வடமொழி வரலாற்றை எடுத்தாண்டதற்கான நோக்கமாவும் கொள்ளலாம். சமணர்கள் இசைக்கு எதிர்ப்பு, இன்பத்திற்கு எதிர்ப்பு என்ற பிரச்சாரம் ஓங்கியிருந்த சூழலில் தாங்கள் இவற்றிற்கெல்லாம் எதிர்ப்பாளர்கள், மறுப்பாளர்கள் அல்ல என்பதை எடுத்துரைக்கவே இக்கதையை அருமையான விருத்தப்பாவில் பாடியுள்ளார் திருத்தக்க தேவர் எனக் கருதலாம். பக்தி இயக்கத்தின் உச்ச கட்டக் காலத்தில், தம் சமயக் கொள்கையை நிலை நிறுத்த ஆசிரியருக்குச் சீவகன் வரலாறு ஒரு நிலைக்களனாக அமைந்ததில் வியப்பில்லை. தம் சமயத்தை நிலை நிறுத்துவதில், சமயக் கொள்கைகளைப் பரப்புவதில், தாங்கள் இசைக்கோ, சிற்றின்பத்திற்கோ எதிர்ப்பாளர்கள் அல்ல என்பதை உறுதி செய்வதில், தேவர் மிகப்பெரிய சாதனை புரிந்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது. இந்நூலின் ஏட்டுப் பிரதிகள், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கிடைத்துள்ளமை இதனை உறுதி செய்யும்.

11. பூமகள் இலம்பகம

(கதைச் சுருக்கம்)

இவ்வாறு பகைவரை வென்றுயர்ந்த சீவகன் முருகனைப் போன்று வாகைசூடித் தன் அரண்மனையிற் புகுந்தான். கட்டியங்காரன் மனைவிமாருள் ஒருத்தி கணவன் பட்டமையுணர்ந்து ஆருயிர் நீத்தனள். ஏனை மகளிர் சீவகனைக் காண அஞ்சினர். அவர்க்கெல்லாம் சீவகன் அபயமளித்துப் பெருநிதி வழங்கினன். நீவிர் விரும்பியவிடத்தே சென்று விரும்பிய வண்ணம் வாழ்மின் என்று விடுத்தனன். போரில் இறந்ததொழிந்த மறவர் மக்கட்கு வரிசை பல வழங்கினன். பின்னர்ச் சீவகன் துயில் கொண்டான்.

மறுநாள் சீவகன் நீத்தெழுந்தவுடன் மங்கல நீராடி அணிகலன் அணிந்து அருகன் திருக்கோயிலை வழிபட்டனன். பின்னர் அரிமான் சுமந்த அரசுகட்டிலேறி அழகுற வீற்றிருந்தனன். தோழரும் உறவினரும் பிறரும் அரண்மனையில் வந்து குழுமினர். சீவகனுக்கு நன்முழுத்தத்தே மணிமுடி கவிக்க எண்ணினர். சுதஞ்சணன் என்னுந் தேவன் வானின்றிழிந்து வந்தனன். நன்முழுத்தத்தில் சீவகனுக்கு மணிமுடி சூட்டி வாழ்த்திச் சென்றான்.

கொற்ற வெண்குடை நிழற்ற அரியணைமிசை அரசுவீற்றிருந்த சீவகன், தன்னாட்டில் பதினாறாண்டு அரசிறை தவிர்த்தனன். இறைவன் கோயிலுக்கும் மறையோர்க்கும் கணி கட்கும்

இறையிலியாக நன்னிலங்களை வழங்கினன். கட்டியங்காரனால் இன்னலுற்றோர்க்கெல்லாம் நிலமுதலிய ஈந்து இன்ப முறுவித்தான்.

நாட்டின்கண் பகையும் பசியுங் கெட்டன ’ யாண்டும் மாந்தர் ஒருவனும் ஒருத்தியும் போன்று இன்புற்று வாழ்ந்தனர்.

2327 **கண்ணாடி யன்ன கடிமார்பன் சிவந்து நீண்ட**

கண்ணாடி வென்று களங்கண்டு நியம முற்றிக்

கண்ணாடி வண்டு பருகுங்கமழ் மாலை மூதூர்க்

கண்ணாடி யானை யவர்கைதொழச் சென்று புக்கான்.

கண்ணாடி அன்ன கடிமார்பன் - கண்ணாடி போன்ற வரைவினையுடைய மார்பனான சீவகன்’ சிவந்து நீண்ட கண் ஆடி வென்று - சிவந்து நீண்ட கண்கள் எல்லோரிடமும் உலவி வென்றி கொண்டு களம் கண்டு - போர்க்களத்தைப் பார்வையிட்டு நியமம் முற்றி - களவேள்வி முதலியன முடித்து கள்நாடி வண்டு பருகும் கமழ் மாலை - தேனையாராய்ந்து வண்டுகள் பருகும் மணங்கமழ் மாலை தூக்கப் பெற்ற மூதூர்க்கண் ஆடு யானையவர் - பழம்பதியிலே வெற்றியையுடைய யானையையுடையவர் கைதொழச் சென்று புக்கான் - கைகுவித்து வணங்கப் போய்ச் சேர்ந்தான்.

கண்ணாடி, தன்னைச் சேர்ந்தவர் செயலாலே இருக்கு மாறுபோல, இம் மார்பும் தன்னைச் சேர்ந்த மகளிர் செயலாயே இருத்தலின், “கண்ணாடி அன்ன மார்பன்’’ என்று இன்பச் சிறப்புக் கூறினார்’ கையும் காலும் தூக்கத் தூக்கும் - ஆடிப்பாவை போல - மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே என்றாற்போல கண்ணாடிபோல முதுகு காட்டாத மார்பன் என்பாரும் உளர் பகைவர் வீரத்தின் அழகை விளக்கும் மார்புமாம்.

2328 **கூடார் புலியு முழைக்கோளரி யேறு மன்ன**

கூடார் மெலியக் கொலைவேனினைந் தானை யேத்திக்

கூடார மாலைக் குவிமென்முலைக் கோதை நல்லார்

கூடார மாட மயில்போலக் குழீயி னாரே.

கூடுஆர் புலியும் முழைக் கோளரி ஏறும் அன்ன - கூட்டிற் பொருந்திய புலியும் குகையில் விளங்கிய சிங்க வேறும் போன்ற’ கூடார் மெலியக் கொலைவேல் நினைந்தானை ஏத்தி - பகைவர் தேயக் கொல்லுதற்குரிய வேலை ஏந்த எண்ணிய சீவகனைப் பாராட்டி’ கூடு ஆரம் மாலைக் குவி மென்முலைக் கோதை நல்லார் - பொருந்திய முத்துமாலையை அணிந்த குவிந்த மென்முலையையும் கோதையையும் உடைய மகளிர்’ கூடாரம் மாடம் மயில்போலக் குழீஇயினார் - கூடாங்களிலும் மாடங்களிலும் மயில்போலத் திரண்டனர்.

‘‘கூட்டுப் புலியும் முழைக் கோளரியும் போன்ற பகைவர் என்றது சூரபன்மனையும் ஒழிந்த அவுணரையும்“ என்றும், “வேல் நினைந்தான்’’ முருகன் என்றும், ஈண்டு அம் முருகனைப் போன்ற சீவகனைக் குறிப்பதாகவும் கூறுவர் நச்சினார்க்கினியர். இவ்வுவமை கட்டியங்காரன் முதலியோர்க்குத் தகாதென்றெண்ணி மேலும், “முருகன் என்று சீவகனுக்கு ஒருபெயர் கூறினார், ‘‘திருமால் போந்தான்’’ (சீவக. 2369) என்று மேலும் கூறுவர்“ என்பர்.

கூடாரம் - கூடகாரம்’ நெற்கூடுகள்.

வேறு

2329 **மாலைச் செற்றான் மக்களொ**

டெல்லா முடனேயிம்

மாலைச் செற்றான் வைந்நுனை

யம்பின் னிவனென்பார்

மாலைக் கின்றே மாய்ந்தது

மாயாப் பழியென்பார்

மாலைக் கேற்ற வார்குழல்

வேய்த்தோண் மடநல்லார்

மாலைச் செற்றான் மக்களொடு எல்லாம் - சச்சந்தனைக் கொன்ற கட்டியங்காரனையும் அவன் மக்களையும் எல்லோரையும் உடனே இம்மாலை வைந்நுனை அம்பின் இவன் செற்றான் என்பார் - சேர இம்மாலைக் காலத்தே கூரிய முனையையுடைய அம்பினாலே இவன் கொன்றான் என்பார்' இன்றே மாலைக்கு மாயாப் பழி மாய்ந்தது என்பார். இன்றைக்கே குணமாலைக்கு இதுவரை மாயாத பழி மாய்ந்தது என்பார் மாலைக்கு ஏற்ற வார்குழல் வேய்த்தோள் மடநல்லார் - மலர்மாலைக்குத் தகுந்த நீண்ட குழலையும் வேயனைய தோளையும் உடைய மங்கையர்.

நல்லார் என்பார் என்க. மால் சச்சந்தன். குணமாலைக்குற்ற பழி சீவகன் அவளைத் தீண்டியதனால் - துன்பமுற்றான் என்பது.

2330 **நாகந் நெற்றி நன்மணி சிந்தும் மருவிபோ**

னாகந் நெற்றிந் நன்மணி யோடை நறவிம்மு

நாகந் நெற்றிந் நன்மலர் சிந்நி நளிர்செம்பொ

னாகந் நெற்றி மங்கைய ரொத்தார் மடநல்லார்.

நாகம் நெற்றி நன்மணி சிந்தும் அருவிபோல் - மலையின் உச்சியிலிருந்து அழகிய மணிகளைச் சிந்தி வீழும் அருவியைப்போல நன்மணி ஓடை நாகம் நெற்றி - அழகிய மணிகளிழைத்த பட்டத்தையுடைய யானையின் நெற்றியிலே நறவு விம்மும் நாகம் நெற்றி நன்மலர் சிந்தி - தேன் சொரியும் சுரபுன்னையின் உச்சியிலிருந்த அழகிய மலர்களைச் சிந்துவதால் மடநல்லார் - மாடங்களின்மேல் நின்ற மங்கையர் நளிர் செம்பொன் நாகம் நெற்றி மங்கையர் ஒத்தார் - விளங்கும் பொன்னிரைந்த சுவர்க்கத்திலிருந்து மலரைச் சொரிகின்ற மங்கையரைப் போன்றனர்.

நாகம் நான்கும் நிரலே, மலை, யானை, சுரபுன்னை, வானுலகம் என்க. ஓடை - முகபடாம். நற - தேன். நன்மலர் சிந்தி என்புழி செய்தெனெச்சத்தைச் செய என்னெச்சமாக்குக.

2331 **கோடிக் கொடுங் கூம்புயர் நாவாய் நெடுமாடங்**

கோடிப் பட்டிற் கொள்கொடி கூடப் புனைவாருங்

கோடித் தானைக் கொற்றவற் காண்பா னிழைமின்னக்

கோடிச் செம்பொற் கொம்பரின் முன்முன் றொழுவாரும்.

கோள் திக்கு ஓடும் கூம்பு உயர் நாவாய் - கோள்களாலே திருக்குறளில் ஓடுகின்ற, கூம்பு உயர்ந்த மரக்கலம் தந்த: கோடிப் பட்டின் கொள்கொடி. நெடுமாடம் கூடப் புனைவாரும் - புதிய பட்டினுல் தைத்த கொடிகளை மாடங்களிலே சேரக் கட்டு வாரும் கோடித்தானைக் கொற்றவற் காண்பான் - கோடிப் படையையுடைய அரசனைக் காண்பதற்கு: செம்பொன் கொம்பாரின் கோடி இழை மின்ன - பொற்கொம்புபோல வளைந்து பூண்ஒளிர: முன்முன் - பொற்கொம்புபோல வளைந்து பூண்எளிர: முன்முன் தொழுவாரும் - முன்முன் வந்து தொழுவாருமாயினா்.

இருபது பட்டிற்குக் கோடி என்பைதைப் பெயராக்கியும் உரைப்பர்.

2332 **அம்புகை வல்லில் லார்கழன் மள்ளர் திறலேத்த**

வம்புகைக் கொண்டா லாரிவற் கீண்டு நிகராவா

ரம்புகை யார்ந்த வந்துகி லல்குல் லவிர்கோதா

யம்புகைக் காணா மையனைக் கையிற் றொழுதென்பார்.

அம்பு உகை வல்வில் ஆர்கழல் மள்ளர் திறல் ஏத்த - அம்பைச் செலுத்தும் வலிய வில்லேந்திய, செறிந்த கழலையுடைய வீரர்கள் தன் ஆற்றலைப் புகழ' அம்பு கைக்கொண்டால் ஈண்டு இவற்கு நிகராவார் ஆர் - உலகைக் கைபற்றினால் இங்கு இவனுக்குச் சமமானவர் யார்' அம் புகை ஆர்ந்த அம் துகில் அல்குல் அவிர் கோதாய்! - அழகிய புகை ஊட்டப் பெற்ற துகிலை அணிந்த அல்குலையுடைய கோதையே!' ஐயனைக் கையால் தொழுது - சீவகனைக் கையால் தொழுததால் அம்பு கைக் காணாம் என்பார் - வளையைக் கையில் காணோம் என்பார்.

இரண்டாம் அடியில் “அம்பு“ என்பது நீர். அது நீர் சூழ்ந்த உலகிற்கு ஆகுபெயராயிற்று.

உகை - உகைக்கின்ற' செலுத்துகின்ற மள்ளர் - வீரர். அம்புகை - அழகிய புகை. ஈற்றடியில் அம்பு - வளையல்.

2333 **மைத்துன நீண்ட மாமணி மாடம் மிசையேறி**

மைத்துன நீண்ட வாட்டடங் கண்ணார் மலர்தூவ

மைத்துன மன்னர் மால்களி றேறிப் புடைசூழ

மைத்துன நீண்ட மாமணி வண்ண னவனொத்தான்.

கோள் திக்கு ஓடும் கூம்பு உயர் நாவாய் - கோள்களாலே திக்குகளில் ஓடுகின்ற, கூம்பு உயர்ந்த மரக்கலம் தந்த' கோடிப் பட்டின் கொள்கொடி நெடுமாடம் கூடப் புனைவாரும் - புதிய பட்டினால் தைத்த கொடிகளை மாடங்களிலே சேரக் கட்டுவாரும்' கோடித்தானைக் கொற்றவற் காண்பான் - கோடிப் படையையுடைய அரசனைக் காண்பதற்கு' செம்பொன் கொம்பரின் கோடி இழை மின்ன - பொற்கொம்புபோல வளைந்து பூண்ஒளிர' முன்முன் தொழுவாரும் - முன்முன் வந்து தொழுவாருமாயினர்.

மைதுன நீண்ட மாமணி மாடம் மிசை ஏறி - முகில் நெருங்க உயர்ந்த பெரிய மணிமாடங்களின்மேல் ஏறி வாள் மைத்து உன் நீண்ட தடங்கண்ணார் மலர் தூவ - வாள் ஒளி மழுங்கி நினைக்கும்படி நீண்ட பெரிய கண்களையுடைய மகளிர் மலர் சொரிய' மைத்துன மன்னர்

மால்களிறு ஏறிப் புடைசூழ - மைத்துன வேந்தர்கள் பெரிய களிறுகளில் ஏறி அருகிற் சூழ' மை துன நீண்ட மாமணி வண்ணன் அவன் ஒத்தான் - கருமை பொருந்த உயர்ந்த நீலமணி வண்ணனைச் சீவகன் ஒத்தான்.

''துன்ன'' என்பன ''துன'' என்றும், ''உன்ன'' என்பது ''உன'' என்றும் வந்தமை விகாரங்கள. மைத்தல் - ஒளி கெடுதல்' "மைம் மைப்பினன்று குருடு" (பழ. 188) என்றாற் போல. மணி வண்ணன் : திருமால்.

வேறு

2334 **ஊது வண்டரற் றும்முயர் தாமரைப்**

போது பூங்கழு நீரொடு பூத்துடன்

வீதி மல்கின போன்மிளிர் வேற்கணு

மாத ரார்முகப் பூவு மலர்ந்தவே.

ஊது வண்டு அரற்றும் உயர் தாமரைப் போது - தாதை ஊதுகின்ற வண்டுகள் முரலும் உயர்ந்த தாமரை அரும்புகள்' பூங்கழுநீரொடு பூத்து - அழகிய கழுநீருடன் மலர்ந்து' உடன் வீதி மல்கினபோல் - சேர. தெருவெங்கும் நிறைந்தன போல' மாதரார் முகப்பூவும் மிளிர் வேல்கணும் மலர்ந்த - பெண்களின் முகப்பொலிவும் விளங்கும் வேலனைய கண்களும் பரந்தன.

தாதூதுவண்டென்க. கழுநீர் - ஒரு நீர்ப்பூ. முகப்பூ - முகப்பொலிவு. தாமரைப்பூ மகளிர் முகத்திற்கும் கழுநீர் கண்களுக்கும் உவமை.

2335 **வீணை வித்தகன் வேந்தடு வீங்குதோள்**

காணுங் காரிகை யார்கதிர் வெம்முலைப்

பூணு மாரமு மீன்றுபொன் பூத்தலர்ந்

தியாண ரூரம ராபதி போன்றதே.

வீணை வித்தகன் வேந்து அடுவீங்கு தோள் - யாழ் வல்லனாகிய சீவகனின், பகை மன்னரை வெல்லும் பருத்த தோள்களை' காணும் காரிகையார் கதிர் வெம்முலைப் பூணும் ஆரமும் ஈன்று - காணும் மகளிரையும் ஒளிவிடும் வெம்முலையில் அவர்கள் பூண்ட பூணையும் ஆரத்தையும் ஈன்று' பொன் பூத்து அலர்ந்து - வேய்ந்த பொன்னால் அழகுற்றுப் பரத்தலின்

யாணரூர் அமராபதி போன்றது - புத்தழகு பெற்ற இராசமாபுரம் அமராவதியைப் போன்றது.

அமராவதி : வானவர் நாட்டின் தலைநகர்.

வீணை வித்தகன் என்றது சீவகனை. வேந்தடுதோள், வீங்குதோள் என இயைக்க. காரிகையார் - அழகியர். யாணர்ஊர் - புதுவருவாயினையுடைய இராசமாபுரம்.

2336 **தேம்பெய் கற்பகத் தாரவன் சோ்தலும்**

பூம்பெய் கோதைப் புரிசைக் குழாநல

ஹமோம்பு திங்க ளுலந்து சுடர்கண்ட

வாம்ப லாய்மலர்க் காடொத் தழிந்ததே.

தேன்பெய் கற்பகத் தாரவன் சேர்தலும் - தேன் சொரியும் கற்பக மாலையான் அரண்மனையை அடைந்தவுடன் பூபெய் கோதைப் புரிசைக்குழாம் நலம் - மலர் பெய்த மாலை அணிந்த, மதிலிடத்திருந்த மகளிரின் அழகு ஓம்பு திங்கள் உலந்து - இரவை ஓம்பிய திங்கள் மறைந்து சுடர்கண்ட ஆம்பல் ஆய்மலர்க் காடு ஒத்து அழிந்தது - ஞாயிற்றைக் கண்ட ஆம்பலின் குவிந்த மலர்க் காட்டைப் போன்று கெட்டது.

தாரவன் : சீவகன், பூங்கோதை, பெய்கோதை எனத் தனித்தனி கூட்டுக. புரிசை - மதில், சுடர் - சிறப்பால் ஞாயிற்றை உணர்த்திற்று.

வேறு

2337 **மாகம் முழக்கின் மணிநாகம் பதைப்ப வேபோ**

லாகம் மறவ ரகன்கோயில்புக் கம்பொன் மாலைத்

தோகைம் மடவார் துவர்வாய் துடித் தஞ்ச வெம்பா

வேகம் முடைத்தாய் விழியாத்தொழித் தேகுகென்றார்.

மறவர் அகன் கோயில் புக்கு - அப்போது வீரர்கள் பெரிய அரண்மனையிலே நுழைந்து மாகம் முழக்கின் மணிநாகம் பதைப்பவே போல் ஆக - முகில் முழக்கினால் மணியையுடைய பாம்புகள் துடிப்பன போல் ஆம்படி அம் பொன் மாலைத் தோகை மடவார் துவர்வாய் துடித்து வெம்பா அஞ்ச - அழகிய பொன்மாலை அணிந்த மயிலனைய மங்கையர், தம் சிவந்த வாய் துடித்து வெம்பி நடுங்க' வேகம் உடைத்தாய் விழியா - விரைவுடனே விழித்துப் பார்த்து தொழித்து ஏகுக என்றார் - சினந்து இவ்விடத்தினின்றும் ஏகுக என்றனர்.

அழாமற் பொருமுதலின் வாய்துடித்தது.

மாகம் - முகிலுக்கு ஆகுபெயர் மணிணையுடைய பாம்பென்க. ஆக மறவர், ஆகம்மறவர் என வண்ணத்தால் மகரவொற்று விரிந்து நின்றது, தோகை - மயில் : ஆகுபெயர். வெம்பா - வெம்பி. விழியா - விழித்து.

2338 **செய்பாவை யன்னார் சிலம்பார்க்கு மென் சீற டியார்**

செய்பூந் தவிசின் மிசையல்லது சேற லில்லார்

மையார்ந்த கண்ணீர் மணிப்பூண்முலை பாய விம்மா

வெய்தா மடவார் வெறுவெந்நிலத் தேகி னாரே.

செய் பாவை அன்னார் - செய்த பாவை போல் வார் சிலம்பு ஆர்க்கும் மென் சீறடியார் - சிலம்புகள் ஒலிக்கும் மெல்லிய சிற்றடியார் செய் பூந்தவிசின் மிசை அல்லது சேறல் இல்லார் - புனையப் பெற்ற மலரணையின் மேலன்றிச் சென்றறியாதவர் ஆகிய மடவார் - பெண்கள் மைஆர்ந்த கண்ணீர் மணிப் பூண்முலை பாய வெய்துஆ விம்மா - மை தோய்ந்த கண்களிலிருந்து பெருகும் நீர் மணிக்கலன் அணிந்த முலைகளிற் பாய வெய்தாக அழுது' வெறுவெந் நிலத்து ஏகினார் - வெறுமையான கொடிய தரையிலே நடந்து சென்றனர்.

செய்பாவை : வினைத்தொகை. சிற்பிகளாலியற்றப் பட்ட பாவை என்க' திருமகள் என்பர் நச்சினார்க்கினியர். விம்மா - விம்மி.

2339 **நெருப்புற்ற போல நிலமோந்துழிச் செய்ய வாகிப்**

பருக்கென்ற கோல மரற்பல்பழம் போன்று கொப்புள்

வருத்தம் மிழற்றிப் பசும்பொற்சிலம் போசை செய்யச்

செருக்கற்ற பஞ்சி மலர்ச்சீறடி நோவச் சென்றார்.

நிலம் மோந்துழி நெருப்பு உற்றபோலச் செய்ய ஆகி - (அப்போது) தரையிற் பதிந்தபோது நெருப்பை மிதித்தன போலச் சிவந்தன வாகுதலால் செருக்கு அற்ற மலர் பஞ்சி சீறடி - வாடின இலவமலரைப்போன்ற பஞ்சியூட்டின சிற்றடிகளில் பருக்கென்ற கோல மரல் பல் பழம் போன்று - பருத்துக் காட்டின அழகிய மரலின் பல பழங்களைப்போன்று' கொப்புள் வருத்த - கொப்புளங்கள் வருத்தலால்' மிழற்றிப் பசும்பொன் சிலம்பு ஓசை செய்ய - அவ்வருத்தத்தைக் கூறிப் பொற்சிலம்பு ஒலி செய்ய' நோவச் சென்றார் - அவ்வடி நோம்படி சென்றனர்.

''பருக்கென்ற'' எனவே ''கொப்புளித்தன'' ஆயின.

நிலமோந்துழி - நிலத்திற் பட்டவிடத்து. நெருப்புற்றபோலச் செய்யவாகி என இயைக்க. மரலினது பழம் கொப்புளுக்குவமை, மரற்.

2340 **பொற்பூண் சுமந்து பொருகோட்டை யழித்து வெம்போர்**

கற்பா னெழுந்த முலையார்களங் கண்டு நீங்கி

நற்பூ ணைணிந்த முலையார்நிலை கால்ச ரிந்து

நெற்றிக் நிறுத்து வடம்வைத்த முலையி ணரும்

பொன் பூண் சுமந்து பொரு கோட்டை அழித்து - பொன் அணி சுமந்து (யதனையின்) பொருதற்குறிய கொம்பைக் கெடுத்து: வெம்போர் கற்பான் எழுந்த முலையார் - கொடிய போரைக் கற்பனவாக எழுந்த முலையிணம் : களம் கண்டு நீங்கி நற்பூண் அணிந்த முல்லையாரும் : நிலைகால் சரிந்து நெற்றி நிறுத்து வடம் வைத்த முலையிணரும் - நிலை தளர்ந்து உச்சியிலே நிறுத்திய வடம் கிடந்த முலையாரும்.

அழித்தென்பது, எதிர்காலம் நோக்கிய இறந்த காலச்சொல்: அழித்துக் கற்பான் என்க.

2341 **செங்காற் குழவி தழீயிணர்திங்கள் புக்க நீரா**

ரங்கான் முலையி னரும்பால்வரப் பாயி ணரும்

பைங்காசு முத்தும் பவழத்தொடு மைபம்பொ ணர்ந்த

பொங்கார் முலையார் திருமுற்ற நிறைந்து புக்கார்

செங்கால் குழவி தழீஇயிணர் - சிவந்த அடிகளையுடைய குழவிகளைத் தழுவியவரும்: திங்கள் புக்க நீரார் - திங்கள் கடந்த சூலுடையாரும்: அம் கான் முலையின் அரும்பால் வரப்பாணிணரும் - அழகிய மணமுடைய முலையிலே அரிய பால் வரும் படி சூல் முற்றியவருமாகிய : பைங்காசும் முத்தும் பவழத்தொடு பைம்பொன் ஆர்ந்த பொங்கு ஆர்

முலையார் - புதிய காசும் முத்தும் பவழமும் பொன்னணியும் நிறைந்த பருத்த முலையுடைய மகளிர் : திருமுற்றம் நிறைந்து புக்கார் - முற்றத்தே நிறைச் சென்றனர்.

நிறைந்து - நிறைய

2342 **பெய்யார் முகிலிற் பிறழ்பூங்கொடி மின்னின் மின்னா**

நெய்யார்ந்த கூந்த னிழற்பொன்னரி மாலை சோரக்

கையார் வளையார் புலிகண்ணுறக் கண்டு சோரா

நையாத் துயரா நடுங்கும்பிணை மான்க ளொத்தார்.

பெய்ஆர் முகிலின் பிறழ் பூங்கொடி மின்னின் மின்னா - பெய்தல் நிறைந்த முகிலிலே பிறழும் அழகிய கொடி மின்போல மின்னி' நெய் ஆர்ந்த கூந்தல் நிழல் பொன் அரிமலை சோர - நெய்ப்புப் பொருந்திய கூந்தலிலிருந்து ஒளிவிடும் பொன்னரிமாலை சோரும்படி' கைஆர் வளையார் - கையிற் பொருந்திய வளையினாராகிய அம் மகளிர்' நையாத் துயராச் சோரா - நைந்து துயருற்றுச் சோர்ந்து' புலி கண்ணுறக் கண்டு நடுங்கும் - புலியைக் கண்ணிற்கண்டு நடுங்குகின்ற' பிணை மான்கள் ஒத்தார் - பெண்மான்களைப் போன்றனர்.

பெய் - பெய்தல். பூங்கொடிமின் - அழகிய கொடி மின்னல். மின்னா - மின்னி. பொன்னரிமாலை - ஒரு கூந்தலணி. வளையார் : மகளிர். சோரா - சோர்ந்து. நையா - நைந்து, துயரா - துயர்உற்று. பிணைமான் - பெண்மான். சீவகனுக்குப் புலியும் மகளிர்க்கு மானும் உவமைகள்.

2343 **வட்டம் மலர்த்தா ரவனாலருள் பெற்று வான்பொற்**

பட்டம் மணிந்தா ளிவர்தங்களுள் யாவ னென்ன

மட்டா ரலங்க லவன்மக்களுந் தானு மாதோ

பட்டா ரமருட் பசும்பொன்முடி சூழ வென்றார்.

வட்டம் மலர்த்தாரவனால் அருள் பெற்று - வட்டமாகிய தாரை அணிந்த கட்டியங்காரனாலே அருளைப் பெற்று' வான் பொன் பட்டம் அணிந்தாள் - சிறந்த பட்டம் அணிந்தவள்' இவர் தங்களுள் யாவள் என்ன - இவர்களிலே எவள் என்று (சீவகன் தன் பணியாளரை) வினவ' (நீ கேட்டவளுக்குக் களத்தின் செய்தி கூறுகின்றவர்) மட்டுஆர் அலங்கலவன் மக்களும் தானும் - தேனார்ந்த மாலையவனின் மக்களும் தானுமாக பசும்பொன் முடிசூழ அமருள் பட்டார் என்றார் - பசிய பொன்முடி சூழப் போரிலே பட்டனர் என்று கூறினர்.

அடுத்த செய்யுளும் இ∴தும் ஒருதொடர்.

வட்டத்தார். மலர்த்தார் என இயைக்க. தாரவன் : கட்டியங்காரன். பட்டம் அணிந்தாள் - பட்டத்தரசி, என்று சீவகன் வினவ என்க. களத்தின் செய்தி அவட்குக் கூறுகின்றுவர் பட்டார் என்றார் என்க.

2344 **மாலே றனையா னொடுமக்களுக் க∴தோ வென்னா**

வேலேறு பெற்ற பிணையின்னனி மாழ்கி வீழ்ந்து

சேலேறு சின்னீ ரிடைச்செல்வன போன்று செங்கண்

மேலேறி மூழ்கிப் பிறழ்ந்தாழ்ந்த விறந்து பட்டாள்.

மால்ஏறு அனையானொடு மக்களுக்கு அ·.தோ என்னா - மயங்கிய ஏறுபோன்றானுக்கும் அவன் மக்களுக்கும் அ·.தோ நோர்ந்தது என்று' வேல் ஏறு பெற்ற பிணையின் நனி மாழ்கி வீழ்ந்து - வேலால் தாக்கப்பெற்ற பெண்மான்போல மிகவும் வருந்தி வீழ்ந்து' சேல் ஏறு சின்னீரிடைச் செல்வன போன்று - சேல்மீன் வற்றிய சின்னீரிலே (கடிதிற் செல்லாமல்) மெல்லச் செல்வனபோல' செங்கண் மேல் ஏறி மூழ்கிப் பிறழ்ந்து ஆழ்ந்த - சிவந்த கண்கள் மெல்ல மேலே ஏறி மறிந்து கீழ்மேலாய் வீழ்ந்தன' இறந்து பட்டாள் - உடனே அவளும் இறந்து விட்டாள்.

யாவன் என்று வினாவ இறந்து பட்டாள் என்று விடையிறுத்தனர். அ·.தோ என்றது. "மன்னர் தீ ஈண்டு தம் கிளையோடு எரித்திடும்" (சீவக. 250) என்று அமைச்சர் கூற, அவன் கேளாதிருந்தமை தான் கேட்டிருத்தலின், அது பின்பு பயந்தபடியோ என்றான். மால் - பெருமையுமாம்.

2345 ஐவா யரவி னவிராரழல் போன்று சீறி

வெய்யோ னுயிர்ப்பின் விடுத்தேனென் வெகுளி வெந்தீ

மையா ரணல மணிநாகங் கலுழன் வாய்ப்பட்

டுய்யா வெனநீ ருடன்றுள்ள முருகல் வேண்டா.

ஐவாய் அரவின் அவிர் ஆரழல் போன்று - ஐந்தலை நாகத்தின் விளங்கும் நிறைந்த நஞ்சுபோல' சீறி வெய்யோன் உயிர்ப்பின் என் வெகுளி வெந்தீ விடுத்தேன் - (யானும்) முதலிற் சீறிக் கட்டியங்காரன் இறந்த பின்னர் என் சீற்றமாகிய தீயையும் போகவிட்டேன் மை ஆர் அணல மணி நாகம் கலுழன் வாய்ப் பட்டு உய்யா என - கருமை நிறைந்த கழுத்தையுடைய, மணியுடைய பாம்பு கலுழனின் வாய்ப்பட்டுப் பிழையாதன போன்று' நீர் உடன்று உள்ளம் உருக வேண்டா - (நாமும் இனி உய்ய மாட்டோம் என்று) நீர் வருந்தி மனம் உருகுதல் வேண்டா.

பாம்பினது நஞ்சு ஒன்றற்கு உயிருள்ளளவும் வெகுண்டு, அவ்வுயிர் போய பின்பு அவ் வெகுட்சி நீங்குமாறுபோல, யானும் கட்டியங்காரன் உயிர்போமளவும் வெகுண்டு, அவனுயீர் போய பின்னர் அவ் வெகுளியை விட்டேன் என்றாள்.

2346 **மண்கேழ் மணியி னுழையுந்துகி னூலின் வாய்த்த**

நுண்கேழ் நுசுப்பின் மடவீர்நம்மை நோவ செய்யே

னொண்கேழ்க் கழுநீ ரொளிமுத்த முமிழ்வ தேபோற்

பண்கேழ் மொழியீர் நெடுங்கண்பனி வீழ்த்தல் வேண்டா.

துகில் நுழையும் மண்கேழ் மணியின் - ஆடையினுள்ளே மறையும் தூய ஒளிபொருந்திய மணிபோன்ற நூலின் வாய்த்த நுண்கேழ் நுசுப்பின் மடவீர்! - நூலினும் பொருந்திய நுண்ணிய நிறமுடைய இடையினைக்கொண்ட மங்கையரே! நும்மை நோவ செய்யேன் - யான் நும்மை வருந்துவன செய்யேன். ஒண்கேழ் கழுநீர் ஒளி முத்தம் உமிழ்வதேபோல் - (இனி) ஒள்ளிய நிறமுடைய கழுநீர்மலர் ஒளியையுடைய முத்துக்களைச் சொரிதல் போல பண்கேழ் மொழியீர்! - இசைபோல விளங்கும் மொழியினீர்! நெடுங்கண் பனி வீழ்த்தல் வேண்டா - நீண்ட கண்கள் பனித்துளியைச் சிந்துதல் வேண்டா.

மண் - மண்ணுதல் கழுவுதல், கேழ் - ஒளி. ஆடை போர்த்து நின்றமையால் துகிலின் நுழையும் மண்கேழ் மணியின் மடவீர் என்றான். துகிலின் நுழையும் மணியின் மடவீர் என்க. நோவ : பலவறிசொல். கழுநீர் - கண்ணுக்கும், முத்தம் - கண்ணீர்த்துளிக்கும் உவமை.

2347 **என்னுங்கட் குள்ள மிலங்கீர்வளைக் கையி னீரே**

மன்னிங்கு வாழ்வு தருதும்மவற் றானும் வாழ்மின்

பொன்னிங்குக் கொண்டு புறம்போகியும் வாழ்மின்னென்றான்

வின்னுங்க வீங்கி விழுக்கந்தென நீண்ட தோளான்.

இலங்கு ஈர்வளைக் கையினீரே! - விளங்கும், அறுக்கப்பட்ட வளையணிந்த கையை உடையீர்' மன் இங்கு வாழ்வு தருதும் - நும் மன்னன் நுமக்குத் தந்த வாழ்வுக்குரிய பொருளை யாமும் இங்கு நல்குவோம் அவற்றானும் வாழ்மின் - அவற்றைக்கொண்டு ஈண்டிருந்தும் உயிர் வாழ்மின் பொன் இங்குக் கொண்டு புறம்போகியும் வாழ்மின் உங்கட்கு உள்ளம் என்? என்றான் - பொன்னை இங்கிருந்து கொண்டு சென்று சென்று வெளியில் நுமக்கேற்ற இடங்களிலும் வாழுங்கோள் உங்கள் கருத்து என்ன? என்றான்' வில்நுங்க வீங்கி விழுக் கந்து என நீண்ட தோளான் - வில்லை வலிக்கப் பருத்துச் சிறந்த தூண் என்னுமாறு நீண்ட தோளையுடையான்.

வாழ்வு - வாழ்தற்குரிய பொருள். மன் என்றது கட்டியங்காரனை. இங்கு மன் வாழ்வு தருதும் என மாறுக. மன்தந்த பொருள் என்பது கருத்து. இங்குப் பொன்கொண்டு என மாறுக.

2348 **தீத்தும்மும் வேலான் றிருவாய்மொழி வான்மு ழக்கம்**

வாய்த்தங்குக் கேட்டு மடமஞ்ஞைக் குழாத்தி னேகிக்

காய்த்தெங்கு சூழ்ந்த கரும்பார்தம் பதிகள் புக்கார்

சேய்ச்செந் தவிசி நெருப்பென்றெழுஞ் சீற டியார்.

தீத் தும்மும் வேலான் திருவாய் மொழி - தீயைச் சொரியும் வேலானுடைய அழகிய வாய்மொழியாகிய' வான் முழக்கம் அங்கு வாய்த்துக் கேட்டு - முகில் முழக்கத்தை அவ்விடத்தே வாய்ப்பக் கேட்டு' சேய்ச் செந்தவிசு நெருப்பென்று எழும் சீறடியார் - மிகச் சிவந்த இருக்கையையும் நெருப்பு என்று நீங்கும் சிற்றடியினார் மடமஞ்ஞைக் குழாத்தின் ஏகி - இளமயிற் குழுவைப்போலச் சென்று காய்த் தெங்கு சூழ்ந்த கரும்பு ஆர்தம் பதிகள் புக்கார் - காய்த்த தென்னை சூழ்ந்தனவும், கரும்பு நிறைந்தனவுமான தங்கள் நகரங்களை அடைந்தனர்.

மயில் மழைக்கு மகிழ்தலின் மயில்போல் என்றார்.

தும்மும் என்றது - காலும் என்பதுபட நின்றது. வேலான் : சீவகன். வாய்த்து - வாய்ப்ப. கேட்ட மஞ்ஞை என இயைப்பினுமாம்

2349 **காதார் குழையுங் கடற்சங்கமுங் குங்கு மமும்**

போதா ரலங்கற் பொறையும்பொறை யென்று நீக்கித்

தாதார் குவளைத் தடங்கண்முத் துருட்டி விம்மா

மாதார் மயிலன் னவர்சண்பகச் சாம்பலொத்தார்.

மாது ஆர் மயில் அன்னவர் - காதல் நிறைந்த மயிலைப்போன்றவர் காதுஆர் குழையும் - காதிலணிந்த குழையையும்' கடல் சங்கமும் - கடலிற் கிடைத்த சங்கினால் ஆகிய அணியையும் குங்குமமும் - குங்குமத்தையும் போது ஆர் அலங்கல் பொறையும் - மலராலாகிய மாலைச் சுமையையும் பொறை என்று நீக்கி - சுமை என்று களைந்துவிட்டு தாது ஆர் குவளைத் தடங்கண் முத்து உருட்டி விம்மா - தேன் பொருந்திய குவளைபோன்ற தடங்கண்களினின்றும் முத்தனைய நீர்த்துளியை உருட்டி விம்மி' சண்பகச் சாம்பல் ஒத்தார் - சண்பகப்பூ வாடலைப் போன்றனர்.

கணவனை யிழத்தலின் இவற்றை நீங்கி, உணவைச் சுருக்கியவராய் நோன்பை மேற்கொண்டனர்.

2350 **ஆய்பொற் புரிசை யணியாரகன் கோயி லெல்லாங்**

காய்பொற் கடிகைக் கதிர்க்கைவிளக் கேந்தி மள்ளர்

வேய்பொன் னறையும் பிறவும்விரைந் தாய்ந்த பின்றைச்

சேய்பொற் கமல மகள்கைதொழுச் சென்று புக்கான்.

மள்ளர் - வீரர்கள்' காய் பொன் கடிகைக் கதிர்க்கை விளக்கு ஏந்தி - காய்ந்த பொன் துண்டங்களாலாகிய ஒளிருங் கைவிளக்கை ஏந்தி ஆய் பொன் புரிசை அணி ஆர் அகன் கோயில் - ஆராய்ந்த பொன் மதில் சூழ்ந்த அழகிய பரவிய அரண்மனையும் மேய் பொன் அறையும் - மேவிய பொன்னறையும் பிறவும் எல்லாம் - பிற இடங்களும் ஆகிய எல்லாவற்றையும் விரைந்து ஆய்ந்த பின்றை - விரைவாக ஆராய்ந்து காவலிட்டபின் பொன் கமல மகள் கைதொழச் சேய் சென்று புக்கான் - சிவந்த பொற்றாமரையில் வாழும் திருமகள் வணங்க முருகனனையான் அக் கோயிலுட் புகுந்தான்.

கடிகை - துணித்தது என்றது பொன்போர்த்த மூங்கிற் குழாயை.

புரிசைக் கோயில், அணியார் கோயில், அகன் கோயில் என இயைக்க. கடிகை - துண்டம். கடிகைக்கைவிளக்கு, கதிர்க் கைவிளக்கு என இயைக்க. பொன்னறை - கருவூலம். சேய் : உவமவாகுபெயர்' சீவகன். கமலமகள் - திருமகள்.

2351 **முலையீன்ற பெண்ணைத் திரடாமங்க**

டாழ்ந்து முற்று

மலையீன்ற மஞ்சின் மணிப்பூம்புகை

மல்கி விம்மக்

கலையீன்ற சொல்லார் கமழ்பூவணைக்

காவல் கொண்டார்

கொலையீன்ற வேற்கண் ணவர்கூடிய

மார்பற் கன்றே.

முலை ஈன்ற பெண்ணைத் திரள் தாமங்கள் தாழ்ந்து - முலைபோலுங் காயை யீன்ற பனை போலுந் திரண்ட மாலைகள் தாழ முற்றும் மலை ஈன்ற மஞ்சின் மணிப் பூம்புகை மல்கி

விம்ம - மாடமெங்கும் மலை தந்த முகில்போல அழகிய புகை நிறைந்து புறம் போக கொலை ஈன்ற வேல்கண்ணவர் கூடிய மார்பற்கு - கொலையை நல்கிய வேலனைய கண்ணவர் சேர்ந்த மார்பனாகிய சீவகனுக்கு அன்றே - அப்பொழுதே கலை ஈன்ற சொல்லார் கமழ் பூஅணை காவல் கொண்டார் - கலைகளை நல்கிய மொழி மகளிர் மணங்கமழும் மலரணைக் காவலை மேற்கொண்டனர்.

முலைபோன்ற காயையீன்ற பெண்ணை என்க. பெண்ணை - பனை' இது தாமத்திற்குவமை. முலை பனைக்குவமமன்மையின் அடுத்து வரலுவமம் அன்றென்க. மஞ்சின் - முகில்போல.

2352 **போர்க்கோல நீக்கிப் புகழ்ப்பொன்னி**

னெழுதப் பட்ட

வார்க்கோல மாலை முலையார்மண்

ணுறுப்ப வாடி

நீர்க்கோலஞ் செய்து நிழல்விட்டுமிழ்

மாலை மார்பன்

றார்க்கோல மான்றோர்த் தொகைமாமற்

றொழுது சொன்னான்.

நிழல் விட்டு உமிழ் மாலை மார்பன் - ஒளியை வீசிச் சொரியும் முத்த மாலை அணிந்த மார்பன்' போர்க் கோலம் நீக்கி - போர்க் கோலத்தைப் போக்கி புகழ்ப் பொன்னின் எழுதப்பட்ட வார்க் கோல மாலை முலையார் - புகழும் பொன்னாலே எழுதப்பட்ட கச்சையும் கோலத்தையும் மாலையையும் உடைய முலையார் மண்ணுறுப்ப ஆடி - நீராட்ட ஆடி நீர்க்கோலஞ் செய்து - அதற்குத் தக்க கோலத்தைச் செய்து தார்க்கோலம் - தூசிப் படையின் அழகையும் மான் தேர்த் தொகை - குதிரை பூட்டிய தேர்த்திரளையும் உடைய மாமன் தொழுது சொன்னான் - மாமனை வணங்கிக் கூறினான்.

முன்னர் 2326 ஆஞ் செய்யுளிற் சீவகனை அரசர் நீராட்டியதாகப் பொருள்கூறிய நச்சினார்க்கினியர் ஈண்டுச் சீவகன் நீராடியதனைக், “கள வேள்வி முடித்துக் களத்தினின்றும் வருதலின், பின்னும் மஞ்சனம் ஆடினான்“ என்பர்.

2353 **எண்கொண்ட ஞாட்பி னிரும்பெச்சிற்**

படுத்த மார்பர்

புண்கொண்டு போற்றிப் புறஞ்செய்கெனப்

பொற்ப நோக்கிப்

பண்கொண்ட சொல்லார் தொழப்பாம்பணை

யண்ணல் போல

மண்கொண்ட வேலா னடிதைவர

வைகி னானே.

எண் கொண்ட ஞாட்பின் - நினைக்கத்தக்க இப்போரிலே இரும்பு எச்சில் படுத்த மார்பர் - படைகளாலே புண் பட்ட மார்பினரின் புண் போற்றிக்கொண்டு புறம் செய்க என - புண்ணைப் போற்றிக்கொண்டு காத்தருளுவீராக என்று கூறி பொற்ப நோக்கி - (தானும் அவர்களை) அன்புடன் பார்த்து (வேண்டுவன செய்து) மண் கொண்ட வேலான் - நிலங்காவல் கொண்ட சீவகன் பாம்பு அணை அண்ணல் போல - திருமாலைப் போல பண்கொண்ட சொல்லார் தொழ - பண்போன்ற மொழி மகளிர் வணங்கவும் அடி தைவர - அடிகளைத் தடவவும் வைகினான் - துயில் கொண்டான்.

''எண் கொண்ட ஞாட்பின்'' என்பதற்குத் ''தேவாசுரம், இராமாயணம், மாபாரதம்என்ற போரில் வீரர் புண்படுமாறுபோல'' என ''அப் போர்களோடு எண்ணுதல் கொண்ட போரில்'' என்று ஆசிரியர் கூற்றாகவும் கூறலாமென்றும் நச்சினார்க்கினியர் பொருள் கூறுவர்.

பலர் புண்களையும் அறிந்து பரிகரித்தாற்கோவிந்தனைக் கூறினான். செய்க: வேண்டிக் கோடற்கண் வந்த வியங்கோள். முன்னர், "மண் கருதும் வேலான்" (சீவக. 1225) என்றதற்கேற்ப, ஈண்டு, "மண்கொண்ட வேலான்" என்றார்.

வேறு

2354 **வாள்க ளாலே துகைப்புண்டு**

வரைபுண் கூர்ந்த போல்வேழ

நீள்கால் விசைய நேமித்தே

ரிமைத்தார் நிலத்திற் காண்கலாத்

தாள்வல் புரவி பண்ணவிழ்த்த

யானை யாவித் தாங்கன்ன

கோள்வா யெ.்.க மிடம்படுத்த

கொழும்புண் மார்ப ரயாவுயிர்த்தார்.

வாள்களாலே துகைப்பு உண்டு வரைபுண் கூர்ந்த போல் வேழம் - வாள்களாலே வெட்டுண்டதனால், மலை புண் மிகுந்தது போன்ற யானையும் நீள் கால் விசைய நேமித்தேர் - பெருங் காற்றைப் போலும் விரைந்து செல்லும் உருளுடைய தேரும் இமைத்தார் நிலத்தில் காண்கலாத் தாள் வல் புரவி - கண்ணை இமைத்தவர் பின்பு நிலத்திற் காணவியலாத வலிய கால்களையுடைய புரவியும் பண் அவிழ்த்த யானை ஆவித்தாங்கு அன்ன கோள்வாய்எ.்.கம் இடம்படுத்த - பண்ணவிழ்த்த யானை கொட்டாவி கொண்டாற் போன்றதாம்படி, கொலை வல்ல வாள் பிளந்த கொழும் புண் மார்பர் - பெரும் புண்களையுடைய மார்பரும் அயா வுயிர்த்தார் - இளைப்பாறினார்.

அ.்.றிணையும் உயர்திணையும் எண்ணிச் சிறப்பினால் ''அயாவுயிர்த்தார்'' என உயர்திணை முடிபைப் பெற்றன.

2355 **கொழுவாய் விழுப்புண் குரைப்பொலியுங்**

கூந்தன் மகளிர் குழைசிதறி

யழுவா ரழுகைக் குரலொலியு

மதிர்கண் முரசின் முழக்கொலியுங்

குழவாய்ச் சங்கின் குரலொலியுங்

கொலைவல் யானைச் செவிப்புடையு

மெழுவார் யாழு மேத்தொலியு

மிறைவன் கேளாத் துயிலேற்றான்.

கொழுவாய் விழுப்புண் குரைப் பொலியும் - அழகிய இடும்பை தரும் புண்வாய் காற்றைப் புறப்பட விடும் ஒலியையும் கூந்தல் மகளிர் குழை சிதறி அழுவார் அழுகைக் குரல் ஒலியும் - இறந்தவர்க்குக் கூந்தலையுடைய மகளிர் குழையை வீசிவிட்டு அழுவாருடைய அழுகைக் குரலிற் பிறந்த ஒலியையும் அதிர்கண் முரசின் முழக்கு ஒலியும் - அதிரும் கண்ணையுடைய முரசு முழக்குதலால் உண்டாம் ஒலியையும் குழுவாய்ச் சங்கின் குரல் ஒலியும் திரண்ட வாயையுடைய சங்கின் முழக்கால் எழுந்த ஒலியையும் கொலை வல்யானைச் செவிப் புடையும் - நொந்த யானையின் காதடிப்பினால், எழும் ஒலியையும்' எழுவார் யாழும் - யாழிசைப்பாரின் யாழொலியையும் ஏதது ஒலியும் - வாழ்த்தும் ஒலியையும்' இறைவன் கேளாத் துயில் ஏற்றான் - அரசன் கேட்டவாறு துயில் நீங்கினான்.

விழுப்புண் - முகத்திலும் மார்பிலும் பட்டபுண் - இடும்பை தரும்புண் என்பர் நச்சினார்க்கினியர். விழுமம் - இடும்பை. குரைப்பொளி: இருபெயரொட்டு. அழுவார் : வினையாலணையும் பெயர். குழுவாய்ச் சங்கென்புழி, குழு - திரட்சி, செவிப்புடை - காதடித்தலால் எழும் ஒலி. எழுவார் . எழுப்புவோர். இறைவன் : சீவகன்.

2356 **தொடித்தோண் மகளி ரொருசாரார்**

துயரக் கடலு ளவர்நீந்த

வடிக்கண் மகளி ரொருசாரார்

வரம்பி லின்பக் கடனீந்தப்

பொடித்தான் கதிரோன் றிரைநெற்றிப்

புகழ்முப் பழநீர்ப் பளிங்களைஇக்

கடிப்பூ மாலை யவரேந்தக்

கமழ்தா மரைக்கண் கழீஇயினான்.

ஒரு சாரார் தொடித் தோள் மகளிர் அவர் துயரக் கடலுள் நீந்த - பட்டவருடைய மகளிராகிய தொடியணிந்த தோளையுடைய அவர்கள் துயரக் கடலிலே நீந்தவும் ஒரு சாரார் வடிக்கண் மகளிர் வரம்பில் இன்பக் கடல் நீந்த - வென்று மீண்டவருடைய மகளிராகிய மாவடுவனைய கண்களை யுடையவர் எல்லையில்லாத இன்பக் கடலிலே நீந்தவும் திரை நெற்றிக் கதிரோன் பொடித்தான் - கடலின் முகட்டிலே கதிரவன்.

இருபது பட்டிற்குக் கோடி என்பதைப் பெயராக்கியும் உரைப்பர்.

கோடிக்கோடுழ்கோள்திக்கு ஓடும் எனக் கண்ணழிக்க. கூம்பு - பாய்மரம், நாவா - ஓடம், கோடித்தானை என்புழிக் கோடி - எண்ணுப் பெயர் கொம்பரிற் கோடி என மாறுக. கோடி - வளைந்து.

தோன்றினான் புகழ் முப்பழநீர்ப் பளிங்கு அளைஇ - புகழ் பெற்ற முப்பழங்கள் ஊறின நீரிலே கருப்பூரத்தைக் கலந்து' கடிப்பூ மாலையவர் ஏந்தக் கமழ் தாமரைக்கண் கழீஇயினான் - மணமலாமாலை மகளிர் ஏந்தத் தாமரை மலரனைய தன் கண்களைச் சீவகன் கழுவிக் கொண்டான்.

ஒரு சாரராகிய மகளிர் துயரக் கடலுள் நீத்த ஒரு சாரராகிய மகளிர் இன்பக் கடல் நீக்க என இயைக்க. தோற்றோரும் வென்றோருமாகிய இருசாரருள் ஒருசாரார் என்க. பொடித்தான் - தோன்றினான். முப்பழம் - கடு, நெல்லி, தான்றி என்பன. பளிங்கு - கருப்பூரம்.

2357 **முனைவற் றொழுது முடிதுளக்கி**

முகந்து செம்பொன் கொளவீசி

நினைய லாகா நெடுவாழ்க்கை

வென்றிக் கோல விளக்காகப்

புனையப் பட்ட வஞ்சனத்தைப்

புகழ வெழுதிப் புனைபூணான்

கனைவண் டார்க்கு மலங்கலுங்

கலனு மேற்பத் தாங்கினான்.

நினையல் ஆகா நெடு வாழ்க்கை - பிறராற் கருதற்கரிய பெருஞ் செல்வத்திற்கும் வென்றிக் கோலம் - வெற்றிக் கோலத்திற்கும் விளக்காக - விளக்க மாகும்படி முனைவன் தொழுது - அருகனை அஞ்சலி செய்து முடிதுளக்கி - தலைதாழ்த்து செம்பொன் முகந்து கொள வீசி - சிறந்த பொன்னை யாவரும் வாரிக் கொள்ளுமாறு கொடுத்து' புனையப்பட்ட அஞ்சனத்தைப் புகழ எழுதி - கை செய்த மையைப் புகழுமாறு கண்ணில் எழுதி' கனை வண்டு ஆர்க்கும் அலங்கலும் கலனும் - வண்டுகள் முரலும் மாலையும் அணிகளும்' புனை பூணான் ஏற்பத் தாங்கினான் - புனைந்த பூணான் பொருந்தத் தாங்கினான்.

முனைவன் என்றது அருகக்கடவுளை. பிறராற் பெறலாமென்று நினையலாகா என்றவாறு. கண்டோர் புகழ எழுதி என்க. கனை வண்டு - மிக்கவண்டு. அலங்கல் - மாலை.

2358 **முறிந்த கோல முகிழ்முலையார்**

பரவ மொய்யார் மணிச்செப்பி

லுறைந்த வெண்பட் டுடுத்தொளிசோர்

பஞ்ச வாசங் கவுட்கொண்டு

செறிந்த கமுநீரப் பூப்பிடித்துச்

சேக்கை மரீஇய சிங்கம்போ

லறிந்தார் தமக்கு மநங்கனா

யண்ணல் செம்மாந் திருந்தானே.

முறிந்த கோலம் முகிழ் முலையார் பரவ - தளிர்த்த கோலத்தை யுடைய முகிழ்த்த முலையார் வணங்க மொய்ஆர் மணிச் செப்பில் - மணிகள் இழைத்த செப்பில் உறைந்த வெண்பட்டு உடுத்து - இருந்த வெண்பட்டை அணிந்து ஒளிசேர் பஞ்ச வாசம் கவுள் கொண்டு - ஒளி பொருந்திய ஐந்து முகவாசத்தையும் கவுளிலடக்கி செறிந்த கழுநீர்ப் பூப்பிடித்து - இதழ் நெருங்கிய கழுநீர் மலரைக் கையில் ஏந்தி அறிந்தார் தமக்கும் அநங்கனாய் - (இக் கோலத்தாலே) அறிந்தவர்களுக்கும் காமனாகத் தோற்றி சேக்கை மெரீஇய சிங்கம்போல் - (ஆண்மையினாலே) சேக்கையைப் பொருந்திய சிங்கம் போல அண்ணல் செம்மாந்து இருந்தான் - சீவகன் வீறுடன் அச் சேக்கையிலே இருந்தான்.

''முலையார் மெலிய'' என்றும் பாடம். இது மற்றை நாளிலே சமய மண்டபமிருந்த காட்சி.

2359 **வார்மீ தாடி வடஞ்சூடிப்**

பொற்பார்ந் திருந்த வனமுலையா

ரேர்மீ தாடிச் சாந்தெழுதி

யிலங்கு முந்நீர் வலம்புரிபோற்

கார்மீ தாடிக் கலம்பொழியுங்

கடகத் தடக்கைக் கழலோனைப்

போர்மீ தாடிப் புறங்கண்ட

புலால்வேன் மன்னர் புடைசூழ்ந்தார்.

வார் மீது ஆடி - கச்சை அறுத்து' வடம்சூடி - முத்துமாலை அணிந்து பொற்பு ஆர்ந்திருந்த வனமுலையார் - பொலிவு நிறைந்திருந்த ஒப்பனையுடைய முலையார் ஏர்மீது ஆடிச் சாந்தெழுதி - அழகு மேலாகச் சாந்தையும் எழுதி இலங்கும் முந்நீர் வலம்புரிபோல் - விளங்கும் பாற்கடலிலிருந்தெழுந்த சங்கநிதிபோல கார்மீது ஆடிக் கலம்பொழியும் - காரை வென்று கலன்களைப் பொழிகிற கடகத் தடக்கைக் கழலோனை - கடகமணிந்த தடக்கையையும் கழலையும் உடையவனை போர்மீது ஆடிப் புறம் கண்ட புலால் வேல் மன்னர் புடை சூழ்ந்தார் - போரை வென்று பகைவரைப் புறங்கண்ட புலவு நாறும் வேலணிந்த மன்னர் சூழ்ந்தனர்.

வார் - கச்சு. வடம் - முத்துவடம். பொற்பு - பொலிவு. கார்மீதாடி - மேகத்தை வென்று. கலம் - அணிகலன். கழலோன் : சீவகன்.

வேறு

2360 **தொல்லை நால்வகைத் தோழருந்**

தூமணி நெடுந்தேர்

மல்லற் றம்பியு மாமனு

மதுவிரி கமழ்தார்ச்

செல்வன் றாதையுஞ் செழுநக

ரொடுவள நாடும்

வல்லைத் தொக்கது வளங்கெழு

கோயிலு ளொருங்கே.

தொல்லை நால்வகைத் தோழரும் - பழைமையான நான்கு தோழர்களும் தூமணிநெடுந்தேர் மல்லல் தம்பியும் - தூய மணிகள் இழைத்த பெரிய தேரையுடைய வளமிகு தம்பியும்' மாமனும் - கோவிந்தனும் கமழ்தார்ச் செல்வன் தாதையும் - மணமிகுந்தாரணிந்த சீவகனுக்குத் தந்தையான கந்துக்கடனும்' செழுநகரொடு வளநாடும் - பழைய ஊரும் வள நாடும் வளம் கெழு கோயிலுள் - செல்வம் நிறைந்த அரண்மனையிலே ஒருங்கே வல்லை தொக்கது ஒன்று சேர விரைந்து கூடின.

நந்தட்டன் சிறந்தமையிற் கூறினாரென்பர் நச்சினார்க்கினியர். பின்னரும் நபுல விபுலரைப் பேசாது விட்டதனால் அவர்கள் போரில் இறந்திருத்தல் வேண்டும். திணை விராய் எண்ணி அ∴றிணையினால் முடிந்தது. ‘‘தொக்கது’’ என்பதனாற் பன்மையொருமை மயக்கமுமாம்.

2361 **துளங்கு வெண்மதி யுகுந்தவெண்**

கதிர்தொகுத் ததுபோல்

விளங்கு வெள்ளியம் பெருமலை

யொழியலந் தெழிலார்

வளங்கொண் மாநகர் மழகதிர்

குழீஇயின போலக்

களங்கொண் டீண்டினர் கதிர்முடி

விஞ்சையர் பொலிந்தே.

துளங்கு வெண்மதி உகுத்த வெண்கதிர் தொகுத்ததுபோல் - அசைவினையுடைய வெண்மதி சொரிந்த வெண் கதிரைக் குவித்த தன்மை போல விளங்கு வெள்ளிஅம் பெருமலை ஒழிய வந்து - விளங்கும் பெரிய வெள்ளி மலையைவிட்டுவந்து' எழில் ஆர் வளங்கொள் மாநகர் மழகதிர் குழீஇயின போல - அழகிய வளமிகும் இராசமா புரத்திலே இளங்கதிர் திரண்டாற் போல' பொலிந்து கதிர்முடி விஞ்சையர் களம் கொண்டு ஈண்டினர் - பொலிவுற்று, ஒளிவீசும் முடியணிந்த விஞ்சையர் யாவரும் இடங்கொண்டு திரண்டனர்.

‘‘ஒழிய’’ என்பதற்குக், ‘‘கலுழவேகன் தங்க’’ என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

2362 **எண்ண மென்னினி யெழின்முடி**

யணிவது துணிமின்

கண்ண னாரொடு கடிகையும்

வருகென வரலும்

பண்ணி னார்முடி பழிச்சிய

மணிபொனிற் குயிற்றி

யண்ண லாய்கதி ரலமவரப்

புலமக ணகவே.

இனி எண்ணம் என் ? - இனியும் நினைவுகூர்தல் ஏன் ? எழில் முடி அணிவது துணிமின் - அழகிய முடியை அணிவதை நினைமின் (என்று முன் வந்தோர் அமைச்சரை நோக்கிக் கூற அவர்கள்) கண்ணனாரொடு கடிகையும் - புரோகிதருடன் முழுத்தம் வைப்பவனும் அண்ணல் ஆய்கதிர் அலம் வரப்புலமகள் நக - தலைமைபெற்ற சிறந்த கதிர்கள் அசையவும் நாமகன் மகிழவும் பழிச்சிய மணிபொனில் குயிற்றி - புகழ்ந்த மணிகளைப் பொன்னிலே அழுத்தி முடி பண்ணினார் - மடியமைத்த வரும் வருக என வரலும் - வருக என்றவுடன் அவர்களும் வரவும்

இப் பாட்டுக் குளகம்.

''இனி'' யென்றார் காலங்கழிக்குமது தகாது என்றற்கு. என்றதனாலே புரோகிதன் முதலாகத் துறைதோறும் அழைக்க வேண்டுவாரை அழைத்ததும், அங்குரார்ப்பணம் அதிவாசம் முதலியசடங்குகள் யாவும் நடத்தி முழுத்தம் பார்த்திருந்ததுவும் தோன்றக் கூறினார்.

முடியமைத்தற்குரிய நூல்கள் எல்லாம் முற்ற முடித்தலின், ''நாமகள் மகிழ'' என்றார். புலமகள் நகப் புண்ணினாரும் என்க.

2363 **விரியு மாலையன் விளங்கொளி**

முடியினன் றுளங்கித்

திருவின் மால்வரைக் குலவிய

தனையதோர் தேந்தா

ரகுலி போல்வதோ ராரமு

மார்பிடைத் துயல

வெரியும் வார்குழை யிமையவ

னொருவன்வந் திழிந்தான்.

திருவில் துளங்கி மால்வரைக் குலவியது அனையது ஓர் தேன் தார் - வானவில் அசைந்து பெரிய மலை ஒன்றிலே விளங்கிய தன்மை போல்வதொரு தேன்சொரியும் தாரும் அருவி போல்வது ஓர் ஆரமும்-(அம் மலைமிசை) அருவி போல்வதாகிய ஒரு முத்துவடமும் மார்பிடைத் துயல - மார்பிலே அசைய விளங்கு ஒளி விரியும் மாலையன் - விளங்கும் ஒளி பரவும் இயல்பினனாய் முடியினன் - முடியினனாய்' எரியும் வார்குழை இமையவன் ஒருவன் வந்து இழிந்தான் - ஒளிவிடும் நீண்ட குழையணிந்த வானவன் ஒருவன் வந்து இறங்கினான்.

வந்தவன் சுதஞ்சணன், திருவில் - வானவில் இமையவன் - தேவன்' என்றது சுதஞ்சணனை, இழிந்தான் - இறங்கினன்.

2364 **கொம்மை யார்ந்தன கொடிபட**

வெழுதின குவிந்த

வம்மை யார்ந்தன வழகிய

மணிவட முடைய

வெம்மை செய்வன விழுத்தகு

முலைத்திட முடைய

பொம்மெ லோதியர் பொழிமின்னுக்

கொடியென விழிந்தார்.

கொம்மை ஆர்ந்தன் - பெருமை நிறைந்தன கொடிபட, எழுதின - கொடியமைய எழுதப்பட்டன' குவிந்த - குவிந்தன' அம்மை ஆர்ந்தன - அழகிய கருமை நிறைந்தன அழகிய மணிவடம் உடைய - அழகிய முத்துவடம் உடையன வெம்மை செய்வன - விருப்பூட்டுவனவாகிய முலைத்தடம் உடைய - முலைகளையுடைய பொம்மெல் ஓதியர் - பொங்கிமெத்தென்ற கூந்தலையுடையர் பொழிமின்னுக்கொடி என இழிந்தார் - ஒளியைப் பெய்யும் மின்னொழுங்கென இறங்கினர்.

கொம்மை - பெருமை வட்டமுமாம். கொடி - தொய்யிற் கொடி. அம்மை - அழகிய மை. வெம்மை - விருப்பம், இவர்கள் - சுதஞ்சணன் மனைவிமார் என்க.

2365 **மையல் யானையின் படுமதங்**

கெடப்பகட் டரசன்

செய்த மும்மதம் போற்றிசை

திசைதொறுங் கமழுந்

தெய்வ வாசத்துத் திருநகர்

வாசங்கொண் டொழிய

வெய்யர் தோன்றினர் விசும்பிடைச்

சிறப்பொடும் பொலிந்தே.

மையல் யானையின் படுமதம் கெட - மயக்கம் பொருந்திய யானையின் மதம் கெடுமாறு' பகட்டரசன் செய்த மும்மதம் போல் - களிற்று வேந்தன் உண்டாக்கின மதம்போல ' திசை திசைதொறும் கமழும் தெய்வ வாசத்து - எல்லாத் திசையினும் சென்று மணக்கின்ற தெய்வ

மணத்தாலே திருநகர் வாசம் கொண்டு ஒழிய - அவ்வழகிய நகரின் மணம் அடங்க விசும்பிடைச் சிறப்பொடும் பொலிந்து - வானிலே சிறப்பொடும் பொலிவுற்று வெய்யர் தோன்றினர் - விரைந்து தோன்றினர்.

சிறப்பென்றார் சீவகன் மணிமுடி விழாவிற்குச் சிறப்புறக் கொண்டு வந்த பொருள்களை.

மையல் - மயக்கம். படுமதம் : வினைத்தொகை. பகட்டரசன் - யானைகட்குத் தலைவனாகிய களிறு. இதனை யூதநாதன் என்ப. வெய்யர் - விரைந்தனராய் : முற்றெச்சம்.

2366 **வெருவி மாநகர் மாந்தர்கள் வியந்துகை விதிர்ப்பப்**

பருதி போல்வன பாற்கட னூற்றெட்டுக் குடத்தாற்

பொருவில் பூமழை பொன்மழை யொடுசொரிந் தாட்டி

யெரிபொ னீண்முடி கவித்தனன் பலித்திரற் றொழுதே.

மாநகர் மாந்தர்கள் வெருவி வியந்து கைவிதிர்ப்ப - பெருநகரிலுள்ள மக்கள் அஞ்சி வியந்து கைவிதிர்க்கும்படி பொருஇல் பூமழை பொன் மழையொடு சொரிந்து - ஒப்பற்ற மலர்மழையைப் பொன்மழையுடன் சொரிய பருதி போல்வன நூற்றெட்டுக் குடத்தால் ஞாயிறு போன்றனவாகிய நூற்றெட்டுக் குடங்களால்' பாற்கடல் சொரிந்து ஆட்டி - பாற்கடலிலே முகந்து ஆட்டி பவித்திரன் தொழுது - தூய்வனாகிய சீவகனை வணங்கி எரிபொன் நீளமுடி கலித்தனன் - ஒளிவிடும் நீண்ட பொன்முடியைக் கவித்தான்.

‘‘பவித்திரன்’’ என்றார் நெஞ்சின் தூய்மை தோன்ற. சீவகன் மந்திரமோதி நாய்ப்பிறப்பை நீக்கிய ஆசிரியனாதலின் சுதஞ்சணன் தொழுதான்.

2367 **தேவ துந்துபி தேவர்கட் கோகையுய்த் துரைப்பா**

னாவி யம்புகை யணிகிளர் சுண்ணமோ டெழுந்த

நாவி னேத்தின ரரம்பையர் நரம்பொலி யுளர்ந்த

காவன் மன்னருங் கடிகையுங் கடவது நிறைத்தார்.

ஆவி அம்புகை அணிகிளர் சுண்ணமோடு - ஓமப் புகையொடும் அழகு விளங்கும் சுண்ணத்தோடும் தேவர்கட்கு ஓகை உய்த்து உரைப்பான் - வானவர்கட்கு இம் மகிழ்ச்சியைக் கொண்டு சென்று கூறுவதற்கு தேவதுந்துபி எழுந்த - தெய்வ வாச்சியங்கள் எழுந்தன அரம்பையர் நாவின் ஏத்தினர் - வான மங்கையர் நாவினாற் போற்றினர் நரம்பு ஒலி உளர்ந்த - நரம்பொலி பாட்டுடன் வாசிக்கப்பட்டன' காவல் மன்னரும் கடிகையும் கடவது நிறைத்தார் - காவலுடைய வேந்தரும் கடிகை வரும் தம் கடமையை நிரப்பினர்.

ஆவி : அவியென்பதன் விகாரம் மன்னர் கைக் காணிக்கை இட்டு வணங்கினார். கடிகையர் மங்கலம் பாடினர்.

‘‘நாவின் ஏத்துநர்’’ பாடமாயின், ஏத்துநராகிய அரம்பைய ரென்க.

2368 **திருவ மாமணிக் காம்பொடு**

திரள்வடந் திளைக்கு

முருவ வெண்மதி யிதுவென

வெண்குடை யோங்கிப்

பரவை மாநில மளித்தது

களிக்கயன் மழைக்கட்

பொருவில் பூமகட் புணர்ந்தன

னிமையவ னெழுந்தான்.

திருவ மாமணிக் காம்பொடு திரள்வடம் திளைக்கும் உருவ வெண்மதி இது என - அழகிய பெரிய மணிக்காம்புடன் திரண்ட முத்துவடமும் பயின்ற உருவினையுடைய வெண்திங்கள் இது வென்னுமாறு' வெண்குடை ஓங்கி - வெண்கொற்றக்குடை உயர்ந்து' பரவை மாநிலம் அளித்தது - கடல் சூழ்ந்த பெருநிலத்தைக் காத்தது' களிக்கயல் மழைக்கண் பொருஇல் பூமகள் புணர்ந்தனன் - மகிழ்ந்த கயல்போலும் மழைக்கண்களையுடைய ஒப்பற்ற நிலமகளைச் சீவகன் தழுவினான்' இமையவன் எழுந்தான் - சுதஞ்சணனும் தன்னுலகு செல்லப் போயினான்.

திருவ : அ : அசை. காம்பும் வடமும் திளைக்கும் மதி : இல்பொருளுவமை. குடையும் முடிபுனை மங்கலப் பொருள்களில் ஒன்று.

வேறு

2369 **மின்னுங் கடற்றிரையின் மாமணிக்கை**

வெண்கவரி விரிந்து வீசப்

பொன்னங் குடைநிழற்றப் பொன்மயமா

முழைக்கலங்கள் பொலிந்து தோன்ற

மன்னர் முடியிறைஞ்சி மாமணியங்

கழலேந்தி யடியீ டேத்தச்

சின்ன மலர்க்கோதைத் தீஞ்சொலார்

போற்றிசைப்பத் திருமால் போந்தான்.

மின்னும் கடல் திரையின் மாமணிக்கை வெண்கவரி விரிந்து வீச - ஒளிரும் பாற்கடலலைபோல மணிகளிழைத்த கைப்பிடியையுடைய வெண்கவரி பரவி வீச பொன் அம்குடை நிழற்ற - அழகிய பொற்குடை நிழல் செய்ய பொன்மயம் ஆம் உழைக்கலங்கள் பொலிந்து தோன்ற - பொன்னாலாகிய உழைக்கலங்கள் விளக்கித் தோன்ற மன்னர் முடி இறைஞ்சி மாமணி அம் கழல் ஏந்தி அடியீடு ஏத்த - அரசர்கள் முடியைத் தாழ்த்தி மணிக்கழலையேந்தி அடியிடுதலை ஏத்த சின்ன மலர்கோதைத் தீஞ்சொலார் போற்றிசைப்ப - விடு பூவையும் கோதையையும் அணிந்த இனிய மொழியார் போற்றிக் கூற திருமால் போந்தான் - சீவகன் (நன்னிலம் மிதிக்கப்) போந்தன்.

பொன்னங்குடை : ‘‘பொன்’’ அழகுமாம் இது உலாக் குடையாதலிற் பொற்குடை என்றலே தகவுடைத்து. காத்தல் தொழிலாலும் வடிவாலும் திருமால் என்றே கூறினார். அடுத்து இரண்டு உலா அரசர்க்காகாமையின் மணத்திற்குப் பின் உலாக் கூறுவார் ஈண்டு கன்னிலம்மிதித்தற்கு மண்டபத்தே புகுந்தமைதோன்ற, ‘‘அடியீடேத்த’’ என்றார்.

2370 **மந்தார மாமாலை மேற்றொடர்ந்து**

தழுவவராத் தாம மல்கி

யந்தோவென் றஞ்சிறைவண் டேக்கறவின்

புகைபோய்க் கழுமி யாய்பொற்

செந்தா மரைமகளே யல்லதுபெண்

சாராத திருவின் மிக்க

சிந்தா மணியேய்ந்த சித்திரமா

மண்டபத்துச் செல்வன் புக்கான்.

மந்தார மாமாலை மேல் தொடர்ந்து - மந்தார மலர்மாலை மேலே தொடுக்கப் பெற்று தழுவ வராத் தாமம் மல்கி - தழுவவியலாத மாலைகள் நிறைந்து அந்தோ என்று அம் சிறை வண்டு ஏக்கற - அந்தோ! என்று அழகிய சிறகிசனையுடைய வண்டு (தேனையுண்ணப் பெறாமல்) ஏக்கம் அடையும் படி இன் புகைபோய்க் கழுமி - இனிய புகை சென்று பொருந்தி ஆய்பொன் செந்தாமரை மகளே அல்லது - ஆய்ந்த பொன்னாலாகிய செந்தாமரையிலுள்ள திருமகள் அல்லாமல் பெண் சாராத - வேறு பெண் சாராத திருவின் மிக்க - செல்வத்தாற் சிறந்த சிந்தாமணி ஏய்ந்த - சிந்தாமணியின் தன்மை பொருந்திய’ சித்திரமா மண்டபத்துச் செல்வன் புக்கான் - ஓவியம் எழுதிய மண்டபத்திலே சீவகன் புகுந்தான்’

தழுவ வாராத் தாமங்களில் தேனையுண்ண முடியாமல் வண்டுகள் ஏக்கற்றன. ‘‘திருவல்லது பெண்சாராத’’ எனவே சமய மண்டபமாம். மேல் நினைத்தன நல்குவான் சீவகனென்பதைக் கொண்டு, ‘‘சிந்தாமணி ஏய்ந்த’’ என்றார்.

2371 **பைங்க ணுளையெருத்திற் பன்மணி**

வாளெயிற்றுப் பவள நாவிற்

சிங்கா சனத்தின்மேற் சிங்கம்போற்

றேர்மன்னர் முடிகள் சூழ

மங்குன் மணிநிற வண்ணன்போல்

வார்குழைகடிருவில் வீசச்

செங்கட் கமழ்பைந்தார்ச் செஞ்சுடர்போற்

றேர்மன்ன னிருந்தா னன்றே.

சிங்கம்போல் தேர் மன்னர் முடிகள் சூழ - சிங்கம் போன்ற தேர் வேந்தரின் முடிகள் சூழ வார்குழைகள் திருவில் வீச - நீண்ட குழைகள் அழகிய ஒளியை வீச மங்குல் மணிநிற வண்ணன் போல் - முகிலைப் போலும் நீலமணியைப் போலும் நிறமுடைய திருமால் போலும் செங்கண் கமழ் பைந்தார்ச் செஞ்சுடர் போல் - செங்கண்களையும் மணமுறும் பைந்தாரையும் உடைய செஞ்ஞாயிறு போலும் பைங்கண் உளை எருத்தின் பன்மணி வாள் எயிற்றுப் பவள நாவின் - பைங்கண்களையும் உளையையுடைய கழுத்தையும் பலமணிகளாலான கூரிய பற்களையும் பவள நாவையும் உடைய சிங்காசனத்தின்மேல் தேர்மன்னன் இருந்தான் - சிங்கம் சுமந்த அணையின் மேல் தேரையுடைய சீவக மன்னன் அமர்ந்தான்.

மங்குல் - திசை என்பர் நச்சினார்க்கினியர்.

உளை - பிடரிமயிர். சிங்கம் மன்னர்கட்குவமை மணிநிறவண்ணன் திருமால். செஞ்சுடர் - ஞாயிறு. எனவே தந்தையைப்போலிருந்தான் என்றார் நச்சினார்க்கினியர்.

வேறு

2372 வார்பிணி முரச நாண
வானதிர் முழக்க மேய்ப்பத்
தார்பிணி தாம மார்பன்
றம்பியை முகத்து ணோக்கி
யூர்பிணி கோட்டஞ் சீப்பித்
துறாதவ னாண்ட நாட்டைப்
பார்பிணி கறையி னீங்கப்
படாமுர சறைவி யென்றான்.

தார்பிணி தாம மார்பன் தம்பியை முகத்துள் நோக்கி - மாலை பிணித்த ஒளியுறு மார்பன் நந்தட்டன் முகத்தைப் பார்த்து, வார்பிணி முரசம் நாண வான் அதிர் முழக்கம் ஏய்ப்ப - வாராற் கட்டப்பட்ட முரசம் வெள்கவும், முகில் அதிரும் முழக்கம் போலவும் ஊர்பிணி கோட்டம் சீப்பித்து - ஊரிலுள்ளாரைப் பிணித்த சிறைக்கோட்டங்களை இடிப்பித்து உறாதவன் ஆண்ட நாட்டைப் பார்பிணி கறையின் நீங்க - நம் பகைவன் ஆண்ட நாட்டினை உலகைப் பிணிக்கும் இறையிலிருந்து விலக' படாமுரசு அறைவி என்றான் - ஓய்விலாத முரசை அறையச் செய்க என்றான்.

முகத்துள் : உள் உருபு மயக்கம். ‘‘பாரிற்குக் கட்டின கடமையினின்றும் நீங்க என்றது ஆறில் ஒன்னையும் தவிர’’ என்றவாறு. இது கடமை கொள்ளாமை என்னும் பொருட்டாய் நாட்டை, என்னும் இரண்டாவதற்கு முடிபு ஆயிற்று. ஐ : ‘‘அசை’’ எனினுமாம்.

2373 கடவுள ரிடனுங் காசில்
கணிபெறு நிலனுங் காமர்
தடவளர் முழங்குஞ் செந்தீ
நான்மறை யாளர் தங்க

ளிடவிய நிலத்தோ டெல்லா

மிழந்தவர்க் கிரட்டி யாக

வுடனவை விடுமி னென்றா

னொளிநிலா வுமிழும் பூணான்.

ஒளிநிலா உமிழும் பூணான் - ஒளி நிலவைச் சொரியும் பூணினான் கடவுளர் இடனும் - கடவுளருக்கு இறையிலியாக விட்ட நிலனும் காசு இல் கணிபெறு நிலனும் - குற்றம் அற்ற கணிகள் பெற்ற நிலமும் காமர் தடவளர் முழங்கும் செந்தீ நான்மறையாளர் தங்கள் இடவிய நிலத்தோடு - விருப் பூட்டும் ஓமகுண்டத்திலே வளர்ந்து ஒலிக்கும் செந்தீயையுடைய மறைவல்லாருக்களித்த இடம் பரவிய நிலத்துடன் எல்லாம் - மற்றுமுள்ள இறையிலி நிலங்களையும் இழந்தவர்க்கு இரட்டியாக - முன் அவனால் இழந்தவர்களுக்கு இருபங்காக அவை உடன் விடுமின் என்றான் - அவற்றை உடனே விடுமின் என்று மந்திரிகளை நோக்கிக் கூறினான்.

இவை இறையிலி நிலங்கள், ‘‘தட’’ என்பது தூபமுட்டி எனினும் ஈண்டு வேள்விக் குண்டத்தை உண்த்திதுகின்றது.

இறையிலி நிலங்களை முன்போல விடுமின் எனவும், இழந்தவர்க்கு இரட்டியாக விடுமின் எனவும் இருமுறை கூட்டிக் கூறுக.

2374 என்றலுந் தொழுது சென்னி

நிலனுறீஇ யெழுந்து போகி

வென்றதிர் முரசம் யானை

வீங்கெருத் தேற்றிப் பைம்பொற்

குன்றுகண் டனைய கோலக்

கொடிநெடு மாட மூதூர்ச்

சென்றிசை முழங்கச் செல்வன்

றிருமுர சறைவிக் கின்றான்.

என்றாலும் - என்று சீவகன் கூறியவுடன் செல்வன் தொழுது சென்னி நிலன் உறீஇ எழுந்து போகி - நந்தட்டன் சீவகனைத் தொழுது முடி நிலமுற வணங்கி எழுந்து சென்று வென்று அதிர் முரசம் யானை வீங்கு எருத்து ஏற்றி - வென்று முழங்கும் முரசை யானையின் பருத்த பிடரிலே. அமைத்து பைம்பொன் குன்று கண்டனைய கோலம் - புதிய பொன்னாலாகிய மலையைக் கண்டாற் போன்ற அழகினையுடைய கொடி நெடுமாடம் - கொடியுடைய நீண்ட மாடங்களையுடைய மூதூர் சென்று - மூதூரிலே போய்’ இசை முழங்கத் திருமுரசு அறைவிக்கின்றான் - புகழ் முழங்க அழகிய முரசை (வள்ளுவனைக் கொண்டு) அறைவிக்கின்றவன்.

நிலன் உறீஇ - நிலத்தைப் பொருந்தும்படி வணங்கி என்க. வீங்கெருத்து - பருத்த பிடரி. பொன்குன்றம் மாடத்திற்குவமை. அறைவிக்கின்றான் : வினையாலணையும் பெயர். இதுமுதல் மூன்று செய்யுள் ஒருதொடர்.

2375 **ஒன்றுடைப் பதினை யாண்டைக்**

குறுகட னிறைவன் விட்டா

னின்றுளீ ருலகத் தென்று

முடனுளீ ராகி வாழ்மின்

பொன்றுக பசியு நோயும்

பொருந்தலில் பகையு மென்ன

மன்றல மறுகு தோறு

மணிமுர சார்ந்த தன்றே.

பசியும் நோயும் பொருந்தல் இல் பகையும் பொன்றுக! - பசியும் பிணியும் பொருத்தமில்லாத பகையும் ஒழிக! இன்று உளீர் உலகத்து என்றும் உடன் உளீராகி வாழ்மின்! - இப்போதுள்ள நீவிர் எப்போதும் உலகத்தில் உடனிருப்பீராகி வாழ்மின்! ஒன்றுடைப் பதினையாண்டைக்கு உறு கடன் இறைவன் விட்டான் - பதினாறாண்டுகட்கு உரிய கடனை இறைவன் நீக்கிவிட்டான்' என்ன - என்று அன்றே மன்றல் மறுகு தோறும் மணிமுரசு ஆர்த்தது - அப்போதே மணமுடைய தெருக்கள்தோறும் அழகிய முரசு ஒலித்தது.

ஒன்றுடைப் பதினையாண்டு என்றது பதினாறாண்டு என்றவாறு. கடன் - அரசிறைப் பொருள். பசியும் நோயும் பொன்றுக என மாறுக. என்ன - என்று வள்ளுவன் கூறி முழக்க முரசு ஆர்த்தது என்க.

2376 **நோக்கொழிந் தொடுங்கி னீர்க்கு**

நோய்கொளச் சாம்பி னீர்க்கும்

பூக்குழன் மகளிர்க் கொண்டான்

புறக்கணித் திடப்பட் டீர்க்கும்

கோத்தரு நிதியம் வாழக்

கொற்றவ னகரோ டென்ன

வீக்குவார் முரசங் கொட்டி

விழுநக ரறைவித் தானே.

நோக்கு ஒழிந்து ஒடுங்கினீர்க்கும் - பார்வை யிழந்து மெலிந்திருக்கும்' நோய்கொளச் சாம்பினீர்க்கும் - நோய் கொண்டதால் மனமிடிந்தீர்க்கும் பூக்குழல் மகளிர்க் கொண்டான் புறக்கணித்திடப் பட்டீர்க்கும் - பூவையணிந்த குழலையுடைய பரத்தையரிடத்து வேட்கையாலே கணவனாற் புறக்கணித்திடப் பட்டீர்க்கும் வாழ நகரோடு கோத்தரு நிதியம் கொற்றவன் (தரும்) என்ன - வாழ்வதற்கு மனையுடன் இடையறாத செல்வத்தையும் அரசன் நல்குவான் என்று

விழுநகர் வீக்குவார் முரசம் கொட்டி அறைவித்தான் - சிறந்த நகரிலே, கட்டப்பட்ட வாரையுடைய முரசினைக் கொட்டி அறைவித்தான்.

கோ - பசுவுமாம். கொற்றவன் தரும் என ஒருசொல் வருவிக்க. அல்லது கோத்தரும் என்பதிலுள்ள தரும் என்பதைச் சேர்க்க. 'கோத்லைத் தரும் நிதியம்' என்பது 'கோத்தரு நிதியம், என விகாரப்பட்டது. அரசன் கூறாதன தான் கூறினானல்லன்' அவன் அரசாட்சி பெற்றாற் செய்யும் அறங்களாகத் தனக்கு முற்கூறியவற்றைப் பின் தான் சாற்றுவித்தான் என்க.

2377 **திருமக னருளப் பெற்றுத்**

திருநிலத் துறையு மாந்த

ரொருவனுக் கொருத்தி போல

வுளமகிழ்ந் தொளியின் வைகிப்

பருவரு பகையு நோயும்

பசியுங்கெட் டொழிய விப்பாற்

பெருவிறல் வேந்தர் வேந்தற்

குற்றது பேச லுற்றேன்.

திருமகன் அருளப் பெற்று - (இவ்வாறு) அரசன் அருளப் பெறுதலின் திருநிலத்து உறையும் மாந்தர் - அவனுடைய அழகிய நாட்டிலே வாழும் மக்கள் ஒருவனுக்கு ஒருத்திபோல உளம் மகிழ்ந்து - ஒருவனுக்கு ஒருத்திபோல மனங்களித்து ஒளியின் வைகி - புகழுடன் தங்குதலால்' பருவரு பகையும் நோயும் பசியும் கெட்டு ஒழிய - துன்புறுத்தும் பகையும் பிணியும் பசியும் கெட்டு விலக (அரசாளும் நாளிலே) இப்பால் - இனி பெருவிறல் வேந்தர் வேந்தற்கு உற்றது பேசலுற்றேன் - பேராற்றலையுடைய மன்னர் மன்னனான சீவகனுக்கு நிகழ்ந்ததை இயம்பத் தொடங்கினேன்.

திருமகன் : சீவகன், அன்பான் ஒத்த ஒருவனும் ஒருத்தியும் கூடிய வழி உளமகிழ்ந்திருத்தல் போன்று மகிழ்ந்து என்றவாறு. வைகி - வைக. ஒளி - புகழ். வேந்தர் வேந்தன் : சீவகன்.

பூமகள் இலம்பகம் முற்றிற்று.

சூளாமணி

சூளாமணி - தோலாமொழித் தேவர் இயற்றியது. கி.பி.10-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது (கி.பி. 925-950). சமண சமயத்தைச் சார்ந்த நூல். காப்பியத் தலைமாந்தர்களில் ஒருவராம் பயாபதி மன்னனை, உலகின் முடிக்கு ஓர் சூளாமணி ஆனான் (முத்திச்சருக்கம். 59) என்று ஆசிரியர் பெருமைப்படுத்துகிறார். இதன்வழி சூளாமணி என்பது பயாபதி அரசனின் புகழ்ப் பெயராகவே இருக்கின்றது என்பது தெரிகிறது. இக்காப்பியத்தில், இரத்தின பல்லவ நகரினைச் சூளாமணியின் ஒளிர்ந்து (முத்திச்சருக்கம் 284) என நகரின் பெருமையையும், இந்திர சஞ்சய அரசனை, மஞ்சுசூழ் மலைக்கோர் சூளாமணி (முத்தி. 329) என அரசின் பெருமையையும், குன்றெடுத்த திவிட்டன் முடிமேல் சூளாமணி முளைத்த சோதி (முத்தி. 1519) எனக் காப்பியத் தலைவனின் பெருமையையும் சுட்டியிருப்பதால், இந்நூலாசிரியர் காப்பியத்தின் பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளமை நன்கு புலனாகின்றது.

ஊழ்வினைக் கோட்பாடு

சூளாமணியின் ஆசிரியர் ஊழ்வினைக் கோட்பாட்டை விளக்கிக் கூறுகிறார். ஊழ்வினையை நீக்க இரத்தினத் திரயம் என்னும் கோட்பாடு, பல உலகம் பற்றிய உண்மை, குலம், சமய நம்பிக்கை ஆகியவற்றைச் சமண சமய உணர்வோடு எடுத்துரைப்பது இக்காப்பியத்தின் நோக்கமாக உள்ளது.

அரங்கேற்றம்

இக்காப்பியம், சேந்தன் எனும் மன்னன் அவையில் அரங்கேறியுள்ளது. இது பாயிரத்தின்மூலம் அறியும் செய்தி.

காப்பிய அமைப்பு

சூளாமணி காப்பியம் 12 சருக்கங்களில், 2131 விருத்தப்பாக்களால் எழுதப்பட்டுள்ளது. சருக்கங்கள் வருமாறு:

பாயிரம் (1)

நாட்டுச் சருக்கம் (2)

நகரச் சருக்கம் (3)

குமார காலச் சருக்கம் (4)

இரதநூபுரச் சருக்கம் (5)

மந்திரசாலைச் சருக்கம் (6)

தூதுவிடு சருக்கம் (7)

சீயவதைச் சருக்கம் (8)

கல்யாணச் சருக்கம் (9)

அரசியற் சருக்கம் (10)

சுயம்வரச் சருக்கம் (11)

துறவுச் சருக்கம் (12)

முத்திச் சருக்கம்

ஐந்திணை நிலவளம், நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு, அரசியல் அறம்,தூது நெறி, வேனில் விழா, அமைச்சரவை, சுயம்வரம், தெய்வப்போர், மாயப்போர் முதலியன கொண்டு இயன்ற வரை தமிழ் மரபுக்கேற்ப இக்காப்பியத்தை இயற்றியுள்ளார், ஆசிரியர்.

முதல் நூல்

சூளாமணிக்கு முதல் நூலானது செஞ்சொற்புராணம் என்பதைப் பாயிரத்தின் மூலம் உணரலாம். வடமொழியில் உள்ள ஸ்ரீபுராணத்தில் வரும் 11-ஆம் தீர்த்தங்கரர் புராணத்தில் சூளாமணிக் கதை கூறப்படுகிறது. வடநாட்டு வேந்தர்களான விசயனும், திவிட்டனும் பாகவதத்தில் வரும் பலராமன், கண்ணன் ஆகியோருடன் ஒப்பிட்டு எண்ணுதற்குரியர். ஸ்ரீபுராணத்தைத் தவிர, மற்றொரு சமணக் காப்பியமான மகாபுராணத்திலும் சூளாமணிக் கதைப் பொருள் வருகின்றது.

நாற்பொருள் கூறுதல், ஆருகத (சமண) சமயத்தில் காணும் அரியஉண்மைகளை விளக்கல், வாழ்வில் பின்பற்றற்குரிய வரலாறுகளையும் நீதிகளையும் எடுத்துரைத்தல் ஆகியவை பற்றிப் பேசுவதால், சமணர்கள் மேலான நூலாக இதனைப் போற்றி வந்தனர்.

ஆசிரியர்

சூளாமணி ஆசிரியர் தோலாமொழித் தேவர் தான் என்பது பற்றித் தெளிவாக எதுவுமே தெரியவில்லை. தோலாமொழித் தேவர் எனும் பெயருக்கு வெல்லும் சொல்வல்லார் என்பது பொருள்.

தோலாமொழி என்று சில தனிச் செய்யுள்களில் இவர் பெயர் வருகிறது' ஆனாலும் இயற்பெயர் தெரியவரவில்லை.

தேவர் என்ற ஒட்டே சமணர் என்ற குறிப்பைத் தருகிறது என்பதால், இவர் சமணர் என்பர் சிலர். வேறுமொழிகளில் இப்பெயர் கொண்ட காப்பியம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சமணர்கள் சீவகசிந்தாமணிக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றுவது சூளாமணியைத்தான்.

சிரவணபெலகோலாவில் காணும் கல்வெட்டில், காப்பியங்களுக்கெல்லாம் சூடாமணியாக விளங்கும் சூடாமணி, என்ற காவியத்தை இயற்றியவர் ஸ்ரீவர்த்த தேவர், என்று குறிக்கப்பட்டுள்ளது. அந்த ஸ்ரீவர்த்த தேவரே தோலாமொழித் தேவர் என்றும் குறிப்பிடுகிறார்கள் சிலர்.

தருமதீர்த்தன் என்பவரின் மாணவனாக இவர் இருந்திருக்கிறார் என்றும், சிலர் தொண்டை நாட்டுக்குரியவர் என்றும் சிலர் பாண்டிய நாட்டுக்குரியவர் என்றும் கருதுகின்றனர்.

சூளாமணியில் தோலா நாவில் சச்சுதன் என்றும் ஆர்க்கும் தோலாதாய் என்றும் வழங்கியமையால், சூளாமணி ஆசிரியர் அவர் இயற்றிய தொடரால் பெயரிடப்பெற்றார் எனக் கருதுவோரும் உளர்.

நகரச் சருக்கம்

சுரமை நாட்டின் தலைநகரான போதன மாநகரத்தின் சிறப்பும், அந்நகரை ஆளும் பயாபதி என்னும் அரசனின் சிறப்பும் உரைக்கப்படுகிறது. அவன் பல மனைவியரை மணந்திருந்தாலும் அவர்களுள் மிகாபதி, சகி என்னும் அரசியர் இருவருடைய சிறப்பும் அரசன் அவர்களுடன் இன்புற்றிருந்த நிலையும் கூறப்படுகின்றன.

36. சுரமை நாட்டுப் போதனமா நகரம்

சொன்னநீர் வளமைத்தாய சுரமைநாட் டகணிசார்ந்து

மன்னன்வீற் றிருந்துவைக நூலவர் வகுக்கப்பட்ட

பொன்னவிர் புரிசை வேலிப் போதனமென்ப துண்டோர்

நன்னகர் நாக லோக நகுவதொத் தினிய தொன்றே.

முன்பு நாட்டுச் சருக்கதிற் கூறிய நீர்மையும் வளப்பமும் உடைய சுரமை நாட்டின் நடுவிடத்திலே அமைந்து அந்நாட்டு அரசன் அரசு வீற்றிருந்து வாழ்தற்கு இடமாக சிற்பநூல் வல்லவர்களால் அமைக்கப்பட்டதும், அழகு விளங்குகின்ற மதிலினாற் சூழப்பட்டதும், போதனம் என்று பெயர் கூறப்பெறுவதும் தேவருலகத்தை இகழ்ந்து நகைப்பதுபோன்று பலவகைச் சிறப்புக்களையு முடையதுமான ஒரு சிறந்த நகரம் நிலவுலகத்தில் உள்ளது.

37. நகரத்தின் அமைதி

சங்கமேய் தரங்க வேலித் தடங்கடற் பொய்கை பூத்த

அங்கண்மா ஞால மென்னுந் தாமரை யலரி னங்கேழ்ச்

செங்கண்மால் சுரமை யென்னுந் தேம்பொகுட் டகத்து

வைகும்

நங்கையார் படிவங் கொண்ட நலத்தது நகர மன்றே.

சங்குகள் மேய்கின்ற அலைகளாகிய அரணை யுடைய பெரிய கடலாகிய தடாகத்தினிடத்தில் மலர்ந்த அழகிய இடத்தையுடைய பெரிய நிலவுலகம் என்று கூறப்பெறும் தாமரைப்பூவின் அழகிய ஒளியமைந்த சிவந்த கண்களையுடைய திவிட்டன் பிறத்தற்கிடமான சுரமை காடென்கிற இனிய பொகுட்டினிடத்திலே தங்கியிருக்கின்ற.

திருமகளினது வடிவத்தைக்கொண்ட நல்ல தன்மையுடையது, அப்போதனமாநகரம்.

38. அகழியும் மதிலரணும்

செஞ்சுடர்க் கடவு டிண்டே ரிவுளிகா றிவள வூன்றும்

மஞ்சுடை மதர்வை நெற்றி வானுழு வாயின் மாடத்

தஞ்சுட ரிஞ்சி, யாங்கோ ரகழணிந் தலர்ந்த தோற்றம்

வெஞ்சுடர் விரியு முந்நீர் வேதிகை மீதிட் டன்றே.

சிவந்த ஒளியையுடைய கதிரோனது வலிய தேரிற்பூட்டப் பெற்ற குதிரைகள் தமது கால்கள் மெலியும்படி ஊன்றி ஏறுதற்கிடமாய் முகிலை இடையிலே உடைக்கின்ற அழகிய முடிகளையும் விண்ணைக் கீறுகின்ற கோபுரங் களையுமுடைய அழகிய ஒளியை உடைய மதில், அவ்விடத்தே ஒப்பற்ற அகழியாற் சூழப்பெற்று விளங்குகின்ற காட்சி, கடலிடையே மேலாக அமைத்து வைத்ததைப் போன்றது.

39. அம்மதிற் புறத்தே அமைந்த யானைகட்டுமிட மாண்பு

இரும்பிடு தொடரின் மாவி னெழுமுதற் பிணித்த யானைக்

கரும்பிடு கவள மூட்டும் கம்பலை கலந்த காவின்

அரும்பிடை யலர்ந்த போதி னல்லியுண் டரற்று கின்ற

சுரும்பொடு துதைந்து தோன்றுஞ் சூழ்மதில் இருக்கை எல்லாம்.

இரும்பினாற் செய்யப்பெற்ற சங்கிலிகளால் மாமரங்களின் நீழலினுள்ள இருப்பெழுக்களிலே கட்டப் பெற்றுள்ள யானைகளுக்குப் பாகர் கரும்புகளையும் பிற உணவுத்திரள்களையும் உண்பிக்கின்ற ஒலி நிரம்பிய சோலைகளிலே, அரும்புகளின் இடையிடையே மலர்ந்துள்ள நாள்மலர்களின் அகவிதழினிடத்துள்ள தேனை' குடித்துவிட்டு ஒலிக்கின்ற வண்டுகளுடனே நெருங்கி அந்நகரத்தைச் சூழந்த மதில்களின் இடமெல்லாம் விளங்கும்.

40. மாடங்களின் மாண்பு

மானளா மதர்வை நோக்கின் மையரி மழைக்க ணார்தம்

தேனளா முருவக் கண்ணிச் செல்வர் தோடி ளைக்குமாடங்

கானலாங் காம வல்லி கற்பகங் கலந்த கண்ணார்

வானளாய் மலர்ந்து தோன்று மணிவரை யனைய தொன்றே.

மை தீட்டப் பெற்றிருத்தலோடு கோடுகளுமுடைய வாய்க் குளிர்ந்து விளங்குங் கண்களையுடைய பெண்கள் மானின் மருண்ட தன்மையைத் தம்மிடத்தே பெற்றதன்றிக் களிப்பினையுமுடைய பார்வையால், தங்களுடைய தேன் பொருந்திய அழகிய மாலையையுடைய' கணவர்களுடைய தோள்களைத் தழுவி மகிழும் மாளிகையானது மணங்கலந்த காமவல்லி கற்பக மரத்தைத் தழுவிய இடத்தை தன் உச்சியிலே உடையதும், வானத்தை நெருங்கி அக்காமவல்லியும் கற்பகமும் மலரப் பட்டுத் தோன்றாநின்ற அழகிய குன்றத்தை ஒப்பதாம்.

41. வேறு (இதுவுமது)

அகிலெழு கொழும்புகை மஞ்சி னாடவும்

முகிலிசை யெனமுழா முரன்று விம்மவும்

துகிலிகைக் கொடியனார் மின்னிற் றோன்றவும்

இகலின மலையொடு மாட மென்பவே.

அகிற்கட்டை புகைக்கப்படுதலினால் எழுகின்ற மிகுந்த புகையானது, முகில்கள் போல அசைந்து தோன்றுதலாலும், மத்தளங்கள் முகிலினது இடியைப் போல ஒலித்து மிகுதலாலும், ஓவியத்திலேமுதப்பெற்ற பூங்கொடியை ஒத்தவர்களான மகளிர், மின்னல் போல விளங்கிக் காணப்படுதலாலும், நகரத்திலே உயர்ந்து விளங்கும் வீடுகள், மலைகளோடு மாறுபட்டுத் தோன்றின.

42. மாடங்களின் சிறப்பு

கண்ணெலாங் கவர்வன கனக கூடமும்

வெண்ணிலாச் சொரிவன வெள்ளி வேயுளும்

தண்ணிலாத் தவழ்மணித் தலமுஞ் சார்ந்தரோ

மண்ணினா லியன்றில மதலை மாடமே.

நோக்குகின்றவர்களுடைய கண்களையெல்லாம் தம் அழகினால் தம்மிடம் இழுப்பனவான பொன்னினாலாகிய கூடங்களும், வெண்மையான திங்கள் ஒளியைப் போன்ற ஒளியை வீசுவனவாகிய வெள்ளியினாலாகிய கூரையும், குளிர்ந்த திங்கள் ஒளியைப் பரப்பும்,திங்கள் ஒளிக்கற்கள் பதிக்கப்பட்டதரையிடங்களும் பொருந்தி, கொடுங்கைகளையுடைய மாளிகைகள் பொன் முதலியவற்றால் இயற்றப்பட்டிருந்தனவேயன்றி மண்ணினால் இயற்றப் பெற்றில.

43. மாடத்திற் பலவகை ஒலிகள்

மாடவாய் மணிமுழா விசையு மங்கையர்

ஆடுவார் சிலம்பிணை யதிரு மோசையும்

பாடுவார் பாணியும் பயின்று பல்கலம்

மூடிமா ணகரது முரல்வ தொக்குமே.

மாளிகைகளிலே அழகிய மத்தளங்களின் ஒலியும், கூத்தாடுகின்ற இளமகளிரது இணைச் சிலம்புகள் ஒலிக்கின்ற ஒலியும், பாடுகின்றவர்களது இசைப்பாட்டொலியும்' எல்லா விடங்களினும் நிறைந்து, பெருமை பொருந்திய அந்தப் போதன மாநகரமாகிய பாண்மகள் மாடங்களாகிய பலவகை அணிகலன் களையும் தன்மேல் அணிந்து கொண்டு பாடுவதை ஒக்கும்.

44. வண்டுகளின் மயக்கம்

தாழிவாய்க் குவளையுந் தண்ணெ னோதியர்

மாழைவா ணெடுங்கணு மயங்கி வந்துசென்

றியாழவா மின்குர லாலித் தார்த்தரோ

ஏழைவாய்ச் சுரும்பின மிளைக்கு மென்பவே.

நல்கூர்ந்த வாயினையுடைய வண்டுக்கூட்டங்கள், மாடங்களில் தாழியில் வைத்து வளர்த்த குவளை மலரும், குளிர்ந்த கூந்தலையுடைய பெண்களின், மாவடுவையும் வாளையும் போன்ற நீண்ட கண்களும் ஆகிய இவற்றிடையே வேற்றுமை உணர மாட்டாது. பேதுற்று,

கண்களிடத்திற்கும் மலர்களிடத்திற்குமாக அலைந்து, யாழும் விரும்புதற்குக் காரணமான இனிய குரலாலே முரன்று, ஆரவாரஞ்செய்து மெலிவடையும்.

45. கடைத்தெரு

பளிங்குபோழ்ந் தியற்றிய பலகை வேதிகை

விளிம்புதோய் நெடுங்கடை வீதி வாயெலாம்

துளங்குபூ மாலையுஞ் சுரும்புந் தோன்றலால்

வளங்கொள்பூங் கற்பக வனமும் போலுமே

படிகக் கற்களை நிரல்பட அறுத்து இயற்றப்பட்ட பலகைகளாற் செய்த மேடைகள், ஓரத்திலே பொருந்தப்பெற்ற' பெரிய கடைகளின் தெருக்களிலெல்லாம்' அசைகின்ற பூமாலைகளும், அவற்றில் மொய்க்கின்ற வண்டுகளும் காணப்படுவதால் அக்கடைத் தெருக்கள், எல்லாச் செல்வங்களையுந் தன்னிடத்தே கொண்ட அழகிய கற்பகச் சோலையையும் ஒத்திருக்கும்.

46. சிலம்பொலிக்கு மயங்குஞ் சிறு அன்னங்கள்

காவிவாய்க் கருங்கணார் காமர் பூஞ்சிலம்

பாவிவாய் மாளிகை யதிரக் கேட்டொறும்

தூவிவான் பெடைதுணை துறந்த கொல்லென

வாவிவா யிளவனம் மயங்கு மென்பவே.

கருங்குவளை மலரின் தன்மை யமையப்பெற்ற கரிய பெரிய கண்களையுடைய பெண்களினது அழகிய விளக்கத்தை யுடைய காலணிகள் அகிற்புகை பொருந்திய வீடுகளிலே ஒலிக்கக் கேட்கும் பொழுதெல்லாம், ஆண்டுவளர்க்கப்படும் தூவியையுடைய சிறந்த பெடையன்னங்கள், தம் துணையாகிய ஆண் அன்னங்களை நீங்கினவோ என்று தடாகத்திடத்திலே உள்ள, இளமையுடைய அன்னங்கள் மயங்கி வருந்துதலையடையும்.

47. அரசர் தெருவழகு

விலத்தகைப் பூந்துணர் விரிந்த கோதையர்

நலத்தகைச் சிலம்படி நவில வூட்டிய

அலத்தகக் குழம்புதோய்ந் தரச வீதிகள்

புலத்திடைத் தாமரை பூத்த போலுமே.

நீர்நிலையின் கண் உண்டான அழகிய பூங்கொத்துக்கள், மலர்ந்துள்ள மாலை அணியப்பெற்ற கூந்தலையுடைய பெண்கள்' நல்லதன்மை யமைந்த சிலம்பென்னும் காலணியை அணிந்த கால் அடிகளில் பொருந்தும்படியாக ஊட்டப்பெற்ற செம்பஞ்சுக் குழம்புதோயப்பட்டு, அந்நகரத்து அரண்மனைத் தெருக்கள், புலத்திடத்தே தாமரை மலர் மலரப் பெற்றாற் போல விளங்கும்.

48. செல்வச் சிறப்பு

கண்ணிலாங் கடிமலர்க் குவளைக் கற்றையும்

வெண்ணிலாத் திரளென விளங்கு மாரமும்

வண்ணவான் மல்லிகை வளாய மாலையும்

அண்ணன்மா நகர்க்கவைக் கரிய அல்லவே.

தேன் நிலவாநின்ற மணம்பொருந்திய குவளை மலர்களின் தொகுதியும் வெண்மையான திங்கள் ஒளியின் கூட்டம் என்று சொல்லும் படியாக மிளிரும் முத்துமாலைகளும், அழகிய வெண்ணிறமுடைய மல்லிகை மலர்கள் விரவிய மலர்மாலைகளும், பெருமை பொருந்திய சிறந்த அந்த நகரத்திலமைந்த முச்சந்தி முதலிய கவர் வழிகட்கு அரும்பொருள்களல்ல. அவை யாண்டும் மிகுந்து கிடக்கும் எண் பொருள்களே.

49.மாளிகைகளில் உணவுப் பொருள்களின் மிகுதி

தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா

மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்

மாம்பழக் குவைகளு மதுத்தண் டீட்டமும்

தாம்பழுத் துளசில தவள மாடமே.

மணம் மிகுந்து, இனிமையுள்ளனவான மூன்று வகை நீர்களும் இனிய பலாமரங்களில் மேன்மையாகப் பழுத்து அளிந்தனவாகிய சுளைகளும், தேனும், கனிந்து முதிர்ந்த மாம்பழங்களின் திரளும், மதுப் பெய்யப்பெற்ற மூங்கில் குழாய்களின் தொகுதியும், சில வெள்ளிய மாடங்கள் மிகுதியாகப் பெற்றுள்ளன.

50. இன்ப உலகம்

மைந்தரு மகளிரு மாலை காலையென்

றந்தரப் படுத்தவ ரறிவ தின்மையால்

சுந்தரப் பொற்றுக டுதைந்த பொன்னகர்

இந்திர வுலகம்வந் திழிந்த தொக்குமே.

அந்நகரத்திலுள்ள இளைஞர்களும் மங்கையர்களும் இரவு என்றும் பகல் என்றும் இடையறுத்து தெரிந்து கொள்வது இல்லாதபடியால், அழகிய பலவகை நறுமணப் பொடிகளால் நெருங்கப்பெற்ற அழகிய அப்போதனமா நகரம், விண்ணுலகமானது நிலவுலகத்திற்கு வந்து இறங்கியிருப்பதைப் போன்றதாகும்.

51. பயாபதி மன்னன் மாண்பு

மற்றமா நகருடை மன்னன் றன்னுயர்

ஒற்றைவெண் குடைநிழ லுலகிற் கோருயிர்ப்

பெற்றியான் பயாபதி யென்னும் பேருடை

வெற்றிவேல் மணிமுடி வேந்தர் வேந்தனே.

அத்தகைய சிறப்புடைய போதன நகரத்தையுடைய மன்னன் எத்தகையன் எனின்? அவன் பயாபதி என்று சொல்லப் பெறுகிற பேரையுடையவனும், வெற்றியைக் கொடுக்கின்ற வேலாயுதத்தையும் மணிகள் இழைத்த முடியையும் உடைய அரசர்க்கரசனும், தன்னுடைய உயர்ந்த ஒப்பற்ற வெண்கொற்றக் குடைநிழலிலே வாழ்கின்ற உலகமாகிய உடலுக்குத் தான் ஓர் உயிராக விளங்குகின்ற பெருமையை உடையவனும் ஆவான்.

52. பயாபதி மன்னனது சிறப்பு

எண்ணின ரெண்ணகப் படாத செய்கையான்

அண்ணிய ரகன்றவர் திறத்து மாணையான்

நண்ணுநர் பகைவரென் றிவர்க்கு நாளினும்

தண்ணியன் வெய்யனந் தானை மன்னனே.

அழகிய படையை உடைய அந்தப் பயாபதி அரசன், எண்ணிப் பார்க்கின்றவர்களது எண்ணத்துக்குப் புலப்படாத செய்கைகளையுடையவன். தன்னை நெருங்கியுள்ளவர் களிடத்திலும் விலகியுள்ளவர்களிடத்திலும் ஒரே தன்மையாகச் செல்லும் ஆணையையுடையவன்' நட்பாளர் பகைவர் என்று சொல்லப்பெறுகின்ற இவர்கட்கு எக்காலத்தினும், முறையே தண்ணளியையுங் கொடுமையையும் உடையவன். (எ-று)

53. மக்கட்குப் பகையின்மை

நாமவே னரபதி யுலகங் காத்தநாட்

காமவேள் கவர்கணை கலந்த தல்லது

தாமவேல் வயவர்தந் தழலங் கொல்படை

நாமநீர் வரைப்பக நலிவ தில்லையே.

பகைவர்கட்கு அச்சத்தை யுண்டாக்குகின்ற வேற்படையை உடைய அப்பயாபதி மன்னனானவன், அரசாட்சி செய்து உலகத்தைப் புரந்த நாளிலே, காமனுடைய உள்ளத்தைக் கவருங்கணை, நாட்டின் எல்லா விடங்களினும் பொருந்திற்றே யல்லாமல், வெற்றிமாலையை அணிந்த வேற்படையை உடைய போர் மறவர்களின் தீயைப் போன்ற அழகிய கொலைக் கருவியானது புகழ் மிக்க கடலை யெல்லையாகவுடைய உலகத்துயிர்களை வருத்துதல் ஒருசிறிதும் இல்லையாகும்.

54. குடிகளை வருத்தி இறை கொள்ளாமை

ஆறிலொன் றறமென வருளி னல்லதொன்

ஞாறுசெய் துலகினி னுவப்ப தில்லையே

மாறிநின் றவரையும் வணக்கி னல்லது

சீறிநின் றெவரையுஞ் செகுப்ப தில்லையே.

அந்நாட்டு மக்கள் தங்கள் வருவாயின் ஆறில் ஒரு பகுதியை அரசனுக்குக் கொடுப்பது அறமாகும் என்று அன்புடன் கொண்டுவந்து கொடுத்தால் அல்லாமல், மக்களுக்குத் துன்பஞ் செய்து ஒரு பொருளை உலகிலே விரும்பிப் பெறுவது இல்லை. பகையினால் மாறுபாடு கொண்டுள்ளவர்களையும், தன் பணிவுடைமையினாலே தன் வழிப்படுத்துவதல்லாமல் சினந்து போய், எத்தன்மையுடையார்களையுங் கொல்லுதல் இல்லை.

55. மன்னனின் முந்நிழல்

அடிநிழ லரசரை யளிக்கு மாய்கதிர்

முடிநிழன் முனிவரர் சரண மூழ்குமே

வடிநிழல் வனைகதி ரெ∴கின் மன்னவன்

குடைநிழ லுலகெலாங் குளிர நின்றதே.

தீயிலிட்டுக் காய்ச்சி அடிக்கப்பட்டு ஒளியைச் செய்கின்ற கூர்மையுள்ள வேற்படையை யுடைய பயாபதி மன்னனது கால் அடிகளின் நிழல், பிற நாட்டுச் சிற்றரசர்களைப் பாதுகாக்கும். சிறந்த ஒளியையுடைய முடியின் நிழல், சிறந்தமுனிவர்களது திருவடிகளிலே படியும். வெண்கொற்றக் குடையின் நிழல், உலகத்திலுள்ள உயிர்த்தொகைகளெல்லாம் இன்பத்தை யடையுமாறு சிறந்து நிற்கும்.

56.இருவகைப்பகையும் அற்ற ஏந்தல்

மன்னிய பகைக்குழா மாறும் வையகம்

துன்னிய வரும்பகைத் தொகையு மின்மையால்

தன்னையுந் தரையையுங் காக்கு மென்பதம்

மன்னவன் றிறத்தினி மருள வேண்டுமோ.

தன்னுள் நிலைபெற்ற காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் உட்பகைகள் ஆறும், நிலவுலகத்தில் பொருந்திய வெல்லுதற்கரிய வெளிப்பகைக் கூட்டங்களும் இல்லாத படியால், தன்னுயிரையும் உலகத்துயிர் களையும் காப்பாற்றுவான் என்பதைப் பற்றி, அவ்வரசனுடைய செயலிலே நாம் இன்னமும் ஐயப்படுதல் வேண்டுமோ?

57. அரசியல் சுற்றத்துடன் உலகப் பொதுமை நீக்குதல்

மேலவர் மெய்ப்பொருள் விரிக்கும் வீறுசால்

நூலினாற் பெரியவர் நுழைந்த சுற்றமா

ஆலுநீ ரன்னமோ டரச வன்னமே

போலநின் றுலகினைப் பொதுமை நீக்கினான்.

முனிவர், உண்மையான பொருள்களை விரித்துக் கூறுகின்ற சிறப்பமைந்த அறநூற்களை யுணர்ந்த அமைச்சர்கள் முதலியோர், தன்னையடுத்து நெருங்கிய அரசியல் சுற்றமாகக் களித்து ஒலிக்கின்ற நீரில் வாழ்கின்ற பல அன்னப் பறவைகளுடனே, அரச அன்னம் விளங்கி நிற்பதைப்போல நின்று, நிலவுலகத்தைப் பல அரசர்களுக்கும் பொதுவாந் தன்மையினின்று நீக்கித் தன்னதாக்கினான்.

58. அரசர் சுற்றத்தின் இயல்பு

கொதிநுனைப் பகழியான் குறிப்பி னல்லதொன்

றிதுநமக் கிசைக்கென வெண்ணு மெண்ணிலா

நொதுமலர் வெருவுறா நுவற்சி யாளர்பின்

அதுவவன் பகுதிக ளமைதி வண்ணமே.

அரசனுக்கு அடுத்ததாகிய அவனுடைய அரசர் சுற்றமாகிய அமைச்சர் படைஞர் முதலியோரது தன்மையே, காய்ச்சிக் கூராக்கப்பட்ட நுனியுள்ள கணைகளையுடைய அரசன், குறிப்பைத் தெரிந்து கொண்டால் அல்லாமல், இதை நாம் சொல்வோமென்றுஎண்ணுகின்ற எண்ணத்தை யுடையவர்களல்லர்' அயலார்கள் அஞ்சுதலில்லாத சொல்லையுடையவர்கள்.

59. அரசியர்

மற்றவன் றேவியர் மகர வார்குழைக்

கொற்றவர் குலங்களை விளக்கத் தோன்றினார்

இற்றதிம் மருங்குலென் றிரங்க வீங்கிய

முற்றுறா முலையினார் கலையின் முற்றியார்.

அந்தப் பயாபதி மன்னனுடைய மனைவியர் மகரமீன் வடிவாகச் செய்யப்பட்ட நீண்ட குண்டலங்களை யணிந்தவர்கள் தாம் பிறந்த குடியையும் புகுந்த குடியையும் சீர்த்தி விளங்கும்படியாகச் செய்யப் பிறந்தவர்கள் கண்டவர்கள் இவ்விடையானது ஒடிந்துபோய் விட்டது என்று கூறி வருந்துமாறு பருத்துள்ள, இளங்கொங்கைகளையுடையவர்கள். மகளிர்க்குரிய கலைகளில் முதிர்ச்சி பெற்றவர்கள்.

60. அரசியர் இயல்பு

பஞ்சனுங் கடியினார் பரந்த வல்குலார்

செஞ்சுணங் கிளமுலை மருங்கு சிந்தினார்

வஞ்சியங் குழைத்தலை மதர்வைக் கொம்புதம

அஞ்சுட ரிணர்க்கொசிந் தனைய வைம்மையார்.

செம்பஞ்சூட்டினும் வருந்தும் மெல்லிய அடிகளையுடையவர்கள். அகன்ற அல்குலையுடையவர்கள். செந்நிறத்தேமல் படரப்பெற்ற இளங்கொங்கைகளால் இடையைக் கெடுத்தவர். அழகிய இலையையுடைய செழித்த வஞ்சிக்கொடி அழகிய ஒளியையுடைய பூங்கொத்துக்கு வளைந்தாற்போன்ற மென்மைத் தன்மையை உடையவர்கள்.

61. காமம் பூத்த காரிகையர்

காமத்தொத் தலர்ந்தவர் கதிர்த்த கற்பினார்

தாமத்தொத் தலர்ந்துதாழ்ந் திருண்ட கூந்தலார்

தூமத்துச் சுடரொளி துளும்பு தோளினார்

வாமத்தின் மயங்கிமை மதர்த்த வாட்கணார்.

தம்முள்ளத்தே காமமாகிய பூங்கொத்து அரும்பற மலரப்பெற்றவர். ஒளிமிக்க கற்புடையவர்கள். மாலைகளுக்கு அமைந்து விளங்கிப் படிந்து' இருண்டுள்ள கூந்தலையுடையவர்கள் கரியபுகையினூடே ஒளிர்கின்ற தீப்போன்று கூந்தலினூடு ஒளிவிட்டு விளங்கும்' தோள்களையுடையவர். அழகினோடு கலந்து மையுண்டு மதர்க்கும் வாள்போன்ற கண்ணையுடையவர்கள்.

62. பட்டத்து அரசிகள் இருவர்

ஆயிர ரவரவர்க் கதிகத் தேவியர்

மாயிரு விசும்பினி னிழிந்த மாண்பினார்

சேயிருந் தாமரைத் தெய்வ மன்னர் என்

றேயுரை யிலாதவ ரிருவ ராயினார்.

அத்தகையோர் பயாபதி மன்னன் தேவிமார் ஆயிரம்பேர் ஆவர், அவ்வாயிரம் மனைவியர்க்குள்ளும், சிறந்த மனைவியர் ஆனவர்கள், மிகப்பெரிய விண்ணுலகத்தினின்றும் இறங்கினாற் போன்ற சிறப்பை யுடைவர்களும், செந்நிறமுடைய தாமரை மலரில் வாழ்கின்ற திருமகளைப் போன்றவரென்று இன்னோரன்ன கூறப்படும் உவமைச் சொல் எடுத்துக் கூறற்கு இடமில்லாதவர்களும் ஆகிய இரண்டுபேர் உளர் ஆனார்கள்.

63. பெருந்தேவியர் இருவரின் பெற்றி (வேறு)

தீங்கரும் பமிழ்த்த மூட்டித் தேனளாய்ப் பிழிந்த போலும்

ஓங்கிருங் கடலந் தானை வேந்தணங் குறுக்கு மின்சொல்

வீங்கிருங் குவவுக் கொங்கை மிகாபதி மிக்க தேவி

தாங்கருங் கற்பின் றங்கை சசிஎன்பாள் சசியோ டொப்பாள்.

ஓங்கிய பெரிய கடலைப்போலும் அழகிய படையை உடைய அரசனை வருத்தப்படுத்தும் அவ்விரு மங்கையரின் இனிய மொழிகள் இனிய கரும்பில், தேவர்களுணவாகிய அமிழ்தத்தைக் கலந்து, தேனையும் விரவி பிழிந்தசாற்றைப் போன்றிருக்கும். அவ்விருதேவியர்களுள் மிகப் பெருத்துத் திரண்ட கொங்கைளையுடைய மிகாபதி என்பவள், முதலாவது பட்டத்தரசியாவாள்' பிறரால் தாங்கமாட்டாத கற்பு நலத்தையுடைய மிகாபதியின் தங்கையாகிய சசி என்பவள், இந்திரன் மனைவியாகிய இந்திராணியோடு ஒப்புக்கூறத் தக்கவளாவாள்.

64.மங்கையர்க்கரசியராகும் மாண்பு

பூங்குழை மகளிர்க் கெல்லாம் பொன்மலர் மணிக்கொம் பன்ன

தேங்குழல் மங்கை மார்கள் திலதமாய்த் திகழ நின்றார்

மாங்கொழுந் தசோக மென்றாங் கிரண்டுமே வயந்த காலத்

தாங்கெழுந் தவற்றை யெல்லா மணிபெற வலரு மன்றே.

பொன் மலர்களையுடைய அழகிய கொம்பைப் போன்ற மணம்பொருந்திய கூந்தலையுடைய அந்த இரண்டு மங்கையர்களும் அழகிய குழையென்னுங் காதணியையுடைய மாதர்களுக்கெல்லாம், சிறந்தவர்களாக விளங்குமாறு அமைந்து நின்றார்கள். வசந்த காலத்திலே மாந்தளிர் அசோகந்தளிர் என்னும் இரண்டு தளிர்களுமே தளிர்த்தலைச் செய்து, அக்காலத்துத்தோன்றிய பிற தளிர்களையெல்லாம் அழகு செய்விக்க விளங்கும்.

65. இவ்விருவரும் பயாபதியுடன் கூடியுறைந்த இன்பநலம்

பெருமக னுருகும் பெண்மை மாண்பினும் பேணி நாளும்

மருவினும் புதியபோலும் மழலையங் கிளவி யாலும்

திருமகள் புலமை யாக்குஞ் செல்விஎன் றிவர்கள் போல

இருவரு மிறைவ னுள்ளத் தொருவரா யினிய ரானார்.

பயாபதி மன்னனுடைய உள்ளத்தை உருகுமாறு செய்கிற பெண்தன்மைச் சிறப்பினாலும், தினந்தோறும் ஒருவரை ஒருவர் விரும்பிப் பொருந்தியிருந்தாலும் புதியனவாகத் தோன்றுகின்ற மழலைத்தன்மையுடைய அழகிய சொற்க ளாலும் மிகாபதி சசி என்ற இருமனைவியரும், செல்வத்திற் குரியவளாகிய மலர் மகள், அறிவையுண்டாக்கும் கலைமகள்' என்று கூறப்பெறுகின்ற இவ்விருவரையும் போன்று அரசனு டைய மனத்தகத்திலே இருவர்களாக இல்லாமல் ஒருவரைப் போன்றே இனிய தன்மையுடையவர்கள் ஆனார்கள்.

66.மன்னனும் மனைவியரும் ஒருயிர் ஆகி நிற்றல்

மன்னவ னாவி யாவார் மகளிரம் மகளிர் தங்கள்

வினாக்கள்

வ.எண்	ஐந்து மதிப்பெண் வினா	LOCF Mapping		
1	சீவகசிந்தாமணியின் ஆசிரியர் யார்?குறிப்புவரைக.	K2	CO2	PO4
2	சீவகன் எத்தனைபெண்களைமணந்தான் என்று கூறுக.	K4	CO3	PO5
3	சீவகசிந்தாமணியில் இடம்பெறக்கூடிய இலம்பகம் எத்தனை?	K1	CO4	PO1
4	பூமகள் இலம்பகம் பற்றிக் கூறு.	K5	CO5	PO2
5	சூளாமணியின் ஆசிரியர் குறிப்புதருக.	K3	CO4	PO3

வ.எண்	எட்டு மதிபெண் வினா	LOCF Mapping		
1	பூமகள் இலம்பகத்தின் கதைச்சுருக்கத்தினை கூறுக.	K1	CO4	PO4
2	நகரச்சருக்கத்தின் செய்திகளைதொகுத்துரைக்க.	K4	CO2	PO6
3	சூளாமணியின் காப்பியஅமைப்பினைவிவரி.	K3	CO1	PO5
4	சீவகன் வாழ்க்கையினைவிவரி.	K2	CO5	PO6
5	சூளாமணி கதைஅமைப்பினைஎடுத்துரைக்க.	K4	CO3	PO3

இன்னுயி ராகி நின்றா னிறைமக னிவர்க டங்கட்

கென்னைகொ லொருவர் தம்மே லொருவர்க்கிங் குள்ளமோட

முன்னவன் புணர்த்த வாறம் மொய்ம்மலர்க் கணையினானே.

மிகாபதியும் சசியும் பயாபதி மன்னனுடைய உயிர் ஆவார்கள். பயாபதி மன்னன், அப்பெண்களுடைய இனிய உயிராகப் பொருந்தி அமைந்தான். இம்மன்னனுக்கும் இவனுடைய மனைவியர்களுக்கும் இப்படி ஒருவர்மேல் ஒருவர்க்கு மனது செல்லப் பழமையுள்ளவனாகிய வலிய மலர்க்கணைகளையுடையவனான அந்தக் காமன் செய்தவகை எவ்வாறோ?

67.மங்கையர் மன்னனைப் பிணித்து வைத்தல்

சொற்பகர்ந் துலகங் காக்குந் தொழில்புறத் தொழிய வாங்கி

மற்பக ரகலத் தானை மனத்திடைப் பிணித்து வைத்தார்

பொற்பகங் கமழப் பூத்த தேந்துணர் பொறுக்க லாற்றாக்

கற்பகக் கொழுந்துங் காம வல்லியங் கொடியு மொப்பார்.

மணம்வீச தன்னிடத்திலே அலர்ந்த அழகாகிய தேனையுடைய பூங்கொத்தைத் தாங்கமாட்டாது கற்பக மரத்தின் இளந்தளிரையும் காமவல்லி என்னும் அழகிய பூங்கொடியையும் ஒத்தவர்களான அவ்விரண்டு மங்கையரும் சுட்டளைச் சொற்களைக் கூறி உலகத்தைப் பாதுகாக்கும் வேலையை அமைச்சர் முதலாயினாரிடத்திலே நீக்கி மல்தொழில் தன்மையை வெளிப்படுத்துகின்ற அகன்ற மார்பையு டையவனான பயாபதி மன்னனை உள்ளத்திலே கட்டி வைத்தார்கள்.

68. மாலாகி நிற்கும் மன்னன்

மங்கைய ரிருவ ராகி மன்னவ னொருவ னாகி

அங்கவ ரமர்ந்த தெல்லா மமர்ந்தருள் பெருகி நின்றான்

செங்கயல் மதர்த்த வாட்கட் டெய்வமா மகளிர் தோறும்

தங்கிய வுருவந் தாங்குஞ்சக்கரன் றகைமை யானான்.

மனைவியர் இரண்டு பேராகி, அவர்கட்குரிய தலைவன் தான் ஒருவனேயாகி, அத்தன்மையை உடைய அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் தானும் விரும்பி, அவர்களிடத்திலே சிறந்த அன்பு பெருகி நின்றவனான பயாபதி மன்னன், சிவந்த கயல் மீன் போன்றன ஆகிய ஒளி பொருந்திய கண்களை உடைய தெய்வத்தன்மை யுள்ளவர்களாகிய பூமகள், நிலமகள் என்னும் இருவரிடத்தும், ஒரே தன்மையாகப் பொருந்துகின்ற, வடிவத்தைக் கொள்ளுகின்ற, உருளைப் படையையுடைய திருமாலின் தன்மையுடையவன் ஆனான்.

69. இதுவுமது

முற்றுநீர் வளாக மெல்லா முழுதுட னிழற்று மூரி

ஒற்றைவெண் குடையி னீழ லுலகுகண் படுப்ப வோம்பிக்

கொற்றவ னெடுங்க ணார்தங் குவிமுலைத் தடத்து மூழ்கி

மற்றவற் கரசச் செல்வ மின்னண மமர்ந்த தன்றே.

பயாபதி மன்னன் கடல்நீரால் சூழப்பெற்ற இடங்களை எல்லாம் சிறிதும் எஞ்சவிடாமல் நிழலைச் செய்கிற பெருமை பொருந்திய ஒப்பற்ற வெண்கொற்றக் குடையின் நிழலிலே உலகத்துயிர்களானவைகண் வளரும்படியாகப் பாதுகாத்து, நீண்ட கண்களை உடையவர்களின்திரண்ட கொங்கைகளிடத்திலே படிந்து நிற்குமாறு அம் மன்னனுக்கு அரசாட்சிப் பொருளானது இவ்வாறு பொருந்துவதாயிற்று.

நகரச்சருக்கம் முடிந்தது.

அலகு 3

கம்பராமாயணம்

தமிழ் இலக்கியயத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் காப்பிய நூல்களுள் ஒன்று இராமாயணம். இந்நூலின் ஆசிரியர் கம்பர்.

சமயக் காப்பியங்களுள் இது வைணவ சமயத்தைச் சார்ந்தது. இந்தக் காப்பியம் தோன்றிய காலம் இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆண்ட, கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகும். சிலர் ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் கூறுவர். சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் மரபில் தோன்றிய கம்பரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல் ஆவார்.

வான்மீகி முனிவர் வடமொழியில் இராமாயணத்தை இயற்றினார். அதனை, தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப ஈடும் இணையும் இல்லாமல் கம்பர் தமிழில் தந்த காவியமே இராமாயணமாகும். கம்பர், தம் நூலுக்கு இராமாவதாரம் என்று பெயரிட்டார்.

காப்பிய அமைப்பு

இக்காப்பியம் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களைக் கொண்டது. இந்த ஆறு காண்டங்களின் சிறு பிரிவுகளாக 113 படலங்கள் உள்ளன. மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 10,500 ஆகும்.

(காண்டம் - பெரும்பிரிவு’ படலம் - சிறுபிரிவு.)

1. கடல் தாவு படலம்

அனுமன் மகேந்திரமலையிலிருந்து தென்பெருங்கடலைக் கடந்து பவளமால் வரையில் பாய்ந்த செய்தியைக் கூறுகிறது. இப்படலத்தில் மைந்நாகன், சுரசை, அங்காரதாரை என்னும் மூன்று பாத்திரங்களை அனுமன் சந்திக்கின்றான். பேருருக் கொண்டு அனுமன் கடல் கடந்து செல்லும்போது அவனுக்கு உதவி செய்வதற்காக மைந்நாகமலை கடலிலே தோன்றி, அனுமனைத் தன்மீது தங்கி இளைப்பாறிச் செல்ல வேண்டுகிறது. அனுமன், 'இராமன் திருத்தொண்டு செய்யும் நான் ஓய்வை விரும்பேன். திரும்பி வரும்பொழுது உன்னைக் காண்கிறேன்' என்று சொல்லிக் கடந்து செல்கிறான். கடந்து செல்கிற அனுமனைத் தேவர்கள் ஏவலால் சுரசை தடுக்கிறாள். அவள் 'எனக்குப் பசியாக இருக்கிறது. உன்னை உண்பேன்' என்று வாயைத் திறக்கிறாள். அனுமன் அவள் வாய்க்குள் புகுந்து வெளியே வருகிறான். சுரசையை வென்ற அனுமன் அங்கார தாரையைச் சந்திக்கின்றான். அங்கார தாரை அனுமனை விழுங்குகின்றாள். அனுமன் அவள் உடலைப் பிளந்து வெளிப்படுகிறான். அரக்கி இறக்கிறாள். தேவர்கள் அனுமனை வாழ்த்துகின்றனர். அனுமன், வருகின்ற இடையூறுகள் எல்லாம் நீங்க வேண்டும் என்று கருதி, இராம நாமத்தைத் தியானிக்கின்றான். மூன்று தடையைக் கடந்த அனுமன் பவளமால் வரையில் பாய்ந்து இலங்கையின் வளங்களை நோக்குகிறான்.

பத்துவிதமானபொறி புலன்களின் வயப்பட்ட ஆன்மாவின் வீடுபேற்றிற்காக நற்குரவன் சம்சார சாகரத்தைக் கடந்து புனித ஆன்மாவை நோக்கி வருவது இப் படலத்தின் உட்குறிப்பு என்பர். இங்கு அனுமன் நற்குரவன், பிராட்டி புனித ஆன்மா என்று கொள்வர்.

அனுமன்துறக்க நாட்டை இலங்கை என்று ஐயுற்றுத் தெளிதல்

அறுசீர்விருத்தம்

4741. **ஆண்தகைஆண்டுஅவ் வானோர்**

துறக்க நாடுஅருகில் கண்டான்'

'ஈண்டு,இதுதான்கொல் வேலை

லங்கை?' என்று ஐயம் எய்தா,

வேண்டு அருவிண்ணாடு என்னும்

ள்ளம் மீட்டான்

காண்தகுகொள்கை உம்பர்

இல்'என,கருத்துள் கொண்டான்.

ஆண்தகை- ஆண்மையிற் சிறந்த அனுமன் ஆண்டு - அங்கே அவ்வானோர் - அந்தத் தேவர்களின்' துறக்க நாடு - சுவர்க்க லோகத்தை அருகில் கண்டான் - பக்கத்தில் பார்த்தான்' (பார்த்த அனுமன்) ஈண்டு -இங்கே தெரிகின்ற இது - இந்த உலகம் வேலை இலங்கை - கடலால்சூழப்பட்ட இலங்கையோ என்று ஐயம் எய்தா - என்று சந்தேகம் அடைந்து வேண்டு அரும் - யாவரும் விரும்புகின்ற, அரிய விண்ணாடு என்னும் -தேவநாடு என்கின்ற மெய்ம்மை கண்டு - உண்மையைத் தெரிந்து உள்ளம் மீட்டான் - (அங்கே தேடும்) எண்ணத்தை விலக்கி' காண்தகு கொள்கை -தேடிக் காண வேண்டிய கோட்பாடாகிய பிராட்டி' உம்பர் இல் என - விண்ணுலகில் இல்லை என்று' கருத்துள் கொண்டான் - மனத்தில் நினைத்துக்கொண்டான்.

ஆண்தகை -புலனடக்கம் பெற்றவன். 'காண்டகு தோகை' என்று பாடம் கொண்டு காணவேண்டிய பிராட்டி என்று உரைகூறுதல் உண்டு. ''விண்நாடு வேண்டு அரு நாடு'' என்றதால், இலங்கை பிறர் வெறுக்கும் நாடு என அறிக. மீட்டான் - மீட்டு, முற்றெச்சம். இல் - இல்லை.

என்னும் சீர்களை முறையே பெற்றுவரும் அறுசீர் விருத்தம், இராம காதையில் இத்தகைய விருத்தங்கள் 2536 பாடல்கள் உள்ளன என்று அமரர் கம்பனடிப்பொடி அவர்கள் வரைந்துள்ளார் (கம்பன்**மணிமலர் 1976)**

(1)

4742. **கண்டனன்,இலங்கை மூதூர்க்**

கடிபொழில்கனக நாஞ்சில்

மண்டல மதிலும்,கொற்ற

வாயிலும், மணியின் செய்த

வெண்தளக் களபமாட

வீதியும்,பிறவும் எல்லாம்'

அண்டமும்திசைகள் எட்டும்

அதிர,தோள் கொட்டி ஆர்த்தான்

(அனுமன்)

இலங்கை மூதூர்- பழைமையான இலங்கை நகரின் கடிபொழில் - காவற் சோலைகளையும் கனக நாஞ்சில் - பொன்னாற் செய்த குருவித்தலையையும் மண்டலமதிலும் - வட்டமான மதிலையும்'கொற்ற வாயிலும் - வெற்றியை அறிவிக்கும் கோபுர வாயிலையும் மணியின் செய்த வெண்தள - மணிகள் பதிக்கப் பெற்றவெண்மையான களப மாட வீதியும் - சுண்ணம் பூசப்பெற்ற, மாளிகைகளை உடைய வீதியையும் பிறவும் எல்லாம் - (கூறப்பெறாது விடுத்த) பிறவற்றையும் கண்டனன் - பார்த்தான் அண்டமும் - வானத்தின் உச்சியும் திசைகள் எட்டும் - எட்டுத் திக்குகளும் அதிர - எதிரொலிக்க தோள் கொட்டி ஆர்த்தான் - தோள்களைப் புடைத்து ஆரவாரித்தான்.

அனுமன் இலங்கைமூதூரின் காவற்சோலை முதலியவற்றைப் பார்த்து மகிழ்ச்சியால் தோள்களைப் புடைத்து ஆரவாரித்தான். இலங்கை மூதூர் -மூது இலங்கை ஊர். நாஞ்சில் - மதில் மேல் குருவித் தலைபோல் அமைக்கப் பெற்ற உறுப்பு. சிலப்பதிகாரத்தில் அடைக்கலக் காதையில் காண்க (217) அண்டம் - பிரபஞ்ச உருண்டை என்றும் கூறலாம். திசைகள் கூறப் பெற்றமையால் (அண்டம் என்பதற்கு) வான்முகடு கூறப்பெற்றது. 'அண்டமுற நிமிர்ந்தாடும் அப்பன்' என்பர் அம்மையார் (மூத்த திருப்பதிகம்). அதிர - எதிரொலிக்க. வீரர்கள் உற்சாகத்தால் தோள் கொட்டுவர். 'தன் தோள் கொட்டித் தடவரையை... எடுத்தான்' (நாவரசர் - ஆராத இன்னமுதை 10) கண்டனென்... பிறவும் என்னா... ஆர்த்தான் என்னும்பாடம் கொண்டு மதில் முதலானவற்றைப் பார்த்தேன் என்று கூறி ஆரவாரித்தான் என்று பொருள் கூறுவாரும் உளர். தளம் - சுண்ணச் சாந்து. தாழியும் சாந்தும் தளம் ஆகும். (பிங் 3615) கடிபொழில் என்பது காவற்காட்டை. இது காட்டரண். கொற்றவாயில் - கோபுரவாசல். நம் கோன் கொற்றவாயில் (சிலம்பு 20-16) களப மாட வீதி - யானை செல்லும் வீதி என்றும் கூறலாம்.

(2) மகேந்திரமலையில் நிகழ்ந்த குழப்பம்

4743. **வன்தந்தவரிகொள் நாகம்,**

வயங்குஅழல் உமிழும் வாய,

பொன்தந்தமுழைகள்தோறும்

புறத்து உராய்ப் புரண்டு போவ -

நின்று, அந்தம்இல்லான் ஊன்ற -

நெரிந்துகீழ் அழுந்தும் நீலக்

குன்றம் தன்வயிறு கீறிப்

பிதுங்கினகுடர்கள் மான.

அந்தம்இல்லான் - அழிவில்லாத அனுமன் நின்று ஊன்ற - நின்று(திருவடிகளை) வன்மையாக (மலையில்) பதிக்க (அதனால்) நெரிந்து -சிதைந்து கீழ் அழுந்தி - பூமிக்கு அடியிலே புதைந்து நீலக்குன்றம் - நீலநிறமுடைய மகேந்திர மலை தன் வயிறு கீறி - தன்னுடைய வயிறு

கிழிபட்டு' பிதுங்கிய குடர்கள் மான - வெளியிட்ட குடல்களைப் போல பொன்தந்த முழைகள் தோறும் - பொன்னைத் தருகின்ற குகைகள் தோறும்'வயங்கு அழல் உமிழும் வாய -

விளங்குகின்ற நெருப்பைக் கக்கும் வாயை உடைய வன்தந்த வரிகொள் நாகம் - வலிமையான பற்களையும் கோடுகளையும் பெற்ற பாம்பு உராய்ப் புரண்டு புறத்து போவ - உராய்ந்து கொண்டு புரண்டு வெளியே சென்றன.

அனுமன்திருவடியின் அழுத்தம் பெற்ற மலையின் குடல்வெளிப்பட்டாற் போலப் பாம்புகள் புறத்தே போந்தன.

அந்தம் இல்லான்- அழிவற்றவன் (சிரஞ்சீவி). பாம்பைத் ‘தந்தி’ என்பர்,கச்சியப்பர் - தந்தி நஞ்சம் தலைக்கொளச் சாய்ந்தவர் (கந்த 3-10-21) ஊன்ற -அழுத்த ‘அருவரை நெரிய வூன்றும் குழகனே’ (நாவரசர் - நெற்றி மேல் 10). பொன், மலையின்கண் தோன்றலின் பொன் தந்த முழைகள் என்றான். பொன்படு நெடுவரை. (சிலம்பு 28, 142) வரி அரவம் - கோடுகளை உடைய பாம்பு. வரி அரவே நாணாக, மால்வரையே வில்லாக (சம்பந்தர் விடியலோர் 7). அனுமன் கடல் தாவப் போகிறான் - அதற்கு ஆயத்தப் படுத்த அவன் திருவடியை வன்மையாகப் பதித்தான். வால்மீகி, “அனுமன் கடலைக் கடக்க விரும்பிக் கைகளாலும் கால்களாலும் அந்த மலையை அழுத்தினான். அப்பொழுது அந்தப்பர்வதம் ஒரு முகூர்த்த காலம் கிடுகிடென்று நடுங்கிற்று” என்பர். பிதுங்குதல் - அழுத்தம் பெற்ற பொருளுக்கு உள்ளே உள்ளவை வெளிப்படுதல். இலங்கைக் கோமான் தன்னைக் கதிர் முடியும், கண்ணும்

பிதுங்க ஊன்றி (நாவரசர் தூண்டு சுடர் 10) (3)

4744. **புகல்அரும் முழையுள் துஞ்சும்**

பொங்கு உளைச் சீயம்பொங்கி,

உகல்அருங் குருதிகக்கி,

உள்ளுறநெரிந்த ஊழின்,

அகல் இரும் பரவைநாண

அரற்றுறுகுரல ஆகி,

பகல்ஒளி கரப்ப,வானை

மறைத்தன,பறவை எல்லாம்.

புகல் அரும் - நுழையமுடியாத முழையுள் துஞ்சும் - குகையின்கண் உறங்கின்ற பொங்கு உளைச்சீயம் - சிலிர்க்கின்ற பிடரி மயிரையுடைய சிங்கங்கள் பொங்கி - கொந்தளித்து உகல் அருங் குருதி கக்கி - சிந்தக் கூடாத இரத்தத்தை வெளிப்படுத்தி உள்ளுற நெரிந்த - உள்ளே சிதைந்தன பறவை எல்லாம் - எல்லாப் பறவைகளும் அகல் இரும் ஊழின் பரவைநாண - பரந்த பெரிய ஊழிக்காலத்துக் கடல்கள் வெட்கம் அடைய அரற்றுறு குரல ஆகி - கதறுகின்ற கூக்குரலை உடையனவாய் பகல் ஒளி கரப்ப - சூரியனுடைய பிரகாசம் மறையும்படி’ வானை மறைத்தன -ஆகாயத்தை மூடின.

அனுமன் திருவடிபட அழுந்திய மலைக்குகைக்குள் சிங்கங்கள் குருதிகக்கி நெரிந்தன. பறவைகள் வானை மறைத்தன. நெரிதல் - சிதைதல், நொறுங்குதல். வாளரக்கன் தலை பத்தும் நெரித்தவன் (நாவரசர் - மன்னு மலைமகள் 10)

(4)

4745. **மொய்யுறுசெவிகள் தாவி,**

முதுகுஉ_ற,முறைகால் தள்ள,

மைஅறு விசும்பினூடு

நிமிர்ந்தவாலதிய, மஞ்சின்

மெய்உ_றத்தழீஇய, மெல்லென்

பிடியொடும்வெருவ லோடும்

கையுற மரங்கள்சுற்றி,

பிளிறின-களிநல் யானை.

களிநல் யானை- மதமயக்கமுடைய பெரிய யானைகள் மைஅறு விசும்பினூடு - மேகம் இல்லாத ஆகாயத்தின்கண் நிமிர்ந்த வாலதிய - நீண்ட வாலையுடைய (யானைக் கன்றுகள்) மொய்உறு செவிகள் - வலிமை மிக்க காதுகள் தாவி முதுகுற - பரவி முதுகைச்சார (அதனால்)' முறைகால் தள்ள - பருவக் காற்று வீச மஞ்சின் மெய்யுறத் தழீஇய - மேகத்தைப் போல(த்தம்) உடம்பைத் தழுவிக் கொண்ட மெல்லென் பிடியொடும் - மென்மையான பெண் யானைகளுடன் வெருவலோடும் - அச்சத்தோடும் கைஉ_ற மரங்கள் சுற்றி - கைகளால் மரங்களைச் சுற்றிக் கொண்டு பிளிறின - வீறிட்டுக் கதறின.

யானை, கன்று,பிடியுடன் அச்சத்தோடு மரங்களைப் பற்றிப் பிளிறின.வாலதிய - வாலையுடைய கன்று. வாலதி - வால். அ - உடைமைப் பொருளைக்குறித்தது. வாலதிய என்னும் பலவின்பால் வினைமுற்று

வினையாலணையும் பெயராயிற்று. (5)

4746. **பொன்பிறழ் சிமயக் கோடு**

பொடியுற,பொறியும் சிந்த,

மின்பிறழ்குடுமிக் குன்றம்

வெரிந்உ_றவிரியும் வேலை,

புன் புற மயிரும்பூவா,

கண்புலம்புறத்து நாறா,

வன்பறழ் வாயில்கவ்வி,

வல்லியம்இரிந்த மாதோ.

மின்பிறழ்குடுமிக் குன்றம் - ஒளி விளங்கும்தலைமையுடைய மகேந்திர மலையின் வெரிந் - முதுகின்கண் பொன்பிறழ் சிமயக்கோடு - பொன்போலப் பொலிவு பெற்ற சிகரமானது உற - நன்றாக அழுந்த (அதனால்) பொடியுறப் பொறி சிந்த - பொடிப் பொடியாகிப் பொறி பறக்கவிரியும் வேலை - பிளவுபடும் சமயத்தில் வல்லியம் - புலிகள் புன்புற மயிரும் பூவா - மெல்லிய உடம்பில் பூனை மயிரும் முளைக்காத புறத்துக்கட்புலம் நாறா - வெளியில் தோன்றும்படி

கண்கள் திறவாத' வன்பறழ் -(தம்முடைய) வலிமையான குட்டிகளை வாயில் கவ்வி இரிந்த - வாயில் பற்றி அஞ்சியோடின.

சிகரம்பொடியாகி மலை பிளந்தது என்றும் கூறலாம். கோடு அழுந்தக் குன்றம் பிளந்தது என்று இங்கே கொள்ளப் பட்டது. சிமயம் - சிகரம் - இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலை (சிலம்பு 5-97) கோடு - சிகரத்தின் நுனி. பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே (புறம் 2). உடலில் தோன்றும் புல்லிய மயிரைப் பூனைமயிர் என்பர். சங்க இலக்கியம் அரிமயிர் என்று பேசும். பறழ் - குட்டி, நாய், புலி முதலான விலங்குகளின் குட்டியைப் பறழ் என்பது மரபு. புலிப்பறழ் அன்ன பூஞ்சினை வேங்கை (மரபியல் மேற்கோள்) மலைக்கு முதுகு கூறப்பெற்றுள்ளது. (6)

4747. தேக்குஉறுசிகரக் குன்றம்

திரிந்துமெய்ந் நெரிந்து சிந்தத்

தூக்குறு தோலர்,வாளர்,

துரிதத்தின் எழுந்த தோற்றம்,

தாக்குறுசெருவில், நேர்ந்தார்

தாள்அறவீச, தாவி,

மேக்குறவிசைத்தார் என்னப்

பொலிந்தனர்-விஞ்சை வேந்தர்.

தேக்கு உறுசிகரக் குன்றம் - தேக்கு மரங்கள் மிகுதியாகப் பெற்றமகேந்திர மலை' திரிந்து - தன் இயல்பு வேறுபட்டு மெய்ந் நெரிந்து சிந்த -உடல் சிதைந்து சிதற (அதனால்)' விஞ்சை வேந்தர் - வித்தியாதரத்தலைவர்கள்' தூக்குறு தோலர் - உயர்த்திப் பற்றிய கேடகமுடையவராய்'வாளர் - வாளை ஏந்தியவராய்' துரிதத்தின் எழுந்த தோற்றம் - வேகமாக எழுந்த காட்சி' தாக்குறு செருவில் - மோதிச் செய்கின்ற போரில்' நேர்ந்தார்தாள்அற வீச - எதிர்த்த பகைவர்களின் முயற்சியற்றுப் போக ஆயுதங்களைச்சுழற்ற' மேக்கு உறத் தாவி - வானிலே நன்றாகப் பாய்ந்து' விசைத்தார்என்னப் பொலிந்தனர் - வேகம் பெற்றவர்களைப் போல விளங்கினார்கள்.

சலிப்பற்றதுமலை. அஃது இன்று சலித்தது. நிலை திரிந்தது. சுழன்றது' அதனால் அங்குள்ள வித்தியாதரத் தலைவர்கள் ஏந்திய கேடகத்தோடும் தாங்கிய வாளோடும் விண்ணில் சென்றனர். அக் காட்சி பகைவரைத் தாக்க எழுந்தது போல் இருந்தது. பகைவரால் தாக்கப்பெற்று மேல் எழுந்த வீரர் என்றும் பொருள் கொள்ளலாம். (7)

4748. தாரகை,சுடர்கள், மேகம்

என்று இவைதவிரத் தாழ்ந்து,

பாரிடை அழுந்துகின்ற

படர்நெடும்பனிமாக் குன்றம்,

கூர் உகிர்க்குவவுத் தோளான்

கூம்புஎனக்குமிழி பொங்க

ஆர் கலி அழுவத்துஆழும்

கலம் எனல்ஆயிற்று அன்றே.

தாரகை சுடர்கள்மேகம் என்று இவை- நட்சத்திரம், சூரியசந்திரர்கள் மேகம் என்னும் இப்பொருள்கள் தவிர - (சார்ந்து வராமல்) நீங்கிநிற்க தாழ்ந்து - இறங்கி' பாரிடை அழுந்துகின்ற - பூமியின்கண் கீழ்நோக்கிப் போகும் படர்நெடும் பனிமாக் குன்றம் - விரிந்து நீண்ட குளிர்ந்த மலை' கூர்உகிர் குவவுத் தோளான் - கூர்மையான நகங்களையும் திரண்ட தோள்களையும் உடைய அனுமன்' கூம்புஎன - பாய்மரம் போலிருக்க ஆர்கலி அழுவத்து - கடலின் ஆழத்திலே குமிழி பொங்க - நீர்க்குமிழிகள் கொந்தளிக்கஆழும் கலம் எனல்ஆயிற்று -மூழ்குகினற் கப்பல் என்று கூறும் தன்மையைப் பெற்றது.

அனுமன் கப்பலின்பாய்மரம் போன்றிருந்தான். அழுந்தும் மலை கடலுள் ஆழும்கப்பல் போன்றிருந்தது. கூம்பு - பாய்மரம். வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே (குலசேகரர் 5-5). கப்பலையும் மலையையும் ஒப்பிடுதலைக் குறுந்தொகையில் காண்கிறோம். 'வாழி தோழி தெண்டிரைக் கடல் ஆழ் கலத்தில் தோன்றி - மாலை மறையும் அவர் மணி நெடுங் குன்றே (குறு 240) அழுவம் - ஆழம் பரப்பும் ஆம். (8)

4749. தாதுஉகுநறுமென் சாந்தம்,

குங்குமம்,குலிகம், தண்தேன்,

போதுஉகுபொலன்தாது, என்று இத்

தொடக்கத்த யாவும் பூசி,

மீதுஉறு சுனைநீர்ஆடி,

அருவிபோய் உலகின் வீழ்வ,

ஓதிய குன்றம்கீண்டு

குருதிநீர்சொரிந்தால் ஒத்த.

அருவி - மகேந்திரமலையின் அருவி தாது - காவிக் கற்களையும்' உகுநறுமென் சாந்தம் - கரைந்து தேய்ந்த நறுமணம் வீசும் சந்தனக் குழம்பையும்' குங்குமம் - குங்குமப் பூக்களையும் குலிகம் - சாதிலிங்கத்தையும் தண்தேன் - குளிர்ந்த ' போதுஉகு - மலர்கள்சிந்திய பொலன்தாது - பொன் நிறம் பெற்ற மகரந்தங்களையும் என்று இத் தொடக்கத்த யாவும் - இது முதலான பல பொருள்களையும் பூசி - தன்மேல் பூசிக் கொண்டு' மீதுறு - மலையின் மேலே உள்ள' சுனை நீர்அடி - சுனை நீரிலே குளித்து' உலகின் போய் வீழ்வ - பூமியில் பரந்து வீழும்

காட்சி' ஓதிய குன்றம் - பேசப்பெற்ற மலை கீண்டு - வயிறு பிளக்கப் பெற்று குருதி நீர் சொரிந்தால் ஒத்த - இரத்தமாகிய நீரைச் சொரிவதைப் போன்றிருந்தன.

மணமுள்ளபொருள்களைப் பூசி நீராடுவார் போல அருவி, மகரந்தம் முதலானவற்றைப் பூசிச் சுனையில் நீராடின. அது, நிலத்தில் பாயும்போது மலை பிளந்து குருதி வீழ்வது போன்றிருந்தது. உகும் - கரைந்து தேயும். உப்பு இயல் பாவை உறை உற்றதுபோல் உக்கு விடும், என் உயிர் என்னும் கலிப்பாவுக்கு (நெய்தல் 21-16-17) உரை வகுத்த நச்சினார்க்கினியர்,'உயிர்.... கரைந்து விடா நின்றது' என்று உரை வகுத்தார். குலிகம் - சாதிலிங்கம். குன்றுக்குக் குருதி குறிக்கப் பெறுகிறது. (9)

4750. **'கடல்உறுமத்துஇது' என்னக்**

கருவரை திரியும் காலை,

மிடல்உறுபுலன்கள் வென்ற

மெய்த்தவர் விசும்பின் உற்றார்'

திடல்உறுகிரியில் தம்தம்

செய்வினைமுற்றி, முற்றா

உடல்உறு பாசம்வீசாது,

உம்பர்செல்வாரை ஒத்தார்.

கருவரை - கரிய மகேந்திரமலை' கடல்உறு - பாற் கடலைச் சார்ந்த' மத்து இது என்ன - மத்து என்று கூறும்படி' திரியும் காலை - சுழல்கின்ற சமயத்தில்' மிடல்உறு - வன்மை மிக்க' புலன்கள் வென்ற மெய்த்தவர் - ஐம்புலன்களும் பொறிவழியே போகாமல் அடக்கிய முனிவர்கள்' விசும்பின் உற்றார் - ஆகாயத்தை அடைந்தார்கள் (அவர்கள்)' திடல்உறு கிரியில் - மேட்டுப் பாங்கான மலையில்' தம்தம் செய்வினை முற்றி முற்றா - தாம் தாம் செய்யவேண்டிய கடமைகளைத் தொடங்கி நிறைவு செய்யாமல்' உடல்உறு பாசம் வீசாது - உடலின்கண் கொண்ட பற்றை விடாமல்' உம்பர் செல்வாரை, ஒத்தார் - விண்ணுலகத்திற்குச் செல்பவரை ஒத்தார்.

முனிவர்கள்ஆகாயத்தை அடைந்தது பற்றை விடாமையால் சுவர்க்கம் அடைந்தவரை ஒத்தனர். திரிதல் - சுழல்தல். மண்ணகந்திரிய... மால்வரை திரிய காலும் கதிரொடு திரிய (3517). செய்ய வேண்டியவற்றை நிறைவேற்றியிருந்தால் முத்தி பெற்றிருப்பர். நிறைவேற்றாமையால் அவர்கள் சுவர்க்கம் சென்றனர். (கீதை - தியான யோகம் 40) (10)

4751. **வெயில்இயல் குன்றம் கீண்டு**

வெடித்தலும், நடுக்கம் எய்தி,

மயில்இயல்தளிர்க்கை மாதர்

தழீஇக்கொளப் பொலிந்த வானோர்,

அயில் எயிற்றுஅரக்கன் அள்ளத்

திரிந்தநாள், அணங்கு புல்லக்

கயிலையில் இருந்த தேவைத்

தனித் தனிகடுத்தல் செய்தார்.

வெயில்இயல்குன்றம் - ஒளியமைந்த மகேந்திர மலை' கீண்டு வெடித்தலும் - பிளவுபட்டு இரண்டாதலும்' மயில்இயல் தளிர்க்கை மாதர் -மயில் போன்ற சாயலும், தளிர் போன்ற கைகளும் கொண்ட தெய்வப் பெண்கள்' நடுக்கம் எய்தி தழீஇக் கொள்ள - அச்சமுற்றுத் தழுவிக்கொள்ள (அதனால்)' பொலிந்த வானோர் - பூரித்த தேவர்கள்' அயில் எயிற்று அரக்கன் - கூரிய பற்களைப் பெற்ற இராவணன்' அள்ள - பெயர்த்தெடுக்க' திரிந்த நாள் - (கயிலாய மலை) அசைந்த காலத்தில்' அணங்குபுல்ல - உமாதேவி தழுவிக்கொள்ள' கயிலையில் இருந்த தேவை - கயிலாய மலையில்வீற்றிருந்த சிவபிரானை' தனித்தனி கடுத்தல் செய்தார் - ஒவ்வொருவரும்தனித்தனியே ஒத்திருந்தார்கள்.

தத்தம்தேவிமாரால் தழுவப்பெற்ற தேவர்கள் உமையம்மை தழுவக் கயிலாய மலையில் மகிழ்ந்த சிவபிரானை ஒத்திருந்தனர். வெயில் - ஒளி - வெயில்விரி கனகக் குன்றத்து எழில் கெட - (கம்பன் - மிகை 226) (11)

4752. **ஊறியநறவும் உற்ற**

குற்றமும்உணர்வை உண்ண,

சீறிய மனத்தர்,தெய்வ

மடந்தையர்ஊடல் தீர்வுற்று

ஆறினர்,அஞ்சுகின்றார்,

அன்பரைத்தழுவி உம்பர்

ஏறினர், இட்டு,நீத்த

பைங்கிளிக்கு இரங்குகின்றார்.

ஊறிய நறவும் -(வியஞ்சனத்துடன்) ஊறிக்கிடந்த மதுவும்' உற்ற குற்றமும் - நேர்ந்த பிழையும்' உணர்வை உண்ண - அறிவை அழிக்க (அதனாலே)' சீறிய மனத்தர் - கொதிப்புற்ற மனத்தையுடைய' தெய்வ மடந்தையர் - தேவலோகப் பெண்கள் (மலையின் அதிர்ச்சியால்)' ஊடல் தீர்வுற்று ஆறினர் - ஊடல் நீங்கி அமைதியடைந்தனர்' அஞ்சுகின்றார் - அச்சம் அடைந்து' அன்பரைத் தழுவி - கணவரைத் தழுவிக்கொண்டு' உம்பர் ஏறினர் - விண்ணின் கண்ணே சென்று' இட்டு நீத்த - கூண்டுக்குள் அடைத்து விட்டு விட்டுவந்த' பைங்கிளிக்கு - இளமையான கிளியின் பொருட்டாக' இரங்குகின்றார் - கவலைப்படுகிறார்கள்.

கூட்டுக்குள்செறிக்காமல் இருந்தால் கிளி பறந்து சென்று பிழைக்குமே, பறக்கவியலாதபடி அடைத்தோமே என்று வருந்தியதை இட்டு நீத்த என்னும் தொடர் உணர்த்தும். மலையின் அசைவால் ஊடல் துன்பம் போயிற்று. இட்டு நீத்த பைங்கிளியால் வந்த துன்பம் வளர்ந்தது. பிராட்டிகூடத் தான் விட்டுவந்த கிளியைப் பாதுகாக்கும்படி தன் சகோதரிகட்குக் கூறும்படி சுமந்திரனிடம் கூறினாள். ‘இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி’ என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் (375) மகளிர் கிளிகள்பால் கொண்ட பாசத்தைப் புலப்படுத்தும். பைங்கிளி - இளங்கிளி' பசுமை - இளமை. பசுங்கதிர்க் கொத்தொடு (தக்க பரணி 605) என்னும் தொடருக்கு விளக்கம் கூறும்போது பசுங்கதிர் - பச்சைக் கதிர். பசுமை நிறத்திற் சென்றதன்று. இளமையிற் சென்றது, என்று

தெளிவித்தது ஈண்டும் ஏற்கும். பாரதிகூட 'பச்சைக் குழந்தை' என்பார். 'பச்சைப் பிள்ளை' எனப் பேச்சு வழக்கிலும் இளங்குழந்தை குறிக்கப்படுவதை நினைவிற் கொள்க. (12)

4753. **இத்திறம் நிகழும் வேலை,**

இமையவர், முனிவர், மற்றும்

முத் திறத்து உலகத்தாரும்,

முறை முறை விரைவில் மொய்த்தார்,

தொத்துஉறு மலரும், சாந்தும்

சுண்ணமும் இனைய தூவி,

'வித்தக சேறி' என்றார்

வீரனும் விரைவது ஆனான்.

இத்திறம்நிகழும் வேலை - இப்படிப்பட்டநிகழ்ச்சிகள் நடைபெறுங்காலத்தில்' இமையவர் முனிவர் மற்றை முத்திறத்து உலகத்தாரும் - தேவர்களும், முனிவர்களும் இன்னும் மூவகையான உலகத்தில் இருப்பவர்களும்' முறை முறை - தகுதிக்கேற்ற வரிசைப்படி' விரைவில் மொய்த்தார் - விரைவாக ஆகாயத்தில் ஒன்று கூடினர்' கொத்து உறுமலரும்- கொத்துக் கொத்தான பூக்களையும்' சாந்தும் - சந்தனத்தையும்' சுண்ணமும்- வாசனைப் பொடிகளையும்' இனைய - இப்படிப்பட்ட பொருள்களையும்'தூவி - (அனுமன் திருமேனியில்) அள்ளி வீசி' வித்தக - அறிஞனே!' சேறிஎன்றார் - 'செல்க!' என்று கூறினார்கள்' வீரனும் விரைவது ஆனான்- அனுமனும்வேகமாகப் போக முற்பட்டான்.

இதுவரை அனுமன்திருவடி அழுத்திய காரணத்தால் மலையின்கண் நிகழ்ந்தவற்றைக் கவிச்சக்கரவர்த்தி விவரித்தார். (13)

4754. **'குறுமுனிகுடித்த வேலை**

குப்புறும்கொள்கைத்து ஆதல்

வெறுவிது'விசயம் வைகும்

விலங்கல்-தோள் அலங்கல் வீர !

'சிறிதுஇது' என்றுஇகழற்பாலை

அல்லை' நீசேறி' என்னா'

உறுவலித் துணைவர்சொன்னார்'

ஒருப்பட்டான்' பொருப்பை ஒப்பான்.

உறுவலித் துணைவர்- மிக்கவலிமையையுடைய நண்பர்கள் (அனுமனை நோக்கி)' விசயம் வைகும் - வெற்றி குடிகொண்ட' விலங்கல்தோள் அலங்கல்வீர - மலைபோன்ற தோளில்

மாலையணிந்த வீரனே !' குறுமுனி குடித்த வேலை - அகத்திய முனிவனால் பருகப்பட்ட இந்தக் கடல்' குப்புறும் கொள்கைத்தாதல் - பாய்ந்து கடக்க வேண்டிய கோட்பாட்டுக்கு உரிய பொருளாயிருத்தல்' வெறுவிது - மதிக்கத் தகாதது (பயனற்றது)' இது சிறிது - இந்தக் கடல் (என் வலிமைக்கு) அற்பம்' என்று இகழற்பாலையல்லை - என்று இக் கடலை அவமதிக்கும் பான்மையை அடையாதே' நீ சேறி - நீ செல்வாயாக' என்னா - என்று' சொன்னார் - கூறினார்கள் (அம்மொழி கேட்டு)' பொருப்பை ஒப்பான் - மலையை ஒத்த அனுமான்' ஒருப்பட்டான் - (அவர்கள் சொற்களுக்கு) உடன் பட்டான்.

'பேருருக் கொண்டஎன் ஆற்றலுக்குக் குறுமுனி குடித்த கடல் அற்பம்' என்று நீ கருதாது செல்க என்று துணைவர்கள் கூறினார்கள். அவர்கள் மொழிகட்கு அனுமன் உடன் பட்டான். குறுமுனி - அகத்தியர். குப்புறுதல் - பாய்ந்துகடத்தல். (14)

காலைஊன்றி எழுந்தபோது நிகழ்ந்த மாறுதல்கள்

4755. **'இலங்கையின் அளவிற்று அன்றால்,**

"இவ்வுரு எடுத்த தோற்றம்'

விலங்கவும் உளதுஅன்று" என்று

விண்ணவர்வியந்து நோக்க,

அலங்கல்தாழ்மார்பன் முன்தாழ்ந்து

அடித்துணைஅழுத்தலோடும்,

பொலன்கெழுமலையும் தாளும்

பூதலம்புக்க மாதோ !

இவ்வுரு - (அனுமன்மேற்கொண்ட) இந்த வடிவத்தின்' எடுத்த தோற்றம் - பெருமிதமான உயர்ச்சி' இலங்கையின் அளவிற்றன்று - இலங்கையை எல்லையாகக் கொண்டது அன்று' விலங்கவும் - (அனுமனைத்) தடுத்து நிறுத்தவும்' உளது அன்று என்று - ஒரு பொருளும் இல்லையென்று' விண்ணவர் - தேவர்கள்' வியந்து நோக்க - ஆச்சரியப்பட்டுப் பார்க்க' அலங்கல் தாழ்மார்பன் - மாலைகள் தங்கிய மார்பை உடைய அனுமான்' முன் தாழ்ந்து - முன் புறமாக மேனியை வளைத்து' அடித்துணை அழுத்த லோடும் - இரண்டு திருவடிகளையும் ஊன்றியவுடன்' பொலன்கெழு மலையும் தாளும் - பொன் மயமான மகேந்திர மலையும் அதன் அடிச் சாரலும்' பூதலம் புக்க - பூமியின் அடித்தளத்தைச் சென்று சேர்ந்தன.

அனுமன் கொண்டபேருரு இலங்கையை எல்லையாகக் கொண்டதன்று. இவன் இலங்கையடைந்ததும் இவனைத் தடுத்து நிறுத்தும் பொருள் இல்லையே என்று தேவர்கள் கருதினர். அளவு - எல்லை. தோற்றம் - உயர்ச்சி. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் (குறல் 124) தாழ் - தங்கிய, மாலைதாழ் வியன்மார்ப' (கலித்தொகை 33) தொங்குதல் என்றும் கூறலாம். தாள் - அடிவாரம். இருள்கீள விரி தாள் கயிலாய மலையே (3-ஆம் திருமறை) (15)

4756. **வால்விசைத்து எடுத்து, வன்தாள்**

மடக்கி,மார்பு ஒடுக்கி, மானத்

தோள் விசைத்துணைகள் பொங்கக்

கழுத்தினைச் சுருக்கி, தூண்டும்

கால்விசைத்தடக்கை நீட்டி,

கண்புலம்கதுவா வண்ணம்

மேல்விசைத்துஎழுந்தான், உச்சி

விரிஞ்சன்நாடு உரிஞ்ச - வீரன்.

வீரன் - அனுமன்'வால்விசைத்து எடுத்து - வாலை வேகமாக உயர்த்தி' வன்தாள் மடக்கி - வலிமையான திருவடிகளை மடக்கி' மார்பு ஒடுக்கி - மார்பைச் சுருக்கி' மானத் தோள்விசைத் துணைகள் பொங்க - பெருமையும் புகழும் வெற்றியும் பெற்ற இரண்டு புயங்கள் பூரிக்க' கழுத்தினைச் சுருக்கி - கழுத்தை ஒடுக்கி' தூண்டும் கால்விசைத் தடக்கை நீட்டி - தூண்டுகின்ற காற்றைப் போன்று வேகமாகக் கைகளை நீட்டி' உச்சி விரிஞ்சன் நாடு உரிஞ்ச - தலை பிரம்ம லோகத்தை உராயும்படி' கண்புலம் கதுவா வண்ணம் - கண்ணின் பார்வை பற்ற முடியாதபடி' மேல் விசைத்து எழுந்தான் - விண்ணில் வேகமாக எழும்பினான்.

அனுமன் வால்எடுத்து, தாள் மடக்கி, மார்பு ஒடுக்கி, கழுத்தினைச் சுருக்கி, கை நீட்டி உச்சி விரிஞ்சன் நாடு உரிஞ்ச விசைத்து எழுந்தான். கடல் கடக்க எழுந்த அனுமனின் மெய்ப்பாடு விளக்கப்படுகிறது. விசையம் என்னும் சொல் அம் சாரியை குறைந்து வந்துள்ளது. வன்மை என்றும் வேகம் என்றும் கூறலாம் (16).

4757. **ஆயவன்எழுதலோடும்**

அரும்பணைமரங்கள் யாவும்

வேய்உயர்குன்றும், வென்றி

வேழமும்,பிறவும், எல்லாம்

'நாயகன் பணிஇது' என்னா,

நளிர்கடல்இலங்கை தாமும்

பாய்வன என்ன,வானம்

படர்ந்தன,பழுவம் மான.

ஆயவன் - அந்த அனுமான்'எழுதலோடும் - மலையை விட்டு எழுந்தவுடன்' அரும்பணை மரங்கள் தாமும் - சிறந்த கிளையைப் பெற்ற மரங்களும்' வேய்உயர் குன்றும் - மூங்கில் வளர்ந்த மலைகளும்' வென்றி வேழமும் - வெற்றியையுடைய யானைகளும்' பிறவும் எல்லாம் - கூறப்பெறாத எல்லாப் பொருள்களும்' நாயகன் பணி இது என்னா - இராமபிரானுக்குச் செய்யும் தொண்டு இது என்று கருதி' நளிர்கடல் இலங்கை

- குளிர்ந்த கடலால் சூழ்ந்த இலங்கை' தாமும் பாய்வன என்ன - தாங்களும்பாய்ந்து செல்வன என்று கூறும்படி' பழுவம் மான - சோலைபோல' வானம்படர்ந்த - வானத்திற் பரவிச் சென்றன' ஆயவன் - அத்தகையவன்(ஆய ூ அன்) (17)

4758. **இசையுடை அண்ணல் சென்ற**

வேகத்தால், எழுந்த குன்றும்,

பசையுடை மரனும்,மாவும்,

பல்உயிர்க் குலமும், வல்லே

திசை உறச்சென்று சென்று,

செறிகடல்இலங்கை சேரும்

விசை இலவாகதள்ளி

வீழ்ந்தனஎன்ன வீழ்ந்த.

இசையுடை அண்ணல்- புகழ்பெற்ற அனுமன்' சென்ற வேகத்தால் -பாய்ந்துபோன வேகத்தினாலே' எழுந்த குன்றும் - எழுந்து சென்ற மலைகளும்' பசையுடை மரமும் - பிசினைப் பெற்ற மரங்களும்' மாவும் - விலங்குகளும்' பல் உயிர்க் குலமும் - பல உயிர்த் தொகுதிகளும்' வல்லே - விரைவாக' திசையுறச் சென்று சென்று - அனுமன் சென்ற திக்கின் வழியேபோய்ப் போய்' கடல்செறி இலங்கை சேரும் விசை இலவாக - கடலால்சூழப் பெற்ற இலங்கையை அடையும் ஆற்றல் அற்றவையாய்' தள்ளி வீழ்ந்தன என்ன - தள்ளப்பட்டுக் கீழ் வீழ்ந்தாற்போல' வீழ்ந்த - கடலிலே விழுந்தன. (18)

4759. **மாவொடு மரனும், மண்ணும்,**

வல்லியும்,மற்றும் எல்லாம்

போவது புரிந்தவீரன்

விசையினால், புணரி போர்க்கத்

தூவின' கீழும்மேலும்

தூர்த்தன'சுருதி அன்ன

சேவகன் சீறாமுன்னம்

சேதுவும் இயன்ற மாதோ !

போவது புரிந்தவீரன் விசையினால் - இலங்கை நோக்கிச்சென்ற அனுமனின் வேகத்தால்' மாவொடு மரனும் மண்ணும் - விலங்குகளும் மரங்களும் வேரடிமண்ணும்' வல்லியும் மற்றும் எல்லாம் - கொடியும் பிற பொருள்களும்' புணரி போர்க்க - கடல் மூடும்படி' தூவின - தூவப் பெற்றன' மேலும் கீழும் தூர்த்தன - கடலின் மேலும் ஆழத்திலும் தூர்க்கப்பட்டன' சுருதி அன்ன - வேதம் போன்ற'சேவகன் சீறா முன்னம் - இராமபிரான் கடலைச் சீறுவதற்குமுன்பு' சேதுவும் இயன்ற - சேதுவும் அமைந்தது.

அனுமன் பின்சென்ற மரம் முதலான பொருள்கள் வீழ்ந்து கடல் மேடாயிற்று. அது அணைபோல் இருந்தது. 'அனுமன் சென்ற விசையால் மரம் முதலியன கடலில் ஆங்காங்கு விழுந்திருப்பவை, இராமபிரான் இனிக் கட்டப் போகின்ற சேதுவுக்காக நூல் பிடிப்பதற்கு நாட்டிய முளைகள் போலும்' என சம்பூ ராமாயணத்தில் இச் செய்யுளினும் சிறிது கருத்து வேறுபடக் கூறியுள்ளது என்று வை.மு.கோ. குறிப்பிடுவார். இயன்றது என்பது ஈறுகெட்டு இயன்ற என நின்றது. சேது ஒன்றேயாதலின் பன்மை முடிபு ஏலா. ஒருமை பன்மை மயக்கம் என்று கூறின், ஏற்பார் ஏற்க. (19)

4760. கீண்டதுவேலை நல்நீர்'

கீழ்உறக்கிடந்த நாகர்

வேண்டிய உலகம்எல்லாம்

வெளிப்பட,மணிகள் மின்ன,

ஆண்தகை அதனைநோக்கி,

'அரவினுக்குஅரசன் வாழ்வும்

காண்தகுதவத்தென் ஆனேன்

யான் !' எனக் கருத்துள் கொண்டான்.

நல்நீர் வேலைகீண்டது - மிக்க நீரையுடைய கடல்பிளவுபட்டு' உறக்கீழ் கிடந்த - மிகவும் கீழான இடத்தே அமைந்துள்ள' நாகர் - நாகலோகத்தவர்கள்' வேண்டிய உலகம் எல்லாம் - விரும்புகின்ற உலகம் முழுவதும்' வெளிப்பட - வெளிப்பட்டுத் தெரிய (அதனால்)' மணிகள் மின்ன- மாணிக்கங்கள் ஒளிவீச' ஆண்தகை அதனை நோக்கி - ஆண்மை மிக்கஅனுமன் அதைப் பார்த்து' அரவினுக்கு அரசன் வாழ்வும் - பாம்புகளின்வேந்தனான ஆதிசேடனின் செல்வச் செழிப்பையும்' யான் காண்தகுதவத்தென் ஆனேன் - நான் பார்க்கும் தவத்தைச் செய்தவனாய் விட்டேன்'எனக் கருத்துள் கொண்டான் - என்று உள்ளத்தே எண்ணினான்.

மணிகள்,செல்வச் செழிப்பைக் காட்டிற்று. கடல் உப்பு நீர் உடைத்து ஆதலின் நல்நீர் என்னும் சொல் மிகுதிப் பண்பை உணர்த்திற்று. நல்ல பாம்பு, நல்ல வெயில் என்றாற்போல. மகாவித்துவான் வி. கோவிந்தப் பிள்ளை கடலின் நல்ல ஸ்வபாவம் என்று வரைந்தார். (20)

4761. வெய்தின்வான் சிறையினால் நீர்

வேலையைக்கிழிய வீசி,

நொய்தின்ஆர்அமுதம் கொண்ட

நோன்மையேநுவலும் நாகர்,

'உய்தும் நாம்என்பது என்னே ?

உறுவலிக்கலுழன் ஊழின்

எய்தினான் ஆம்'என்று அஞ்சி,

அலக்கண்உற்று, இரியல் போனார்.

வான்சிறையினால் - பெரிய சிறகுகளாலே'நீர் வேலையை - நீர் நிரம்பிய கடலை' வெய்தின் கிழிய வீசி - வேகமாகப் பிளவு படும்படி வீசி' நொய்தின் - எளிதாக' ஆரமுதம் கொண்ட - அருமையான அமுதத்தைக் கவர்ந்த (கருடனின்)' நோன்மையே நுவலும் - வலிமையைப் பேசிக் கொண்டிருக்கும்' நாகர் - நாகலோக வாசிகள்' உறுவலிக் கலுழன் - மிக்க வலிமையுடைய கருடன்' ஊழின் எய்தினான் ஆம் - நம்முடைய தீயூழால் (மறுபடியும்) வந்து சேர்ந்தான் ஆகும்' நாம் உய்தும் என்பது என்னே - நாம் தப்பிப் பிழைப்போம் என்று கூறுவது எப்படி?' என்று அஞ்சி - என்று கூறி பயந்து' அலக்கண் உற்று - பெருந்துயர் அடைந்து' இரியல் போனார் - சிதறி ஓடினார்கள். எய்தினன் ஆம்என்பதில் உள்ள ஆம் அசை. (21)

4762. **துள்ளிய மகர மீன்கள்**

துடிப்பு அற,சுறவு தூங்க,

ஒள்ளிய பனைமீன்துஞ்சும்

திவலைய,ஊழிக்காலின்

வள்உகிர் வீரன்செல்லும்

விசைபொரமறுகி, வாரி,

தள்ளிய திரைகள்முந்துற்று,

இலங்கைமேல்தவழ்ந்த மாதோ.

துள்ளிய மகரமீன்கள் துடிப்புஅற - செருக்கிப் பாயும்இயல்புடைய மீன்கள் கிளர்ச்சியற்றுப் போகவும்' சுறவு தூங்க - சுறாமீன்கள் அடங்கிக் கிடக்கவும்' ஒள்ளிய பனைமீன் துஞ்சும் - ஒளிமிக்க பனைமீன்கள் இறக்க இடனாகும்' திவலைய ஊழிக்காலின் - நீர்த்திவலைகளை வீசுகின்ற யுகமுடிவில் வீசுகின்ற காற்றைப்போல'வள்உகிர் வீரன் - கூர்மையான நகத்தைப் பெற்ற அனுமன்' செல்லும் - பாய்ந்து செல்கின்ற' விசைபொர மறுகி - வேகமானது தாக்க (அதனால்) அல்லோலப்பட்டு' வாரி தள்ளிய திரைகள் - கடலில் உந்தப் பெற்ற அலைகள்' இலங்கைமேல் - இலங்கை மாநகரின்கண்' முந்துற்று தவழ்ந்த - அனுமனுக்கு முன் தத்திச் சென்றன.

மாது' ஓ - அசைகள். மகர மீன், சுறவு, பனைமீன் - மீன் வகைகள். முந்துற்று - அனுமனுக்கு முன்னே தாம் செல்வன போலச் சென்று என்பது ஐயரவர்கள் பதிப்பின் குறிப்பு. (22)

வானில் செல்லும்அனுமன் தோற்றம்

4763. **இடுக்கு உறுபொருள்கள் என்ஆம் ?**

எண்திசைசுமந்த யானை

நடுக்குஉறவிசும்பில் செல்லும்

நாயகன்தூதன், நாகம்

ஒடுக்குறு காலை,வன்காற்று

அடியொடும்ஒடித்த அந்நாள்,

முடுக்குறக்கடலில் செல்லும்

முத்தலைக்கிரியும் ஒத்தான்.

எண்திசை சுமந்தயானை - எட்டுத் திசைகளையும் தாங்கும் யானைகள்' நடுக்குற - நடுக்கம் அடையும்படியாக' விசும்பில் செல்லும் நாயகன் தூதன் - ஆகாயத்திற் பறந்து செல்லும் இராம தூதனான அனுமன்' நாகம் ஒடுக்குறு காலை - ஆதிசேடன் மேருமலையைத் தன் படங்களில் ஒடுக்கிக் கொண்ட சமயத்தில்' வன்காற்று - கொடுங்காற்று' அடியொடும் ஒடித்த அந்நாள் - அடியொடு முறித்த அக்காலத்தில்' முடுக்குறக் கடலில் செல்லும் - வேகமாக உந்தப்படத் தென் கடலின்கண் போகும்' முத்தலைக் கிரியும் ஒத்தான் - மூன்று தலைகளைப் பெற்ற திரிகூட மலையையும் ஒத்திருந்தான் (என்றால்)' இடுக்குஉறு - அவன் போகும் வழி இடையிலுள்ள' பொருள்கள் என்னாம் - என்ன பாடுபடும்.

நாகம் - பாம்பு(ஆதிசேடன்) அனுமனின் இரண்டு தோள்களும் தலையும் - முத்தலைச் சிகரம் போன்றிருந்தன. ஆதிசேடனும் வாயுதேவனும் தங்கள் வலிமையை நிலைநிறுத்த மேற்கொண்ட வஞ்சினப்படி ஆதிசேடன்மேருமலையைத் தன்னுடைய ஆயிரம் படங்களால் மூடிக் கொண்டான். வாயுதேவன் மலையை அசைத்துப் பார்த்தான். தேவர்கள் வேண்டிக்கொள்ள சேடன் தன்னுடைய மூன்று படங்களை உயர்த்த வாயுதேவன் மூன்று சிகரங்களைக் கடலில் இட்டான். (23).

4764. **கொட்புறுபுரவித் தெய்வக்**

கூர்நுதிக்குலிசத்தாற்கும்,

கண்புலன் கதுவல்ஆகா

வேகத்தான், கடலும் மண்ணும்

உட்படக்கூடிஅண்டம்

உறஉளசெலவின், ஒற்றைப்

புட்பகவிமானம்தான் அவ்

இலங்கைமேல் போவது ஒத்தான்.

கொட்புறு புரவி -சுழன்றுசுழன்று செல்கின்ற குதிரைமேல் உள்ள' தெய்வக் கூர்நுதி - தெய்வத் தன்மை பெற்ற கூரிய நுனியையுடைய' குலிசத்தாற்கும் - வச்சிராயுதத்தை ஏந்திய இந்திரனுக்கும்' கண்புலன் கதுவல் ஆகா வேகத்தான் - கண்ணின் பார்வை பின்பற்ற முடியாத வேகமுடைய அனுமன்' கடலும் மண்ணும் - கடலும் கடலாற் சூழ்ந்த உலகமும்' உட்படக்கூடி - தன்னுள் ஒடுங்கும்படி (பேருருக் கொண்டவனாய்)' அண்டம் உற உள - அண்டத்தின் உச்சியானது மோதும்படி' செலவின் - செல்கின்ற பயணத்தால்' ஒற்றைப் புட்பக விமானம் - ஒப்பற்ற புட்பக விமானம்' இலங்கைமேல் போவது ஒத்தான் - இலங்கை மாநகருக்குப் போவதை ஒத்திருந்தான்.

இந்திரனின்பார்வைக்கும் எட்ட முடியாத வேகமுடைய அனுமன், புட்பகவிமானம் இலங்கைக்குப் போவதைப் போன்றிருந்தான். கடலும் உலகும் தன்னுள் அடங்கும்படி பேருருக்

கொள்வதால் புட்பக விமானம்போல் அனுமன் இருந்தான். விமானம் எவ்வளவு மக்கள் வந்தாலும் விரியும். “ அண்டம் உறவுள செலவின்” அநேக அண்டங்கள்வைத்தாலும் கடக்கும் செலவு என்பது பழைய உரை. (24)

4765. **விண்ணவர்ஏத்த, வேத**

முனிவரர்வியந்து வாழ்த்த,

மண்ணவர்இறைஞ்ச செல்லும்

மாருதி, மறம்உள் கூர,

‘அண்ணல்வாள்அரக்கன் தன்னை

அமுக்குவென்’இன்னம் என்னாக்

கண்ணுதல் ஒழியச்செல்லும்

கைலைஅம்கிரியும் ஒத்தான்.

விண்ணவர் ஏத்த- தேவர்கள் போற்றவும்’ வேத முனிவர் வியந்து -வேதங்களை அறிந்த சிறந்த முனிவர்கள் வியப்புற்று’ வாழ்த்த - வாழ்த்தவும்’மண்ணவர் இறைஞ்ச - மண்ணுலக்கத்தவர் வணங்கவும்’ செல்லும் மாருதி - போகும் அனுமான்’ உள் மறம் கூர - உள்ளத்தே (இராவணன் மேல்) கோபம்மிகுதியாவதால்’ அண்ணல் வாள் - பெருமிதமுடைய கொடிய’ அரக்கன்தன்னை - இராவணனை’ இன்னும் அமுக்குவென் - மறுபடியும்அழுத்துவேன்’ என்னா - என்று கருதி’ கண்ணுதல் ஒழிய - சிவபிரான்இல்லாமல்’ செல்லும் - தனித்துப் போகின்ற’ கைலைஅம் கிரியும் - கயிலாயமலையையும் ’ ஒத்தான் - ஒத்திருந்தான்.

வெண்ணிறமுடையஅனுமன் இராவணன் மேல் கொண்ட சீற்றம் அதிகரிக்க அவனை அமுக்கச் செல்லும் கயிலாயம் போன்றிருந்தான். மறம் - சினம். கைலைஅம்கிரி - அம் சாரியை. (25)

4766. **மாணிஆம்வேடம் தாங்கி,**

மலர்அயற்குஅறிவு மாண்டு, ஓர்

ஆணிஆய் உலகுக்குஎல்லாம்,

அறம்பொருள் நிரப்பும் அண்ணல்,

சேண்உயர்நெடுநாள் தீர்ந்த

திரிதலைச் சிறுவன் தன்னைக்

காணிய,விரைவில் செல்லும்

கனகமால்வரையும் ஒத்தான்.

மாணிஆம் வேடம்தாங்கி - பிரமசாரியாகியகோலத்தை மேற்கொண்டு’ மலர் அயற்கு - பிரம்ம தேவனைவிட’ அறிவு மாண்டு - அறிவால் மாட்சிமை பெற்று’ உலகுக்கெல்லாம் ஓர்

ஆணியாய் - எல்லா உலகங்களுக்கும் ஒப்பற்ற அச்சாணிபோல அமைந்து' அறம் பொருள் - அறத்தையும் பொருளையும்' நிரப்பும் அண்ணல் - பூரணத்துவமடையச் செய்யும் அனுமன்' நெடுநாள் தீர்ந்த- நீண்ட நாட்களுக்குமுன் பிரிந்து போன' சேண்உயர் - மிக்க உயர்வினையுடைய ' திரிதலைச் சிறுவன்தன்னை - திரிகூடம் என்னும் புதல்வனை' காணிய விரைவில் செல்லும் - காண்பதற்காக வேகமாகப் போகிற' கனகமால் வரையும் ஒத்தான் - பொன் வடிவமான மேருமலையைப் போன்றிருந்தான்.

அனுமன் திரிகூடமலையாகிய மைந்தனைத் தேடிச் செல்லும் மேருமலையைப் போன்றிருந்தான். நிலையில் திரியாது அடங்கும் அனுமனை மேருமலை என்றும் இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் ஆதாரமானது அனுமன் மேற்கொண்ட பிரம்மசரியம் ஆதலின் ஆணி என்றும் கூறினான். அயற்கு அறிவு மாண்டு - உருபு மயக்கம் (தொல் - சொல் 111) இராமபிரான் அனுமனை 'ஆணி இவ்வுலகுக்கு எல்லாம்' என முன்பு கூறினான். (26) (3769).

4767. **மழைகிழித்து உதிர மீன்கள்**

மறிகடல்பாய, வானம்

குழைவுற, திசைகள்கீற

மேருவும்குலுங்க, கோட்டின்

முழையுடைக்கிரிகள் முற்ற

முடுக்குவான், முடிவுக்காலத்து

அழிவுறக்கடுக்கும் வேகத்

தாதையும்அனையன் ஆனான்.

மழைகிழித்துஉதிர - மேகத்தைப் பிளந்துகொண்டு உதிரும்படி' மீன்கள் - நட்சத்திரங்கள்' மறிகடல் பாய - அலைகள் மடங்கும் கடலிலே பாயவும்' வானம் குழைவுற - ஆகாயம் நெகிழ்ச்சியடையவும்' திசைகள் கீற - திக்குகள் கிழிபடவும்' மேருவும் குலுங்க - மேருமலையும் அசையவும்' கோட்டின் முழை உடைக் கிரிகள் முற்ற - சிகரங்களில் குகைகளை உடையமலைகள் நீரால் சூழப் பெறவும்' முடுக்குவான் - வேகமாகச் செல்லும்அனுமன்' முடிவுக் காலத்து - ஊழிக் காலத்தில்' அழிவுறக் கடுக்கும் -யாவும் அழிந்துபடச் சினந்து செல்கின்ற' வேகத் தாதையும்அனையன்ஆனான் - வேகத்தையுடைய (தன்) தந்தையான வாயுதேவனைப் போலவும் இருந்தான்.

வான் வெட்டவெளியன்று. வெளியில் உள்ள நுண்ணிய பூதம். இதுகாற்றினும் நுட்பமானது. வானத்தை வெறும் வெளியாகக் கருதியவர்கள் அதற்குக் குழைவு இன்மையின் வான் என்பதற்கு விண்ணுலகு எனப் பொருள் கொண்டனர். (27)

4768. **தடக்கைநால் - ஐந்து பத்துத்**

தலைகளும்உடையான் தானே

அடக்கிஐம்புலன்கள் வென்ற

தவப்பயன்அறுத லோடும்,

கெடக்குறி ஆக,மாகம்

கிழக்குஎழுவழக்கு நீங்கி,

வடக்கு எழுந்துஇலங்கை செல்லும்

பிரிதிவானவனும் ஒத்தான்.

நால்ஐந்துதடக்கை -இருபது பெரிய கரங்களையும்' பத்துத் தலைகளும் - பத்துத் தலைகளையும்' உடையான் - உடைய இராவணன்' ஐம்புலன்கள் - ஐந்து புலன்களையும்' தானே அடக்கி - பிறர் உதவியின்றி ஒன்றியாக இருந்து ஒடுக்கி' வென்ற தவப்பயன் - வெற்றி கொண்ட தவத்தின் பயனான புண்ணியம்' அறுதலோடும் - அற்றுத் தீர்ந்தவுடன்' கெடக்குறி ஆக - உற்பாதமாக' மாகம் - வானத்தில்' கிழக்கு எழு வழக்கு நீங்கி- கீழ்த்திசையில் உதித்தலாகிய இயல்பிலிருந்து விலகி' வடக்கு எழுந்து - வடக்குத் திசையில் உதித்து' இலங்கை செல்லும் - இலங்கை நோக்கிப் போகும்' பிரிதி வானவனும் ஒத்தான் - சூரிய பகவானை ஒத்திருந்தான்.'

தவப்பயன் -புண்ணியம். கெடக்குறி - ஒரு சொல். கெடலூழ் என்பதுபோல. (பெருங்கதை 25-168) கெட - கெட்டுப் போக' குறி - அடையாளமாய் என்றும் கூறலாம். (28)

4769. **புறத்துஉறல்அஞ்சி, வேறுஓர்**

அரணம்புக்கு உறைதல் போக்கி,

மறத்தொழில்அரக்கன் வாழும்

மாநகர்,மனுவின் வந்த

திறத் தகைஇராமன் என்னும்

சேவகற்பற்றி, செல்லும்

அறத்தகை அரசன்திண்போர்

ஆழியும்அனையன் ஆனான்.

புறத்துஉறல்அஞ்சி -வெளிப்படையாக இருக்கப் பயப்பட்டு' வேறுஓர்அரணம் புக்கு - மற்றொரு பாதுகாப்பான இடத்தில்' உறைதல் போக்கி -தங்குதலை விலக்கியும்' மனுவின் வந்த - மனிதனைப் போன்றுமண்ணுலகுக்கு வந்த' திறத்தகை இராமன்என்னும் சேவகற் பற்றி - வலிமையும் தகுதியும் பெற்ற இராமபிரான் என்னும்வீரனை இறுகப் பிடித்துக் கொண்டு' மறத்தொழில் அரக்கன் வாழும் -வீரத்தையே தொழிலாகக் கொண்ட இராவணன் வாழுகின்ற' மாநகர் - பெரியநகருக்கு' செல்லும் - போகிற' அறத்தகையரசன் - தகுதிபெற்றதருமராஜனின்' திண்போர் ஆழியும் அனையன் ஆனான் - வலிமை மிக்கபோர்புரியும் ஆணைச் சக்கரத்தை (அனுமன்) ஒத்திருந்தான்.

தருமராசன்(யமன்) இலங்கைக்குள் அடியெடுத்து வைத்தான் என்பது குறிப்பு. ஆதியில் தர்ம தேவதைஎன்றும் கூறலாம். திருமாலின் சக்கரம் என்று உரை காண்பது அபசாரம் மனுவின் - மனிதனைப்போல், மனுகுலம் என்றும் கூறலாம். (29)

4770. **கேழ்உலாம் முழு நிலாவின்**

கிளர்ஒளிஇருளைக்கீற,

பாழி மா மேரு நாண,

விசும்புஉறப் படர்ந்த தோளான்,

ஆழி சூழ் உலகம்எல்லாம்

அருங் கனல்முருங்க உண்ணும்

ஊழி நாள்,வடபால் தோன்றும்

உவா முழுமதியும் ஒத்தான்.மூ

கேழ் உலாம் முழுநிலாவின் கிளர்ஒளி - எல்லா இடத்திலும் ஒளிபரப்பும் பூரண சந்திரிகையைப் போன்று கிளர்ச்சிபெற்ற (அனுமனின்) ஒளியானது' இருளைக் கீற - இருளைப் போக்கவும்' பாழி மா மேரு நாண -பருத்த மேருமலை நாணம் அடையவும்' விசும்பு உறப் படர்ந்த தோளான் -ஆகாயம் அளாவும் தோளையுடைய அனுமான்' ஆழிசூழ் உலகம் எல்லாம் முருங்க - கடலால் சூழப்பெற்ற எல்லா உலகங்களும் அழிய' அருங்கனல் உண்ணும் ஊழி நாள் - நெருப்பு விழுங்கும் ஊழிக் காலத்தில்' வடபால் தோன்றும் உவாமுழு மதியம் ஒத்தான் - வடதிசையில் உதிக்கும் பௌர்ணமிக் காலத்து முழு மதியையும் ஒத்திருந்தான்.

அனுமன்ஊழிக்காலத்தில் வடக்குத் திக்கில் உதிக்கும் முழுமதி போன்றிருந்தான். கேழ் - நிறம் (இங்கே வெண்மை ஒளி) மேரு, அனுமனுக்கு உவமை. நிலவு என்றது சந்திரிகையை - சந்திரனையன்று. சந்திரன் போன்றஒளியுடையவன். சந்திரன் போன்றிருந்தான் என்பது சிறப்பன்று(30).

4771. **அடல்உலாம்திகிரி மாயற்கு**

அமைந்ததன் ஆற்றல் காட்ட,

குடல் எலாம்அவுணர் சிந்த,

குன்றுஎனக்குறித்து நின்ற

திடல் எலாம்தொடர்ந்து செல்ல,

சேண்விசும்பு ஒதுங்க, தெய்வக்

கடல் எலாம்கலங்க, தாவும்

கலுழனும் அனையன் ஆனான்.மூ

அடல்உலாம்திகிரி மாயற்கு - (அனுமன்) பகைவரை அடக்குவதில்மிக்க வல்லமை பரவிய சக்கரப்படை ஏந்திய திருமாலுக்கு' அமைந்த தன் ஆற்றல்காட்ட - அடங்கிய தன்னுடைய வன்மையைக் காண்பிக்க' அவுணர்எலாம் குடல் சிந்த - எல்லா அசுரர்களும் குடல் கலங்கவும்' குன்று எனக்குறித்து நின்ற - மலை என்று பேசப்பட்டு நிமிர்ந்து நிற்கின்ற' திடல் எலாம் தொடர்ந்து செல்ல - மேடுகள் யாவும் தொடர்ந்து போகவும்' விசும்பு சேண் ஒதுங்க - ஆகாயம் தூரத்தில் ஒதுங்கிக் கொள்ளவும்' தெய்வக் கடல் எலாம் கலங்க - தெய்வத் தன்மையுடைய எல்லாச் சமுத்திரங்களும் கலங்கவும்'தாவும் கலுழனும் - பறந்து சென்ற கருடனையும்' அனையன் ஆனான் - ஒத்தவன் ஆனான்.

அனுமன் -தோன்றா எழுவாய். சக்கரப்படை ஏந்திய திருமாலுக்குத்தன்னுடைய வலிமையைக் காட்டப் பறந்து சென்ற கருட பகவானைப்போல அனுமன் விளங்கினான். (31)

அனுமன் வானில்சென்ற காட்சி

4772. **நாலினோடுஉலகம் மூன்றும்**

நடுக்குற,அடுக்கு நாகர்

மேலின்மேல்நின்றகாறும்

சென்றகூலத்தன், 'விண்டு

காலினால் அளந்தவான

முகட்டையும்கடக்கக் கால

வாலினால் அளந்தான்' என்று

வானவர்மருள, சென்றான்.

நாலினோடு உலகம்மூன்றும் நடுக்குற - கீழ் ஏழு உலகங்களும் நடுக்கம் அடைய' நாகர் மேலின்மேல் நின்ற - தேவர்கள் மேலும் மேலும் சிறப்புடன் நிலைத்துள்ள' அடுக்கு காறும் - அடுக்கப்பெற்ற உலகம் வரையிலும்' சென்ற கூலத்தன் - பயணம் செய்த வாலையுடைய அனுமன்' விண்டு காலினால் அளந்த வானமுகட்டையும் கடக்க - திருமாலின் திருவடியால் அளந்த வானத்தின் உச்சியையும் கடப்பதற்கு' கால வாலினால் அளந்தான் என்று - காலபாசம் போன்ற வாலினால் அளந்து விட்டான் என்று' வானவர் மருளச் சென்றான் - தேவர்கள் வியப்படையப் போயினான்.

மாயன் காலால்அளந்த உலகத்தை அனுமன் வாலால் அளந்தானோ என்று வானவர் மருண்டனர். கூலம் - வால். விண்டு - திருமால். கால வால் -கால பாசத்தை ஒத்தவால(32).

4773. **விளித்துப்பின் வேலை தாவும்**

வீரன்வால், வேதம் எய்க்கும்

அளி, துப்பின் அனுமன் என்னும்

அருந்துணைபெற்றதாயும்,

களித்துப் புன்தொழில்மேல் நின்ற

அரக்கர்கண் ணுறுவர் என்ன

ஒளித்து, பின்செல்லும் கால

பாசத்தைஒத்தது அன்றே.

விளித்துப் பின்வேலை தாவும்- அறைகூவி பிறகு கடலைத் தாவுகின்ற' வீரன்வால் - வீரனுடைய வாலானது' வேதம் எய்க்கும் - வேதங்களை அறிந்துள்ள' அளி துப்பின் அனுமன் என்னும் - கருணையையும் உற்சாகத்தையும் உடைய அனுமனாகிய' அருந்துணை பெற்றதாயும் - அரிய

உதவியை அடைந்ததாய்' களித்துப்புன் தொழில்மேல்நின்ற அரக்கர் - கள்ளுண்டு களித்து, அற்பத் தொழிலை மேற்கொண்டஅரக்கர்கள்' கண்ணுறுவர் என்ன - கண்டு கொள்வார்களோ என்று கருதி'ஒளித்து பின் செல்லும் - மறைந்து அனுமனுக்குப் பின்னே போகின்ற'காலபாசத்தை ஒத்தது - யமனுடைய பாசத்தைப் போன்றிருந்தது.

அனுமன் வால்துப்பறியும் அரக்கர்களுக்கு அஞ்சி அனுமனுக்குப் பின்னே மறைந்து போகும் காலபாசத்தை ஒத்தது. துப்பு - அறிவை உணர்த்தி ஆராய்ச்சியை விளக்கிற்று. கள்ளுண்டு ஆராயும் இயல்பு பேசப்பெற்றது. இன் - அல்வழிச் சாரியை. துப்புத் தொழில் என்க. ஆராயும் தொழில். அன்று, ஏ - அசைகள். (33)

4774. மேருவை முழுதும் சூழ்ந்து,

மீதுற்றவேக நாகம்,

கார் நிறத்துஅண்ணல் ஏவ,

கலுழன் வந்துற்ற காலை

சோர்வுறு மனத்ததுஆகி

சுற்றியசுற்று நீங்கிப்

பேர்வுறுகின்றவாறும்

ஒத்தது,அப் பிறங்கு பேழ்வால்.

அப் பிறங்குபேழ்வால் - அந்த விளக்கமான பெரிய வால்'கார்நிறத்து அண்ணல்ஏவ - கரிய நிறத்தையுடைய திருமால் கட்டளையிட கலுழன் வந்து உற்ற காலை - கருட பகவான் வந்த சமயத்தில்' மேருவை முழுதும் சூழ்ந்து - மேருமலையை முற்றிலும் பற்றிக்கொண்டு' மீது உற்ற வேகநாகம் - சிகரத்திலே தங்கிய விடம் பெற்ற ஆதிசேடன்' சோர்வுறு மனத்ததாகி - தளர்ச்சியுற்ற மனத்தை உடையதாய்' சுற்றிய சுற்று நீங்கி - மேருமலையைச் சுற்றியிருந்த கட்டு விலகி' பேர்வுறுகின்ற ஆறும் ஒத்தது - நீங்கிப் போகின்ற தன்மையையும் ஒத்திருந்தது.

மேருமலையைப்பிணித்திருந்த ஆதிசேடன் கருடன் வந்ததும் பிணிப்பு நீங்கி விலகிச் செல்வதுபோல் அனுமன் வால் இருந்தது. வேகம் - நஞ்சு - அரவு கான்ற வேகம் (சிந்தாமணி 1274) விரைவு என்ற கூறினும் அமையும், (34)

4775. குன்றொடு குணிக்கும் கொற்றக்

குவவுத்தோள் குரக்குச் சீயம்,

சென்றுறு வேகத்திண்கால்

எறிதர,தேவர் வைகும்

மின்தொடர்வானத்து ஆன

விமானங்கள், விசையின் தம்மின்

ஒன்றொடு ஒன்றுஉடையத் தாக்கி,

மாக் கடல்உற்ற மாதோ.

குன்றொடுகுணிக்கும் - மலைகளுடன் ஒப்புமையாகப் பேசப்படும்' கொற்றக் குவவுத்தோள் - வெற்றியையுடைய பருத்த தோள்களை உடைய' குரக்குச் சீயம் - வானர சிங்கமாகிய அனுமன்' சென்றுஉறு வேகத் திண்கால் - செல்வதால் உண்டாகும் கடுங்காற்று' எறிதர - மோத (அதனால்)'மின்தொடர் வானத்து ஆன தேவர் வைகும் விமானங்கள் - மின்னல்இடையறாது இயங்கும் வானில் தேவர்கள் தங்கியுள்ள விமானங்கள்' விசையின் - வேகத்தால்' தம்மின் ஒன்றொடு ஒன்று உடையத் தாக்கி - தங்களுக்குள் ஒன்றுடன் ஒன்று உடையும்படி மோதி' மாக்கடல் உற்ற - கருங்கடலில் விழுந்தன.

அனுமன் வேகமாகச்செல்வதால் உண்டான பெருங்காற்று மோத அதனால் தேவர்களின் விமானங்கள் ஒன்றோடொன்று தாக்கிக் கடலில் விழுந்தன. மாது, ஓ -அசைகள். (35)

பெரியபுராணம்

பெரியபுராணம் என்பது சைவ சமய அடியார்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விவரிக்கும் நூல். இதற்குத் திருத்தொண்டர் புராணம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. சைவ சமய இலக்கியங்களைப் பன்னிரண்டு தொகுதிகளாகப் பகுத்துள்ளனர். இப்பகுப்பைப் பன்னிரு திருமுறை என்று அழைப்பர். இப்பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாகப் பெரியபுராணம் விளங்குகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும், சைவ சமய உலகிலும் மிகச் சிறந்த இடத்தைப் பெரியபுராணம் பெற்று விளங்குகின்றது. சிலப்பதிகாரத்தை அடுத்துப் பெரியபுராணத்தை மட்டுமே தமிழ்க்காப்பியமாக அறிஞர்கள் போற்றி உள்ளனர். தமிழ்நாட்டில் வாழ்ந்த சைவ அடியார்கள், அடியார்கள் வாழ்வில் நிகழ்ந்த சமய நிகழ்ச்சிகள், இறைவன் அடியார்க்கு அருள் செய்த இறைச் செயல்கள் ஆகிய இவற்றைத் தமிழ்ப் பண்பாடு சிறந்து விளங்கப் புலவர் இயற்றி உள்ளார். பல்லவர் காலத்தில் வாழ்ந்தவர்கள் அடியார்கள். இவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பிற்காலச் சோழர் காலத்தில் வாழ்ந்த புலவர் காப்பியமாகப் பாடி உள்ளார். அடியார்கள் வாழ்ந்த காலத்தில் இருந்து காப்பியம் உருவான காலம் வரை ஏறத்தாழ ஆறு அல்லது ஏழு நூற்றாண்டுகள் இடைவெளி உண்டு. இக்கால இடைவெளியில் வாழ்ந்த அடியார்களின் வரலாற்றை இரண்டு புலவர் பெருமக்கள் பாடி உள்ளனர். அவை:

1) சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை

2) நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி

என்பவையாகும்.

இந்த இரண்டு நூல்களும் பெரியபுராணத்திற்கு அடிப்படை நூல்கள் ஆகும்.

பெரியபுராணக் காப்பியம் பற்றிய அறிமுகமாக இந்தப் பாடப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

கதைச் சுருக்கம்

பொத்தப்பி என்னும் நாட்டில் உடுப்பூர் என்னும் ஊரில் நாகன் என்பவன் வேடர்குலத் தலைவனாக இருந்து மக்களைக் காத்து வருபவன். தத்தை, அவன் மனைவியாவாள். நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறில்லாமல் இருக்கவே, முருகனை வேண்டி விழா எடுத்தனர். அவர்களின் வேண்டுதலை ஏற்றுக் கொண்ட முருகன் அருள் புரிந்தான். அவர்களுக்கு அழகான வலிமை மிக்க ஆண்குழந்தை பிறந்தது. நாகன் அக்குழந்தையைத் தன் கைகளால் தூக்கும்போது திண் என்று இருந்தமையால் திண்ணன் என்று பெயரிட்டான். திண்ணன் வளர்ந்து குல மரபிற்கேற்ப வில், அம்பு, ஈட்டி, வாள் முதலான போர்ப் பயிற்சிகளைக் கற்றுச் சிறப்படைந்தான். நாகன் முதுமை காரணமாகத் தன் பதவியினைத் தன் மகனாகிய திண்ணனிடம் தந்து நாடாளும்படி பட்டம் சூட்டினான். இதனைக் கண்டு, தேவராட்டியும் வந்து, நலம் சிறக்க என வாழ்த்திச் சென்றாள்.

ஒரு நாள் திண்ணன் நாணன், காடன் ஆகிய நண்பர்களோடு வேட்டையாடச் சென்றார். வேட்டைக்காக விரித்த வலைகளை அறுத்துக்கொண்டு ஒரு பன்றி மட்டும் ஓடியது. விடாது துரத்திச் சென்று, புதருள் மறைந்த அந்தப்பன்றியைத் திண்ணன் தம் குறுவாளால் வெட்டி வீழ்த்தினார். இதனைக் கண்ட நண்பர்கள் வியந்து, திண்ணனின் வலிமையைப் பாராட்டினார்கள். அருகே ஓடும் பொன்முகலி ஆற்றையும் வானளாவ நிற்கும் காளத்தி மலையையும் கண்டு வியந்தார் திண்ணன். இதனைக் கண்ணுற்ற நாணன். இம் மலையின் மீது குடுமித் தேவர் இருக்கிறார். அவரைக் கும்பிடலாம் வா என்றான். மலை ஏறும்போது திண்ணனுக்கு மட்டும் புதுவிதமான இன்பமும் உணர்வும் ஏற்பட்டன. குடுமித் தேவருக்கு, சிவ கோசரியார் என்பவர் ஆகம விதிமுறைப்படி பூசை செய்வதனை நாணன் மூலம் அறிந்தார். மலையேறிய திண்ணன், குடுமித் தேவரைக் கண்டவுடன் அவரை வணங்கியும், கட்டித் தழுவியும் ஆடினார்' பாடினார். நண்பன் காடன் ஆற்றங்கரையில் தீயில் இட்டுப் பக்குவப் படுத்திய இறைச்சியைத் தன்னுடைய ஒரு கையில் எடுத்துக் கொண்டார், மறு கையில் வில் இருந்ததால் வாய் நிறைய ஆற்று நீரையும், அருகில் இருந்த மரத்தின் மலர்களைத் தலையில் செருகியும் கொண்டு வந்தார். குடுமித் தேவருக்குத் திருமஞ்சனமாகத் தன் வாய் நீரையும், அமுதமாகப் பன்றி இறைச்சியினையும் தலையில் சூடிய மலரை வழிபாட்டு மலராகவும் இட்டு மகிழ்ந்தார் திண்ணனார். பின் இரவு முழுவதும் வில்லேந்திக் காவல் புரிந்தார். காலையில் குடுமித் தேவருக்குத் திருவமுது தேடி வரப் புறப்பட்டார்.

வழக்கம் போல, பூசை புரிய வந்த சிவ கோசரியார் இறைவன் மீதிருந்த இறைச்சி முதலானவற்றைக் கண்டு வருந்தினார், புலம்பினார். பின் அவற்றை நீக்கித் தூய்மை செய்து பூசனை புரிந்து சென்றார். அடுத்து, திண்ணனாரும் வந்து இறைச்சி முதலானவற்றை வைத்து வழிபட்டார். மறுநாளும் இறைச்சி முதலானவை இருப்பது கண்டு வருந்திச் சிவ கோசரியார் இறைவனிடம் முறையிட்டு வீட்டிற்குச் சென்று உறங்கினார். அவரது கனவில் சிவபிரான் தோன்றித் திண்ணனாரின் அன்பு வழிபாட்டை நாளை மரத்தின் மறைவில் நின்று பார்ப்பாயாக என்று கூறி மறைந்தருளினார்.

ஆறாம் நாள் திருக்காளத்தி நாதர் திண்ணனாரின் அன்பின் பெருமையைக் காட்ட, வலக் கண்ணில் இருந்து உதிரம் பெருகும்படிச் செய்தார். அதனைக் கண்ட திண்ணனார், செய்வதறியாமல் திகைத்தார். பின் தம் கைகளால் துடைத்தாலும் பச்சிலை இட்டாலும் நிற்கவில்லையே என வருந்தி நின்றபோது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. உடனே தம் வலக்கண்ணை அம்பினால் அகழ்ந்து எடுத்து அப்பினார். உதிரம் நின்றுவிட்டது. இதைக் கண்டு மகிழ்ந்து ஆடினார். சிவபிரான் இடக்கண்ணிலும் உதிரம் பெருகும்படிச் செய்தார்.

தம் இடக்கண்ணையும் பெயர்த்து எடுத்து அப்பினால் உதிரம் நின்றுவிடும் என்று உணர்ந்தார். தம் மறு கண்ணையும் பெயர்த்துவிட்டால் இறைவனின் இடக்கண்ணைச் சரியாகக் கண்டறிய முடியாது என்பதால், அடையாளத்துக்காகத் தம் காலின் பெருவிரலை இறைவனின் உதிரம் பெருக்கும் கண் மீது ஊன்றிக் கொண்டார். அம்பினால் தம் இடக்கண்ணைப் பெயர்க்கத் தொடங்கினார். உடனே காளத்தி நாதர் நில்லு கண்ணப்ப என்று மூன்று முறை கூறித் திண்ணனாரைத் தடுத்தருளினார்.

இதனைக் கண்ட சிவ கோசரியார் தம்மை மறந்து சிவன் அருளில் மூழ்கித் திளைத்தார். அன்று முதல் இறைவனுக்கே தம் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

குறிப்பு :பொத்தப்பி நாடு : ஆந்திர மாநிலத்தின் இப்போதைய கடப்பை மாவட்டத்தில் புல்லம் பேட்டை வட்டத்தில் உள்ள ஒரு சிற்றூராகும்.

உடுப்பூர் : இவ்வூர் குண்டக்கல் - அரக்கோணம் ரயில் பாதையில் உள்ள இராசம்பேட்டைக்கு அருகில் உள்ளது. உடுக்கூர் என இன்று வழங்கப்படுகிறது.

கண்ணப்பநாயனார்புராணம்

பொத்தம்பி நாட்டைக் கண்ணப்பர் நாடு என்றே கூறுவர். 650

இந்த நாட்டில் கண்ணப்பர் வாழ்ந்த ஊர் உடுப்பி. இது சோலைகளும் குளங்களும் மிகுந்த ஊர். 651

குன்றத்து மக்கள் அங்கு வாழ்ந்துவந்தனர். அவர்கள் வேட்டைநாய் வைத்திருப்பர். பன்றி, புலி, கரடி, கடமை, மான் முதலான விலங்குகள் அங்குள்ள காடுகளில் வாழும். 652

புலி, யானை ஆகியவற்றின் குட்டிகளோடு அங்குள்ள சிறுவர்கள் விளையாடுவர். மகளிர் அங்குள்ள மான்களோடு விளையாடுவர். 653

அங்குள்ள வேட்டுவர் கொல், எறி, குத்து என்று சொல்லிக் கூச்சலிடுவர். துடி, கொம்பு, ஆகுளி ஆகிய இசைச்கருவிள் அங்கு முழங்கும். இவற்றுடன் அருவி கொட்டும் ஒலியும் கேட்கும். 654

இங்குள்ள வேடர் வழிப்பறி செய்து கொண்டுவந்த பசுக்களும், யானைகளும் அங்கு இடி போல் முழங்கும். 655

650 **மேலவர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்**

காவலர் திருக் காளத்திக் கண்ணப்பர் திரு நாடு என்பர்

நாவலர் புகழ்ந்து போற்றும் நல் வளம் பெருகி நின்ற

பூவலர் வாவி சோலை சூழ்ந்த பொத்தப்பி நாடு

651 **இத் திரு நாடு தன்னில் இவர் திருப் பதியாதென்னில்**
நித்தில அருவிச் சாரல் நீள் வரை சூழ்ந்த பாங்கர்
மத்த வெம் களிற்றுக் கோட்டு வன் தொடர் வேலி கோலி
ஒத்த பேர் அரணம் சூழ்ந்த முது பதி உடுப்பூர் ஆகும்

652 **குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ் செவி ஞமலி யாத்த**
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும்

653 **வன் புலிக் குருளையோடும் வயக் கரி கன்றினோடும்**
புன்றலைச் சிறு மகார்கள் புரிந்து உடன் ஆடல் அன்றி
அன்புறு காதல் கூற அணையும் மான் பிணைகளோடும்
இன்புற மருவி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும்

654 **வெல் படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டம் தோறும்**
கொல் எறி குத்து என்று ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும் சிறு கண் ஆகுளியும் கூடி
கல் எனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும்

655 **ஆறலைத்து உண்ணும் வேடர் அயற் புலங் கவர்ந்து கொண்ட**
வேறு பல் உருவின் மிக்கு விரவும் ஆன் நிரைகள் அன்றி
ஏறுடை வானம் தன்னில் இடிக் குரல் எழிலி யோடு
மாறுகொள் முழக்கங் காட்டும் மதக்கை மாநிரைகள் எங்கும்

இந்த வேடர் குலத்துக்குத் தலைவன் நாகன் 656

நாகன் தன் பண்பால் தவமுனி போன்றவன். தொழிலால் கொலைக்குற்றம் செய்பவன், சிங்கம் போன்றவன். அவன் மனைவி தத்தை. 657

மறவர் குடியில் பிறந்தவள். புலிப்பல் தாலி அணிந்திருந்தாள். மயில்-பீலி போன்ற கூந்தலை உடையவள். பெண்-சிங்கம் போன்றவள். 658

நாகன் தத்தை கணவன் மனைவியருக்கு இனிக் குழந்தைப் பேறு இருக்காது என்று மக்கள் பேசிக்கொண்டனர். அதனால் இவர்கள் இருவரும் குலதெய்வம் முருகனை வழிபட்டனர். 659

சேவல், மயில் படங்களைத் தோரணமாகக் கட்டி முருகன் முன் குரவை ஆடி விழா எடுத்தனர். 660

656 **மைச் செறிந்தனைய மேனி வன் தொழில் மறவர் தம்பால்**
அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடை வன் தோலார்
பொச்சை யின் நறவும் ஊனின் புழுக்கலும் உணவு கொள்ளும்
நச்சழற்பகழி வேடர்க்கு அதிபதி நாகன் என்பான்

657 **பெற்றியால் தவமுன் செய்தான் ஆயினும் பிறப்பின் சார்பால்**
குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலை நின்றுள்ளான்
வில் தொழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியும் தத்தை என்பாள்

658 **அரும் பெறல் மறவர் தாயத்தான்ற தொல் குடியில் வந்தாள்**
இரும் புலி எயிற்றுத் தாலி இடை இடை மனவு கோத்துப்
பெரும் புறம் அலையப் பூண்டான் பீலியும் குழையும் தட்டச்
சுரும்புறு படலை முச்சிச் சூர் அரிப் பிணவு போல்வாள்

659 **பொருவரும் சிறப்பின் மிக்கார் இவர்க்கு இனிப் புதல்வர் பேறே**
அரியது என்று எவரும் கூற அதற்படு காதலாலே
முருகலர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றில் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க் கடன் நெறியில் நிற்பார்

660 **வாரணச் சேவலோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்**

தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்

போரணி நெடுவேலோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்

பேரணங்கு ஆடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை

நாகனாருக்கு முருகன் அருளால் 661

கானவர் குலம் விளங்கும்படியாக, மகன் பிறந்தான். வெறிக்கூத்து ஆடி மக்கள் மகன் பிறப்பினை மக்கள் கொண்டாடினர் 662

யானைத் தந்த முத்தும், கரும்பு முத்தும் பொழிவது போல வானம் மழை பொழிந்தது. கானவர் துடி முழக்கிக் கொண்டாடினர். வானவர் துந்துமி முழக்கிக் கொண்டாடினர். 663

சுற்றத்தார் விழாக் கொண்டாடி மகிழ, தந்தை நான் குழந்தையை எடுத்துக்கொண்டான் 664

உலகம் போற்றும் குறிகள் குழந்தையிடம் தென்பட்டன. 665

661 **பயில் வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியாம் நாகற்கு**

எயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்தர் ஆன

மயிலுடைக் கொற்ற ஊர்தி வரையுரங் கிழித்த திண்மை

அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளினாலே

662 **கானவர் குலம் விளங்கத் தத்தைபால் கருப்பம் நீட**

ஊனமில் பலிகள் போக்கி உறுகடன் வெறி ஆட்டோ டும்

ஆன அத் திங்கள் செல்ல அளவில் செய் தவத்தினாலே

பான்மதி உவரி ஈன்றால் என மகப் பயந்த போது

663 **கரிப்பரு மருப்பின் முத்தும் கழை விளை செழுநீர் முத்தும்**

பொருப்பின் மணியும் வேடர் பொழி தரு மழையே அன்றி
வரிச் சுரும்பு அலைய வானின் மலர் மழை பொழிந்தது எங்கும்
அரிக்குறுந் துடியே அன்றி அமரர் துந்துபியும் ஆர்த்த

664 **அருவரைக் குறவர் தங்கள் அகன் குடிச் சீறூர் ஆயம்**
பெரு விழா எடுத்து மிக்க பெருங்களி கூறும் காலைக்
கருவரை காள மேகம் ஏந்தியது என்னத் தாதை
பொருவரைத் தோள்களாரப் புதல்வனை எடுத்துக் கொண்டான்

665 **கருங் கதிர் விரிக்கும் மேனி காமரு குழவி தானும்**
இரும்புலி பறழின் ஓங்கி இறவுளர் அளவே அன்றி
அரும் பெறல் உலகமெல்லாம் அளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவும் சாற்றும் தன்மையிற் பொலிந்து தோன்ற

கையில் தூக்கிய குழந்தை திண்ணிய (இறுக்கமான) உடல் பெற்றிருந்ததால் திண்ணன் என்று தந்தை நாகன் பெயர் சூட்டினான். மக்கள் அக்குழந்தைக்குப் பல வகையான அணிகலன்களை அணிவித்தனர். 666

மறக்குடி மரபுக்கு ஏற்ப இடுப்பில் வேப்பிலையைக் கோத்துக் கவடி என்னும் அணியாகக் கட்டிவிட்டு அழகாகக் குழந்தையை வளர்த்துவந்தனர். 667

தெய்வங்களுக்குப் பொங்கல் வைத்துப் படைத்து மகிழ்ச்சி பொங்கக் குழந்தையை வளர்த்துவந்தனர். 668

புலி நகத்தையும் முள்ளம்பன்றி முள்ளையும் கோத்துக் குழந்தை மார்பில் தாலி என்னும் அணிகலனாகக் கட்டிவிட்டனர். 669

மணி ஒலிக்கும் சதங்கை, காசு கொத்த அரைஞாண், தண்டை, குதம்பை முதலான அணிகலன்களுடன் குழந்தை திண்ணன் தெருவில் விளையாடிவந்தான். 670

666 **அண்ணலைக் கையில் ஏந்தற்கு அருமையால் உரிமைப் பேரும்**
திண்ணன் என்றியம்பும் என்னத் திண்சிலை வேடர் ஆர்த்தார்
புண்ணியப் பொருளாய் உள்ள பொருவில் சீர் உருவினானைக்
கண்ணினுக்கு அணியாத் தங்கள் கலன்பல அணிந்தார் அன்றே

667 **வரையுறை கடவுட் காப்பு மறகுடி மரபில் தங்கள்**
புரையில் தொல் முறைமைக்கு ஏற்பப் பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பு இழைத்து இடையே கோத்த
அரை மணிக் கவடி கட்டி அழகுற வளர்க்கும் நாளில்

668 **வருமுறைப் பருவம் தோறும் வளமிகு சிறப்பில் தெய்வப்**
பெருமடை கொடுத்துத் தொக்க பெருவிறல் வேடர்க்கெல்லாம்
திருமலி துழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே
அருமையில் புதல்வர் பெற்ற ஆர்வமும் தோன்ற உய்த்தார்

669 **ஆண்டு எதிர் அணைந்து செல்ல விடும் அடித் தளர்வு நீங்கிப்**
பூண் திகழ் சிறு புன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண் முளவு முள் அரிந்து கோத்த
நாண்டரும் எயிற்றுத் தாலி நலங்கிளர் மார்பில் தூங்க

670 **பாசொளி மணியோடு ஆர்த்த பன் மணிச் சதங்கை ஏங்க**
காசொடு தொடுத்த காப்புக் கலன் புனை அரைஞாண் சேர்த்தித்
தேசுடை மருப்பில் தண்டை செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலம் காட்டி மறுகிடை ஆடும் நாளில்

தாய் தந்தையர் மனம் குளிறுமாறு கங்கை ஆற்றைக் காட்டிலும் புனிதமான வாய் ஊறல் வளர மழலை பேசி மகிழ்வித்தான். 671

குகையிலிருந்து வெளிவரும் சிங்கம் போலக் கைகளை நீட்டினான். தந்தை தன் கையிலிருந்த இளந்தளிர் இலைகளால் அடித்தார். திண்ணன் அழுதான். தந்தை தித்தனுக்கு முத்தம் தந்தார். 672

வேட்டை நாயைப் பிடித்துக்கொண்டு சுற்றினான். சிறுமியர் விளையாடும் வண்டலைக் காலால் அழுத்தான். சிறுவர்களோடு சேர்ந்துகொண்டு குரம்பை வீடுகள் எங்கும் திரிந்தான். 673

ஐந்து ஆண்டுகள் நிறைவுற்றதும் மறச் சிறுவர்களோடு சேர்ந்துகொண்டு காட்டுக்குள் சென்றான். 674

முயல்குட்டி, பன்றிக்குட்டி, புலிக்குட்டி, செந்நாய்க்குட்டி முதலானவற்றைப் பின்தொடர்ந்து ஓடுவான். பிடித்துக்கொண்டு வந்து தன் முற்றத்தில் கட்டிவைத்து விளையாடுவான். 675

671 **தண் மலர் அலங்கல் தாதை தாய் மனம் களிப்ப வந்து**
புண்ணிய கங்கை நீரின் புனிதமாம் திருவாய் நீரில்
உண்ணனைந்து அமுதம் ஊறி ஒழுகிய மழலைத் தீஞ் சொல்
வண்ண மென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார்

672 **பொரு புலிப் பார்வைப் பேழ்வாய் முழை எனப் பொற்கை நீட்டப்**
பரிஉடைத் தந்தை கண்டு பைந்தழை கைக் கொண்டோ ச்ச
இரு சுடர்க் குறு கண் தீர்க்கும் எழில் வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்தம் அத்தாய் வாய் முத்தம் கொள்ள மாற்றி

673 **துடிக் குறடு உருட்டி ஓடித் தொடக்கு நாய்ப் பாசம் சுற்றிப்**
பிடித்து அறுத்து எயினப் பிள்ளைப் பேதையர் இழைத்த வண்டல்
அடிச் சிறு தளிரால் சிந்தி அருகுறு சிறுவரோடும்
குடிச் செறு குரம்பை எங்கும் குறு நடை குறும்பு செய்து

674 **அனையன பலவும் செய்தே ஐந்தின் மேல் ஆன ஆண்டின்**
வனை தரு வடிவார் கண்ணி மறச் சிறு மைந்த ரோடும்
சினை மலர்க் காவுகள் ஆடி செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனை மருப் புழலை வேலிப் புறச்சிறு கானிற் போகி

675 **கடு முயல் பறழினோடுங் கான ஏனத்தின் குட்டி**
கொடு வரிக் குருளை செந்நாய் கொடுஞ் செவிச் சாபம் ஆன
முடுகிய விசையில் ஓடித் தொடர்ந்து உடன் பற்றி முற்றத்து

இடு மரத் திரளில் கட்டி வளப்பன எண்ணிலாத

அந்தி வந்ததும் அகில் குகை ஊட்டித் திண்ணனை உறங்கச் செய்வர். காலையில் குறத்திப் பாட்டி உணவு ஊட்டுவாள். திண்ணனுக்கு வில்-பயிற்சிப் பருவம் வந்தது. 676

திண்ணனுக்கு வில்பயிற்சி தரத் தக்கவரைத் தந்தை தேர்ந்தெடுக்க விரும்பினான். 677

செய்தி பறைசாற்றப்பட்டது. 678

கற்பிக்கும் பணிக்காக வேடர் தலைவன் தரும் செல்வ வளங்களையும், உணவு வகைகளையும் துய்ப்பதற்காகப் பல வேடர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு வந்தனர். 679

வில் பயிற்சி தொடங்குவதைத் தந்தை விழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்தான். 680

676 **அலர் பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையும் ஆட்டிக்**
குலமுது குறத்தி ஊட்டிக் கொண்டு கண் துயிற்றிக் கங்குல்
புலர ஊன் உணவு நல்கிப் புரி விளையாட்டின் விட்டுச்
சில முறை ஆண்டு செல்ல சிலை பயில் பருவம் சேர்ந்தார்

677 **தந்தையும் மைந்தனாரை நோக்கித் தன் தடித்த தோளால்**
சிந்தை உள் மகிழப் புல்லிச் சிலைத் தொழில் பயிற்ற வேண்டி
முந்தை அத் துறையில் மிக்க முதியரை அழைத்துக் கூட்டி
வந்த நாள் குறித்தது எல்லாம் மறவர்க்குச் சொல்லி விட்டான்

678 **வேடர் தம் கோமான் நாதன் வென்றி வேள் அருளால் பெற்ற**
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன் வில் பிடிக்கின்றான் என்று
ஆடியல் துடியும் சாற்றி அறைந்த பேர் ஓசை கேட்டு
மாடுயர் மலைகள் ஆளும் மறக் குலத் தலைவர் எல்லாம்

679 **மலை படு மணியும் பொன்னும் தரளமும் வரியின் தோலும்**
கொலை புரி களிற்றுக் கோடும் பீலியின் குவையும் தேனும்
தொலைவில் பல் நறவும் ஊனும் பழங்களும் கிழங்கும் துன்றச்

சிலை பயில் வேடர் கொண்டு திசை தொறும் நெருங்க வந்தார்

680 **மல்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திட மாறில் சீறூர்**
எல்லையில் அடங்கா வண்ணம் ஈண்டினர் கொணர்ந்தார் எங்கும்
பல்பெருங் கிளைஞர் போற்றப் பராய்க் கடன் பலவும் செய்து
வில் விழா எடுக்க என்று விளம்பினான் வேடர் கோமன்

சிவன் வில் நாணால் மேரு மலையை மத்தாக்கிக் கடலைக் கடைந்தபோது முதலில் நஞ்சும், பின்னர் அமுதமும் வெளிப்பட்டது போலச் செயல்படக் கூடியது வில். இந்தகைய வில்லைத் திண்ணனுக்குக் காப்புச் செய்தனர். 681

புலி நரம்பினைத் திண்ணன் கைகளில் காப்பு-நூலாகக் கட்டினர். 682

ஐவன அரிசி, புல்லரிசி, தினை, மூங்கில் அரிசி முதலானவற்றால் சமைத்த உணவு வந்தவர்களுக்கு விருந்தாகப் படைக்கப்பட்டது. 683

சிலர் தினைமாவும் தேனும் கலந்து உண்டனர். சிலர் வெந்த சோற்றைத் தேனோடு சேர்த்து உண்டனர். விளாம்பழம், ஈயல், முதலான உணவினைச் சிலர் விரும்பி உண்டனர். 684

அயலூரிலிருந்தும் உள்;ரிலிந்தும் வந்த எயினரும் எயிற்றியரும் உண்டபின் நறவுக் கள் உண்டு மகிழ்ந்தனர். 685

681 **பான்மையில் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினைஞர் ஏந்த**
தேனலர் கொன்றையார் தம் திருச்சிலைச் செம்பொன் மேரு
வானது கடலின் நஞ்சும் ஆக்கிட அவர்க்கே பின்னும்
கான ஊன் அமுதம் ஆக்கும் சிலையினைக் காப்புச் செய்தார்

682 **சிலையினைக் காப்புக் கட்டும் திண் புலி நரம்பில் செய்த**
நலமிகு காப்பு நன்னாண் நாகனார் பயந்த நாகர்
குலம் விளங்கு கரிய குன்றின் கோலம் முன்கையில் சேர்த்தி
மலை உறை மாக்கள் எல்லாம் வாழ்த்த எடுத்து இயம்பினார்கள்

683 **ஐவன அடிசில் வெவ்வேறு அமைந்தன புற்பாற் சொன்றி**

மெய் வரைத் தினை மென் சோறு மூங்கில் வன் பதங்கள் மற்றும்
கைவினை எயினர் ஆக்கிக் கலந்த ஊன் கிழங்கு துன்றச்
செய் வரை உய்ப்ப எங்கும் கலந்தனர் சினவில் வேடர்

684 செம் தினை இடியும் தேனும் அருந்துவார் தேனில் தோய்த்து
வெந்த ஊன் அயில்வார் வேரி விளங்கனி கவளம் கொள்வார்
நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார் வெவ்வேறு
அந்தமில் உணவின் மேலோர் ஆயினர் அளவிலார்கள்

685 அயல் வரைப் புலத்தின் வந்தார் அருங்குடி இருப்பின் உள்ளார்
இயல் வகை உணவில் ஆர்ந்த எயிற்றியர் எயினர் எல்லாம்
உயர் கதிர் உச்சி நீங்க ஒழிவில் பல் நறவு மாந்தி
மயலுறு களிப்பின் நீடி வரிசிலை விழவு கொள்வார்

பச்சை இலைகளால் செய்யப்பட்டிருந்த தழையாடையைத் திண்ணன் இடையில் அணிந்திருந்தார். தலையில் மலர் சூடியிருந்தார். மார்பில் தோலாடை அணிந்திருந்தார். கவடி என்னும் கலசத்தை அணிந்திருந்தார். வில்லுக்குப் பக்கத்தில் சென்றார். 686

தொண்டக முரசு, கொம்பு, துடி, புல்லாங்குழல் முதலான இசைக் கருவிகள் முழங்கின. மறவர்கள் திண்ணனை அழைத்துக்கொண்டு ஊரை வலம்வந்தனர். 687

குன்ற மக்கள் விழாக் கொண்டாடினர். கொடிச்சியர் குரவை ஆடினர். இவ்வாறு வில்விழா ஏழு நாள் கொண்டாடப்பட்டது. 688

ஏழாம் நாள் உச்சிப் பொழுதில் திண்ணனைக் கையில் வில்லைப் பிடிக்களச் செய்தனர். 689

அன்று முதல் மலையோரப் பகுதிக்குச் சென்று திண்ணன் வில்வித்தை கற்றுவந்தான். 690

686 பாசிலைப் படலைச் சுற்றிப் பன் மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத் தோல் கட்டி கவடி மெய்க் கலன்கள் பூண்டார்
மாசில் சீர் வெட்சி முன்னா வருதுறைக் கண்ணி சூடி
ஆசில் ஆசிரியன் ஏந்தும் அடற் சிலை மருங்கு சூழ்ந்தார்

687 **தொண்டக முரசும் கொம்பும் துடிகளும் துளை கொள் வேயும்**
எண்டிசை நிறைந்து விம்ம எழுந்த பேர் ஒலியினோடும்
திண்டிறல் மறவர் ஆர்ப்புச் சேண் விசும்பு இடித்துச் செல்லக்
கொண்ட சீர் விழவு பொங்கக் குறிச்சியை வலம் கொண்டார்கள்

688 **குன்றவர் களி கொண்டாடக் கொடிச்சியர் துணங்கை ஆட**
துன்றிய மகிழ்ச்சியோடும் சூர் அரமகளிர் ஆட
வென்றி வில் விழவினோடும் விருப்புடை ஏழாம் நாளாம்
அன்றிரு மடங்கு செய்கை அழகுற அமைத்த பின்னர்

689 **வெங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில் எங்கும்**
மங்கல வாழ்த்து மல்க மருங்கு பல்லியங்கள் ஆர்ப்பத்
தங்கள் தொல் மரபின் விஞ்சைத் தனுத் தொழில் வலவர் தம்பால்
பொங்கொளிக் கரும் போர் ஏற்றைப் பொருசிலை பிடிப்பித்தார்கள்

690 **பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன் முன் செய்த**
வில் தொழில் களத்தில் நண்ணி விதிமுறை வணங்கி மேவும்
அற்றை நாள் தொடங்கி நாளும் அடல் சிலை ஆண்மை முற்றக்
கற்றனர் என்னை ஆளும் கானவர்க்கு அரிய சிங்கம்

பச்சை இலைகளால் செய்யப்பட்டிருந்த தழையாடையைத் திண்ணன் இடையில் அணிந்திருந்தார். தலையில் மலர் சூடியிருந்தார். மார்பில் தோலாடை அணிந்திருந்தார். கவடி என்னும் கலசத்தை அணிந்திருந்தார். வில்லுக்குப் பக்கத்தில் சென்றார். 686

தொண்டக முரசு, கொம்பு, துடி, புல்லாங்குழல் முதலான இசைக் கருவிகள் முழங்கின. மறவர்கள் திண்ணனை அழைத்துக்கொண்டு ஊரை வலம்வந்தனர். 687

குன்ற மக்கள் விழாக் கொண்டாடினர். கொடிச்சியர் குரவை ஆடினர். இவ்வாறு வில்விழா ஏழு நாள் கொண்டாடப்பட்டது. 688

ஏழாம் நாள் உச்சிப் பொழுதில் திண்ணனைக் கையில் வில்லைப் பிடிக்களச் செய்தனர். 689

அன்று முதல் மலையோரப் பகுதிக்குச் சென்று திண்ணன் வில்வித்தை கற்றுவந்தான். 690

686 பாசிலைப் படலைச் சுற்றிப் பன் மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத் தோல் கட்டி கவடி மெய்க் கலன்கள் பூண்டார்
மாசில் சீர் வெட்சி முன்னா வருதுறைக் கண்ணி சூடி
ஆசில் ஆசிரியன் ஏந்தும் அடற் சிலை மருங்கு சூழ்ந்தார்

687 தொண்டக முரசும் கொம்பும் துடிகளும் துளை கொள் வேயும்
எண்டிசை நிறைந்து விம்ம எழுந்த பேர் ஒலியினோடும்
திண்டிறல் மறவர் ஆர்ப்புச் சேண் விசும்பு இடித்துச் செல்லக்
கொண்ட சீர் விழவு பொங்கக் குறிச்சியை வலம் கொண்டார்கள்

688 குன்றவர் களி கொண்டாடக் கொடிச்சியர் துணங்கை ஆட
துன்றிய மகிழ்ச்சியோடும் சூர் அரமகளிர் ஆட
வென்றி வில் விழவினோடும் விருப்புடை ஏழாம் நாளாம்
அன்றிரு மடங்கு செய்கை அழகுற அமைத்த பின்னர்

689 வெங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில் எங்கும்
மங்கல வாழ்த்து மல்க மருங்கு பல்லியங்கள் ஆர்ப்பத்
தங்கள் தொல் மரபின் விஞ்சைத் தனுத் தொழில் வலவர் தம்பால்
பொங்கொளிக் கரும் போர் ஏற்றைப் பொருசிலை பிடிப்பித்தார்கள்

690 பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன் முன் செய்த
வில் தொழில் களத்தில் நண்ணி விதிமுறை வணங்கி மேவும்
அற்றை நாள் தொடங்கி நாளும் அடல் சிலை ஆண்மை முற்றக்
கற்றனர் என்னை ஆளும் கானவர்க்கு அரிய சிங்கம்

வேடர் தலைவன் நாகன் தன் மகன் திண்ணனை அழைத்துவருமாறு ஆணையிட்டான். அத்துடன் தேவராட்டி முதுமகளையும் அழைத்துவருமாறு கூறினான். தலைவன் ஆணை கேட்ட தேவராட்டி விரைந்து வந்தாள். 696

தேவராட்டி காட்டுத் தளிகளைத் தலையில் சூடியிருந்தாள். மான் கொம்பில் அறுத்த குழையைக் காதில் அணிந்திருந்தாள். நெற்றியில் மான் வயிற்றில் பிறந்த அரிதாரப் பொட்டு வைத்திருந்தாள். முள்ளம்பன்றி முள்ளைக் கோத்துச் செய்த மணிவடத்தைக் கழுத்தில் அணிந்திருந்தாள். சரிந்த முலை. மரத்தின் தோலால் ஆன ஆடையில் மயில்பீலி கோத்தமைத்த ஆடை அணிந்திருந்தாள். பூங்கொத்து கொடுத்து வேடர் தலைவனை வணங்கினாள். 697

நலம் பெறுக என்று தலைவன் நாகன் அவளை வாழ்த்தினான். தாங்கள் அளித்த ஈயல், கள், மலைவளம் முதலான அனைத்தும் பெற்று மகிழ்வாக வாழ்கிறேன், தாங்கள் அழைத்த பணி யாது என வினவினாள். 698

என் மகன் திண்ணன் வேடர்குலத் தலைமைப் பொறுப்பினை ஏற்கின்றான். அவன் தன் வேட்டையில் விரும்பியதைப் பெறவேண்டும் என்று காட்டிலுள்ள தெய்வங்களைக்குப் பலி ஊட்டுக என்றான். 699

நான் வரும்போதே நல்ல குறிகள் தோன்றின. காட்டிலுள்ள கொற்றவைத் தெய்வங்கள் மகிழப் பலி ஊட்டுவதற்கு வேண்டிய அனைத்தையும் நாகனிடம் பெற்றுச் சென்றாள். 700

696. சிலை மறவர் உரை செய்ய நாகன் தானும் திண்ணனை முன் கொண்டுவரச் செப்பி விட்டு

மலை மருவு நெடும் கானில் கன்னி வேட்டை மகன் போகக் காடு பலி மகிழ்வு ஊட்ட

தலை மரபின் வழி வந்த தேவராட்டிதனை அழைமின் என அங்குச் சார்ந்தோர் சென்று

நிலைமை அவள் தனக்கு உரைப்ப நரை மூதாட்டி நெடிது வந்து விருப்பினோடும் கடிது வந்தாள்

697.கானில் வரித்தளிர் துதைந்த கண்ணி சூடிக் கலை மருப்பின் அரிந்த குழை காதில் பெய்து

மானின் வயிற்று அரிதாரத் திலகம் இட்டு மயில் கழுத்து மனவு மணி வடமும் பூண்டு

தான் இழிந்து இரங்கி முலை சரிந்து தாழத் தாழைப்பீலி மரவுரி மேல் சார எய்திப்

பூ நெருங்கு தோரை மலி சேடை நல்கிப் போர் வேடர் கோமானைப் போற்றி நின்றாள்

698. நின்ற முதுகுறக்கோலப் படிமத்தாளை நேர் நோக்கி அன்னை நீ நிரப்பு நீங்கி

நன்று இனிதின் இருந்தனையோ என்று கூறும் நாகன் எதிர் நலம் பெருக வாழ்த்தி நல்ல

மென் தசையும் ஈயலொடு நறவும் வெற்பில் விளை வளனும் வேண்டிற்று எல்லாம்

அன்று நீ வைத்தபடி பெற்று வாழ்வேன் அழைத்த பணி என் என்றாள் அணங்கு சார்ந்தாள்

699.கோட்டமில் என்குல மைந்தன் திண்ணன் எங்கள் குலத் தலைமை யான் கொடுப்பக்கொண்டு பூண்டு

பூட்டுறு வெஞ் சிலை வேடர் தம்மைக் காக்கும் பொருப்புரிமை புகுகின்றான் அவனுக்கு என்றும்

வேட்டை வினை எனக்கு மேலாக வாய்த்து வேறு புலங் கவர் வென்றி மேவு மாறு

காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக் காடு பலி ஊட்டு என்றான் கவலை இல்லான்

700மற்று அவன்தன் மொழி கேட்ட வரைச் சூராட்டி மனமகிழ்ந்து இங்கு அன்போடு வருகின்றேனுக்கு

எற்றையினுங் குறிகள் மிக நல்ல ஆன இதனாலே உன் மைந்தன் திண்ணனான வெற்றி வரிச்

சிலையோன் நின் அளவில் அன்றி மேம்படுகின்றான் என்று விரும்பி வாழ்த்திக்

கொற்றவன் தெய்வங்கள் மகிழ ஊட்ட வேண்டுவன குறைவின்றிக் கொண்டு போனாள்

குறத்தி முதியவள் போன பின்பு திண்ணன் வந்து தந்தையை வணங்கினான். தந்தை மகனைப் புலித்தோல் இருக்கையில் அமரச் செய்தான். 701

மகனிடம் தந்தை கூறலானான். எனக்கு மூப்பு வந்துவிட்டது. வேட்டையாடும் வலிமை எனக்கு இல்லை. எனவே என் தலைமைப் பொறுப்பினை குலவழியில் ஏற்றுக்கொள் என்றான். 702

குலப் பெருமையைக் காப்பாற்ற உள்ளம் கொண்ட திண்ணன் தந்தையிடம் வாளையும், தலைவன் அணியும் தோலையும் பெற்றுக்கொண்டான். அவனிடம் தந்தை கூறுகிறார். 703

நம்முடைய சுற்றத்தார் மீது பரிவு காட்டு. பகை வென்று கொண்ட வளத்துடன் சிறப்பாக வாழ்க. வேடர்களுடன் உடனே வேட்டைக்குச் செல் – என்று கூறினான். 704

திண்ணன் தந்தையை வணங்கினான். நீராடிய பின்னர் இரவில் உறங்கினான். விடிந்ததும் தொழிலில் வல்லவர்களுடன் வேட்டைக்குப் புறப்பட்டான். 705

701. தெய்வ நிகழ் குறமுதியாள் சென்ற பின்பு திண்ணனார் சிலைத் தாதை அழைப்பச் சீர்கொள்

மைவிரவு நறுங் குஞ்சி வாசக் கண்ணி மணி நீல ஒன்று வந்தது என்னக்

கைவிரவு சிலை வேடர் போற்ற வந்து காதல் புரி தாதை கழல் வணங்கும் போதில்

செய்வரை போல் புயம் இரண்டும் செறியப் புல்லிச் செழும் புலித்தோல் இருக்கையின் முன்சேர வைத்தான்

702.முன் இருந்த மைந்தன் முகம் நோக்கி நாகன் மூப்பு எனை வந்து அடைந்தலினால் முன்புபோல

என்னுடைய முயற்சியினால் வேட்டை ஆட இனி எனக்குக் கருத்து இல்லை எனக்கு மேலாய்

மன்னு சிலை மலையர் குலக் காவல் பூண்டு மாறு எறிந்து மா வேட்டை ஆடி என்றும்

உன்னுடைய மரபு உரிமை தாங்குவாய் என்றுடைய தோலும் சுரிகையும் கைக் கொடுத்தான் அன்றே

703.தந்தை நிலை உள்கொண்டு தளர்வு கொண்டு தங்கள் குலத் தலைமைக்குச் சார்வு தோன்ற

வந்த குறைபாடு அதனை நிரப்புமாறு மனம் கொண்ட குறிப்பினால் மறாமை கொண்டு

முந்தையவன் கழல் வணங்கி முறைமை தந்த முதல் சுரிகை உடை தோலும் வாங்கிக் கொண்டு

சிந்தை பரங்கொள நின்ற திண்ணனார்க்குத் திருத் தாதை முகம் மலர்ந்து செப்புகின்றான் 3.3.54

704.நம்முடைய குல மறவர் சுற்றத்தாரை நான் கொண்டு பரித்து அதன் மேல் நலமே செய்து

தெம் முனையில் அயற் புலங்கள் கவர்ந்து கொண்ட திண் சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்

வெம் முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும் விரைந்து நீ தாழாதே வேட்டை ஆட

இம் முரண் வெஞ் சிலை வேடர் தங்களோடும் எழுக என விடை கொடுத்தான் இயல்பில் நின்றான்

705. செங்கண் வயக் கோளரியேறு அன்ன திண்மை திண்ணனார் செய்தவத்தின் பெருமை பெற்ற

வெங்கண் விறல் தாதை கழல் வணங்கி நின்று விடைகொண்டு புறம் போந்து வேடரோடும்

மங்கல நீர்ச் சுனை படிந்து மனையின் வைகி வைகிருளின் புலர் காலை வரிவிற் சாலைப்

பொங்கு சிலை அடல் வேட்டைக் கோலம் கொள்ளப் புனைதொழில் கை வினைஞரோடும் பொலிந்து புக்கார்

திண்ணனார் தலையில் சூடியிருந்த மலர்களில் வண்டுகள் மொய்த்தன. 706

திண்ணன் காதுகளில் சங்கு அணிந்திருந்தான். 707

கழுத்தில் கவடி, பன்மணிக் கோவை அணிந்திருந்தான். தலையில் பன்றியின் பொம்பினைச் சிவபெருமான் பிறை போல அணிந்திருந்தான். வேங்கைத் தோல் ஆடை போர்த்தியிருந்தான். சன்னவீரம் என்னும் அணிகலன் அவன் கால்களில் இருந்தன. 708

மார்பில் தந்தத்தால் செய்யப்பட்ட மணிமாலை அணிந்திருந்தான். அவன் தோளில் இருந்த தோள்வலயங்கள் ஒளி வீசின. கையில் கங்கணம் கட்டியிருந்தான். விரல்களில் நாணில் அம்பை ஏற்றும் செறிகட்டி கட்டியிருந்தான். 709

இடுப்பில் சரணம் என்னும் மான்தோல் கட்டியிருந்தான். 710

706 நெறி கொண்ட குஞ்சிச் சுருள் துஞ்சி நிமிர்ந்து பொங்க

முறி கொண்ட கண்ணிக்கு இடை மொய்யொளிப் பீலி சேர்த்தி
வெறி கொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
செறி கொண்ட வண்டின் குலம் சீர் கொளப் பின்பு செய்து

707 **முன் நெற்றியின் மீது முருந்திடை வைத்த குன்றி**
தன்னில் புரி கொண்ட மயிர் கயிறாரச் சாத்தி
மின்னல் திகழ் சங்கு விளங்கு வெண் தோடு காதின்
மன்னிப் புடை நின்றன மா மதி போல வைக
708 **கண்டத்திடை வெண் கவடிக் கதிர் மாலை சேர**
கொண்டக் கொடு பன் மணி கோத்திடை ஏனக் கோடு
துண்டப் பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்தோல்
தண்டைச் செயல் பொங்கிய சன்ன வீரம் தயங்க
709 **மார்பில் சிறு தந்த மணித்திரள் மாலைத் தாழத்**
தாரிற் பொலி தோள் வலயங்கள் தழைத்து மின்னச்
சேர்விற் பொலி கங்கண மீது திகழ்ந்த முன் கைக்
கார்விற் செறி நாண் எறி கைச் செறி கட்டி கட்டி
710 **அரையில் சரணத்து உரி ஆடையின் மீது பௌவத்து**
திரையில் படு வெள்ளலகு ஆர்த்து விளிம்பு சேர்த்தி
நிரையில் பொலி நீளுடை தோல்கரி கைப்புறம் சூழ்
விரையில் துவர் வார் விசி போக்கி அமைத்து வீக்கி

திண்ணன் காலில் வீரத்தின் அடையாளமான கழல் அணிந்திருந்தான். பாதத்தில் செருப்பு அணிந்திருந்தான். காலை மடித்து அமர்ந்துகொண்டு வில் எய்தான். 711

துண் என்னும் ஓசையிடன் வில் நாணை தெறிக்கும்போது விலங்குகள் ஓடிவிட்டன. 712

வேடர்கள் அவன் எய்த அம்பினைக் கொண்டுவரச் சென்றுவிட்டனர். 713

அப்போது கடவுள் வாக்குச் சொல்லும் பொறையாட்டி வந்தாள். 714

அவள் திண்ணன் நெற்றியில் திருநீறு வைத்தாள். உன் வில்திறம் உன் தந்தையைக் காட்டிலும் சிறந்தது என்றாள். 715

711 **வீரக் கழல் காலின் விளங்க அணிந்து பாதம்**
சேரத் தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப் பெரு வில் வலம் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத் திருத்தாள் மடித்து ஏற்றி வியந்து தாங்கி

712 **அங்கு அப்பொழுதில் புவனத்து இடர் வாங்க ஓங்கித்**
துங்கப் பெரு மா மழை போன்று துண் என்று ஒலிப்ப
வெங்கண் சின நீடு விலங்கு விலங்கி நீங்கச்
செங்கைத் தலத்தால் தடவிச் சிறு நாண் எறிந்தார்

713 **பல்வேறு வாளி புதை பார்த்து உடன் போத ஏவி**
வில் வேடர் ஆயத் துடி மேவி ஒலிக்கு முன்றில்
சொல் வேறு வாழ்த்துத் திசைதோறும் துதைந்து விம்ம
வல்லேறு போல்வார் அடல் வாளி தெரிந்து நின்றார்

714 **மானச் சிலை வேடர் மருங்கு நெருங்கும் போதில்**
பானற்குல மாமலரில் படர் சோதியார் முன்
தேனற்றசை தேறல் சருப் பொரி மற்றும் உள்ள
கானப் பலி நேர் கடவுள் பொறையாட்டி வந்தாள்

715 **நின்று எங்கும் மொய்க்கும் சிலை வேடர்கள் நீங்கப் புக்குச்**
சென்று அங்கு வள்ளல் திரு நெற்றியில் சேடை சாத்தி
உன் தந்தை தந்தைக்கும் இந் நன்மைகள் உள்ள வல்ல
நன்றும் பெரிது விறல் நம்மளவு அன்று இது என்றாள்

வாழ்த்திய அணங்குடையாட்டிக்குத் திண்ணன் சிறப்புச் செய்து அனுப்பிவிட்டு வேட்டைக்குப் புறப்பட்டான். 716

காலில் செருப்பு அணிந்திருந்த திண்ணன் வில்லைக் கையில் ஏந்திக்கொண்டு வேடர் மிளி கூட்டத்துடன் வேட்டைக்குப் புறப்பட்டான். 717

வேட்டையாடிய பொருளைக் கொண்டுவர வேட்டை நாய்கள் அங்குமிங்கும் ஓடின. 718

பயந்தோடும் விலங்குகளைத் திரத்திக்கொண்டு அவற்றிற்கு முன்னே திண்ணன் ஓடினார். 719

திண்ணன் சிவபெருமான் இலிங்கச் சிலை ஒன்றைப் பார்த்தான். 720

716 **அப் பெற்றியில் வாழ்த்தும் அணங்குடை ஆட்டி தன்னைச்**
செப்பற்கு அரிதாய சிறப்பு எதிர் செய்து போக்கிக்
கைப் பற்றிய திண் சிலை கார் மழை மேகம் என்ன
மெய்ப் பொற்புடை வேட்டையின் மேல் கொண்டு எழுந்து போந்தார்

717 **தாளில் வாழ் செருப்பர் தோல் தழைத்த நீடு தானையர்**
வாளியோடு சாபம் மேவு கையர் வெய்ய வன் கணார்
ஆளி ஏறு போல ஏகும் அண்ணலார் முன் எண்ணிலார்
மீளி வேடர் நீடு கூட்டம் மிக்கு மேல் எழுந்ததே

718 **வன் தொடர் பிணித்த பாசம் வன் கை மள்ளர் கொள்ளவே**
வென்றி மங்கை வேடர் வில்லின் மீது மேவு பாதமுன்
சென்று நீளுமாறு போல்வ செய்ய நாவின் வாய வாய்
ஒன்றோடு ஒன்று நேர் படாமல் ஓடு நாய்கள் மாடெலாம்

719 **போர் வலைச் சிலைத் தொழில் புறத்திலே விளைப்பச்**
சார் வலைத் தொடக்கு அறுக்க ஏகும் ஐயர் தம் முன்னே
கார் வலைப் படுத்த குன்று கானமா வளைக்க நீள்
வார் வலைத் திறம் சுமந்து வந்த வெற்பர் முந்தினார்

720 **நண்ணி மா மறைக் குலங்கள் நாட என்று நீடும் அத்**
தண்ணிலா அடம்பு கொன்றை தங்கு வேணியார் தமைக்
கண்ணில் நீடு பார்வை ஒன்று கொண்டு காணும் அன்பர் முன்
எண்ணில் பார்வை கொண்டு வேடர் எம் மருங்கும் ஏகினார்

கோடு, குறுங்கண் முதலான இசைக்கருவிகள் முழங்கத் திண்ணன் வேட்டையாடினான். 721
மரமடர்ந்த காட்டில் வேடர் படை வேட்டையாடியது. 722
மான், பன்றி, மரை முதலானவற்றை வேடர் வேட்டையாடினர். 723

விலங்குகள் விழும்படி வலை கட்டியும் அவர்கள் வேட்டையாடினர். 724

வேட்டை நாய்கள் விலங்குகளைச் சுற்றி வளைத்துத் திண்ணன் வேட்டையாட உதவின. 725

721 கோடுமுன் பொலிக்கவும் குறுங் கணா குளிக்குலம்
மாடு சென்று இசைப்பவும் மருங்கு பம்பை கொட்டவும்
சேடு கொண்டகை விளிச் சிறந்த ஓசை செல்லவும்
காடு கொண்டு எழுந்த வேடு கை வளைந்து சென்றதே

722 நெருங்கு பைந்தருக் குலங்கள் நீடு காடு கூட நேர்
வருங்கருஞ் சிலைத் தடக்கை மான வேடர் சேனை தான்
பொருந் தடந் திரைக்கடல் பரப்பு இடைப் புகும் பெருங்
கருந்தரங்க நீள் புனல் களிந்தி கன்னி ஒத்ததே

723 தென் திசைப் பொருப்புடன் செறிந்த கானின் மான் இனம்
பன்றி வெம் மரைக் கணங்கள் ஆதியான பல் குலம்
துன்றி நின்ற என்றடிச் சுவட்டின் ஒற்றர் சொல்லவே
வன் தடக்கை வார்கொடு எம் மருங்கும் வேடர் ஓடினார்

724 ஓடி எறிந்து வாரொழுக்கி யோசனைப் பரப்பு எலாம்
நெடிய திண் வலைத் தொடக்கு நீளிடைப் பிணித்து நேர்
கடி கொளப் பரந்த காடு காவல் செய்து அமைத்த பின்
செடி தலைச் சிலைக்கை வேடர் திண்ணனார் முன் நண்ணினார்

725 வெஞ்சிலைக்கை வீரனாரும் வேடரோடு கூடி முன்
மஞ்சலைக்கு மாமலை சரிப் புறத்து வந்த மா
அஞ்சுவித்து அடர்க்கும் நாய்கள் அட்டமாக விட்டு நீள்
செஞ்சரத்தினோடு குழல் செய்த கானுள் எய்தினர்

இசை முழக்கி விலங்கினங்களை ஓடச்செய்து வேட்டையாடினர். 726

பன்றி, மான், கரடி, கலைமான், காட்டெருமை, புலி, காட்டுமரை முதலான விலங்குகள் இசை முழக்கம் கேட்டுப் பயந்து ஓடுகையில் வேடர்கள் வேட்டையாடினர். 727

அம்பு பட்டுச் சில விலங்குகள் தளர்ந்தன. சில தலை துண்டாடப்பட்டன. சிலவற்றின் உடலில் அம்பு ஊடுருவியது. சில அங்கேயே அம்பு பட்டு விழுந்தன. 728

வேடர் வேட்டையாடிய விலங்குகள் சிலவற்றைப் புலிகள் கவர்ந்தன. 729

சில அம்புகள் மானின் வயிற்றில் முன், பின், இடைப் பகுதிகளில் பாய்ந்தன. 730

726 **வெய்ய மா எழுப்ப ஏவி வெற்பராயம் ஓடி நேர்**
எய்யும் வாளி முன் தெரிந்து கொண்டு செல்ல எங்கணும்
மொய் குரல் துடிக் குலங்கள் பம்பை முன் சிலைத்து எழக்
கை விளித்து அதிர்த்து மா எழுப்பினார்கள் கானெலாம்

727 **ஏனமோடு மான் இனங்கள் எண்கு திண் கலைக் குலம்**
கான மேதி யானை வெம் புலிக் கணங்கள் கான் மரை
ஆன மா அநேக மா வெருண்டு எழுந்து பாய முன்
சேனை வேடர் மேல் அடர்ந்து சீறி அம்பில் நூறினார்

728 **தாளறுவன் இடை துணிவன தலை துமிவன கலைமா**
வாளிகளொடு குடல் சொரிதர மறிவன சில மரை மா
நீளுடல் விடு சரம் உருவிட நிமிர்வன மிடை கட மா
மீளிகொள் கணை படும் உடல் எழ விழுவன பல உழையே

729 **வெங்கணை படு பிடர் கிழிபட விசை உருவிய கயவாய்**
செங் கனல் விட அதனொடு கணை செறிய முன் இரு கருமா
அங்கு எழும் சிரம் உருவிய பொழுது அடல் எயிறு உற அதனைப்
பொங்கிய சினமொடு கவர்வன புரைவன சில புலிகள்

730 **பின் மறவர்கள் விடு பகழிகள் பிற குற வயிறிடை போய்**
முன் நடுமுக மிசை உருவிட முடுகிய விசையுடன் அக்
கொன் முனை அடு சரம் இனம் எதிர் குறுகிய முகம் உருவத்
தன் எதிர் எதிர் பொருவன நிகர் தலையன பல கலைகள்

உடலில் புகும் அம்பு பகல் போலவும், அதனால் விழும் யானை இரவு போலவும் தோன்றும்படியாக வேட்டையாடினர். 731

குதித்தோடிய ஆண்மான் தன் பெண்மானைப் பிரிந்து வீழ்ந்தது. 732

கரடி, காட்டெருமை முதலானவை வேட்டையில் விழுந்தன. 733

வலையில் விலங்குகள் வீழ்ந்தன. 734

குட்டிகளையும், தாய் விலங்குகளையும் அவர்கள் வேட்டையாடுவதில்லை. 735

731 **கரு வரை ஒரு தனுவொடு விசை கடுகியது என முனை நேர்**
குரிசில் முன் விடும் அடுசரம் எதிர் கொலை பயில் பொழுது அவையே
பொரு கரி யொடு சின அரியிடை புரையறவுடல் புகலால்
வரும் இரவொடு பகல் அணைவன என மிடையும் அவ்வனமே

732 **நீளிடை விசை மிசை குதிகொள நெடு முகில் தொட எழு மான்**
தாளுறு கழல் மறவர்கள் விடு சரம் நிரை தொடர்வன தாம்
வாள் விடுகதிர் மதி பிரிவுற வருமென விழும் உழையைக்
கோளொடு பயில் பணி தொடர் நிலை கொளவுள எதிர் பலவே

733 **கடல் விரி புனல் கொள விழுவன கரு முகிலென நிரையே**
படர்வொடு செறி தழை பொதுளிய பயில் புதல் வனம் அதன் மேல்
அடலுறு சரம் உடலுற வரை அடியிடம் அலமரலால்
மிடை கரு மரை கரடிகள் ஓடு விழுவன வன மேதி

734 **பல துறைகளின் வெருவரலொடு பயில் வலையற நுழை மா**
உலமொடு படர்வன தகையுற உறு சினமொடு கவர் நாய்
நிலவிய இரு வினை வலை இடை நிலை சுழல் பவர் நெறி சேர்
புலனுறு மனனிடை தடைசெய்த பொறிகளின் அலவுளவே

735 **துடியடியன மடி செவியன துறுகய முனி தொடரார்**
வெடி பட விரி சிறு குருளைகள் மிசை படு கொலை விரவார்
அடி தளர்வுறு கரு உடையன அணை உறு பிணை அலையார்
கொடியன எதிர் முடுகியும் உறு கொலை புரி சிலை மறவர்

இப்படி வேட்டையாடும்போது காட்டுப்பன்றி ஒன்று வலையைப் பிய்த்துக்கொண்டு ஓடியது. 736

அதன் காலடிகளை ஒற்றிப் பார்த்துக்கொண்டு இரண்டு பேர் பின் தொடர்ந்தனர். 737

நாணன், காடன் என்போர் அந்த இரு மறவர். 738

ஓடிய அந்தக் காட்டுப்பன்றி களைப்பால் மயக்கமுற்று ஒரு குன்றத்தின் அடிவாரத்தில் நின்றது. 739

அந்த நேரத்தில் மறவர் தலைவன் திண்ணன் விரைந்து பாய்ந்து தன் வாளால் குத்தினான். 740

736 **இவ்வகை வரு கொலை மறவினை எதிர் நிகழ்வுழி அதிரக்**
கைவரைகலும் வெருவுற இடை கான் எழுவதோர் ஏனம்
பெய் கருமுகில் என இடியொடு பிதிர் கனல் விழி சிதறி
மொய் வலைகளை அற நிமிர் முடுகிய கடு விசையில்

737 **போமது தணை அடுதிறலொடு பொரு மறவர்கள் அரியேறு**
ஆமவர் தொடர்வுறும் விசையுடன் அடி வழி செலும் அளவில்
தாம் ஒருவரும் அறிகிலரவர் தனி தொடர்வுழி அதன்மேல்
ஏமுனை அடு சிலை விடலைகள் இருவர்கள் அடி பிரியார்

738 **நாடிய கழல் வயவர்கள் அவர் நாணனும் நெடு வரிவில்**
காடனும் எனும் இருவரும் மலை காவலரொடு கடிதில்
கூடினர் விடு பகழிகளொடு கொலை ஞமலிகள் வழுவி
நீடிய சரி படர்வது தரு நீழலின் விரை கேழல்

739 **குன்றியை நிகர் முன் செற எரி கொடு விழி இடக் குரல் நீள்**
பன்றியும் அடல் வன் திறலொடு படர் நெறி நெடிதோடித்
துன்றியது ஒரு குன்று அடி வரை சுலவிய நெறி குழல்
சென்று அதனிடை நின்றது வலிது தெருமர நிரையில

740 **அத் தரு வளர் சுழல் இடை அடை அதன் நிலை அறிபவர் முன்**
கைத் தெரி கணையினில் அடுவது கருதலர் விசை கடுகி
மொய்த்தெழு சுடர் விடு சுரிகையை முனை பெற எதிர் உருவி

குத்தினர் உடல் முறிபட வெறி குல மறவர்கள் தலைவர்

இப்படி வேட்டையாடும்போது காட்டுப்பன்றி ஒன்று வலையைப் பிய்த்துக்கொண்டு ஓடியது. 736

அதன் காலடிகளை ஒற்றிப் பார்த்துக்கொண்டு இரண்டு பேர் பின் தொடர்ந்தனர். 737

நாணன், காடன் என்போர் அந்த இரு மறவர். 738

ஓடிய அந்தக் காட்டுப்பன்றி களைப்பால் மயக்கமுற்று ஒரு குன்றத்தின் அடிவாரத்தில் நின்றது. 739

அந்த நேரத்தில் மறவர் தலைவன் திண்ணன் விரைந்து பாய்ந்து தன் வாளால் குத்தினான். 740

736 இவ்வகை வரு கொலை மறவினை எதிர் நிகழ்வுழி அதிரக்
கைவரைகலும் வெருவுற இடை கான் எழுவதோர் ஏனம்
பெய் கருமுகில் என இடியொடு பிதிர் கனல் விழி சிதறி
மொய் வலைகளை அற நிமிர் முடுகிய கடு விசையில்

737 போமது தணை அடுதிறலொடு பொரு மறவர்கள் அரியேறு
ஆமவர் தொடர்வுறும் விசையுடன் அடி வழி செலும் அளவில்
தாம் ஒருவரும் அறிகிலரவர் தனி தொடர்வுழி அதன்மேல்
ஏமுனை அடு சிலை விடலைகள் இருவர்கள் அடி பிரியார்
738 நாடிய கழல் வயவர்கள் அவர் நாணனும் நெடு வரிவில்
காடனும் எனும் இருவரும் மலை காவலரொடு கடிதில்
கூடினர் விடு பகழிகளொடு கொலை ஞமலிகள் வழுவி
நீடிய சரி படர்வது தரு நீழலின் விரை கேழல்

739 குன்றியை நிகர் முன் செற எரி கொடு விழி இடக் குரல் நீள்
பன்றியும் அடல் வன் திறலொடு படர் நெறி நெடிதோடித்
துன்றியது ஒரு குன்று அடி வரை சுலவிய நெறி குழல்
சென்று அதனிடை நின்றது வலிது தெருமர நிரையில்
740 அத் தரு வளர் சுழல் இடை அடை அதன் நிலை அறிபவர் முன்

கைத் தெரி கணையினில் அடுவது கருதலர் விசை கடுகி

மொய்த்தெழு சுடர் விடு சுரிகையை முனை பெற எதிர் உருவி

குத்தினர் உடல் முறிபட வெறி குல மறவர்கள் தலைவர்

ஆவல் மேம்பட்டு, வேறு சிந்தை எதுவும் இல்லாமல், தேவர் சிவன் இருக்குமிடம் எங்கே என்று திண்ணனார் வினவினார். 746

மூங்கில் முத்து, அகில், சந்தனம், மணிகள் ஆகியவற்றை உருட்டிக்கொண்டு வரும் முகலியாற்றை அவர்கள் சென்றடைந்தனர். 747

அங்குக் காடன் தீக்கடைக் கோலால் தீ மூட்டி பன்றியைச் சுட்டுக்கொண்டிருந்தான். திண்ணன் சிவனைக் காண மலை ஏறும்போது நாணனும் உடன் சென்றான். 748

ஆற்றின் குளிர்ந்த நீரில் இறங்கி, கடந்து தேவர் இருக்கும் மலையைக் கண்டனர். 749

மலை ஏறும்போது நமசிவாய என்னும் ஐந்தெழுத்து ஓசை கேட்டது. திண்ணன் இந்த ஓசை என்ன என்று வினவினான். இங்குள்ள வண்டுகள் பாடும் ஓசை போலும் என்று நாணன் கூறினான். 750

746 **ஆவதென் இதனைக் கண்டு இங்கு அணை தொறும் என் மேல் பாரம்**

போவது ஒன்று உளது போலும் ஆசையும் பொங்கி மேல் மேல்

மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்

தேவர் அங்கு இருப்பது எங்கே போகென்றார் திண்ணனார் தாம்

747 **உரை செய்து விரைந்து செல்ல அவர்களும் உடனே போந்து**

கரை வளர் கழையின் முத்தும் கார் அகில் குறடும் சந்தும்

வரை தரு மணியும் பொன்னும் வயிரமும் புளினம் தோறும்

திரைகள் முன் திரட்டி வைத்த திரு முகலியினைச் சார்ந்தார்

748 **ஆங்கு அதன் கரையின் பாங்கோர் அணி நிழல் கேழல் இட்டு**

வாங்கு வில் காடன் தன்னை மரக் கடை தீக் கோல் பண்ணி

ஈங்கு நீ நெருப்புக் காண்பாய் இம்மலை ஏறிக் கண்டு

நாங்கள் வந்து அணைவோம் என்று நாணனும் தாமும் போந்தார்

749 **அளி மிடை கரை சூழ் சோலை அலர்கள் கொண்டு அணைந்த ஆற்றின்**

தெளி புனல் இழிந்து சிந்தை தெளிவுறும் திண்ணனார் தாம்

களி வரும் மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு

குளிர் வரு நதி ஊடு ஏகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார்

750 **கதிரவன் உச்சி நண்ணக் கடவுள் மால் வரையின் உச்சி**

அதிர் தரும் ஓசை ஐந்தும் ஆர் கலி முழக்கம் காட்ட

இது என் கொல் நாணா என்றார்க்கு இம் மலைப் பெருந்தேன் சூழ்ந்து

மது மலர் ஈக்கள் மொய்த்து மருங்கு எழும் ஒலி கொல் என்றான்

முன்பு செய்த தவத்தின் பயனால் திண்ணனார் இறைவனைக் காணும் ஆர்வத்தோடு மலை ஏறினார். 751

திண்ணனும் உடன் ஏறினான். 752

பிறவிச் சார்பு நீங்கி சிவன் திருவடி நீழலை சிவனருளால் அவர்கள் பெற்றனர். 753

திருக்காளத்தி நாதரைக் கண்டதும் திண்ணனார் விரைந்து ஓடிச் சென்று தேவர் சிலையைக் கட்டித் தழுவிக்கொண்டார். 754

அடியேனுக்குத் தேவர் அகப்பட்டுக்கொண்டார் என்று சொல்லிக்கொண்டே தேவர்மேல் பரிவு காட்டினார். 755

751 **முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பம் ஆன**

அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி

மன் பெரும் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி

என்பு நெக்கு உருகி உள்ளத்து எழு பெரு வேட்கை யோடும்

752 **நாணனும் அன்பும் முன்பு நளிர் வரை ஏறத் தாமும்**

பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி

ஆணையாம் சிவத்தைச் சாரா அணைபவர் போல ஐயர்

நீணிலை மலையை ஏறி நேர் படச் செல்லும் போதில்

753 **திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே**

அம் கண்ணர் கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம் எய்தத்

தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல நீங்கிப்

பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்பு உருவம் ஆனார்

754 **மாகமார் திருக் காளத்தி மலை எழு கொழுந்தாய் உள்ள**

ஏக நாயகரைக் கண்டார் எழுந்த பேர் உவகை அன்பின்

வேகம் ஆனது மேல் செல்ல மிக்கது ஓர் விரைவின் ஓடும்

மோகமாய் ஓடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார்

755 **நெடிது போது உயிர்த்து நின்று நிறைந்து எழு மயிர்க்கால் தோறும்**

வடிவெலாம் புளகம் பொங்க மலர்க் கண்ணீர் அருவி பாய

அடியனேற்கு இவர் தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று

படி இலாப் பரிவு தான் ஓர் படிவமாம் பரிசு தோன்ற

வேட்டுவச் சாதியார் துணையுடன் வாழ்கின்றோம். நீயோ துணை யாருமே இல்லாமல் கரடி, வேங்கை திரியும் காட்டில் தனியே இருக்கிறாயே என்று திண்ணனார் உள்ளம் நைந்தார். 756

தன் கையிலிருந்த வில் கீழே விழுந்ததுகூட திண்ணனுக்குத் தெரியவில்லை. பச்சிலையும் பூவும் பறித்து உன்மேல் போட்டு தண்ணீரும் உன்மேல் ஊற்றி உனக்கு ஏதோ செய்திருக்கிறாரே, அவர் யாரோ என வினவினார். நாணன் தனக்குத் தெரியும் என்றான். 757

உன் தந்தையோடு அன்று ஒருநாள் வேட்டையாடிக்கொண்டு வரும்போது ஒரு பார்ப்பான் இந்தத் தேவருக்கு இப்படிச் செய்ததைப் பார்த்தோம். 758

திண்ணனார்க்கு சிவனை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. 759

தனியே இருக்கும் இவருக்கு இறைச்சி கொடுக்க யாரும் இல்லையே. நான் கொண்டுவந்து கொடுக்க வேண்டும் என்று திண்ணனார் எண்ணினார். 760

756 **வெம் மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார் போல்**

கைம் மலை கரடி வேங்கை அரி திரி கானம் தன்னில்

உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன்

இம் மலைத் தனியே நீர் இங்கு இருப்பதே என்று நைந்தார்

757 **கைச்சிலை விழுந்தது ஓரார் காளையார் மீள இந்தப்**

பச்சிலையோடும் பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து

மச்சிது செய்தார் யாரோ என்றலும் மருங்கு நின்ற

அச்சிலை நாணன் தானும் நான் இது அறிந்தேன் என்பான்

758 **வன்றிறல் உந்தை யோடு மா வேட்டை ஆடிப் பண்டிக்**

குன்று இடை வந்தோம் ஆகக் குளிர்ந்த நீர் இவரை ஆட்டி

ஒன்றிய இலைப் பூச்சூட்டி ஊட்டி முன்பு அறைந்த தேர் பார்ப்பான்

அன்றிது செய்தான் இன்றும் அவன் செய்தது ஆகும் என்றான்

759 **உண்ணிறைந்து எழுந்த தேனும் ஒழிவின்றி ஆரா அன்பில்**

திண்ணனார் திருக் காளத்தி நாயனார்க்கு இனிய செய்கை

எண்ணிய இவைகொலாம் என்று இது கடைப் பிடித்துக் கொண்டு அவ்

அண்ணலைப் பிரிய மாட்டா அளவில் ஆதரவு நீட

760 **இவர் தமைக் கண்டேனுக்குத் தனியராய் இருந்தார் என்னே**

இவர் தமக்கு அமுது செய்ய இறைச்சியும் இடுவார் இல்லை

இவர் தமைப் பிரிய ஒண்ணாது என்செய்கேன் இனி யான் சால

இவர் தமக்கு இறைச்சி கொண்டிங்கு எய்தவும் வேண்டும் என்று

விட்டுப் போதலும், திரும்ப வந்து தழுவுவதுமாக இருந்தார். கன்றைப் பிரியும் தாய்ப்பசு போல் ஆனார். இவருக்கு இறைச்சி நானே கொண்டுவந்து தருவேன் என்று எண்ணிக்கொண்டார். 761

உனக்கு உறவினர் யார் என்று எண்ணி அகலாமல் இருக்கிறேன். பசியோடு இருக்கிறாயே என்று இறைச்சி கொண்டுவரச் செல்கிறேன் என்று எண்ணித் தன் வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். 762

நாணனை அழைத்துக்கொண்டு முகலி ஆற்றைக் கடந்து ஒரு பூங்காவுக்குள் நுழைந்தார். 763

பன்றிக் கறியைப் பக்குவமாகச் சுட்டுவைத்திருப்பதாகக் காடன் கூறினான். மீள்வதற்கு ஏன் இவ்வளவு நேரமாயிற்று என்று காடன் வினவினான். நாணன் சொல்கிறான். 764

தேவர் சிலையை இவர் உடும்பு போல் பிடித்துக்கொண்டார். இப்போதுகூட அவருக்கு இறைச்சி கொண்டுசெல்லவே வந்திருக்கிறார், என்றான். 765

761 **போதுவர் மீண்டும் செல்வர் புல்லுவர் மீளப் போவர்**

காதலின் நோக்கி நிற்பர் கன்று அகல் புனிற்று ஆப் போல்வர்

நாதனே அமுது செய்ய நல்ல மெல் இறைச்சி நானே

கோதறத் தெரிந்து வேறு கொண்டு இங்கு வருவேன் என்பார்

762 **ஆர்தமராக நீர் இங்கு இருப்பது என்று அகலமாட்டேன்**

நீர் பசித்து இருக்க இங்கு நிற்கவும் இல்லேன் என்று

சோர் தரு கண்ணீர் வாரப் போய் வரத் துணிந்தார் ஆகி

வார் சிலை எடுத்துக் கொண்டு மலர்க் கையால் தொழுது போந்தார்

763 **முன்பு நின்று அரிதில் நீங்கி மொய் வரை இழிந்து நாணன்**

பின்பு வந்து அணைய முன்னைப் பிற துறை வேட்கை நீங்கி

அன்பு கொண்டு உய்ப்பச் செல்லும் அவர் திரு முகலி ஆற்றின்

பொன் புனை கரையில் ஏறிப் புது மலர்க் காவில் புக்கார்

764 **காடனும் எதிரே சென்று தொழுது தீக் கடைந்து வைத்தேன்**

கோடுடை ஏனம் உங்கள் குறிப்படி உறுப்பை எல்லாம்

மாடுற நோக்கிக் கொள்ளும் மறித்து நாம் போகைக்கு இன்று

நீட நீர் தாழ்த்தது என்னோ என்றலும் நின்ற நாணன்

765 **அங்கிவர் மலையில் தேவர் தம்மைக் கண்டு அணைத்துக் கொண்டு**

வங்கினைப் பற்றிப் போதாவல்லுடும்பு என்ன நீங்கான்

இங்கும் அத் தேவர் தின்ன இறைச்சி கொண்டு ஏகப் போந்தான்

நம்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்கு என்றான்

என்ன செயல் செய்தாய், திண்ணா என்று காடன் கேட்டான். 766

காடன் சுட்டு வைத்திருந்த பன்றிக்கறியை அம்பு ஒன்றில் கோத்து மீண்டும் தேக்கஞ்சருகுத் தீயில் காட்டி திண்ணன் சூடாக்கினான். 767

அதனை வாயில் போட்டு அதக்கிச் சுவை பார்த்தான். சுவையானவற்றைத் தனியே பிரித்துக் காய்ந்த இலைச்சருகில் வைத்துக்கொண்டான். சுவை இல்லாதனவற்றைத் துப்பிவிட்டான். அதனைக் கண்ட காடனும் நாணனும் நாம் பசியோடு இருக்கும்போது இவன் இவ்வாறு செய்கிறானே என்று வருந்தினர். 768

திண்ணன் தேவர்மேல் காதல் கொண்டுள்ளான். இதனைப் போக்க நமக்கு வழி தெரியவில்லை. தேவராட்டியை அழைப்போம் என்று பேசிக்கொண்டு தேவராட்டியை அழைத்துவருவோம் என்று போய்விட்டனர். 769

காவலர் போனதில்கூடத் திண்ணனுக்குக் கவனம் இல்லை. பதம்பார்த்த சுவைக்கும் கறித்துண்டங்களைத் தேக்கிலையில் சுருட்டி எடுத்துக்கொண்டார். தேவரை நீராட்ட முகலியாற்று நீரை வாயில் அடக்கிக்கொண்டான். தேவருக்குப் பூ சூட்டப் பூக்களைப் பறித்துத் தன் தலையில் சூடிக்கொண்டான். 770

766 **என் செய்தாய் திண்ணா நீ தான் என்ன மால் கொண்டாய் எங்கள்**
முன் பெரு முதலி அல்லையோ என முகத்தை நோக்கார்
வன் பெரும் பன்றி தன்னை எரியினில் வதக்கி மிக்க
இன்புறு தசைகள் வெவ்வேறு அம்பினால் ஈர்ந்து கொண்டு

767 **கோலினில் கோத்துக் காய்ச்சி கொழும் தசை பதத்தில் வேவ**
வாலிய சுவைமுன் காண்பான் வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவும் இனிய எல்லாம் சருகு இலை இணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட அதன் மிசை இடுவார் ஆனார்

768 **மருங்கு நின்றவர்கள் பின்னும் மயல் மிக முதிர்ந்தான் என்னே**
அரும் பெறல் இறைச்சி காய்ச்சி அதுக்கி வேறு உமிழா நின்றான்
பெரும் பசி உடையன் ஏனும் பேச்சிலன் எமக்கும் பேறு
தரும் பரிசு உணரான் மற்றைத் தசை புறத்து எறியா நின்றான்
769 **தேவுமால் கொண்டான் இந்தத் திண்ணன் மற்று இதனைத் தீர்க்கல்**
ஆவது ஒன்று அறியோம் தேவராட்டியை நாகனோடு
மேவி நாம் கொணர்ந்து தீர்க்க வேண்டும் அவ் வேட்டைக் கானில்
ஏவல் ஆட்களையும் கொண்டு போதும் என்று எண்ணிப் போனார்

770 **கானவர் போனது ஓரார் கடிதினில் கல்லையின் கண்**

ஊன் அமுது அமைத்துக் கொண்டு மஞ்சனம் ஆட்ட உன்னி

மா நதி நன்னீர் தூய வாயினில் கொண்டு கொய்த

தூ நறும் பள்ளித் தாமங் குஞ்சி மேல் துதையக் கொண்டார்

வில்லும் அம்பும் ஒரு கையில். இறைவனுக்குப் படைக்கும் இறைச்சி மற்றொரு கையில். என்று ஏந்திக்கொண்டு எம்பிரான் மிகவும் பசியோடு இருப்பார் என எண்ணிக்கொண்டு திண்ணனார் விரைந்து சென்றார். 771

அந்த இறைவனுக்குப் பெயர் திருக்காளத்தி நாயனார். அவர் திண்ணனாருக்கு முளைத்தெழு முதல். அவர் தலையில் வைக்கப்பட்டிருந்த மலரைத் தன் காலைத்தூக்கித் தள்ளிவிட்டார். தன் வாயிலிருந்த நீரை உமிழ்ந்து தன் அன்பை உமிழ்பவர் போல நாயனாரை நீராட்டினார். 772

தலையில் சூட்டிக் கொண்டுவந்த மலர்களை தம்பிரான் முடிமேல் வைத்தார். கல்லை என்னும் தேக்கிலையில் கொண்டுவந்த கறியமுதை இறைவன் திருமுன் வைத்தார். 773

நாயனீரே! பல்லினால் கடித்து அதவிப் பார்த்து சுவையுள்ளனவற்றை அம்பில் கோக்குக் கொண்டுவந்த கறிகள் இவை. அமுதுசெய்தருள்க என்று சொல்லி வேண்டினார். 774

இப்படி அன்பான மொழிகளைப் பேசிக்கொண்டு அமுதூட்டிய திண்ணனார் காளத்திமலையினார்க்கு இன்னும் கறிகள் கொண்டுவர வேண்டும் என்று விரும்பினார். அதற்குள் பொழுது போய்விட்டது. 775

771 **தனு ஒரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக் கல்லைப்**

புனித மெல் இறைச்சி நல்ல போனகம் ஒரு கை ஏந்தி

இனிய எம்பிரானார் சாலப் பசிப்பர் என்று இரங்கி ஏங்கி

நனி விரைந்து இறைவர் வெற்பை நண்ணினார் திண்ணனார்தாம்

772 **இளைத்தனர் நாயனார் என்று ஈண்டச் சென்று எய்தி வெற்பின்**

முளைத்து எழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில்

வளைத்த பொற் செருப்பால் மாற்றி வாயின் மஞ்சன நீர் தன்னை

விளைத்த அன்பு உமிழ்வார் போன்று விமலனார் முடிமேல் விட்டார்

773 **தலை மிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங் காளத்தி**

மலை மிசைத் தம்பிரானார் முடி மிசை வணங்கிச் சாத்திச்

சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்த கல்லை

இலை மிசைப் படைத்த ஊனின் திரு அமுது எதிரே வைத்து

774 **கொழுவிய தசைகள் எல்லாம் கோலினில் தெரிந்து கோத்து அங்கு**

அழலுறு பதத்தில் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி நாவில்

பழகிய இனிமை பார்த்துப் படைத்த இவ் இறைச்சி சால

அழகிது நாயனீரே அமுது செய்து அருளும் என்றார்

775 **அன்ன இம் மொழிகள் சொல்லி அமுது செய்வித்த வேடர்**

மன்னனார் திருக் காளத்தி மலையினார்க்கு இனிய நல் ஊன்

இன்னமும் வேண்டும் என்னும் எழு பெரும் காதல் கண்டு

பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையில் தாழ்ந்தான்

பின்னர் இரவு வரவே, கொடிய விலங்குகள் இறைவனைத் தாக்காவண்ணம் காக்கும் பொருட்டுக் கையில் வில்லை வைத்துக்கொண்டு இரவெல்லாம் திண்ணனார் காத்திருந்தார். 776

தவம் செய்தும் காணமுடியாத சிவபெருமானைத் தன் அன்பினால் திண்ணனார் கண்டுகொண்டார். 777

மூங்கில் முத்துக்களும், நாகம் ஈன்ற முத்தும் இறைவனைக் கும்பிடுவது போல இருளில் முழுநிலா போல ஒளி வீசின. 778

மரகதம், நீலம் முதலான மணிகள் இருளை ஒதுக்கின. 779

மரத்தின் தளிர், குரங்குகள் குகையில் வைத்த விளக்கு, முனிவர்கள் ஐம்புலனை அடக்கி வைத்திருக்கும் ஒளி ஆகியவற்றால் காளத்தியில் இருளே இல்லை. 780

776 **அவ்வழி அந்தி மாலை அணைதலும் இரவு சேரும்**

வெவ்விலங்கு உள என்று அஞ்சி மெய்மையின் வேறு கொள்ளாச்

செவ்விய அன்பு தாங்கித் திருக் கையில் சிலையும் தாங்கி

மைவரை என்ன ஐயர் மருங்கு நின்று அகலா நின்றார்

777 **சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்**

கார்வரை அடவி சேர்ந்தும் காணுதற்கு அரியார் தம்மை

ஆர்வம் முன் பெருக ஆரா அன்பினில் கண்டு கொண்டே

நேர் பெற நோக்கி நின்றார் நீள் இருள் நீங்க நின்றார்

778 **கழை சொரி தரளக் குன்றில் கதிர் நிலவு ஒருபால் பொங்க**
முழை அரவு உமிழ்ந்த செய்ய மணி வெயில் ஒருபால் மொய்ப்பத்
தழை கதிர்ப் பரிதியோடும் சந்திரன் தலை உவாவில்
குழையணி காதர் வெற்பைக் கும்பிடச் சென்றால் ஒக்கும்

779 **விரவு பன்மணிகள் கான்ற விரிகதிர்ப் படலை பொங்க**
மரகதம் ஒளி கொள் நீல மணிகளும் இமைக்கும் சோதி
பொர இரு சுடருக்கு அஞ்சிப் போயின புடைகள் தோறும்
இரவு இருள் ஒதுங்கினாலே போன்று உளது எங்கும் எங்கும்

780 **செந்தழல் ஒளியில் பொங்கும் தீப மா மரங்களாலும்**
மந்திகள் முழையில் வைத்த மணி விளக்கு ஒளிகளாலும்
ஐந்தும் ஆறடக்கி உள்ளார் அரும் பெரும் சோதியாலும்
எந்தையார் திருக்காளத்தி மலையினில் இரவு ஒன்று இல்லை

பறவைகளின் ஒலியுடன் பொழுது புலர்ந்தது. இறைவனுக்கு அமுதூட்டவேண்டும் என்னும் எண்ணம் திண்ணனாருக்குத் தோன்றியது. 781

பன்றி, மான் முதலானவற்றை வேட்டையாடச் சென்றார். 782

கதிரவன் எழுந்தான் 283

இறைவனுக்கு ஆகம முறைப்படி, பூசனை செய்யும் சிவகோசரியார் வந்தார். 784

வெந்த இறைச்சியும் எலும்புத் துண்டுகளும் சிவன் முன் கண்டு உள்ளம் நொந்தார். 785

781 **வரும் கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று**
சுருங்கிட அறிந்த புள்ளின் சூழ் சிலம்பு ஓசை கேட்டுக்
கருங்கடல் என்ன நின்ற கண் துயிலாத வீரர்
அரும் பெறல் தம்பிரனார்க்கு அமுது கொண்டு அணைய வேண்டி
கதிரவன் ஒளி கை நீட்டியது.

782 **ஏறுகாற்பன்றியோடும் இருங்கலை புனமான் மற்றும்**

வேறு வேறு இனங்கள் வேட்டை வினைத் தொழில் விரகினாலே
ஊறுசெய் காலம் சிந்தித்து உருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையும் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார்

783 மொய் காட்டும் இருள் வாங்கி முகம் காட்டும் தேர் இரவி
மெய் காட்டும் அன்புடைய வில்லியர் தனி வேட்டை
எய்காட்டின் மாவளைக்க இட்ட கரும் திரை எடுத்துக்
கை காட்டும் வான் போலக் கதிர் காட்டி எழும் போதில்

784 எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கு ஏற்பக்
கொய்த மலரும் புனலும் முதலான கொண்டு அணைந்தார்
மை தழையும் கண்டத்து மலை மருந்தை வழி பாடு
செய்து வரும் தவம் உடைய முனிவர் சிவ கோசரியார்

785 வந்து திருமலையின் கண் வானவர் நாயகர் மருங்கு
சிந்தை நியமத்தோடும் செல் கின்றார் திரு முன்பு
வெந்த இறைச்சியும் எலும்பும் கண்டு அகல மிதித்து ஓடி
இந்த அனுசிதம் கெட்டேன் யார் செய்தார் என்று அழிவார்

வெந்த கறி படைக்கப்பட்டிருப்பதைக் கண்டு சிவகோசரியார் பதறிப்போனார். 786

தேக்கிலையில் இருந்த எலும்பு செருக்குக் காலடிப் பதிவு, நாய்க்காலடிப் பதிவு ஆகியவற்றைத் துடைப்பத்தால் பெருக்கிவிட்டு சென்று முகலியாற்றில் நீராடிய பின்னர் மீண்டு வந்தார். 787

பின்னர் தேவர் சிலையை நீராட்டி ஆகம முறைப்படி பூசனை செய்தார். 788

சிவகோசரி முனிவர் பின்னர் தவம் செய்யயக் காட்டுக்குச் சென்றுவிட்டார். 789

இனி வேடர் திறம் சொல்கிறேன். 790

786 மேவநேர் வர அஞ்சா வேடுவரே இது செய்தார்
தேவ தேவ ஈசனே திருமுன்பே இது செய்து
போவதே இவ் வண்ணம் புகுத நீர் திரு உள்ளம்
ஆவதோ எனப் பதறி அழுது விழுந்து அலமந்தார்

787 பொருப்பில் எழுஞ் சுடர்க் கொழுந்தின் பூசனையும் தாழ்க்க நான்
இருப்பது இனி ஏன் என்று அவ் இறைச்சி எலும்புடன் இலையும்

செருப்பு அடியும் நாய் அடியும் திரு அலகால் மாற்றிய பின்
விருப்பின் ஓடும் திருமுகலிப் புனல் மூழ்கி விரைந்து அணைந்தார்

788 **பழுது புகுந்தது அது தீரப் பவித்திரமாம் செயல் புரிந்து**
தொழுது பெறுவன கொண்டு தூய பூசனை தொடங்கி
வழுவில் திரு மஞ்சனமே வரும் முதலாக வரும் பூசை
முழுது முறைமையின் முடித்து முதல்வனார் கழல் பணிந்தார்
789 **பணிந்து எழுந்து தனி முதலாம் பரன் என்று பன் முறையால்**
துணிந்த மறை மொழியாலே துடி செய்து சுடர்த் திங்கள்
அணிந்த சடை முடிக் கற்றை அங்கணரை விடை கொண்டு
தணிந்த மனத் திருமுனிவர் தபோ வனத்திடை சார்ந்தார்
790 **இவ் வண்ணம் பெருமுனிவர் ஏகினார் இனி இப்பால்**
மைவண்ணக் கருங் குஞ்சி வன வேடர் பெருமானார்
கைவண்ணச் சிலை வளைத்துக் கான் வேட்டை தனி ஆடிச்
செய்வண்ணத் திறம் மொழிவேன் தீவினையின் திறம் ஒழிவேன்

திண்ணனார் பன்றி மான் முதலானவற்றைத் தனியே வேட்டையாடினார். 791

அம்பு எய்து மரை, காட்டெருமை முதலானவற்றை வீழ்த்தினார். 792

தீக்கடைக் கோலால் தீ மூட்டினார். 793

சுவையானவற்றைக் குவித்துக்கொண்டார். 794

அம்பில் குத்தி தீயில் வாட்டிச் சுவை பார்த்தார். 795

791 **திரு மலையின் புறம் போன திண்ணனார் செறி துறுகல்**
பெருமலைகள் இடைச் சரிவில் பெரும் பன்றி புனம் மேய்ந்து
வருவனவும் துணி படுத்து மான் இனங்கள் கான் இடை நின்று
ஒரு வழிச் சென்று ஏறு துறை ஒளி நின்று கொன்று அருளி
792 **பயில் விளியால் கலை அழைத்துப் பாடு பெற ஊடுருவும்**
அயில் முகவெங் கணை போக்கி அடி ஒற்றி மரை இனங்கள்
துயில் இடையில் கிடை செய்து தொடர்ந்து கடமைகள் எய்து

வெயில் படு வெங்கதிர் முதிரத் தனி வேட்டை வினை முடித்தார்

793 பட்ட வன விலங்கு எல்லாம் படர் வனத்தில் ஒரு சூழல்
இட்டு அருகு தீக் கடை கோல் இரும் சுரிகை தனை உருவி
வெட்டி நறுங் கோல் தேனும் மிக முறித்துத் தேக்கு இலையால்
வட்டமுறு பெருங் கல்லை மருங்கு புடை பட அமைத்தார்

794 இந்தனத்தை முறித்து அடுக்கி எரி கடையும் அரணியினில்
வெம் தழலைப் பிறப்பித்து மிக வளர்த்து மிருகங்கள்
கொந்தி அயில் அலகம்பால் குட்டம் இட்டுக் கொழுப்பரிந்து
வந்தன கொண்டு எழும் தழலில் வக்குன வக்குவித்து

795 வாய் அம்பால் அழிப்பதுவும் வகுப்பதுவும் செய்து அவற்றின்
ஆய உறுப்பு இறைச்சி யெலாம் அரிந்து ஒருகல் இலையில் இட்டு
காய நெடும் கோல் கோத்துக் கனலின் கண் உறக்காய்ச்சி
தூய திரு அமுது அமைக்கச் சுவை காணல் உறுகின்றார்

வாயில் வைத்துச் சுவைத்துப் பார்த்தார். 796

சுவையானவற்றைத் தேன் ஊற்றித் தேக்கிலையில் எடுத்துக்கொண்டார். முன்பு போல் தலையில் மலர்களையும், வாயில் நீராட்டும் நீரும் எடுத்துக்கொண்டார். 797

மலைக்கு வந்தார். முன்பு செய்தது போல அந்தணர் செய்த பூசைப் பொருளைக் களைந்தெறிந்தார். 798

கறிகளை இலையில் வைத்துப் படைக்கிறார். இது முன்பு தந்த கறியைக் காட்டிலும் நல்லது. பன்றிக்கறி மட்டுமல்லாமல் மான், மரை, கடமைமான் முதலான கறிகளும் இதில் உள்ளன. மேலும் அவற்றில் தேன் ஊற்றியிருக்கிறேன். அதனால் தித்திக்கும் – என்று கூறினார். 799

இப்படித் திருவமுது உண்ணப் படைத்துவிட்டு முன் போலவே இரவெல்லாம் உறங்காமல் காவல் காத்தார். 800

796 எண்ணிறைந்த கடவுளருக்கு இடும் உணவு கொண்டு ஊட்டும்
வண்ண எரி வாயின் கண் வைத்தது எனக் காளத்தி

அண்ணலார்க்கு ஆம் பரிசு தாம் சோதித்து அமைப்பதற்குத்

திண்ணனார் திருவாயில் அமைத்தார் ஊன் திரு அமுது

797 **நல்ல பதமுற வெந்து நாவின் கண் இடும் இறைச்சி**

கல்லையினிற் படைத்துத் தேன் பிழிந்து கலந்து கொண்டு

வல் விரைந்து திருப் பள்ளித் தாமமும் உந்துாய் மஞ்சனமும்

ஒல்லையினின் முன்பு போல் உடன் கொண்டு வந்து அணைந்தார்

798 **வந்து திருக் காளத்தி மலை ஏறி வனசரர்கள்**

தந்தலைவனார் இமையோர் தலைவனார் தமை எய்தி

அந்தணனார் பூசையினை முன்பு போல் அகற்றிய பின்

முந்தை முறை தம்முடைய பூசனையின் செயல் முடிப்பார்

799 **ஊனமுது கல்லை உடன் வைத்து இது முன்னையின் நன்றால்**

ஏனமொடு மான் கலைகள் மரை கடமை இவையிற்றில்

ஆன உறுப்பு இறைச்சி அமுது அடியேனும் சுவை கண்டேன்

தேனும் உடன் கலந்து இதுதித்திக்கும் என மொழிந்தார்

800 **இப் பரிசு திரு அமுது செய்வித்துத் தம்முடைய**

ஒப்பரிய பூசனை செய்து அந்நெறியில் ஒழுகுவார்

எப்பொழுதும் மேன்மேல்வந்து எழும் அன்பால் காளத்தி

அப்பர் எதிர் அல்லுறங்கார் பகல் வேட்டை ஆடுவார்

சிவகோசரி முனிவர் நாள்தோறும் திண்ணனார் செய்த பூசைகளை நீக்கிவிட்டு ஆகம முறைப்படிப் படையல் செய்துவந்தார். 801

நாணனும் காடனும் சென்று திண்ணனார் தந்தை நாகனுக்கு நிலைமையைத் தெரிவித்தனர். நாகன் தன் மகன் திண்ணன் தன்னிடம் வராமை கண்டு வருந்தினார். 802

இரும்பு பொன் ஆனது போலத் திண்ணனார் சிவன்மீது கொண்ட அன்பின் தீப் பிழம்பாக மாறிவிட்டார். 803

சுட்ட கறி படைப்பவரை நான் பார்க்க முடியவில்லை. சிவனே! நீ அவரை இப்படிச் செய்யாமல் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 804

அன்று இரவு சிவன் முனிவர் கனவில் தோன்றினார். வேடன் செய்வது எனக்கு விருப்பந்தான். அவன் அன்பை நீ நேரில் காண் என்று கூறினார். 805

801 **மாமுனிவர் நாள் தோறும் வந்து அணைந்து வன வேந்தர்**
தாம் முயலும் பூசனைக்குச் சால மிகத் தளர்வு எய்தித்
தீமை என அது நீக்கிச் செப்பிய ஆகம விதியால்
ஆமுறையில் அர்ச்சனை செய்து அந் நெறியில் ஒழுகுவரால்

802 **நாணனொடு காடனும் போய் நாகனுக்குச் சொல்லியபின்**
ஊணும் உறக்கமும் இன்றி அணங்கு உறைவாளையும் கொண்டு
பேணு மகனார் தம் பால் வந்து எல்லாம் பேதித்துக்
காணு நெறி தங்கள் குறி வாராமல் கை விட்டார்

803 **முன்பு திருக் காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்**
இன்புறு வேதகத்து இரும்பு பொன் ஆனால் போல் யாக்கைத்
தன் பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற
அன்பு பிழம் பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ?

804 **அந்நிலையில் அன்பனார் அறிந்த நெறி பூசிப்ப**
மன்னிய ஆகமப் படியால் மாமுனிவர் அருச்சித்து இங்கு
என்னுடைய நாயகனே இது செய்தார் தமைக் காணேன்
உன்னுடைய திருவருளால் ஒழித்து அருள வேண்டும் என
805 **அன்று இரவு கனவின் கண் அருள் முனிவர் தம்பாலே**
மின் திகழும் சடை மவுலி வேதியர் தாம் எழுந்து அருளி
வன்திறல் வேடுவன் என்று மற்று அவனை நீ நினையேல்
நன்றவன் தன் செயல் தன்னை நாம் உரைப்பக் கேள் என்று

திண்ணன் என்மீது கொண்ட அன்பு வடிவமாகத் திகழ்கின்றான். அவன் அறிவு என்னை அறிந்துகொண்டுள்ள அறிவு. அவன் செயல் எல்லாமே எனக்கு இனிமையாக உள்ளது. அவன்

நிலையை நீ இவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்று சிவன் சிவகோசரி முனிவர் கனவில் கூறினார். 806

அவன் செயல் அத்தனையும் அன்பின் வெள்ளம். அவன் செருப்புக் காலடி குழந்தையின் இளம்பருவ அடிகளைக் காட்டிலும் சிறப்பானவை. 807

என்னை நீராட்ட அவன் வாயிலிருந்து உமிழும் நீர் கங்கை முதலான புனித நீரைக் காட்டிலும் புனிதமானது. 808

அவன் தலையில் வைத்துக்கொண்டு வந்து எனக்குச் சூட்டும் மலர் திருமால், பிரமன் முதலான தேவர்கள் பூசை செய்து இடும் மலரைக் காட்டிலும் மேலானது. 809

வெந்துள்ளதா என்று அவன் வாயில் மென்றுபார்த்து எடுத்துப் படைக்கும் கறி வேள்வியில் இடும் அவி உணவைக் காட்டிலும் எனக்கு இனிமையானது. 810

806 **அவனுடைய வடிவு எல்லாம் நம் பக்கல் அன்பு என்றும்**
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு என்றும்
அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ என்று அருள் செய்வார்

807 **பொருட்பினில் வந்தவன் செய்யும் பூசனைக்கு முன்பென்மேல்**
அருப்புறுமென் மலர்முன்னை அவை நீக்கும் ஆதரவால்
விருப்புறும் அன்பெனும் வெள்ளக்கால் பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படி அவ்விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்.

808 **உருகிய அன்பொழிவின்றி நிறைந்த அவன் உருவென்னும்**
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கியினி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கவன்தன் வாயுமிழும் புனல்புனிதம்.

809 **இம்மலைவந் தெனையடைந்த கானவன்தன் இயல்பாலே**
மெய்மலரும் அன்புமேல் விரிந்தனபோல் விழுதலால்
செம்மலர்மேல் அயனொடுமால் முதல்தேவர் வந்துபுனை
எம்மலரும் அவன் தலையால் இடுமலர்போல் எனக்கொல்வா

810 **வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ எனும் அன்பால்**

நையுமனத் தினிமையினால் நையமிக மென்றிடலால்

செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியில்

எய்யும்வரிச் சிலையவந்தான் இட்டஊன் எனக்கினிய.

என் தோத்திரங்களை விட அவன் சொற்கள் சிறப்பானவை என்கிறீரா, எனச் சிவகோசரி முனிவர் கனவில் சிவனை வினவினார். 811

ஐயம் இருந்தால் நாளைக்கு ஒளிந்திருந்து அவன் செயலைப் பார், என்று சிவன் கூறினார். 812

கனவுக்குப் பின்னர் முனிவருக்குத் தூக்கம் வரவில்லை. பொழுது புலர்ந்தது. 813

முனிவர் வழக்கம்போல் பூசனை செய்துவிட்டு ஒளிந்திருந்தார். 814

அன்று ஆறாம் நாள். திண்ணனார் வழக்கம் போலச் சென்று வேட்டையாடினார். 815

811 **மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்**

இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்களியாவையினும்

முன்பிருந்து மற்றவன்தன்முகமலர அகநெகிழ

அன்பில்நினைந் தெனையல்லால் அறிவுறா மொழிநல்ல.

812 **உனக்கவன் தன் செயல் காட்ட நாளை நீ ஒளித்து இருந்தால்**

எனக்கு அவன் தன் பரிவு இருக்கும் பரிசு எல்லாம் காண்கின்றாய்

மனக் கவலை ஒழிக என்று மறை முனிவர்க்கு அருள் செய்து

புனல் சடிலத் திரு முடியார் எழுந்து அருளிப் போனார்

813 **கனவு நிலை நீங்கிய பின் விழித்து உணர்ந்து கங்குல் இடைப்**

புனை தவத்து மாமுனிவர் புலர் அளவும் கண் துயிலார்

மனம் உறும் அற்புதமாகி வரும் பயமும் உடன் ஆகித்

துனை புரவித் தனித் தேர் மேல் தோன்றுவான் கதிர் தோன்ற

814 **முன்னை நாள் போல் வந்து திருமுகலிப் புனல் மூழ்கிப்**

பன் முறையும் தம்பிரான் அருள் செய்த படி நினைந்து

மன்னு திருக் காளத்தி மலை ஏறி முன்பு போல்

பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார்

815 **கருமுகில் என்ன நின்ற கண் படா வில்லியார் தாம்**

வருமுறை ஆறாம் நாளில் வரும் இரவு ஒழிந்த காலை

அருமறை முனிவனார் வந்தணை வதன் முன்னம் போகித்

தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை ஆடி

கையில் கறி, வாயில் நீர், தலையில் பூ ஆகியவற்றை வேத்துக்கொண்டு திண்ணனார் வந்தார். 816

உணவு படைக்கக் காலம் தாழ்த்திவிட்டேன். இரத்தம் கொட்டும் தீய சகுனங்கள் எனக்குத் தோன்றின. அதற்கு நான் என்ன செய்ய முடியும் – என்று சொல்லிக்கொண்டிருந்தார். 817

திண்ணனார் அன்பை முனிவர்க்குக் காட்டத் தன் கண்களில் ஒன்றில் இரத்தம் ஒழுகுமாறு சிவன் செய்தார். 818

கண்ணில் குருதி கண்ட திண்ணனார் வாயிலிருந்த மஞ்சன நீர், கையிலிருந்த ஊன், தலையிலிருந்த மலர் அத்தனையும் சிதறின. பதைபதைத்துத் தரையில் விழுந்தார். 819

எழுந்து சென்று பார்த்தார். குருதியைத் துடைத்தார். குருதி நிற்கவில்லை. இந்தக் கொடுமையை யார் செய்தார் என்று அவரைக் கொல்ல வில்லைக் கையில் ஏந்திக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். 820

816 **மாறில் ஊன் அமுதும் நல்ல மஞ்சனப் புனலும் சென்னி**

ஏறு நாண் மலரும் வெவ்வேறு இயல்பினில் அமைத்துக் கொண்டு

தேறுவார்க்கு அமுதம் ஆன செல்வனார் திருக்காளத்தி

ஆறுசேர் சடையார் தம்மை அணுக வந்து அணையா நின்றார்

817 **இத்தனை பொழுது தாழ்த்தேன் என விரைந்து ஏகுவார் முன்**

மொய்த்த பல்சகுனம் எல்லாம் முறை முறை தீங்கு செய்ய

இத் தகு தீய புட்கள் ஈண்ட முன் உதிரங் காட்டும்

அதனுக்கு என் கொல் கெட்டேன் அடுத்தது என்று அணையும் போதில்

818 **அண்ணலார் திருக் காளத்தி அடிகளார் முனிவனார்க்கு**

திண்ணனார் பரிவு காட்டத் திரு நயனத்தில் ஒன்று

துண்ணென உதிரம் பாய இருந்தனர் தூரத்தே அவ்

வண்ணவெஞ் சிலையார் கண்டு வல் விரைந்து ஓடி வந்தார்

819 **வந்தவர் குருதி கண்டார் மயங்கினார் வாயில் நன்னீர்**

சிந்திடக் கையில் ஊனும் சிலையுடன் சிதறி வீழக்

கொந்தவர் பள்ளித் தாமம் குஞ்சி நின்று அலைந்து சோரப்

பைந்தழை அலங்கல் மார்பர் நிலத்து இடைப் பதைத்து வீழ்ந்தார்

820 **விழுந்தவர் எழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வது**

ஒழிந்திடக் காணார் செய்வது அறிந்திலர் உயிர்த்து மீள

அழிந்து போய் வீழ்ந்தார் தேறி யாரிது செய்தார் என்னா

எழுந்தனர் திசைகள் எங்கும் பார்த்தனர் எடுத்தார் வில்லும்

எனக்கு மாறாக யாராவது செய்திருப்பாரோ? ஆளி (ஆள் உருவம் கொண்ட சிங்கம்) செய்திருக்குமோ? என்று எண்ணிக் கொல்வதற்காகத் தேடிக்கொண்டு சென்றார். 821

வேடரையோ, விலங்கையோ காண முடியவில்லை. மீண்டு வந்து சிவனைக் கட்டிக்கொண்டு கதறினார். 822

பரமனார்க்கு என்ன நேர்ந்தது? ஒன்றும் தெரியவில்லையே என்று புலம்பினார். 823

கண்ணில் இரத்தம் வடிவது நிற்க மருந்து-மூலிகை தேடிக்கொண்டு வருவேன் என்று காட்டுக்குள் சென்றார். 824

தெரிந்த மூலிகைகளையெல்லாம் பறித்துக்கொண்டு வந்து கசக்கிக் கண்ணில் ஊற்றினார். 825

821 **வாளியுந் தெரிந்து கொண்டு இம் மலையிடை எனக்கு மாறா**

மீளி வெம் மறவர் செய்தார் உளர் கொலோ? விலங்கின் சாதி

ஆளி முன்னாகி யுள்ள விளைத்தவோ? அறியேன் என்று

நீளிருங் குன்றைச் சாரல் நெடிதிடை நேடிச் சென்றார்

822 **வேடரைக் காணார் தீய விலங்குகள் மருங்கு எங்கும்**

நாடியுங் காணார் மீண்டும் நாயனார் தம்பால் வந்து

நீடிய சோகத்தோடு நிறை மலர்ப் பாதம் பற்றி

மாடுறக் கட்டிக் கொண்டு கதறினார் கண்ணீர் வார

823 **பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க்கு அடுத்தது என்னோ?**

ஆவியின் இனிய எங்கள் அத்தனார்க்கு அடுத்தது என்னோ ?

மேவினார் பிரிய மாட்டா விமலனார்க்கு அடுத்தது என்னோ?

ஆவது ஒன்று அறிகிலேன் யான் என் செய்கேன் என்று பின்னும்

824 **என் செய்தால் தீருமோதான்? எம்பிரான் திறத்துத் தீங்கு**

முன்செய்தார் தம்மைக் காணேன் மொய் கழல் வேடர் என்றும்

மின்செய்வார் பகழிப் புண்கள் தீர்க்கும் மெய் மருந்து தேடிப்

பொன்செய் தாழ் வரையிற் கொண்டு வருவன் நான் என்று போனார்

825 **நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்கள் எங்கும்**

இனத்திடை பிரிந்த செங்கணேறு என வெருக் கொண்டு எய்திப்

புனத்திடைப் பறித்துக் கொண்டு பூத நாயகன்பால் வைத்த

மனத்தினும் கடிது வந்து தம் மருந்துகள் பிழிந்து வார்த்தார்

தசைக்குத் தசை என்னும் பழமொழி நினைவுக்கு வந்தது. 826

என் கண்ணைத் தோண்டி அப்பினால் கண்புண் மாறும் என்று எண்ணித் தன் அம்பால் தன் கண் ஒன்றைத் தோண்டி குருதி வடியும் கண்ணில் அப்பினார், 827

சிவன் கண்ணில் வழிந்த இரத்தம் நின்றுவிட்டது. அதனைக் கண்ட களிப்பில் திண்ணனார் கும்மாளக் கூத்து ஆடினார். 828

வலக்கண்ணில் வடிந்த இரத்தம் நின்றுவிட்டது. பின்னர் இடக்கண்ணில் இரத்தம் வடிந்தது. 829

ஒரு கண்ணுக்கு மருந்து கண்டேன். மற்றொரு கண்ணனுக்கும் அதே தருவேன் என்று தன் மற்றொரு கண்ணையும் தரத் துணிந்தார். 830

826 **மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக் காளத்திக்**

கொற்றவர் கண்ணில் புண்ணீர் குறை படாது இழியக் கண்டும்

இற்றையின் நிலைமைக்கு என்னோ இனிச் செயல் என்று பார்ப்பார்

உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன் எனும் உரைமுன் கண்டார்

827 **இதற்கினி என்கண் அம்பால் இடந்து அப்பின் எந்தையார் கண்**
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்து எழும் உள்ளத்தோடு மகிழ்ந்து முன் இருந்து தங்கண்
முதற்சரம் அடுத்து வாங்கி முதல்வர் தம் கண்ணில் அப்ப

828 **நின்ற செங்குருதி கண்டார் நிலத்தின் நின்றேப் பாய்ந்தார்**
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்தும் ஆடி
நன்று நான் செய்த இந்த மதி என நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பினாலே உன் மத்தர் போல மிக்கார்

829 **வலத்திரு கண்ணில் தம் கண் அப்பிய வள்ளலார் தம்**
நலத்தினைப் பின்னும் காட்ட நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில் செம் குருதி பாயக் கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கையின் உம்பர் மேலார்

830 **கண்டபின் கெட்டேன் எங்கள் காளத்தியார் கண் ஒன்று**
புண்டரு குருதி நிற்க மற்றைக் கண் குருதி பொங்கி
மண்டுமற்று இதனுக்கு அஞ்சேன் மருந்து கை கண்டேன் இன்னும்
உண்டொரு கண் அக்கண்ணை இடந்து அப்பி ஒழிப்பேன் என்று

தேவனார் சிவன் இடக்கண்ணில் தன் இடக்காலை ஊன்றிக்கொண்டு திண்ணனார் தன் அம்பால் மற்றொரு கண்ணையும் தோண்ட முற்பட்டார். அதனைக் கண்ட தேவர் பொறுக்கவில்லை. 831

கண்ணை அப்பிய கண்ணப்பரே நிற்க நிற்க எனத் திண்ணனார் கையைப் பிடித்து, காளைமேல் தோன்றிய சிவன் தடுத்து நிறுத்தினார். 832

திண்ணன் கண்ணைத் தோண்டி அப்பியதையும், மறுகண்ணைத் தோண்ட முற்பட்டதையும், சிவன் தடுத்ததையும் சிவகோசரி முனிவர் கண்டார். தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். 833

கண்ணப்பரைத் தன் வலப்புறத்தில் இருக்குமாறு சிவன் அருள் புரிரிந்தார். இதனைக் காட்டிலும் வேறு பேறு வேண்டுமோ? 834

கண்ணப்பரை வாழ்த்தி, கடவூர் கலயனார் தொண்டைச் சொல்லத் தொடங்குகிறேன். 835

831 **கண்ணுதல் கண்ணில் தம் கண் இடந்து அப்பிற் காணும் நேர்பாடு**
எண்ணுவர் தம்பிரான் தன் திருக் கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பினோடும் ஒரு தனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ தேவர்

832 **செங்கண் வெள்விடையின் பாகர் திண்ணனார் தம்மை ஆண்ட**
அங்கணர் திருக் காளத்தி அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண் முன் இடக்குங் கையைத் தடுக்க மூன்று அடுக்கு நாக
கங்கணர் அமுதவாக்குக் கண்ணப்ப நிற்க என்ற

833 **கானவர் பெருமானார் தங்கண் இடந்து அப்பும் போதும்**
ஊனமும் உகந்த ஐயர் உற்று முன் பிடிக்கும் போதும்
ஞான மாமுனிவர் கண்டார் நான்முகன் முதலாய் உள்ள
வானவர் வளர் பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப

834 **பேறினி இதன் மேல் உண்டோ ? பிரான் திருக் கண்ணில் வந்த**
ஊறு கண்டு அஞ்சித் தம் கண் இடந்தப்ப உதவும் கையை
ஏறுயர்த்தவர் தம் கையால் பிடித்துக் கொண்டு என் வலத்தில்
மாறிலாய் நிற்க என்று மன்னு பேர் அருள் புரிந்தார்

835 **மங்குல் வாழ் திருக் காளத்தி மன்னனார் கண்ணில் புண்ணீர்**
தங்கணால் மாற்றப் பெற்ற தலைவர் தாள் தலைமேற் கொண்டே
கங்கை வாழ் சடையார் வாழும் கடவூரில் கலயனாராம்
பொங்கிய புகழின் மிக்கார் திருத் தொண்டு புகலல் உற்றேன்

திருச்சிற்றம்பலம்

தேம்பாவணி

இன்னொரு கிறித்தவக் காப்பியமான இரட்சணிய யாத்திரிகத்தைப் போலவே, இத் தமிழ்க் காப்பியமும் பிறமொழிக் காப்பியம் ஒன்றைத் தழுவி, தமிழ் நெறிக்கேற்ப எழுதப்பட்டதாகும். ஸ்பானிய நாட்டு ஆகிருத நகரில் வாழ்ந்த ஆகிர்த மரியாள் என்னும் கன்னி இறைநகரம்

வினாக்கள்

வ.எண்	ஐந்து மதிப்பெண் வினா	LOCF Mapping		
1	கம்பராமாயணத்தின் ஆசிரியர் யார்?	K2	CO2	PO4
2	கம்பராமாயணம் எத்தனைகாண்டங்களைக் கொண்டது?	K3	CO3	PO5
3	கடல்தாவுபடலத்தில் அனுமனின் செயல்களைக் கூறு.	K4	CO4	PO1
4	பெரியபுராணத்தை இயற்றியவர் யார்?குறிப்புவரைக.	K5	CO5	PO2
5	பெரியபுராணம் யாரைப்பற்றி கூறுகிறது?	K1	CO4	PO3

வ.எண்	எட்டு மதிபெண் வினா	LOCF Mapping		
1	கம்பராமாயணம் கதைச்சுருக்கத்தினைவிவரிக்க.	K2	CO1	PO4
2	பெரியபுராணம் கதைஅமைப்பைவிவரிக்க.	K1	CO2	PO6
3	கடல்தாவுபடலம் செய்திகளைதொகுத்துரைக்க.	K4	CO2	PO5
4	கண்ணப்பநாயனாரின் பக்திதிறத்தினைபுலப்படுத்துக.	K3	CO4	PO6
5	கண்ணப்பநாயனாரின் நண்பன் பெயர்களைக் கூறுக.	K5	CO1	PO3

(ஊவைல ழுக புழன) என்னும் நூலை, அன்னை மரியின் ஆணைப்படி எழுதியதாகக் கூறியுள்ளார். அன்னை மரியினால் தமக்கு உரைக்கப்பட்ட சூசையப்பரின் வரலாற்றையே தாம் நூலாக எழுதியுள்ளதாக அவர் கூறுகிறார். அந்நூலைத் தழுவி, தமிழ் மரபுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்ப வீரமாமுனிவர் தேம்பாவணியை இயற்றியிருக்கிறார். மேலைநாட்டு நூலின் மொழிபெயர்ப்பு எனத் தோன்றாத வகையில், இக்காப்பியத்தை வீரமாமுனிவர் உருவாக்கியுள்ளார்.

காப்பியக் கருவும் கதையும்

இத்தமிழ்க் காப்பியத்தின் கதைத் தலைவராக விளங்குபவர் இயேசுபெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையே ஆவார். வளன் என்றும் குறிக்கப்படும் இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு விவிலியத் திருமறையில் ஐந்தே இடங்களில் சிற்சில வரிகளிலேயே இடம் பெறுகிறது. எனினும், ஆகிர்த மரியாளின் மூலநூலைத் தழுவி, வீரமாமுனிவர் சூசையின் வரலாற்றை விரிவான காப்பியமாக வடித்துள்ளார்.

காப்பிய அமைப்பு

தேம்பாவணிக் காப்பியம் பாயிரம் எனப்படும் முகவுரையும், படலங்கள் எனப்படும் முப்பத்தாறு சிறு பிரிவுகளும் கொண்டு விளங்குகிறது. இந்த முப்பத்தாறு படலங்களையும் மூன்று காண்டங்களாகப் பிரித்து வெளியிட்டுள்ளனர். தமிழ்க் காப்பியங்களின் அமைப்புக்கும் மரபுக்கும் ஏற்ப, பாயிரப் பகுதியில் நூல் எழுதப்பட்ட வரலாறு கூறப்படுகிறது. அதில் அவையடக்கமாக ‘கடலையே நக்கிக் குடிக்க முற்பட்ட ஒரு பூனையைப் போல, ஊமையன் போன்ற நானும் சொல்லுவதற்கு அரிய வளனாரின் வரலாற்றை வடிக்க முற்பட்டேன்’ எனக் கூறுகிறார். உவமையின் அழகை எண்ணிப் பாருங்கள். எத்துணைத் தன்னடக்கம்! பின்னர் காப்பிய மரபுப்படி நாட்டு வளம், நகர் வளம் முதலியன நன்கு வருணிக்கப்படுகின்றன.

அலகு 4

தேம்பாவணி

1. நாட்டுப் படலம்

நாட்டுப்படலம் வளன் பிறந்த சூதேய நாட்டின் இயற்கை வளத்தை இணைத்துக் கூறும் பகுதி.

மழை வளம்

புள்ளு லாம்விசும் பிடைதொறும் பொரும்படை பொருவ

வெள்ளு லாமழை வெண்கொடி யுருக்கொடு விளங்கித்

தெள்ளு லாந்திரை திளைப்பவுண் டெழுந்துயர் பரந்து

வள்ளு லாங்கரு மதகரி இனமெனத் தோன்ற. 14

பொ-ரை: பறவைகள் பறந்து உலாவும் வானத்தில் வெண்ணிறமாக இடந்தோறும் உலாவும் மேகங்கள். அவை போருக்கு அணிவகுத்த படை போலவும், வெண்ணிறத் துணிக் கொடியின் உருவத்தைக் கொண்டும் விளங்கின. பின் அவை அசைந்து உலாவும் தெளிந்த கடல் நீரை மிகுதியாகக் குடித்து எழுந்து உயர்வானத்தில் பரந்து வலிமையோடு காட்டில் உலாவும் கரிய மத யானையின் கூட்டம் போல் தோன்றின.

கரை: வானத்தில் மேகங்கள் வெண்ணிறமாக உலாவின' படைபோல் காட்சி அளித்தன' மத யானைகள் போலவும் தோன்றின. 1

போர்பு றங்கொடு, பொருந்தல ருரத்திறேய்த் தொளிர்வேற்

சீர்பு றங்கொடு திசைதொறு மிருளற மின்னி

வார்பு றங்கொடு வளர்முர சொலியென வதிர்ந்து

நீர்பு றங்கொடு நீன்முகில் முழங்கின மாதோ. 15

பொரை: நீரைத் தம்மிடத்தே கொண்டு நீல நிறம் பெற்ற மேகங்கள் பகைவரது மார்பில் செலுத்திப் போரில் அவர் புறமிட ஒளிரும் வேலின் சீரைத் தம்மிடத்தே கொண்டு திசை தோறும் இருள் கெடுமாறு மின்னின' கட்டிய வாரைப் புறத்தே சொண்டு வெற்றி முழக்கமிடும் முரசின் ஒலி போல இடித்து முழங்கின.

கரை: நீர் முகந்த நீல நிற மேகங்கள் இருள் ஓட மின்னின' வெற்றி முழக்கம் இடும் முரசு போல இடித்து முழங்கின. 2

படையெ னச்செருப் பகைதரப் படர்ந்தன வல்லாற்

கடையெ னச்செறி கருணையோ டுஞற்றிய வள்ளர்

கொடையெ னச்செழுங் குன்றொடு வயின்றொறுங் குளிர

மிடையெ னச்சொரி வியன்முகில் வரையில பொழிவ. 16

பொ.ரை: செறிந்த தன்மையாய் நீரைச் சொரியும் பெரிய மேகங்கள் போரில் பகையை விளைவிக்கும் தோற்றத்தினால் படைபோல் எங்கும் பரவின. இறுதியில் செறிந்த கருணை யோடு செய்த வள்ளல்களின் கொடை போல் செழுமையான மலையோடும் மற்றுள்ள இடந்தோறும் குளிருமாறு அளவில்லாது மழையைப் பொழிவனவாம்.

கரை: மேகங்கள் படைபோல் எங்கும் பாவின' வள்ளல்கள் கொடை வழங்குவதுபோல மழையாகப் பொழிந்தன. 3

ஆற்று வளம்

படித்த நூலவை பயன்பட விரித்துரைப் பவர்போ

றடித்த நீன்முகில் தவழ்தலை பொலிந்தபொன் மலையே

குடித்த நீரெலாங் கொப்புளித் தமுதென வருவி

யிடித்த றாவொலி யெழத்திரை யெறிந்துருண் டிரிவ. 17

பொ.ரை : தாம் படித்த நூலைப் பிறருக்குப் பயன்படுமாறு சபையில் விரித்துரைப்பவர் போல் நீரால் தடித்த கரிய மேகம் சிகரத்தோடு பொலிந்த அழகிய மலையும் தான் மழையால் முன் குடித்த நீரையெல்லாம் கொப்புளிக்கும். அந்நீர் அமுதம் போன்ற அருவியாக மலைமீது இடித்துப் பாய்ந்து, அறாத ஒலி எழுமாறு அலை அடிக்க உருண்டு ஆறாக ஓடும்.

க.ரை: தாம் கற்றநூலைப் பிறருக்கு எடுத்துரைக்கும் நல்லோர்போல மேகமும் தான் குடித்த நீரைக் கொப்பளித்து ஆறாக ஓடவைக்கும். 4

புள்ளி மால்வரை பொன்னுல கிடத்தெடுத் துய்த்த

லுள்ளி வான்விடும் வடமெனத் தாரைக ளொழுக

வெள்ளி நீண்டொடர் விசித்ததைப் பிடித்தெனச் சூழத்

துள்ளி வீழுயர் தூங்கிய வருவியின் றோற்றம். 18

பொரை: செல்வமுள்ள அப்பெரிய மலையில் வானுலகிற்கு எடுத்துச் செலுத்தக் கருதி வானவர் விடுத்த வடம் போல் மழைத் தாரைகள் பாய்ந்து கொண்டிருக்கும். பூமி வெள்ளியாலான நீண்ட சங்கிலிகளால் கட்டி, அதை விடாது பிடித்துக் கொண்டிருக்கும். அம்மலையைச் சுற்றிலும் துள்ளி விழுந்த வண்ணம் உயரத்தில் இருக்கும் அருவியின் தோற்றம் அமையும்.

கரை: மழைத்தாரைகள் வடம்போல் இருக்கும் மலையைச் சுற்றிலும் துள்ளி விழும் அருவிகள் இருக்கும். 5

ஒண்ணு ரைத்தெரி யுமிழ்ந்தவி ரினமணி வரன்றித்

தெண்ணு ரைத்தெழுந் திரைத்திரள் வயின்றொறும் புகுந்து

வண்ணு ரைத்தெதிர் வதிந்தெலாஞ் சாய்த்தவை கொடுப்போய்ப்

புண்ணு ரைத்தடக் கொள்ளைசெய் பொருந்தலர் போன்றே. 19

பொ.ரை: தெளிந்த நுரையோடு எழுந்து பாயும் திரளான வெள்ளம் ஒளி பொருந்திய நுரை போன்று இருக்கும்' நெருப் பைக் கக்குவனவாக விளங்கும். பல இனத்து இரத்தினங்களை யெல்லாம் மலையினின்று வாரிக் கொண்டு பல இடங்களிலும் நுழைந்து வலிமையோடு நுரை பொங்க எழுந்து தன் எதிரே தங்கியிருந்த எல்லாவற்றையும் சாய்த்து அவற்றையெல்லாம் தன்னோடு இழுத்துக் கொண்டு போயிற்று வெள்ளம். அவ்வெள்ளம் புண்ணினின்று நுரையோடு, குருதி எழுமாறு கொன்று கொள்ளையிடும் பகைவரைப் போன்று விளங்கியது.

க.ரை: ஒளி பொருந்திய நுரை போன்ற வெள்ளம் இரத்தினம் முதலான பொருள்களை இழுத்துக்கொண்டு பாய்ந்து ஓடியது. 6

விரைகி டந்தசை வீயுமிழ் மதுவினாற் பெருகி

நிரைகி டந்தெழுஞ் சோலையுங் கழனியு நிறைப்ப

வரைகி டந்திழி வளம்புன லெங்கணு முலவல்

திரைகி டந்துயர் சீர்த்துறுப் புலாவிய போன்றே. 20

பொ.ரை: மலையினின்று பாய்ந்தோடிய வளமுள்ள வெள்ளம், வாசனை பொருந்திய அசையும் மலர்கள் உமிழ்ந்த மதுவினால் மேலும் பெருகின. உயர்ந்து நிற்கும் சோலை களையும் தாழ்ந்து கிடக்கும் வயல்களையும் நிறைத்து எங்கும் உலாவிப் பரந்து நின்றது. அத்தோற்றம் நீரால் வரும் உயிர் பின் சிறந்து எழுந்து உறுப்புகளிலெல்லாம் உலாவிப் பரந்தது போன்று இருந்தது.

க.ரை: பாய்ந்தோடி வரும் வெள்ளத்தோடு மலர்கள் உமிழ்ந்த மதுவும் கலந்து மேலும் பெருகியது. 7

அஞ்சி லாவெதி ரடுக்கிய கல்லெலாங் கடந்தே

யெஞ்சி லாவெழி லிமைத்தநீண் மருதமு நீக்கித்

துஞ்சி லாநதி தொடர்ந்தகல் கருங்கட னோக்கல்

விஞ்சை யாரெல்லாம் வெறுத்துவீ டிவறிய போன்றே. 21

பொ.ரை: ஓடுதல் ஓயாத ஆறு, தனக்கு எதிரே அடுக்காக நின்ற குன்றுகளையெல்லாம் அஞ்சாமல் கடந்து, அழகுடன் விளங்கிய மருத நிலத்தையும் நீக்கிப் பரந்த கருங்கடலையே நோக்கி செல்லும் காட்சி, அறிவுடையோர் இவ்வுலகில் உள்ள வற்றை வெறுத்து மோட்சமொன்றையே நாடுதலை ஒத்திருந்தது.

கரை: ஆறு பலவற்றைக் கடந்து கடலை நோக்கிச் செல்லுதல் அறிஞர் உலகப் பொருள்களை வெறுத்து மோட்சம் நாடுதல்போல இருந்தது. 8

மலையி னேரறல் மலியநாற் றிணையருந் தியபின்

னலையி னேருற லவனிதன் மகர்க்கெலா மூட்டி

முலையி னேருநீஇ விஞ்சுபால் முடுகலி லுடுத்த

கலையி னேருநீஇக் களிப்பொடு சிந்துவ போன்றே. 22

பொ.ரை: மலையினின்று புறப்படும் வெள்ளம், நான்கு நிலங்களும் மிகுதியாக அருந்திய பின்னும், கடலுக்குள் மேலும் மேலும் நேராகச் சென்று கொண்டிருக்கும். இக்காட்சி, நிலமகள் தன் மக்களுக்கெல்லாம் ஊட்டிய பின்னும் தன் முலையினின்று பொங்கிச் சுரந்து மிஞ்சிய பால் தான் உடுத்த ஆடையின்மேல் சுரந்து சிந்துவதைப் போன்று இருந்தது.

கரை: மழைவெள்ளம் கடலை நோக்கிச் செல்லுதல் நிலமகள் தன் முலைப்பாலை மக்களுக்கு ஊட்டியபின் எஞ்சியது ஆடையில் விழுந்து சிந்துவதை ஒக்கும். 9

உழவுத் தொழில் வளம்

செறியு லாம்புனல் சிறைசெய்து பயன்பட வொதுக்கி

வெறியு லாமலர் மிடைந்தகல் வயல்வழி விடுவார்

பொறியு லாம்வழி போக்கில் தியல்பட வடக்கி

நெறியு லாவற நேரவை நிறுத்தினர் போன்றே. 23

பொரை: செறிந்து ஓடும் வெள்ளத்தைச் சூதேய நாட்டு உழவர் அணை கட்டித் தடுத்துப் பின்னால் பயன்படுமாறு சேர்த்து வைத்தனர்' பூக்கள் செறிந்து பரந்து கிடக்கும் வயல்களில் வாய்க்கால் வழியே தக்க நேரத்தில் பாய விடுவர். இச் செயல், ஐம்பொறிகள் அலைக்கும் வழிகளிலே மனம் செல்ல விடாமல், நல்லியல்போடு பொருந்துமாறு அவற்றை முதலில் அடக்கிப் பின் நன்னெறியோடு பொருந்திய புண்ணியத்தின்கண் நேரே அவற்றை நிலைபெறச் செய்யும் அறவோர் செயலை ஒத்திருந்தது.

க.ரை: சூதேய நாட்டு உழவர் மழைநீரை அணைகட்டித் தேக்கி வயல்களில் பாய்ச்சினர் இச்செயல் சென்ற விடத்தில் செல்லவிடாது ஐம்புலனை அடக்கியது அறவோர் செயல்போல் இருந்தது. 10

உவர்க்குந் தாழ்கட லுடுத்தகல் விரிதலை ஞால

மெவர்க்குந் தாயென வெண்ணிலாக் கிழிபடக் கீறு

மவர்க்குந் தானுண வளித்தலே நோய் செய்வார்க் குதவி

தவர்க்குந் தாவருந் தருமமென் றியற்றுதல் போன்றே. 24

பொ.ரை: உப்புச் சுவையுள்ள ஆழமான கடலை ஆடையாக உடுத்து அகன்று விரிந்த இடத்தை உடைய இவ்வுலகம் எல்லோருக்கும் தாயாக இருப்பதனால், தன்னைத் தாய் என்று எண்ணாமல் கிழித்துக் கீறும் உழவர்க்கும் உணவளித்துப் பேணும். இது, துன்பம் செய்வார்க்கு உதவி செய்தல் தவ முனிவர்க்கும் எட்டுதற்கு அரிய புண்ணியமென்று அருள் உள்ளங்கொண்ட சிலர் செய்தலை ஒத்திருந்தது.

க.ரை: தன்னைக் கிழித்துக் கீறும் உழவர்க்கும் உணவு அளிக்கும் நிலத்தாய் போன்றவர் இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் அருளாளர். 11

கூர்வி ளைத்தருட் குருவிதி போன்றொன்று கோடி

நீர்வி ளைத்தநெல் நிரம்பென வித்தின ரிரட்ட

வேர்வி ளைத்தபற் கடைச்சியர் குரவையா டியல்பாற்

றேர்வி ளைத்தவோர் சிறப்பெழும் விழாவணி போன்றே. 25

பொ.ரை: நெல்லை விதைத்தவர், "மிகுதியாகக் கொண்ட அருளுள்ள குரு விதித்த ஆசியுரை போன்று நீர் விளைவித்த இவ் விதை நெல் ஒன்று கோடியாக விளைந்து நிரம்புவதாக!" என்று முழங்கினர்' அழகான பல்லை உடைய உழத்தியர் அப்பொழுது ஆடும் குரவைக் கூத்தை ஆடினர்' இக் காட்சி தேரோடு கொண்டாடிய சிறப்புப் பொருந்திய ஒப்பற்ற திருவிழா போன்று விளங்கியது.

க.ரை: நெல்லை விதைத்த உழவர் ஆடும் ஆட்டமும் உழத்தியர் ஆடும் குரவைக் கூத்தும் தேர்த்திருவிழா போன்று இருந்தன. 12

நோக்க வின்புள நுகரவொண் முளரியோ டாம்ப

னீக்க லாதெலா நீர்மலர் களையெனக் கட்ட

லாக்க மாக்கினு மறனிழந் தாவது கேடென்

ஞாக்க மாண்பின ரொருங்கவை யொழிக்குதல் போன்றே. 26

பொ.ரை: பார்வைக்கு இன்பமென்று உள்ளம் அழகை நுகர முற்படுமாயினும் ஒளி பொருந்திய தாமரையையும் ஆம்பலையுமே விலக்காமல் பயிருக்குக் களையே என்று அவ்வுழத்தியர் பறித்தொழிப்பர். இச்செயல் அறத்தை இழந்து தேடிய செல்வம் கேடு தருவதென்று தெரிந்து மாண்புடையார் அவற்றை ஒருங்கே ஒழித்துவிடுதலைப் போன்று அமைந்தது.

கரை: பயிருக்கு இடையூறு செய்யும் களையாம் தாமரை யையும் ஆம்பலையும் உழத்தியர் பிடுங்கி எறிதல்போல அறமற்ற வழியில் வந்த செல்வத்தையும் நல்லவர்கள் புறக்கணிப்பர். 13

பூரி யார்திருப் போறலை பசியகூழ் நிறுவி

நீரி னார்தலை நேரநேர் வளைவொடு பழுத்த

வார மானுநெல் லறுத்தரி கொண்டுபோ யங்கட்

போரி தாமெனக் களித்தனர் போர்பல புனைவார். 27

பொ.ரை: செல்வம் படைத்த அற்பர் போல் பசும் பயிராய் இருந்த காலத்தில் தலை நிமிர்த்து நின்று இப்பொழுது நல்லியல்பு உடையார் தலை போல முன்னே தலை வளைவோடு பழுத்த முத்துப் போன்ற நெல்லை உழவர் அறுத்து அரிக் கட்டுகளை அங்குள்ள களத்திற்குச் சுமந்து கொண்டுபோய், ”சூதேய நாடு அறிந்த போர் இதுவே ஆகும்” என்று சொல்லிக் களிப்போடு பல நெற்போர்களாகக் குவித்து வைப்பர்.

கரை: பழுத்து முற்றிய நெல்லை அறுத்து அரிகளாகக் கட்டி அடித்து நெல்லைப் பிரிப்பர்’ அடித்த வைக்கோலைப் போராகப் போடுவர். 14

மெய்க லந்தபொய் விலக்கிமெய் கொள்பவர் வினைபோல்

வைக லந்தநெல் பகட்டினாற் றெழித்துவை மறுத்துக்

கைக லந்தடுத் தேற்குநர்க் களித்தபின் களித்துத்

துய்க லந்தநெல் லுண்கவு மீகவுந் தொகுப்பார். 28

பொ-ரை: மெய்யோடு கலந்த பொய்யை விலக்கி மெய்யை மட்டும் கொள்ளும் மேலோர் செயலுக்கு ஏற்ப, உழவர் வைக்கோலோடு சேர்ந்திருந்த நெல்லை எருமைக் கடாக்களால் மிதிக்கவிட்டு, வைக்கோலைப் பிரித்து, பின்னர் நெல்லை முதலில் இரு கைகளும் பொருந்த எடுத்து இரப்பவர்க்குக் கொடுப்பர்’ பின் தாம் உண்ணவும் பிறருக்கு ஈயவுமென்று களிப்போடு களஞ்சியங்களில் சேர்த்து வைப்பர்.

கரை: போரடித்துப் பெற்ற நெல்லை உழவர்கள் களத்தில் வந்து கேட்டவர்களுக்குக் கொடுப்பர்’ எஞ்சிய நெல்லைத் தமக்கும் இருப்பவருக்குப் பயன்படக் களஞ்சியங்களில் சேமித்து வைப்பர். 15

வாழ்க்கை வளம்

ஈத லோடிசை யினிய வாழ்வுக

ளாத லோடற னழிவி லாக்கினர்

காத லோடுடல் கடிய நாள்வர

வீத லோடுறும் வீட்டில் வாழ்வரே. 29

பொ.ரை: சூதேய நாட்டார் இரவலர்க்கு ஈதலோடு அதனால் வரும் புகழும் இனிய வாழ்வும் அமைவதோடு புண்ணியமும் அழிவில்லாத முறையில் தமக்கு ஆக்கிக் கொண்டனர். அதனால் தம் உடலை விட்டுப் பிரிய நாள் வரவும் ஆசையோடு மடிவர்' மடிந்ததும் தாம் சென்று சேரும் வானகத்தில் வீட்டில் நல்வாழ்வு பெறுவர்.

கரை: சூதேய நாட்டார் பிறருக்கு ஈந்து இசைபட வாழ்ந்து வீடுபேறு அடைவர். 16

மறமொ டாகுல மலிந்த தீதெலாம்

புறமொ டாகையின் பொருவி லாவள

ரறமொ டான்றசூ தேய நாடமை

திறமொ டாண்மையைச் செப்பச் சீரதோ. 30

பொ.ரை: பாவத்தோடு துன்பமும் மிகுதியான தீமைகள் அனைத்தும் அந்நாட்டிற்குப் புறத்தே நின்று போயின. ஆதலால் ஒப்பில்லாது வளர்கின்ற புண்ணியத்தால் மாண்புற்ற சூதேய நாட்டில் அமைந்துள்ள திறமையையும் ஆண்மையையும் எடுத்துச் சொல்லுதல் இயலுவதோ?

க.ரை: சூதேய நாட்டில் தீமைகள் அருகி ஆண்மையும் திறமையும் நிரம்பி இருந்தன. 17

மிடியி லார்நயன் விளைவில் மாற்றுவான்

முடியி லார்கனிப் பொறைபொ றாமுயன்

றடியி லாருயி ரமைந்த நீர்தொழக்

கடியி லார்மரம் வளைதல் காணுமே. 31

பொ.ரை: நந்தவனத்தில் நிறைந்துள்ள மரங்கள் தம் உச்சியில் நிறைத்துள்ள கனிகளின் பாரம் தாங்காமல் வளையும். அது வறுமைக்காலத்தில் தாம் அடைந்த நன்மையை மக்கள் விளைச்சல் நாளில் கொடுத்துத் தீர்ப்பதுபோல், மரங்கள் தமக்கு உயிராய் அமைந்து உதவிய பூமி நீரை வளைத்து தொழுவது போல் தோன்றும்.

கரை: மக்கள் தமக்கு வறுமைக் காலத்தில் உதவியோர்க்கு விளைச்சல் முடிந்தவுடன் திருப்பிப் கொடுப்பர். 18

ஆலை யார்புகை முகிலென் றார்ப்பெழச்

சோலை யார்மயில் துள்ளி மாங்குயில்

மாலை யாரிருள் விரும்பு மாக்கள்காண்

மேலை யாரென மெலிந்து தேம்புமால். 32

பொ.ரை: கரும்பாலையினின்று நிறைந்து மேல் எழும் கரும் புகையைக் கார் மேகம் என்று கருதிச் சோலையில் நிறைந்துள்ள மயில்கள் ஆரவாரக் குரல் எழுப்பித் துள்ளி ஆடும்.

மாமரத்துக் குயில்கள்,மாலைப்பொழுதில் இருளை விரும்பும் தீய மக்களைக்கண்ட மேலோர்போல் மெலிந்து வருந்தும்.

க.ரை: ஆலைப் புகையைக் கார்மேகம் என நினைத்து மயில்கள் ஆடும் மாமரத்துக் குயில்கள் அதனைக் கண்டு உடல் மெலிந்து வருந்தும். 19

மல்ல விள்ளலர் மலிந்த கான்றொறும்

புல்ல வன்பறா பொருது காரண

மில்ல தொல்லெனக் குறும்பு ளீந்தபோ

ரல்ல தில்லதோ ரமரந் நாட்டிலே. 33

பொ-ரை: வளமாக விரிந்த மலர்கள் நிறைந்த வனம் தோறும் ஒரு போர் நடக்கும். அது பொருந்துவதற்கு உரிய அன்பு அறாமலும் போர் செய்வதற்கு உரிய காரணம் இல்லாமலும் காடைகள் ஒல்லென ஒலித்துத் தமக்குள் செய்துகொள்ளும் அன்புப் போர். இப்போர் அல்லாது வேறு பகையால் நடைபெறும் போர் அந்நாட்டில் இல்லை.

கரை: அந்நாட்டில் காடைகள் தமக்குள் செய்யும் போர் அல்லாது வேறு போர்கள் நடைபெறுவது இல்லை. 20

தீயெ ழுத்தகர் சினந்து தாக்குப

மீயெ ழுத்துகள் விரைந்து பின்னுற

னோயெ ழுப்பகை நுதலு மொன்னவர்

வாயெ ழுச்செயும் வணக்க மானுமே. 34

பொ-ரை: தீப்பொறி பறக்க ஒன்றோடொன்று சினந்து தாக்குவனவாகிய இரண்டு ஆட்டுக் கிடாய்கள், தூசி மேலே எழுமாறு விரைந்து பின் வாங்கும் நிகழ்ச்சி, துன்பம் செய்யும் பகைச் செயலை மனத்துள் வைத்த பகைவர் வாயினின்று பிறக்கச் செய்யும் வணக்கச் சொல்லை ஒத்திருக்கும்.

க.ரை: தாக்கிக் கொள்ளும் ஆட்டுக் கிடாய்கள் பின் வாங்குவது பகைவர் கூறும் அடக்கச் சொல்லை ஒத்தது. 21

வேர்ப்பெ ழுக்கயல் விழியர் கைவளை

யார்ப்பெ ழுக்கடை தயிரி லாயநெய்

கூர்ப்பெ ழுத்துயர் குறுக மேலற

மேர்ப்பெ ழுச்செய்வோ ரியல்பு மானுமே. 35

பொரை: கயலை ஒத்த கண்களை உடைய இடைச்சியர் தம் உடம்பில் வேர்வை எழவும் கையில் அணிந்த வளையல்களின் ஆரவாரம் எழுமாறும் வருந்திக் கடைந்த தயிரினின்று வெண்ணெய் மேலெழுந்து வரும். துன்பம் தம்மை அணுகிய காலத்தும் விடாது அறமே மேலோங்கி வரச் செய்யும் மேலோரின் இயல்பை ஒத்திருக்கும்.

கரை: இடைக்குல மடந்தையர், கடைந்த தயிரிலிருந்து வெண்ணெய் எழும் காட்சி துன்பம் வந்தபோதும் கலங்காத மேலோர் இயல்பைப் போன்றது. 22

கழையி றால்பனை கனிக டேங்கல

ருழையி றாவிய தேற லுண்டபின்

மழையி றாவிய மதுவி னூங்கினி

திழையி றாவழ கிளம்புள் பாடுமால். 36

பொ.ரை : கரும்பு, தேனடை, பனை, பழங்கள், தென்னை, மலர்-இவற்றினிடமாய் எழுந்து வந்த மதுவை அழகிய இளம் பறவைகள் உண்டன' உண்டபின் அவை மழைபோல் பெருகிய அம்மதுவைக் காட்டிலும் இனிதாகப் பாடும்.

கரை: கரும்பு, தேனடை, பழங்கள் இவற்றிலிருந்து கிடைத்த மதுவைக் குடித்து அழகிய பறவைகள் இனிமையாகப் பாடும். 23

உண்ட கன்றகன் றுள்ளி மேதிகள்

மண்ட வன்புறீஇ வழிந்த பாற்றிரள்

கொண்ட வன்னமே குடித்த லாவது

கண்ட தங்குள களவி தாமரோ. 37

பொ-ரை: எருமைகள் தம்மிடம் பால் குடித்து அகன்ற கன்றுகளை மீண்டும் நினைந்து அவற்றின் மீது அன்பு கொண்டு தம் மடியினின்று பாலை வழிய விடும். அப்பாலைத் திரளாய்க் கூடிய அன்னங்கள் குடித்தலாகிய நிகழ்ச்சி அங்கு நிகழும். அங்கு உள்ள களவு இது ஒன்றே ஆகும்.

கரை: பாலைக் குடித்த கன்றுகளுக்கு எருமைகள் மீண்டும் பாலைச் சுரக்கவிடும்' அப்பாலை அன்னங்கள் கூடிக் குடிக்கும். 24

குயிலி னத்தொடு கொம்பி லார்கிளி

பயிலி னத்தொடு ஞிமிறும் பாடவே

துயிலி னத்தொடு விரித்த தோகைகொள்

மயிலி னத்தொடு மகளி ராடுமால். 38

பொ.ரை: மரக் கொம்புகளில் குயில் இனமும் பேச்சுப் பயிலும் கிளி இனமும் வண்டும் சேர்ந்து பாடிக் கொண்டிருக்கும். மரத்தடியில் தம் இனத்தோடு துயில் கொண்டிருந்த மயில்கள் இப்பாடலைக் கேட்டு விழித்து விரித்த தோகையோடு நடனம் ஆடும் அம் மயில் இனத்தோடு மகளிரும் சேர்ந்து ஆடுவர்.

கரை: மரங்களில் குயிலும் கிளியும் வண்டும் சேர்ந்து பாடுவதைக் கேட்டுத் துயின்ற மயில்கள் விழித்து ஆடின. 25

காசி லம்புவ களித்த புள்ளினம்

வீசி லம்புவ மிடைந்த தும்பிகள்

பாசி லம்புவ சிலம்பப் பண்புகழ்

நாசி லம்புவ சிலம்பு நாடெலாம். 39

பொ-ரை: களிப்புற்ற பறவை இனங்களின் ஆரவாரத்தால் சோலைகள் ஒலிக்கும்' மொய்த்த வண்டுகளால் பூக்கள் ஒலிக்கும் ' யாழ் ஒலிப்பதனால் பாடல்கள் ஒலிக்கும்' புகழுரைகளால் நாவுகள் ஒலிக்கும் : இவ்வாறு நாடு முழுவதும் ஒலிமயமாய்க் காணப்படும்.

க.ரை: பறவை ஒலி, வண்டொலி, யாழொலி, நாவொலி என நாடெங்கும் ஒலிமயமாய் இருக்கும். 26

முட்டி ரட்டின முரண்ட கர்பெடை

பெட்டி ரட்டின குயில்பி ளிர்ந்தமுத்

திட்டி ரட்டின கரும்பின் பீன்றகள்

விட்டி ரட்டின வீயி னங்களே. 40

பொ-ரை: மாறுபாடு கொண்ட ஆட்டுக் கிடாய்கள் ஒன்றோடொன்று முட்டிக் கொள்வதனால் ஒலித்தன. குயில்கள் தம் பெட்டைகளை விரும்பிக் கூவுதலால் ஒலித்தன. கரும்புகள் தம்மிடமிருந்து சிதறிய முத்துக்களைத் தரையில் இடுதலால் ஒலித்தன. மலர் இனங்கள் தேனைப் பொழிதலால் ஒலித்தன.

கரை: ஆட்டுக்கிடாய்கள் மோதும் ஒலி, குயில் கூவும் ஒலி, கரும்பு முத்தைச் சிந்திய ஒலி ஆகியவை எங்கும் ஒலித்தன. 27

நிழலிற் கண்சிறை படுத்து நீண்பொழில்

குழலிற் பூச்சிறை படுத்துங் கோதையார்

கழலிற் காற்சிறை படுத்துங் காந்தர்நீர்

விழலிற் றான்சிறை படுத்தும் வேலியே. 41

பொ.ரை : நீண்ட சோலைகள் தம் நிழலால் பார்ப்பவர் கண்களைச் சிறைப்படுத்தும்' மகளிர் தம் கூந்தலில் பூவைச் சிறைப்படுத்துவர்' ஆடவர் வீரக் கழலினால் தம் கால்களைச் சிறைப்படுத்துவர்' நன்செய் நிலம் தன்னுள் நீர் வந்து பாய்ந்தவிடத்து அதனைச் சிறைப்படுத்திக் கொள்ளும்.

கரை: நன்செய் நிலம் தன்னுள் பாயும் நீரைத் தனக்குள்ளே வைத்துக்கொள்ளும். 28

துன்ன லிற்சிறை படுத்தத் தோமிலா

லன்ன பற்சிறை யல்ல தில்லையால்

பொன்ன நற்சிறை யன்னப் புள்ளுறை

மன்ன வர்க்கிறை வழங்கு நாட்டிலே. 42

பொ-ரை: பொன்மயமான நல்ல சிறகை உடைய அன்னப் பறவைகள் வாழ்வதும் மன்னர்க்கெல்லாம் மன்னனாகிய தாவீது நீதி வழங்குவதுமான நாடு அச்சூதேய நாடு. அங்கு இருள் செறிந்த இடத்தில் தள்ளிச் சிறைப்படுத்தத்தக்க குற்றம் எவரிடமும் இல்லாமையால் மேலே காட்டியது போன்ற பல வகைச் சிறைகளே அல்லாமல், வேறு சிறைகள் இல்லை.

க.ரை: சூதேய நாட்டில் வாழ்வார் எவரிடமும் குற்றம் இல்லாமையால் அங்குச் சிறைகளே இல்லை. 29

வாய்ந்த செந்நெலை மறுகும் பண்டியு

மாய்ந்த மெல்லிலை யமையும் பண்டியும்

பாய்ந்த பூகவொண் பழம்பெய் பண்டியும்

வேய்ந்த தீங்கனி விம்மும் பண்டியும். 43

பொ-ரை: விளைச்சலாற் கிடைத்த செந் நெல்லைச் சுமக்கும் வண்டிகளும் ஆய்ந்தெடுத்த மெல்லிய வெற்றிலை கொண்டுள்ள வண்டிகளும் வானுற வளர்ந்த கமுகின் பழங்களை ஏற்றிய வண்டிகளும் அழகிய இனிய கனிகள் நிரம்பிக் கிடக்கும் வண்டிகளும்-

கரை: நெல், வெற்றிலை, பாக்கு, நற்கனிகள் ஆகியவற்றை ஏற்றிய வண்டிகள் சென்றன. 30

பன்னுந் தேங்கிள நீர்பெய் பண்டியும்

துன்னுந் தீங்கழை சுமக்கும் பண்டியும்

மின்னுந் தேன்செறி வீபெய் பண்டிய

மன்னுந் தேசுபன் மணிகொள் பண்டியும். 44

பொ.ரை: கொய்தெடுத்த தெங்கு இளநீர்க் காய்களை ஏற்றிவைத்த வண்டிகளும் இனிமை பொருந்திய கரும்புகளைச் சுமக்கும் வண்டிகளும் தேன் நிறைந்த ஒளியுடன் விளங்கும் மலர்களை இட்டு வைத்த வண்டிகளும் நிலைத்த ஒளியுடைய பலவகை இரத்தினங்களைக் கொண்டுள்ள வண்டிகளும்,-

கரை: இளநீர், கரும்பு, மலர்கள், நவமணிகள் ஆகியவற்றை ஏற்றிய வண்டிகளும் சென்றன. 31

துளித்த தேறலைத் துவலை சோலைசூழ்

களித்த நாடெல்லாங் கசடில் வாழ்வுறச்

சுளித்த மள்ளர்கள் தூண்டு மேற்றினந்

திளைத்த பண்டிகள் நெருங்கித் தேயுமால். 45

பொரை: தேனை மழையாகப் பெய்த சோலைகள் சூழப் பெற்றுக் களித்த நாடு சூதேய நாடு. அந்நாட்டில் சினங்கொண்ட உழவர்கள் தூண்டிச் செலுத்தும் காளை இனம் எழுச்சியோடு இழுத்துச் செல்லும் மேற்குறித்த பல வண்டிகளும் ஒன்றோடொன்று நெருங்கிச் செல்வதனால் தேயும்.

கரை: சோலைகள் சூழ்ந்த சூதேய நாட்டில் உழவர்கள் பார வண்டிகளை ஓட்டிச் சென்றனர். 32

பாய்ந்த தேங்கதின் பழங்கள் வீழ்ததால்

வாய்ந்த வாழைமா வருக்கை யாசினி

சாய்ந்த தீங்கனி சரிந்த தேன்புனல்

தோய்ந்த வாயெலா மினிமை தோய்ந்தன. 46

பொ.ரை: ஓங்கி வளர்த்த தென்னையின் நெற்றுக்கள் முற்றிவிழுந்தன. விழுகையில் அடியிலுள்ள வாழை, மா, வருக்கைப் பலா, ஆசினிப் பலா ஆகியவற்றின் இனிய கனிகளைக் கூடவே சாய்த்தன. அவ்வாறு சாய்ந்த கனிகளெல்லாம் சரிந்து தேன் கலந்த ஆற்று நீரில் சேர்ந்தன. அதனால் அவ்வாற்று நீர் சென்ற இடங்களெல்லாம் அதன் இனிமை தோய்ந்து விளங்கின.

கரை: முற்றி விழுந்த தேங்காய்கள், வாழை, மா, வருக்கைப் பலா ஆகிய கணிகளைச் சாய்த்தன. 33

வளைந்த ளித்தகுங் கடலின் வாழ்வளை

யுளைந்த ளித்தமுத் தொருங்கு மற்றெலாந்

திளைந்த ளித்தலிற் றிருவென் றாண்டகை

விளைந்த ளித்தவை விருந்தென் றாமரோ. 47

பொ-ரை: பூமியைச் சூழ்ந்து குளிர்ச்சியோடு விளங்கும் கடலில் வாழும் சங்கு வருந்தி ஈன்று தந்த முத்தோடு ஏனைய செல்வங்களெல்லாம் சேரப் பிறர்க்கு விருப்பத்தோடு கொடுப்பர் சூதேய நாட்டார். அதனால் செல்வமென்று ஆண்டவன் விளைவித்துத் தந்தவையெல்லாம் அங்கு விருந்து என்று ஆகும்.

கரை: சூதேய நாட்டில் அனைத்துச் செல்வங்களும் நிரம்பி இருந்தன. மக்கள் அவற்றை அனைவருக்கும் வாரி வழங்கினர் 34

பொறையி னோடிகல் பொதிர்ந்த பொன்மணி

யுறையி னோடிக லுவந்தி டுங்கொடை

மறையி னோடிகல் முனிவர் மாண்புவான்

முறையி னோடிகல் முயன்ற நாடெலாம். 48

பொ.ரை: அறவாழ்வில் முயன்று கொண்டிருந்த அச் சூதேய நாடு முழுவதும் குவிந்து கிடந்த பொன்னும் இரத்தினங்களும் மலையை ஒத்திருக்கும். அந்நாட்டார் மகிழ்ந்து இரவலர்க்கு இடும் கொடை மழையை ஒத்திருக்கும். அங்குள்ள முனிவர் மாண்பு வேதத்தையே ஒத்திருக்கும்.

கரை: சூதேய நாட்டில் செல்வங்கள் மலைபோல் குவிந்து இருந்தன. மக்கள் மழைபோல் அவற்றை வழங்கினர் இரவலர்க்கு. 35

சோலை வளம்

காமலர் பெடைதழீஇ யன்னங் கண்படுந்

தேமலர்த் தடந்தழீஇச் சினைக ணீட்டிய

பூமலர்ப் பொழில்தழீஇப் பொலிந்த பொற்பெழுந்

தூமலர் வயறழீஇத் துளங்கு நாடதே. 49

அச் சூதேயா நாடு ஆண் அன்னம் தன் ஆசை பெருகிய பெட்டையைத் தழுவிக் கொண்டு துயிலும் தேனுள்ள தாமரை மலர்த் தடாகங்கள் தழுவியும் கிளைகள் நீட்டிய அழகிய மலருள்ள சோலைகள் தழுவியும் அழகோடு எழுந்து நிற்கும் தூய மலர்களை உடைய வயல்கள் தழுவியும் விளங்கும்.

கரை: சூதேய நாட்டில் அன்னங்கள் தாமரைத் தடாகம், சோலை, வயல் ஆகியவற்றில் இருந்தன. 36

ஓலைகள் கிடந்த நீண் கமுகொ டும்பனை

பாலைகள் மாமகிள் பலவு சுள்ளிகள்

கோலைகள் சந்தனங் குங்கு மம்பல

சோலைகள் கிடந்தன தொகுப்ப வண்ணமோ. 50

பொ-ரை: ஓலைகள் கொண்ட நெடிய கமுகுகளும் பனை களும் பாலை மரங்களும் மாமரங்களும் மகிழ மரங்களும் பலா மரங்களும் மரா மரங்களும் இலந்தை மரங்களும் சந்தன மரங் களும் குங்கும மரங்களும் கொண்ட சோலைகள் அந்நாட்டில் பல இருந்தன : அவற்றைத் தொகையெடுத்தல் இயலுவதோ?

க.ரை: அந்நாட்டில் கமுகு, பனை, பாலை, மா, மகிழம், பலா, மரா, இலந்தை, சந்தனம், குங்குமம் ஆகிய மரங்கள் இருந்தன. 37

தேன்வள ரலங்கலைச் சிறைசெய் கூந்தலோ

கான்வளர் சண்பக மலர்ந்த காவுகள்

வான்வளர் துளிநலம் வழங்குங் கொண்டலோ

தேன்வளர் ஒலிக்கொடு தேன்பெய் சோலையே. 51

பொ-ரை: வாசைன உடைய சண்பக மலர்கள் மாலைபோல் மலர்ந்துள்ள சோலைகள் தேன் பொருந்தியுள்ள மாலையைச் சிறைசெய்து கொண்டிருக்கும் மகளிர் கூந்தல் எனலாமா? வண்டுகள் வளர்க்கும் ஓசை எழும்பத் தேனைச் சொரியும் சோலைகள் வானத்தில் வளரும் துளியாகிய நலத்தைப் பூமிக்கு வழங்கும் கார் மேகம் எனலாமா?

கரை: சோலையில் செறிந்துள்ள இருளைக் கூந்தலாகவும் இருண்ட சோலையைக் கார்மேகமாகவும் கூறலாம் போலும்! 38

தோடணி கவினொடு தூங்குங் குண்டல

நீடணி மதிமுக நிழல்செய் மாதரோ

கோடணி யெழுதருங் கோலப் போதொடு

சேடணி கனிநலந் திளைத்த சோலையே. 52

பொ.ரை: மரக் கிளைகளில் அணியணியாக எழுந்து நிற்கும் அழகிய பூக்களோடு அழகு பொருந்திய கனிகள் நிறைந்த சோலைகள், காதுகளில் தோடுகள் அணிந்த அழகோடு தொங்கும் குண்டலங்களும் பிற அணிகலன்களும் சந்திரன் போன்ற தம் முகத்திற்கு ஒளிசெய்ய நிற்கும் மகளிர் என்போமோ?

கரை: பூக்களும் கனிகளும் உடைய சோலைகள் குண்டலங் களும் பிற அணிகளும் இருக்கும் மகளிர் முகம் எனலாம். 39

நீனிரைத் தெழுதிய படத்தி னேருடு

மேனிரைத் தெழுதிய விசும்பின் றோற்றமோ

கானிரைத் தெழுந்தளிர்க் காழ கத்துயர்

தேனிரைத் தவிழ்மலர் திளைத்த சோலையே. 53

பொ.ரை: கிளைகளில் வரிசையாக எழுந்து நிற்கும் தளிர் களின் கருநிறத்திடையே உயர்ந்து வண்டுகள் ஒலிப்பதனால் விரியும் மலர்கள் நிறைந்துள்ள சோலை, வரிசையாகச் சித்திரம் தீட்டிய நீலப் போர்வைக்கு நிகராக விண்மீன்களை வரிசையாகத் தீட்டிவைத்தது போன்ற வானத்தின் தோற்றம் எனலாம்.

கரை: மலர்கள் நிறைந்துள்ள சோலை விண்மீன்களை வரிசையாக வரைந்த வானம் எனலாம். 40

அப்புறத் தமுதுணுஞ் சிறைப்பொற் பார்த்தபுள்

ளிப்புறத் தலர்கள்கொய் யிளைஞர் வாண்முகம்

முப்புறத் தெழுதிய முகைகள் காட்டிய

துப்புறச் சித்திரக் கூடஞ் சோலையே. 54

பொ.ரை: சோலையின் அப்பக்கம் தத்தமக்கு உரிய உணவை உண்ணும் சிறகுகளால் அழகு நிறைந்த பலவகைப் பறவைகள்' இப்பக்கம் மலர்களைக் கொய்து கொண்டிருக்கும் இளமகளிரின் ஒளியுள்ள முகங்கள்' முப்பக்கங்களிலும் தீட்டி வைத்தவைபோன்ற மொட்டுக்கள். இவ்வாறு காட்டிய அழகுப் பொலிவை நோக்குமிடத்து ஒரு சித்திரக் கூடமாகவே சோலை காட்சியளிக்கும்.

கரை: சோலையில் பறவைகள் உணவை உண்ணுகின்றன' இளம் மகளிர் மலர் கொய்கின்றனர். 41

கயிற்றுணைக் கலனெனக் கம்பி றூங்கலர்

குயிற்றுணை குயிலவுங் குழல்வண் டூதவு

மயிற்றுணை யுலவிவந் திரட்ட மற்றெலாம்

பயிற்றுணை களிமணப் பந்தர் சோலையே. 55

பொ.ரை: கொம்புகளில் தொங்கும் மலர்கள் பூட்டு வாயிற் பொருத்திய இரட்டை வட ஆபரணம் போல் தோன்றின' குயில்கள் துணைக் குயில்களைக் கூவி அழைத்தன, வண்டுகள் குழலிசைபோல் ஊதின' மயில்கள் இணை இணையாக உலாவி வந்தன' பறவைகளெல்லாம் வரவேற்று அழைத்தன. அதனால் திருமணப்பந்தல் போல் சோலை விளங்கும்.

கரை: குயில்கள் கூவின' மயில்கள் உலாவின' பறவைகள் வரவேற்றன ' அதனால் சோலை திருமணப் பந்தல்போல் இருக்கும். 42

முதிர்செயுங் கனிமலர் மொய்த்துத் தூங்கலோ

டுதிர் செயும் பழந்துண ரொளிசெய் குப்பையாற்

கதிர்செயு முடிகலன் கழிந்த மன்னவர்

பொதிசெயுந் துறவிடம் போலுஞ் சோலையே 56

பொ.ரை: முதிர்ந்த பழங்களும் மலர்களும் மரங்களில் தொங்கின. உதிர்ந்த பழங்களும் பூங்கொத்துக்களும் குவியலாய்த் தரையில் கிடக்கின்றன. அதனால் ஒளி செய்யும் முடிகளையும் பிற அணிகலன்களையும் கழற்றி நீக்கிய மன்னர்கள் கூடியிருந்து தவம் செய்யும் துறவறச்சாலை போல் அச்சோலை விளங்கும்.

கரை: முதிர்ந்த பழங்களும் மலர்களும் மரங்களில் தொங்க, உதிர்ந்த பழங்களும் பூக்களும் தரையில் கிடப்பதால் அச்சோலை துறவறச் சோலைபோல் விளங்கும். 43

வானிறத் தகரினங் கலையின் மானினந்

தூநிறத் துயரிய தூரி யத்தின

நீனிறப் பகட்டின நெடிது முற்றலிற்

கோனிறச் சிலம்பநற் கூடஞ் சோலையே. 57

பொ.ரை: வெண்ணிறமான ஆட்டுக் கிடாய்க் கூட்டமும், கலைமான் கூட்டமும் உயரமாய் வளர்ந்த பொலிகாளைக் கூட்டமும் கரிய எருமைக் கடாக் கூட்டமும் நெடு நேரம் தம்முள் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருத்தலால் அரசனது புகழ்வாய்ந்த நல்ல சிலம்பக் கூடம் போல் சோலை விளங்கும்.

கரை: ஆட்டுக்கிடாய், கலைமான், பொலிகாளை, எருமைக்கடா ஆகியவை ஒன்றோடொன்று போரிடுமிடம் சிலம்பக் கூடம் போல உள்ளது. 44

சுறாகறா வெனவொர்பால் காடைப் புள்ளினம்

ஞறாஞறா வெனவொர்பா னய்ந்த தோகைகள்

புறாகுறா வுதலொடு புள்பல் லோதையா

லறாதுறா வுணர்வுகு மரங்கஞ் சோலையே. 58

பொ-ரை: ஒரு பக்கம் காடைப் பறவைகளின் கூட்டம் சுறாகறா என்று ஒலிக்கவும் மற்றொரு பக்கம் விரும்பத்தக்க மயில்கள் ஞறாஞறா என்று ஒலிக்கவும் புறாக்கள் கூவுவதோடு பல வகைப் பறவைகளின் பல வகை ஓசை எப்பொழுதும் ஓயாமையால், அதுவரையில் பெற்றிராத அறிவைச் சிறுவர் களுக்குச் சொரிந்து தரும் கல்வியரங்கம் போல் சோலை விளங்கும்.

கரை: காடைப் பறவைகள், மயில்கள், புறாக்கள், பறவைகள் ஆகியவை செய்யும் ஓசை சிறுவர் கற்குமிடம்போல் இருந்தது. 45

மேல்வள ரலர்ப்படம் விரித்து வீணைசெய்

பால்வளர் சுரும்பிசை பாட மாங்குயில்

வால்வளர் மயினடங் காண மற்றைப்புள்

சால்வளர் நாடக சாலை சோலையே. 59

பொ.ரை: மேலே வளர்ந்துள்ள மலர்களை மேற்கட்டி விரித்தாற்போற் கொண்டு அவ்விடத்து வளரும் வண்டுகள் வீணைபோல் இரைந்து செய்யும் இசைக்கு ஏற்ப மாமரத்துக் குயில்கள் கூவிப் பாட, தோகை வளர்ந்த மயில்கள் ஆடும் நடனத்தை மற்றப் பறவைகள் பார்த்துக் கொண்டிருக்க, அவ்விடம் நாடக சாலையே போன்று சோலை விளங்கும்.

கரை: வண்டுகள் இசைக்குக் குயில்கள் பாட மயில்கள் நடனமாட மற்றப் பறவைகள் பார்க்க அவ்விடம் நாடக சாலையே ஆகும். 46

காலெடுத் தடுத்தெதிர்த் துக்க லாபநீள்

வாலெடுத் துப்பக மாற மஞ்ஞைகள்

கோலெடுத் தஞ்சனக் கோலக் காருகம்

மேலெடுத் தாரியக் கூத்து வீக்குமால். 60

பொ-ரை: மயில்கள் காலைத் தூக்கியும் பிற மயில்களை அடுத்து நின்றும் எதிர்த் திசையில் திரும்பிச் சென்றும், தோகையாகிய நீண்ட வாலைத் தூக்கி விரித்தும் அழகாக ஆடிக் கொண்டி ருக்கும். மைபோன்ற நிறமுள்ள கருங்குரங்குகள் அதனைக் கண்டு கோல்களைக் கையில் எடுத்துக் கொண்டும், மரங்களின்மேல் ஏறி ஆரியக் கூத்தைச் சிறப்பாக ஆடிக்காட்டும்.

கரை: மயில்கள் தோகை விரித்து ஆடும் கருங்குரங்குகள் மரங்களின்மேல் ஆரியக் கூத்தாடும். 47

கூடநின் றோடைதன் குவளைக் கண்டிறந்

தோடநின் றலைந்தலைந் தொருமித் தோரிடம்

நாடலி னகைத்தென நனைத்த முல்லைநீ

டாடலி னாவித்தென் றலர்ந்த காந்தளே. 61

பொ.ரை: சோலையை அடுத்த நீரோடை அக் காட்சியைர், காண விரும்பியது’ தன் குவளை மலர்களாகிய கண்களைத் திறந்தது’ ஓடிச் சென்று காண விரும்பியும் ஓட இயலாமல் நின்றது’ அலைந்து அலைந்து வருந்தியது’ பின் ஒருமித்து ஓர் இடத்தையே குறிப்பாக நாடி, அங்கு நின்றும் காண முடியாமல் நலிந்தது. நீரோடையின் அறியாமையைக் கண்டு நகைத்தாற்போல் முல்லைகள் மலர்ந்தன நெடுநேரம் ஆடல் நிகழ்ந்தமையால் சலித்துப்போய்க் கொட்டாவி விட்டாற்போல் கார்த்திகைப் பூக்கள் மலர்ந்தன.

க.ரை: நீரோடை அக்காட்சியைக் காண முடியாமல் வருந்தியது’ முல்லைகளும் காந்தளும் மலர்ந்தன. 48

மலர் கொய்த மகளிர்

தோகைகொண் மயிலென மாதர் தோன்றலின்

வாகை கொண் டாரென மயிலொ டுங்கலாற்

சாகைகொண் டெனையபுள் சிரித்த தன்மைபோ

லோகைகொண் டொலிதர வொலிக்கு நாடெலாம். 62

பொ-ரை: தோகை கொண்ட மயில்போலச் சூதேய நாட்டு மகளிர் அங்கு வந்து தோன்றினர். அவர் தம்மை வெற்றி கொண்டனர் என்று மயில்கள் அடங்கின. மற்றப் பறவைகள், மயில்களை இகழ்ந்து சிரித்ததுபோல் மரக் கொம்புகளில் அமர்ந்திருந்து களித்தன. இவ்வாறு சூதேய நாடு முழுவதும் ஒலி மிகுந்து காணப்படும்.

கரை: சூதேய நாட்டு மகளிரைக் கண்டு மயில்கள் அடங்கின. மயில்கள் அடங்கியதைப் பார்த்த ஏனைய பறவைகள் களித்தன. 49

உதித்தன கதிரென வுவந்த மாங்குயில்

துதித்தெனப் பாடியொண் ணனந்தன் றூய்நடை

விதித்தென முன்னடந் ததுதம் மெல்லடி

பதித்தென நடந்தனர் பனிகொள் கோதையார். 63

பொ-ரை: மகளிர் வரவால் கதிரவன் சோலை இருளினிடையே வந்து உதித்தது என்று மகிழ்ந்த மாமரத்துக் குயில்கள் அதைத் துதித்ததுபோல் பாடின. ஒளி பொருந்திய அன்னம் தன் தூய நடையை அம்மகளிருக்குக் கற்பித்ததுபோல் முன்னே நடந்தது. குளிர்ச்சி பொருந்திய மாலையை அணிந்த அம்மகளிர் அத்தடத்தின் மீது தம் மெல்லிய அடியைப் பதித்ததுபோல் நடந்து சென்றனர்.

கரை: உதித்த சூரியனைக் குயில்கள் துதித்துப் பாடின’ குளிர் மாலை அணிந்த குமரிகள் மெல்ல நடந்தனர். 50

இன்னிறப் பிறைக்கதிர் திரட்டி யீட்டெனாப்

பன்னிறத் தலர்ந்தபூப் படர்ந்த காவிடைக்

கொன்னிறத் தலர்ந்தெனக் கொய்து கொய்துதா

மின்னிறத் தடவிசூழ் விரும்பி யேகுவார். 64

பொரை: கண்ணுக்கு இனிய ஒளியுள்ள பிறைச் சந்திரனின் கதிர்களைத் திரட்டித் தொகுத்தாற்போல், பல நிறங்களோடு மலர்ந்த பூக்கள் பரந்து கிடந்தன சோலையில். இவையெல்லாம் அழகிய நிறத்தோடு மலர்ந்து வீணே கிடந்தன என்று நினைத்து கொய்து, மின்னலைப் போன்ற அம்மாதர் அச்சோலையை விருப்பத்தோடு சுற்றி நடந்து செல்வர்.

கரை: சோலையில் கொட்டிக் கிடந்த மலர்களை மகளிர் பொறுக்கிச் சேர்த்துச் சுற்றி நடந்தனர். 51

கொள்ளைகண் டளியினங் கூவென் னோதையுங்

கிள்ளைகண் டினைவபோற் கீயென் னோதையும்

வள்ளைகொண் டினிதிசை மறலப் பாடினர்

வெள்ளைகொண் டுளபல நிறத்த வீகொய்வார். 65

பொ-ரை: மலர்களை அம்மாதர் கொள்ளையிடுதலைக் கண்டு வண்டினங்கள் கூகூ வென்று எழுப்பும் ஓசையும் கிளிகள் கண்டு வருந்துவனபோல் கீ கீயென்று எழுப்பும் ஓசையும் தம்முள் மயங்குமாறு, அம்மாதர் தம் வள்ளைப் பாட்டை இனிய இசையோடு பாடினர், அங்குள்ள பல நிற மலர்களையும் பறித்தெடுப்பர்.

க.ரை: மாதர் மலர் கொய்வதைப் பார்த்த வண்டுகளும் கிளிகளும் ஓசை எழுப்ப, அவர்களோ வள்ளைப் பாட்டுப் பாடினர். 52

ஐம்மணி பவளமுத் தம்பொ னிற்றெலாம்

பம்மணி பெறவரும் படலை கோத்தெனப்

பொம்மணி மலரெலாம் புணர் பொன் னூலினாற்

றம்மணி யிணையெனத் தார்பி ணிக்குவார். 66

பொ.ரை: சிறந்த பவளமும் முத்துப் போன்ற மணிகள் அழகிய பொன் எல்லாம் கொண்டு நெருக்கமாய் அழகு பொருந்த அரிய படலை மாலையாகக் கோத்ததுபோல் மிகுந்த அழகுள்ள மலர்களையெல்லாம் பொன்மயமான நூல் கொண்டு தமது அழகிற்கு இணையாகும்படி பெண்கள் மாலையாகக் கட்டுவர்.

கரை: பெண்கள் பவளம், முத்து, பொன் ஆகியவற்றால் மாலை கோத்ததுபோல மலர்களை மாலை கட்டுவர். 53

பிணித்ததார் விரலின்மேற் பிரளக் காட்டுவா

ரணித்தகா துனதென விசலி யார்த்தபின்

றணித்தபூ ணொட்கலஞ் சவிக்கி லுத்தங்கள்

பணித்தபூம் புகைக் குழல் படியச் சூடுவார். 67

பொ.ரை: அம்மாதர் தாம் தாம் கட்டிய மாலையைத் தத்தம் விரலின் மேல் சுழலவிட்டுப் பிறருக்குக் காட்டுவர்: ‘‘உன்னுடையது அணியத் தகாது!’’ என்று தம்முள் வாதிட்டுச் சிறிதுநேரம்

ஆரவாரம் செய்வர். பின் தொங்கிய ஆபரணமுள்ள ஒளிபொருந்திய தம் மார்புகளிலும் அழகிய மணிக்கட்டுகளிலும் மெல்லிய மணப்புகை ஊட்டிய கூந்தல்களிலும் படியுமாறு சூடிக்கொள்வர்.

கரை: மகளிர் தாம் கட்டிய மாலையைத் தம் மார்பிலும் மணிக்கட்டிலும் கூந்தலிலும் சூடிக் கொள்வர். 54

முருகுவிம் மியமலர் குடைந்து மூழ்குதேன்

பருகுவிம் மியவளி பசித விர்ந்தபின்

னருகுவிம் மியதென வலர்கொய் மங்கைய

ருருகுவிம் மியகளிப் புயிர்த்துப் பாடுவார். 68

பொ.ரை: வாசனையைப் பரப்பிய பூக்களைக் குடைந்து உள்ளே மூழ்கிக் கிடந்த தேனைப் பருகும்போது பாடிய வண்டுகள், பசி நீங்கிய பின்னும் இரைந்ததுபோலப் பூக்களைப் பறிக்கும் அம்மகளிரும் ஆசையால் உருகிப் பெருகிய களிப் பினால் குரலெடுத்துப் பாடுவர்.

கரை: தேனைக் குடித்த வண்டுகள் இரைந்தது போல மலர் பறிக்கும் மாதரும் களிப்பால் பாடினர். 55

பூமலி சேக்கைமேற் பொலிந்து நூற்படி

பாமலி பதத்தறம் பழிச்சிப் பங்கயத்

தேமலி சேக்கைமேற் சிறந்த வோதிம

நாமலி யினிதிசை நாணப் பாடுவார். 69

பொ.ரை: அம்மாதர் பூக்கள் நிறைந்த மெத்தையின்மேல் பொலிவுடன் அமர்ந்திருந்து தேன் நிறைந்த தாமரை மலராகிய படுக்கைமேல் சிறந்து தங்கிய அன்னத்தின் நாவில் பிறந்த இசையும் நாணுமாறு நிறைவான சொல் அமைப்போடு புண்ணியத்தைப் புகழ்ந்து பாடுவர்.

க.ரை: தாமரைப் பூவில் இருந்த அன்னத்தின் இசை மங்குமாறு மகளிர் புண்ணியத்தைப் பாடினர். 56

ஆம்பல்வாய் நறும்விரை யவிழ்த்து விள்ளிய

வாம்பல்வாய் மலர்ந்தன வணங்கை யாரினி

தாம்பல்வாய்க் குரலுட னாய்ந்து வெண்மதி

யாம்பல்வாய் திருந்துணர் வறைந்து பாடுவார். 70

பொ.ரை: அம் மாதர் தேனின் வழியாக நறுமணத்தைப் பரவவிட்டு மலர்ந்த செவ்வல்லி மலர் போன்ற வாயைத் திறந்து வீணையிடத்துப் பிறந்தது போன்ற குரலுடன் பொருளை இனிது ஆராய்ந்து வெண்ணிறமான சந்திரனின் ஒளிபோல் வாய்ந்த திருந்திய உணர்வுகளை எடுத்துக் கூறிப் பாடுவர்.

கரை: பெண்டிர் செவ்வல்லி மலர் வாய் திறந்து நிலவொளி போன்ற உணர்வுகளைப் பாடுவர். 57

மகளிர் புகழ்ப் பாடல்

விண்புதைத்த மலர்ப்பணைவாய் விரைகுளித்த தேனொழுகிக்

கண்புதைக்கும் இருட்பொழில்கொள் களிகூர்ந்த நாடிதுவே

களிகூர்ந்த நாடிதுவேல் கண்கடந்த கவினாடி

நளிகூர்ந்த நயனல்கும் வானுலக நாடேமோ 71

பொ-ரை: வானத்தை மூடி மறைத்த மலர்க் கொம்புகளினின்று வாசனையில் மூழ்கிய தேனை ஒழுகவிட்டு, பார்ப்பவர் கண்களை மூடி மறைக்கும் இருண்ட சோலைகளைக் கொண்டுள்ள களிப்புமிகுந்த நாடு இச்சூதேயநாடே ஆகும் : களிப்புமிகுந்த நாடு இதுவென்றால், கண்ணுக்கு அடங்காத அழகையும் நாடி, குளிர்ச்சி மிகுந்த இன்பத்தைத் தரும் வானுலகத்தைத் தேடாது அமைவோமோ?

கரை: இருண்ட சோலைகளைக் கொண்ட நாடு சூதேய நாடு. இந்நாட்டைவிட குளிர்ந்த வானுலகைத் தேட வேண்டாமா? 58

நிழல்மூழ்கும் பூம்பொழில்கண் ணிறமதுகா னின்பமலாற்

குழல்மூழ்கு மிசைதுவைப்பக் கோடருஞ்சீர் நாடிதுவே

கோடருஞ்சீர் நாடிதுவேல் கோதெனக்கோள் புறத்திமைப்ப

வடருஞ்சீர் மல்கியெழும் வானுலக நாடேமோ. 72

பொ-ரை : நிழலில் மூழ்கிக் கிடக்கும் பூஞ்சோலை கண்ணுக்கு நிறமும் வாய்க்குத் தேனும் மூக்கிற்கு வாசனையும் உடலுக்கு இன்பமும் தருவதல்லாமல், புல்லாங்குழலில் மூழ்கிக் கிடக்கும் இசை காதுக்கு இன்பமாகவும் ஒலிக்க, அரிய செல்வச் சிறப்புள்ளது இச்சூதேய நாடே ஆகும். செல்வச் சிறப்புள்ள நாடு இதுவென்றால், விண்மீன்களையும் குற்றமுள்ளவை எனப் புறத்தே தள்ளி மின்னவிட்டு, என்றும் வாடுதற்கு அரிய செல்வமெல்லாம் நிறைந்து உயர்ந்து விளங்கும் வானுலகத்தைத் தேடாது அமைவோமோ?

கரை: ஐம்பொறிகளுக்கும் இன்பம் நல்கும் நாடு சூதேய நாடு. இதனைவிடச் சிறந்தது வானுலகு, 59

படநாகந் தோலுரித்த பான்மையின்கல் லூடுரிஞ்சித்

தடநாகந் தூங்கருவி தாவழகார் நாடிதுவே

தாவழகார் நாடிதுவேல் தரங்கமிலா தருட்பவ்வம்

வாவழகார் திருநிலைத்த வானுலக நாடேமோ. 73

பொ-ரை : படமுள்ள பாம்பு தன் தோலைச் சட்டையாகக் கழற்றிய தன்மைபோல், கல்லின் ஊடே உராய்ந்து வந்து பெரிய மலை மீது தொங்கியதுபோல் அருவி பாய்ந்தோடும் அழகு நிறைந்த நாடு இது. அருவி பாய்ந்தோடும் அழகு நிறைந்த நாடு இதுவென்றால், அலையே இல்லாமல் அருள் என்னும் கடல் பாய்ந்து பரக்கும் அழகு நிறைந்து செல்வமெல்லாம் நிலையாகக் கொண்ட வானுலகத்தைத் தேடாது அமைவோமோ?

கரை : அருவிகள் பாய்ந்து அழகுதரும் நாடு இது' அருவிகளே இல்லாமல் அருட்கடல் பாய்ந்து அழகு தருவது வானகம். 60

பகைதீர்ந்து சண்பகத்தின் றண்ணிழற்கீழ்ப் பள்ளிவர

மிகைதீர்ந்து புறத்தெவர்க்கும் வேட்கைசெயு நாடிதுவே

வேட்கைசெயு நாடிதுவேல் விரிகாலத் திமிழ்குன்றா

வாட்கைசெயு நிலைமையுள் வானுலக நாடேமோ. 74

பொரை : பகையும் துன்பமும் நீங்கப்பெற்றுச் சண்பக மரத்தின் குளிர்ந்த நிழலின் கீழ் உறக்கம் கொள்ள, வெளி நாட்டிலுள்ள யாவர்க்கும் ஆசையைத் தூண்டும் நாடு இதுவே ஆகும் : அவ்வாறு ஆசையைத் தூண்டும் நாடு இதுவென்றால். முடிவில்லாது விரிந்த காலமெல்லாம் இன்பம் குறையாத வாழ்க்கையைத் தரும் நிலைபேறு கொண்ட வானுலகத்தைத் தேடாது அமைவோமோ?

கரை: பகையும் துன்பமும் இல்லா இந்நாட்டில் அயலாரும் வாழ ஆசைப்படுவர். 61

நக்களவாய் நயன்கொண்ட நாட்டுநல நாடியகால்

மக்களவா மேனலங்கொள் வானுலக நாடேமோ

வானுலக நாடே மேல் மன்னுயிர்மன் னயன்வெ.்.கக்

கானுலகங் காட்டுநல மக்கவலை மாற்றுவதோ. 75

பொரை: நாவினால் நக்கும் அளவாக நன்மையைக் கொண்ட இந்நாட்டு நலத்தை விரும்பிய காலத்து, மக்களின் ஆசைகளுக்கும் மேலாக நலம் கொண்டுள்ள வானுலகத்தைத் தேடுவோம். வானுலகத்தைத் தேடாது விட்டால் நிலைபெற்ற மானிட உயிர் நிலைபெற்ற நன்மையையே விரும்பிக் கொண்டிருக்க, காடாகிய இவ்வுலகம் காட்டும் நலம் அக்கவலையை மாற்றும் தன்மையது ஆகுமோ? ஆகாது.

கரை: இந்நாட்டைவிட வானுலகு மேலானது. அதைத் தேடாது விட்டால் இவ்வுலகு அப்பேற்றைத் தராது. 62

பண்கனிந்த நரம்புளரிப் பாணிசைகள் பாடலெனாக்

கண்கனிந்த கவினல்வார் களிகூர்ந்தின் னதும்பலவுந்

தண்கனிந்த தேனிசையாற் சாற்றலொடு பல நாளும்

விண்கனிந்த வின்புண்பார் விழைவோங்க வந்நாடே. 76

பொ.ரை : வீணையின் கனிந்த நரம்புகளைத் தடவிப் பாணரே இசைகளைப் பாடுவதுபோல், கண்ணுக்குக் கனிவான அழகுள்ள அம்மகளிர் களிப்பு மிகுந்து இதுவும் வேறு பலவும் குளிர்ச்சி கனிந்த தேன் போன்ற இசையால் புகழ்ந்து சொல்லுவர். அந்நாடு வானுலக ஆசையில் ஓங்குமாறு விண்ணுலகினின்று கனிந்த பேரின்பத்தைப் பல நாளும் நுகர்வர்.

கரை: பாணர் வீணையை இசைப்பதுபோல அம்மகளிர் கனிந்த இசையைப் பாடிப் பேரின்பத்தை நாளும் நுகர்வர். 63

பலவகை நலங்கள்

தேயமு ழங்கின வாலைகள் பண்டித டேயமு ழங்கினபா

வாயமு ழங்கின வார்புகழ் சங்குக ளாயமு ழங்கினமேற்

பாயமு ழங்கின மேடக மின்புனல் பாயமு ழங்கின நீர்

தோயமு ழங்கின மேதிக டெண்டிரை தோயமு ழங்கிழையார். 77

பொ.ரை: சூதேய நாட்டில், ஆலைகள் தேய்வதனால் முழங்கின. வண்டிகள் தரையில் தேய்வதனால் முழங்கின. பாக்களை ஆய்வதனால் நிறைபுகழ் முழங்கின. சங்குகள் நிகழ்ச்சிக்கு ஏற்ப ஆராய்ந்து ஊதப்படுதலினால் முழங்கின. ஒன்றன்மேல் ஒன்று பாய்ந்து மோதுதலால் ஆட்டுக் கிடாய்கள் முழங்கின. குளம் வயல்களிற் பாய்வதனால் இனிய நீர் முழங்கியது எருமைகள் நீரில் விழுந்து தோய்வதனால் முழங்கின. அணிகலன் அணிந்த மகளிர் நீராடத் தெளிந்த நீரில் தோய்வதனால் முழங்கினர்.

கரை: சூதேய நாட்டில் ஆலைகள், வண்டிகள், சங்குகள், கிடாய்கள், நீர் பாய்தல், எருமை நீரில் தோய்தல், மகளிர் நீராடல் ஆகிய முழக்கங்கள் கேட்டன. 64

கான்றிரள் சிந்திய சோலையி பஞ்செறி கான்மலர் சிந்திய

தீந் தேன்றிரள் சிந்திய பூதர ளஞ்செறி தீம்புனல் சிந்தியவான்

மீன்றிரள் சிந்திய மானவ ளஞ்செறி வேய்மணி சிந்தியபா

லான்றிரள் சிந்திய சீரெவை யுஞ்செறி யார் பொழில் சிந்தியதே. 78

பொ.ரை: சோலைகள் வாசனையை அங்குத் திரளாகச் சிந்தின. மரக்கிளைகள் தம்மிடத்துச் செறிந்துள்ள வாச மலர்களைச் சிந்தின. பூக்கள் இனிய தேனைத் திரளாகச் சிந்தின. இனிய நீர் நிலைகள் தம்மிடமுள்ள சங்குகள் ஈன்ற முத்துக்களைச் சிந்தின. விண்மீன்களின் திரள் சிந்திக் கிடப்பதுபோல வளம்செறிந்த மூங்கில்கள் தம்மிடமுள்ள மணியாகிய முத்துகளைச் சிந்தின. பசுக் கூட்டங்கள் பாலைச் சிந்தின. எல்லாம் தன்னிடம் செறிந்து நிறைந்துள்ள அந்நாடு செல்வங்கள் எல்லாவற்றையும் சிந்தித் தந்தது.

கரை: பூக்கள் தேனைச் சிந்த சங்குகள் முத்தைச் சிந்தின' மூங்கில் முத்தைச் சிந்த பசுக்கள் பாலைச்சிந்தின. 65

ஆலையின் வாயுள தேனக லுந்தரு வான்மலர் வாயுளதேன்

சோலையின் வாயுள தேனொடு தூறிய தூய்கனி வாயுளதேன்

மாலையின் வாயுள தேனளி வந்தவி றாலதின் வாயுளதேன்

வேலியின் வாயுள தேரிய செந்நெல்வி ளைக்கு பாயினவே. 79

பொ-ரை: ஆலையிலுள்ள கருப்பஞ் சாறாகிய தேனும் படர்ந்த மரங்களில் நிறைந்துள்ள மலர்களில் உள்ள தேனும் சோலைகளிலுள்ள தேனோடு சிதறிக் கிடந்த தூய பழங்களி லுள்ள தேனும் மாலைகளிலுள்ள தேனும் வண்டுகள் சேர்த்துத் தர வந்த தேனடையிலுள்ள தேனும் ஒன்றாகக் கலந்து வயலிலுள்ள சிறந்த செந்நெல்லை விளைவிக்கும் அளவிற்குப் பாய்ந்தோடின.

க.ரை: கருப்பஞ்சாறு, மலர்த்தேன், பழத்தேன், தேனடைத் தேன் ஆகியவை ஒன்றாகக் கலந்து செந்நெல் வயலில் பாய்ந்தது. 66

பானழ கேநனி காட்டிய பங்கய நானமு யங்கழகே

மீனழ கேநனி காட்டிய விண்டவிர் வீயின மண்டழகே

தேனழ கேநனி காட்டிய தெண்டுளி மாரிசெ றிந்தழகே

வானழ கேநனி காட்டுப ளிங்கென வாவிவ ழங்கழகே. 80

பொ.ரை: வாசனை பொருந்திய தாமரை மலர்களின் அழகு கதிரவனின் அழகை நன்றாகக் காட்டின. மலர்க் கூட்டங் களில் செறிந்து கிடந்த அழகு விண்மீன்களின் அழகை நன்றாகக் காட்டின. மழையிடம் கிடந்த நீர்த்துளிகளின் அழகு தேனின் அழகை நன்றாகக் காட்டின. நன்றாகப் பளிங்கு போல் காட்டும் குளங்கள் வழங்கிய அழகு, வானுலகத்தின் அழகாக அமைந்தது.

கரை: தாமரை அழகு கதிரவனையும் மலர்களின் அழகு விண் மீன்களையும் மழையழகு தேனையும் அழகாக்கிக் காட்டின. 67

காரொடு நேர்பொரு தும்பொறை யேபொழி காரொடு கைபொருதுந்

தாரொடு நேர்பொரு துங்கல னேதட மாரொடு தார்பொருதும்

பாரொடு நேர் பொரு துஞ்சக டேநளிர் பாலொடு பாபொருதுஞ்

சீரொடு நேர்பொரு தும்பொழி லேசெழு வீடொடு சீர்பொருதும். 81

பொரை: மலைகள் கார்மேகத்தோடு போர் செய்து நிற்கும் பொழியும் மழையோடு ஈவோர் கைகள் போர் செய்து நிற்கும். அணிகலன்கள் மாலைகளோடு போர் செய்து நிற்கும்’ அகன்ற மார்போடு மாலைகள் போர் செய்து நிற்கும். வண்டிகள் பூமியோடு போர் செய்து நிற்கும். குளிர்ச்சி தரும் பாலோடு பாக்களின் இனிமை போர் செய்து நிற்கும். சோலை செல்வங்களோடு போர் செய்து நிற்கும்’ செழுமையான வான் வீட்டோடு அச்செல்வங்கள் போர் செய்து நிற்கும்.

கரை: மலைகள் மேகத்தோடும் மழை கைகளோடும் அணிகள் மாலைகளோடும் வண்டிகள் பூமியோடும் போர்செய்யும் புண்ணிய நாடு சூதேய நாடு. 68

காலையொ ளிர்ந்துளி மொட்டிதழ் விண்டக டிக்கம லந்தவிசின்

சூலையுளைந்தொளிர் முத்துசொ ரிந்தவ ளைக்குல நின்றிரிய

மாலையு றைந்துளி பொற்சிறை வந்தது தற்கரு வென்றடைகாத்

தாலையு ளைந்திழி யிக்கிடு மின்பம வித்திசை பாடினவே. 82

பொ.ரை: காலையில் சூரியன் ஒளிர்ந்தபோது மொட்டின் இதழ்கள் விரிந்த மணமுள்ள தாமரை மலர்களாகிய மெத்தையினுள் கருப்ப நோவு கொண்டு ஒளி பொருந்திய முத்துக்களை ஈன்று சொரிந்த சங்கினங்கள் அங்கிருந்து நீங்கின. மாலைப் பொழுது வந்தபோது பொன்மயமான சிறகுகளை உடைய அன்னங்கள் அங்கு வந்து சேர்ந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மலரிலுமுள்ள முத்தைத் தன் முட்டையென்று கருதி அடைகாத்தது. அதனால்

அவ்வன்னங்களெல்லாம் ஆலையில் கரும்பு தரும் சாற்றின் இன்பத்தை வென்ற முறையில் மகிழ்ந்து இசை பாடின.

க.ரை: தாமரை மலர்களில் சங்குகள் ஈன்ற முத்தை அன்னங்கள் முட்டையெனக் கருதி அடைகாத்தன. 69

காவிடை மாதவர் கந்தம லிந்தன கஞ்சமி டைந்தனமே

பூவிடை தேனளி கொம்பும லிந்துபு கன்றம டங்கிளிகள்

நாவிடை பாவின நங்கையி னன்கையி னம்புந ரம்புளயாழ்

யாவிடை யாயினு மென்றும ருந்தயை யெந்தையை வாழ்த்தினவே. 83

பொரை: காடுகளில் தவ முனிவர்களும் வாசனை நிறைந்த தாமரை மலர்களில் செறிந்திருக்கும் அன்னங்களும் பூக்களில் தேன் வண்டுகளும் மரங்களில் பேசிக் கொண்டிருந்த இளங்கிளிகளும் மக்கள் நாவுகளில் பாடல் வகைகளும் மாதர் களின் நல்ல கைகளில் நம்பகமான நரம்புகளை உடைய யாழ் களும் எந்நாளும் தயவுள்ள எம் தந்தையாகிய ஆண்டவனை வாழ்த்தின.

க.ரை: முனிவர்களும் அன்னங்களும் வண்டுகளும் கிளிகளும் யாழ்களும் ஆண்டவனை வாழ்த்தின. 70

அறத்திறு றும்புக ழொண்புக ழென்பவ டும்பகை நின்றனர்கொல்

திறத்திறு றும்புகழ் வஞ்சனை யென்றுதெ ளிந்தம னஞ்சிதைய

மறத்திறு றுங்களி துன்பென வந்தும யங்கிவ ழங்குமெலாம்

புறத்திறு றுங்களி பொன்றில வுண்டன பொன் பொழில் பொங்கினவே. 84

பொ.ரை: அறத்தினால் அடையும் புகழே ஒளியுள்ள புகழ் என்றும் தாக்கும் பகை கொண்டு நின்றவர்கள் ஒருவர் ஒருவரைக் கொல்லும் திறத்தால் அடையும் புகழ் வஞ்சகமே என்றும் அந்நாட்டவர் தெளிந்தனர். அவ்வாறு தெளிந்த மனம் சிதையுமாறு பாவத்தினால் அடையும் இன்பம் துன்பமே என்றும் உணர்ந்தனர். அதற்கு மாறாக நடைமுறையில் வந்து வழங்கி மயங்கச் செய்யும் யாவற்றையும் புறத்தே போக்கினர். அதனால் உண்டாகும் இன்பத்தை முடிவின்றி அனுபவித்து அந்த அழகிய நாடு மகிழ்ச்சியால் நிறைந்தது.

கரை: சூதேய நாட்டினர் வஞ்சகத்தைப் புறக்கணித்துப் புகழை ஈட்டியதால் அங்கு மகிழ்ச்சி மட்டுமே நிறைந்தது. 71

எல்லைநி கழ்த்திய வெல்லென வெல்லையி லெந்தைநி கழ்த்திய நூல்

வில்லைநி கழ்த்திய மெய்மறை யின்விதி யுண்மைநி கழ்த்தியதூ

யொல்லைநி கழ்த்திய வொண்ணற மொன்றிய வுள்ளநி கழத்தியசீர்

சொல்லைநி கழ்த்திய நுண்மை யறிந்தவர் சொல்லிநி கழ்த்துவரோ. 85

பொ.ரை: ஒளியைப் பரப்பிய கதிரவனைப் போல, எல்லை இல்லாத எம் தந்தையாகிய ஆண்டவனே சொல்லித் தந்த நூலாய் அமைந்து ஒளியைப் பரப்பிய மெய் மறையின் நெறிமுறைகளை உண்மையென்று காட்டும்வகையில் விரைந்து கடைப்பிடித்த தூய ஒளியுள்ள

அறத்தோடு ஒன்றிய உள்ளம் அந்நாட்டில் விளைவித்த சிறப்புகளை, நுட்பம் அறிந்தவரும் சொல்லிக்காட்டல் முடியாது.

க.ரை: ஆண்டவன் அருளிய மெய்மறையால் அந்நாட்டில் விளைந்த நன்மைகளை எவரும் அறுதியிட்டுக் கூறல் முடியாது. 72

ஆற்றவ ருந்தில நல்லற மல்லது மல்லவை யில்லையெனா

மாற்றவ ருந்துய ரில்லது முண்மயல் மல்கலு மில்லையெனா

வேற்றவ ருந்துதி யொல்லொலி யல்லது மெள்ளது மில்லையெனாச்

சாற்றவ ருந்தினு மொல்லும ருந்தமி ழுஞ்சம மல்லதுவே. 86

பொ.ரை: அந்நாட்டில், செய்வதற்கு வருத்தம் தராத நல்ல புண்ணியங்களே உள்ளன அல்லாமல் பாவங்களே இல்லை. மாற்றுவதற்கு அரிய துயரங்களே இல்லாதிருத்தலோடு உள்ளத்தில் மயக்கம் மிகுதலும் இல்லை. ஏற்ற அரிய புகழ் ஒல்லென ஒலிக்கும் ஒலியே அல்லாமல் இகழும் ஒலி என்பதே இல்லை. இவை போன்றவற்றை முற்றச் சொல்ல முயன்றாலும், எதைச் சொல்லவும் இயலும் அரிய திறம்வாய்ந்த தமிழும் இதைச் சொல்வதற்குச் சமமாக நின்று ஈடு கொடுக்கக் கூடியதன்று.

க.ரை: சூதேய நாட்டில் பாவங்களும் மயக்கங்களும் இகழும் ஒலிகளும் இல்லை. அந் நாட்டுச் சிறப்புகளை அரிய திற முடைய தமிழாலும் சொல்லுதல் கடினம்.
73

மக்கள் நலம்

பூம லிந்தபொ ருத்தரும் பொற்பெலாம்

பூம லிந்துபொ ருந்திய பொற்பினால்

நாம லிந்தந சைக்குயர் நாடினு

நாம லிந்தவி சைக்குயர் நாடதே. 87

பொ.ரை: பூக்கள் நாடெங்கும் நிறைந்து பூவுலகெங்கும் நிறைந்துள்ள ஒன்றுகூட்டுதற்கு அரிய அழகுகளெல்லாம் தன்னிடத்துப் பொருந்தியுள்ள மேன்மையினால் நாம் நம்மிடம் நிறைந்துள்ள ஆசைக்கும் உயர்வாகவே ஆராய்ந்து புகழலாம். நம் நாவில் நிறைந்துள்ள புகழைக் காட்டிலும் உயர்வுள்ள நாடு அச் சூதேய நாடு.

க.ரை: சூதேய நாடு நாவால் மட்டும் புகழக்கூடிய நாடு அன்று' அதனினும் மேம்பட்ட நாடு அது. 74

வண்டு ரைத்தும லர்ந்தலர்ப் புண்ணலால்

வண்டு ரைத்தும லர்ந்தகப் புண்ணிலால்

வண்டு ரைத்தும் யக்கில நாடலை

வண்டு ரைத்தும் யக்குறு நாடதே. 88

பொ-ரை :வண்டுகள் உராய்வதனால் மலர்ந்து மலர்களிடையே காணப்படும் புண்களே அல்லாமல் அம்பு துளைப்பதனால் திறந்து மார்புப் புண்படுதல் இல்லாமையால் குற்றம் கூறி மயக்கம் அடைவதற்கு இடமில்லாத நாடு அது. கடலிலுள்ள சங்குகள் ஒலித்து இன்ப மயக்கம் தரும் நாடு அது.

கரை: போரே இல்லாத அமைதி நிறைந்த நாடு அதுவாகும். 75

மாலை மாறிவ யங்கிய மாமதி

மாலை மாறிவ யங்கிய மாதர்கள்

மாலை மாறிய கற்புடை மார்புறை

மாலை மாறிய கற்புடை மாண்பரோ. 89

பொ.ரை: மாலை இருள் மாறி விளங்கிய நிறைமதியின் அழகு இயல்பை மாறச் செய்து விளங்கிய முகமுள்ள மாதர்கள் மயக்கம் நீங்கிய கற்புள்ள தம் மார்பில் முல்லை மலர்களைக் கொண்டுள்ள மாண்பினர் ஆவார்.

கரை: கற்புள்ள மாதர் தம் மார்பில் முல்லை மலர்களைச் சூடி மாண்புடையர் ஆயினர். 76

மாசி கற்குவ ழுங்கிய வம்பிலார்

மாசி கற்குவ ழுங்கிய வன்பினால்

தேசி கத்திணை சீர்வரைத் தோளினார்

தேசி கத்திணை சீர்வரைத் தோதுமார். 90

பொரை: மாசு காரணமாக எழுந்த பகையைப் போக்க வென்று செலுத்திய அம்பு இலராய், மேகத்தோடு மாறுபடுவதற் சென்று வறியவர்க்கு வழங்கிய அன்புடையவராய் பொன்னுக்கு இணையான சிறப்புள்ள மலைபோன்ற தோளை உடையவராகிய அந்நாட்டு வீரர்தம் புகழோடு பொருந்திய சிறப்பையெல்லாம் வரைந்து காட்டும் முறையில் யார் எடுத்துக் கூறுவார்?

கரை: சூதேய நாட்டு வீரர்கள் பகைவரை மாய்க்கும் அம்பு இலராய், அன்புடையராய், மலைபோன்ற தோளை உடையராய் இருந்தனர். 77

அல்ல தில்லைய ருந்தவ மாய்த்திரு

வல்ல தில்லைய ருந்தவ ளித்தலாற்

புல்ல தில்லைபு னைந்தற மாட்சியாற்

புல்ல தில்லைபு னைந்தன வாழ்க்கையால். 91

பொ.ரை: அந்நாட்டில், தவம் நடைமுறையாய் அமைந்துள்ளமையால் தவம் அல்லாத அவம் இல்லை. எவரும் எவர்க்கும் உண்ண உணவு அளித்தலால் வறுமை இல்லை. யாவரும் அணிந்துள்ள அறத்தின் மாட்சியால் அறத்திற்குப் புன்மையான மறம் இல்லை அழகுசெய்தாற் போன்ற வாழ்க் கையால் அதற்கு எதிரான அலங்கோல வாழ்க்கை இல்லை.

கரை: அந்நாட்டில் அவமும் வறுமையும் மறமும் அலங்கோல் வாழ்க்கையும் எங்கும் இல்லை. 78

இருள கன்றவி ரெல்வினை போலெலா

விருள கன்றவி ரில்வினை யோரெலா

மருள கன்றகைப் பாருமி லாமையா

லருள கன்றகைப் பாரல தில்லையே. 92

பொ.ரை: இருள் நீங்கி ஒளிரும் பகலவனின் செய்கை போல், எல்லாவகையான மயக்கமும் நீங்கி விளங்கும் இல்லற வாழ்க்கை கொண்டோர் எல்லோரும் வெறுப்புணர்வு யாரிடமும் இல்லாமையால் அருள் விரிவடைந்து எழுச்சி கொள்வாராய் உள்ளனர், வேறு வகையார் அங்கு இல்லை.

கரை: இல்லற வாழ்வினர் எவரிடத்தும் வெறுப்பு இலராய் அருள் நெஞ்சினராய் உள்ளனர். 79

வேயு முத்தமி டைந்தன வேலிவாய்

வேயு முத்தமி டைந்தன வேலைவாய்

வாயு முத்தம லிந்தன தீங்கழை

வாயு முத்தம லிந்தன வாயெலாம். 93

பொ.ரை: மூங்கில்களில் முத்துக்கள் செறிந்து கிடந்தன. வயல்களில் நெல் முத்துக்கள் செறிந்து கிடந்தன. கடலில் சங்குகளிடமாய் வாய்க்கும் முத்துக்கள் மலிந்து கிடந்தன. இனிய கரும்புகளினின்று கிடைக்கும் முத்துக்கள் எங்கும் மலிந்து கிடந்தன.

கரை: அந்நாட்டு மூங்கில் முத்தும் நெல்முத்தும் சங்கு ஈன்ற முத்தும் மலிந்து கிடந்தன. 80

செல்லின் மாரிதி ளைத்தென வள்ளியோர்

செல்லின் மாரிதி ளைத்தனர் வண்மையே

சொல்லின் மாரிசொ ரிந்தென வேதிலாச்

சொல்லின் மாரிசொ ரிந்தனர் வேதியார். 94

பொ.ரை: மேகத்தால் ஆகிய மழை மிகுதியாகப் பொழிவதுபோல் இரவலர்க்கு வள்ளல்கள் கொடையை மழை போல் மிகுதியாகப் பொழிந்தனர். தேன் மழை பொழிந்தது போல் வேதியராகிய குருக்கள் குற்றமில்லாத உபதேசச் சொல்லை மழையாகப் பொழிந்தனர்.

கரை: மேகமழைபோல வள்ளல்கள் கொடைமழை பொழிந்தனர். 81

வாவி பங்கய மல்கிய நாண்மலர்

வாவி பங்கய மல்கிய மாண்பெனப்

பாவி யங்கிய லாப்பய னாகையாற்

பாவி யங்கிய யாப்பயன் சால்பரோ. 95

பொ.ரை: தாவிப் படர்ந்த மரக் கொம்புகளில் கிடந்த புதுமலர்கள் தடாகத்தில் கிடந்த தாமரை மலர்கள்போல குளிர்ச்சியோடு விளங்கின' பாவிகள் அந்நாட்டில் இயங்க முடியாத

நிலையை இயல்பாகவே அது கொண்டுள்ளமையால் பாக்களிடையே புலவர்கள் இயங்கவிடும் நால்வகைப் பயன்களில் எப்பயன் அங்கே சால்புடையதாகும்?

கரை: பாவிகளே இல்லா அந்நாட்டில் மரக்கொம்புகளில் புதுமலர்கள் பூத்துக் குலுங்கின. 82

பார ணிந்தவ ணிக்கலப் பான்மையாற்

சீர ணிந்தசெ ழுந்தட நாட்டிடை

மார ணிந்தணி மாமணி மானிய

வேர ணிந்தந கர்க்கிய லேற்றுவாம். 96

பொ.ரை: இப்பூவுலகம் அணிந்துள்ள அழகிய அணிகலன்போலச் சிறப்புகளெல்லாம் ஒருங்கே அணிந்துள்ள செழுமையான சூதேய நாட்டில் அது தன் மார்பில் அணிந்த அழகிய பெரிய மணி போன்ற அழகு புனைந்த எருசலேம் நகர்க்கு உரிய இயல்பைத் தொடர்ந்து போற்றுவோம்.

கரை: சூதேய நாடு இப்புவியில் அழகிய அணி போன்றது. அது தன் மார்பில் அணிந்த அழகிய மணி போன்றது எருசலேம் நகரம். 83

நாட்டுப் படலம் முற்றும்

சீறாப் புராணம்

சீறாப் புராணம் ஸ்ரீ சீறாவைக் கூறும் புராணம். சீறத் என்பது சீறத்துன்னபி என்ற அரபுத் தொடரின் சுருக்கம் ஆகும். இதற்கு நபிகள் நாயகத்தின் வரலாறு என்று பொருள். சீறா என்பது சீறத் என்னும் அரபுச் சொல்லின் தமிழ் வடிவம். புராணம் என்பது பழமையான வரலாறு எனப் பொருள்படும். திருநபி அவர்களின் வரலாற்றைக் கூறும் புராணம் என்பது இதன் பொருள்.

ஆசிரியர்

சீறாப் புராணத்தை உமறுப் புலவர் (கி.பி.1642-1703) என்பவர் இயற்றினார். உமறுப் புலவர் பிறந்த ஊர் கீழக்கரை என்றும், நாகலாபுரம் என்றும் இரு வேறு கருத்துகள் உண்டு. உமறுப் புலவரின் ஆசான் கடிகை முத்துப் புலவர் ஆவார். உமறுப் புலவர் மார்க்க மேதை செய்கு சதக்கத்துல்லா அப்பாவிடம் காப்பியம் இயற்றக் கருப்பொருள் பெற்றார். வடநாட்டுப் புலவர் வாலை வாருதியை எட்டையபுரம் அவைக்களத்தில் தன் புலமையால் வென்றார்.

- நண்பர்கள்

உமறுப் புலவர் அக்காலத்தில் வாழ்ந்த படிக்காசுப் புலவர். நமசிவாயப் புலவர், கந்தசாமிப் புலவர் ஆகியோரின் நெருங்கிய நண்பர்.

● ஆதரித்தவர்கள்

இவரை ஆதரித்த வள்ளல்கள் இருவர். ஒருவர் சீதக்காதி, இன்னொருவர் பரங்கிப் பேட்டை அபுல்காசிம் மரைக்காயர்.

காப்பிய அமைப்பு

இக்காப்பியம் மூன்று காண்டங்களைக் கொண்டது. அவை:

1) விலாதத்துக் காண்டம்

2) நுபுவ்வத்துக் காண்டம்

3) ஹிஜ்ரத்துக் காண்டம்

என்பவை ஆகும்.

● விலாதத்துக் காண்டம்

சீறாப் புராணத்தின் முதல் காண்டம் விலாதத்துக் காண்டம் ஆகும். விலாதத் என்ற அரபுச் சொல்லுக்குப் பிறப்பு என்பது பொருள். இதில் நபிகள் நாயகத்தின் பிறப்பும், இளமையும், தொழில் முயற்சியும் முதலில் கூறப்படுகின்றன. பின்னர், கதீஜா நாயகியாரின் உறவு, அவர்கள் திருமணம், பாத்திமா பிறப்பு ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன.

இது இருபத்து நான்கு படலங்களைக் கொண்டு உள்ளது.

● நுபுவ்வத்துக் காண்டம்

இது இரண்டாவது காண்டம். நுபுவ்வத் என்ற அரபுச் சொல்லின் பொருள் தீர்க்க தரிசனம் என்பதாகும். இது நபிகள் நாயகம் நபித்துவம் என்னும் நபிப் பட்டம் பெற்றதைப் பாடுகிறது. வானவர் தலைவர் ஓதிய திருக்குர்ஆன் வேத உரைகள் நபிகள் நாயகத்திற்கு வெளிப்படுத்தப்பெற்றதும், அதனை நபிகள் நாயகம் மக்களுக்கு எடுத்துரைத்து அறிவுரை கூறியதும் கூறப்படுகின்றன. மேலும் தீமைகள் செய்து வந்த குறைசிகள் எனும் குலத்தவரின் கொடுமைகளும் இக்காண்டத்தில் கூறப்பட்டுள்ளன. முஸ்லீம்களின் பொறுமையைப் பற்றியும், இசுலாம் உறுதி பெற்றது பற்றியும் இக்காண்டம் தெரிவிக்கிறது.

இதில் இருபத்தொரு படலங்கள் உள்ளன.

● ஹிஜ்ரத்துக் காண்டம்

இது மூன்றாவது காண்டம். ஹிஜ்ரத் என்ற அரபுச் சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருள்.

மக்காக் குறைசிகள், நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் பல செய்தனர். நபிகள் நாயகம் மக்காவை விட்டு, மதீனாவிற்கு வரவேண்டுமென்று அங்குள்ள மக்கள் அழைத்தனர். அந்த அழைப்பை நபிகள் நாயகம் ஏற்றார். இசுலாமிய அறநெறிகளை வளர்க்க மக்காவை விட்டு மதீனா நகர் சென்றார். அங்கு இசுலாமிய அறநெறி வளர்த்த வரலாறும் இக்காண்டத்தில் விவரிக்கப்படுகிறது. ஆனால் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு முடிவுபெறவில்லை.

உறனிக் கூட்டத்தார் படலத்துடன் முடிகிறது. நபிகள் நாயகத்தின் ஐம்பத்தேழாவது வயதுவரை நடந்த நிகழ்ச்சிகளோடு சீறாப் புராணம் நிறைவு அடைகிறது. இது நாற்பத்தேழு படலங்களால் ஆனது.

சுரத்திற்புனலழைத்த படலம்

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

680. முன்னிலை யாசு நடந்திட நடந்து

முதிரட விகள்கடந் ததற்பின்

றன்னிக ரில்லான் றிருவுளப் படியாற்

றரையினிற் சபுறயீ லிறங்கி

யிந்நிலத் தெவர்க்குந் தெரிகிலா வண்ண

மிளம்பிடி யொட்டையொன் றெளிதாய்ப்

பன்னரும் பாதை தலைதடு மாறப்

பண்பொடு கொடுநடத் தினரே.

பாதையின்கண் முன்னிலையாக ஆசு என்பவன் நடந்திட யாவர்களும் பின்னால் நடந்துசென்று முதிர்ந்த வனங்களைத் தாண்டி அதன் பிறகு, தனக்கு யாதொரு உவமையுமில்லாதவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் திருச்சித்தத்தின்படி ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஆகாயத்தை விட்டும் பூமியின் கண்ணிறங்கிச் சொல்லுதற்கரிய இவர்களின் பாதையானது இலேசாகத் தடுமாற்றமுற இவ்வுலகத்தின் கண்ணுள்ள யாவர்கட்குந் தோற்றாத வண்ணம் இளம்பருவத்தை யுடைய ஒரு பெண் ணொட்டகத்தை ஆசென்பவனின் ஒட்டகத்தின் முன்னால் பண்புடன் கொண்டு நடத்தினார்கள்.

681. மட்டவிழ் புயத்தா னாசுமுன் னடத்தி

வந்தவொட் டகம்புது மையதாம்

பெட்டையொட் டகத்தைக் கண்டுபின் றொடரப்

பிசகின தருநெறி கானிற்

செட்டரு மெருதும் புரவியு மிடைந்து

சிறுநெறி வயின்வெகு தூர

மெட்டிமுன் னடப்பச் சிறுநெறி குறுகி

யிருந்ததுந் தேய்ந்துபோ யதுவே.

தேனானது அவிழாநிற்கும் மலர்மாலை யணிந்த தோள்களையுடையவனான ஆசென்பவன் முன்னிலையாக நடந்துவந்த ஆணொட்டகமானது ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அதன் முன்னால் நடத்திடும் நூதனமாகிய பெண்ணொட்டகத்தைப் பார்த்து அதைப் பின்பற்றவே, அவர்கள்சென்ற அந்தக்காட்டில் அரிதான பாதையானது பிசகினது. வியாபாரப் பொருள்களையுடைய அரிய எருதுகளும் குதிரைகளும் வசக்கேடுற்றுச் சிறிய ஒரு பாதையினிடமாகத் தாவி அதிக தூரமுன்னால் நடக்க அந்தச் சிறிய பாதையுங் குறுகி இருந்ததும் இல்லாமல் தேய்ந்து போய்விட்டது.

682. ஆசெனு மரச னொட்டகக் கயிற்றை

யசைத்திடுந் திசையெலா நடப்ப

வாசியு மெருதுங் கூன்றொறுத் தொகையும்

வழிகெடத் தனித்தனி மறுகத்

தேசிகர் கலங்கி யாமிதற் கென்கொல்

செய்குவ தெனமன மிடைந்து

வீசிய கானல் சுடச்சுடக் கருகி

விடர்விடும் பாலையி லடைந்தார்.

அப்போது ஆசென்று சொல்லா நிற்கும் அரசனானவன் தனது ஒட்டகத்தினது நாணயக்கயிற்றை ஆட்டிடுந் திக்குகளெல்லாவற்றிலும் அவ்வொட்டகம் நடக்கவும், குதிரைகளும் இடபங்களும் கூனலையுடைய ஒட்டகக் கூட்டங்களும் பாதையானது கெட்டுப்போகவே, தனித்தனியாகவே நின்று மறுக்க மடையவும் தேசாந்தரிகளாகிய அவர்கள் யாவர்களும் கலக்கமடைந்து நாம் இவ்விபத்திற்கு யாது செய்குவதென்று மனமானது வசக்கேடுற்று எவ்விடமும் எறிந்த வெயிலின் வெப்பமானது தங்களது தேகத்தை அதிகமாகச் சுடும்படி தீய்ந்து பிளவுகளை விடாநின்ற ஒரு பாலை நிலத்தின்கண் போய்ச் சேர்ந்தார்கள்.

683. பின்னிய திரைவா ருதியினைச் சுவற்றிப்

பெரும்புறக் கடலினைத் தேக்கித்

தன்னகங் களித்து வடவையின் கொழுந்து

தனிவிளை யாடிய தலமோ

பன்னருந் தென்கீழ்த் திசையினன் றிரண்ட

படையொடு மிருந்தபா சறையோ

உன்னதக் ககன முகடற வுருக்கு

முலைகொலோ வெனவறி கிலமால்.

அப்பாலை நிலமானது பின்னுதலைக் கொண்ட அலைகளையுடைய கடலினை வற்றச் செய்துப் பெரிதான புறச்சமுத்திரத்தைக் குடித்துத் தனது மனஞ் சந்தோஷமடைந்து வடவாமுகாக்கினியின் சுவாலையானது ஏகமாயிருந்து விளையாடிக் கொண்டிருந்த தலமோ? அல்லது சொல்லுதற் கரியதென்கீழ்த் திசையையுடையவனான அக்கினிதேவன் தனது கூட்டமாகிய சேனைகளோடும் தங்கியிருந்த பாசறையோ? மேலான ஆகாயத்தின் உச்சியானது அற்றுப் போகும்படி யுருக்காநின்ற வுலைக்கூடமோ? இவற்றில் இன்னதென்று யாம் அறிந்திலோம்.

684. **பருந்திருந் தெழுந்து பறந்தசின் னிழலும்**

பற்றறாக் கானலிற் றேய்ந்த

கரிந்திலை தோன்றா தொவ்வொரு விருக்கங்

கணங்களின் குலமெனத் தோன்று

மெரிந்தெரி மேய்ந்து கரிந்துவிண் ணிடங்காந்

திடுந்தரை யொருதுளி நீரு

மருந்திடைக் கிடையா தலகைக டிரிந்தங்

காள்வழக் கற்றவெங் கானம்.

அன்றியும், பருந்துகளானவை இருந்து எழும்பிப் பறந்த சிறிய நிழல்களும், பற்றுதலற்றுத் தேய்ந்த அவ்வெயிலினால் இலைகளானவை யனைத்துந் தீய்ந்து வெளியினிற்றெரியாது ஒவ்வொரு விருட்சங்களும் பிசாசங்களின் கூட்டத்தைப்போல விளங்காநிற்கும், மேலும் அக்கினியானது எவ்விடமும் எரிந்து அங்குள்ள புற்பூடாதிக ளெல்லாவற்றையுஞ் சாப்பிட்டு ஆகாயமுங்கரிந்து சுடாநிற்கும் அந்தப் பூமியின்கண் குடிப்பதற்கு ஒரு துளி ஜலமாவது அகப்படாது. இன்னம் அங்கு பிசாசங்கள் திரிந்து மனுஷியர்களின் நடபடியற்ற வெவ்வியகானகம்.

685. **பாலையென் றுலர்ந்த செந்நிலக் கானற்**

பரப்பினைப் புனலென வோடிச்

சாலவு மிளைத்துத் தவித்துழை யினங்க

டனித்தனி மறுகிய மறுக்க

மாலுளர்ந் திருண்ட புன்மனச் சிறியோர்

மருங்கினி லிரந்திரந் திடைந்து

காலறத் தேய்ந்த பலகலை மேலோர்

கருத்தினில் வருத்தமொத் தளவே.

அன்றியும், மானினது கூட்டங்கள் பாலையென்று சொல்லும்படி காய்ந்த செந்நிறத்தின் நிலமாகிய வெயிலினையுடைய பரப்பை நீரென்று நினைத்து ஓடி மிகவுமிளைப்புற்றுத்

தாகத்தையடைந்து ஒவ்வொன்றாக மறுகிய மறுக்கமானது மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னு முவ்வாசையினது மயக்கத்தினாற் சுழற்சிதங்கிக் கறுத்த கீழ்மையான மனத்தையுடைய சிறியோர்களின் பக்கத்தில் யாசித்து வசக்கேடுற்றுக் காலமுழுவதுந் தேய்ந்த பல சாஸ்திரங்களையும் கற்றுத் தெளிந்த மேலோர்களது சிந்தையின்கண்ணுள்ள வருத்தத்தை நிகர்த்திருந்தது.

686. கள்ளியின் குலங்கள் வெந்தொடுங் கினவேர்க்

கட்டையி னுட்டுளைக் கிடந்து

புள்ளிபூத் திருந்த பைத்தலைப் பாந்தள்

புறந்திரிந் துறைந்திடா திறந்து

முள்ளெயி றொதுங்கிச் செம்மணி பிதுங்கி

முளைதொறுங் கிடப்பதைச் செறிந்த

கொள்ளியிந் தனங்க ளென்றுழைக் குலங்கள்

குறுகிடப் பயந்துகான் மறுக்கும்.

அன்றியும், அப்பாலைநிலத்திலுள்ள கள்ளியினது கூட்டங்கள் சூரிய வெப்பத்தினால் அவிந்து ஒடுக்கமுற்ற வேர்க்கட்டைகளின் அகத்துவாரங்களில் புள்ளிகள் பூத்திரா நிற்கும் படா மகுடத்தினையுடைய சர்ப்பங்கள் அவ்வெப்பத்தினால் வெளியில் உலாவி மீளவும் அங்கு சென்று தங்கிடாது கிடந்து இறந்து அவற்றின் தாழை முட்கள் போன்ற மடங்குதலாகிய பற்கள் ஒதுங்கிச் செந்நிறத்தையுடைய மணிகள் பிதுங்கி முளைகள் தோறுங் கிடப்பதை மான்கூட்டங்கள் கண்டு இவைகள் நெருங்கிய சுவாலைகளையுடைய நெருப்பெரியுங் கொள்ளிகளென்றும் அவ்விடத்தில் செல்ல அச்சங்கொண்டு நின்று காற்கள் மறுக்கமடையும்.

687. மூவிலை நெடுவேற் காளிவீற் றிருப்ப

முறைமுறை நெட்டுடற் கரும்பே

யேவல்செய் துறைவ தலதுமா னிடர்கா

லிடுவதற் கரிதுசெந் நெருப்புத்

தாவியெப் பொருப்புங் கரிந்தன சிவந்து

தரைபிளந் தனவதிற் பிறந்த

வாவியோ வெழுந்த புகைபரந் ததுவோ

வறக்கொடுங் கானலென் பதுவே.

அன்றியும், அப்பாலைநிலத்தில் முக்கவராகப் பொருந்திய இலைகளையுற்ற வேலாயுதத்தையுடைய காளியென்னும் பிசாசமானது வீறுடனிருக்க, நெடிய உடல்களையுடைய

கரிய பேய்கள் வரிசை வரிசையாய் ஏவல் புரிந்து தங்குவதல்லாது மானிடர்கள் கால் வைப்பதற்கும் அரிதாகும். மேலும் சிவந்த நிறத்தையுடைய நெருப்புத் தாவலுற்று எல்லா மலைகளும் கரிந்தன. தரைகள் சிவப்படைந்து பிளந்தன. ஆனால் முழுக்கொடுமையையுடைய கானலென்று சொல்லுவது அவ்விதங் கரிந்து பிளப்புற்றவைகளி லிருந்துண்டாகும் ஆவியோ? அல்லது ஓங்கிய புகையானது பரந்ததுவோ? இன்னதென்று யாமறியோம்.

688. சேந்தெரி பரந்த பாலையிற் புகுந்து

சென்னெறி சிறிதுந்தோன் றாமற்

காந்தெரி கதிரோ னெழுதிசை தெற்கு

வடக்குமேற் கெல்லைகா ணாமன்

மாந்தரு மாவுந் திசைதடு மாறி

வாயினீ ரறவுலர்ந் தொடுங்கி

யேந்தெழில் கருகி மனமுடைந் துருகி

யெரிபடு தளிரையொத் திடுவார்.

அவ்விதம் சிவந்து அக்கினிப் பரப்புற்ற அந்தப் பாலை நிலத்தின்கண் வியாபாரிகளான அம்மனுஷியர்களும் குதிரை ஒட்டகம் இடப முதலிய மிருகங்களும் நுழைந்து செல்லும் பாதையானது கொஞ்சமேனுந் தெரியாது சுடாநின்ற தீயினது கிரணங்களையுடைய சூரியனுதயமாகும் திசையாகிய கிழக்கு தெற்கு வடக்கு மேற்கு என்னும் நான்கெல்லைகளுந் தோற்றாமல் தடுமாற்றமுற்று வாயிலுள்ள உமிழ்நீர் முழுவதுங் காய்ந்து சோர்வடைந்து சரீரத்தின்கண் தாங்குகின்ற அழகானதும் தீய்ந்து மனமுடைந்து கரைதலுற்று நெருப்பிற்பட்ட தளிரை நிகர்த்தார்கள்.

689. மன்னவ னாசு முன்னடந் ததற்கோர்

வல்வினை பின்றொடர்ந் ததுவோ

வின்னைநா ளகில மடங்கலுந் தழலா

லெரிபடுங் காரணந் தானோ

முன்னைநாள் விதியோ நகரைவிட் டெழுந்த

முகுர்த்தமோ பவங்கண்முற் றியதோ

பன்னுதற் கெவையென் றறிகுவோங் கொடியேம்

பாதையிற் படும்வர லாறே.

அன்றியும், இப்பாதையின்கண் படாநிற்கும் வரலாறானது அரசனாகிய ஆசென்பவன் முன்னிலையாகச் சென்றதற்கு ஒரு வலிய வினையானது வந்து பின்பற்றியதோ? அல்லது

உலகமெல்லாம் இந்தநாளில் அக்கினியால் எரிபட்டிடுங்காரணமோ? ஆதிகாலத்தின் விதிப்பயனோ? நாம் அனைவரும் நமதூராகிய திருமக்கமா நகரத்தை விட்டும் எழும்பிய சுபவேளையோ? நமது பாவங்களனைத்து மொன்றுகூடி முதிர்ந்ததுவோ? கொடுமையையுடையோமாகிய யாம் இவற்றில் சொல்லுதற்கு எவையென்று தெரிகுவோ மென்ன

690. **பாடுறு புனலற் றொவ்வொரு காதம்**

படுபரற் பரப்புநாற் றிசைக்கு

மோடுவர் திரும்பி மீள்குவ ரடிச்சுட்

டுச்சியும் வெதுப்புற வுலர்ந்து

வாடுவர் துகில்கீழ்ப் படுத்தியொட் டகத்தின்

வயிற்றிடை தலைநுழைத் திடுவார்

தேடிடும் பொருட்கோ வுயிரிழப் பதற்கோ

செறிந்திவ ணடைந்தன மென்பார்.

நீரானது இல்லாமல் துன்பத்தைப் பொருந்திய ஒவ்வொரு காவதமும் கூர்மையுற்ற பரற்கற்களின் பரப்பைக் கொண்ட நான்கு திக்குகளிலும் ஓடுவார்கள். திரும்பி மீண்டு வருவார்கள். பாதங்கள் வெந்து சிரசும் சூட்டைப் பொருந்தும்படி காய்ந்து வாடுவார்கள். வஸ்திரங்களைக் கீழே வைத்து அதன்மீது ஏறி நின்றுக்கொண்டு தலைகளை ஒட்டகத்தின் வயிற்றினது பக்கத்தில் புகுத்திவிடுவார்கள். நாம் சம்பாதித்திடுந் திரவியத்திற்காகவோ? அல்லது ஜீவனை இழந்து விடுவதற்காகவோ கூட்டமுற்று இவ்விடத்தில் வந்து சேர்ந்தோமென்று சொல்லுவார்கள்.

691. **ஓங்கிய வுதய கிரிமிசை யெழுந்த**

மதியென வொட்டகை யதன்மேல்

வீங்கிய புயமுங் கரத்தினி லயிலும்

வெண்முறு வலுமலர் முகமும்

பாங்கினிற் குளிர்ந்த வெண்கதிர் பரப்பப்

பரிமள மான்மதங் கமழத்

தூங்கிசை மறைதேர் முகம்மதும் பாலைத்

துன்புறா தின்பமுற் றனரே.

அப்போது தூங்கிய இசைகளையுடைய வேதங்களனைத்தையுந் தெளிந்த நபிமஹ்மூது முகம்மது சல்லல்லாலகு அலைகிவசல்லமவர்களும் வளர்ச்சி தங்கிய உதய பருவதத்தின் மேல்

எழும்பிய சந்திரனைப் போல ஒட்டகத்தின் மீது பருத்த தோள்களும் வேலாயுதமும் வெண்ணிறத்தையுடைய பற்களும் தாமரைமலர் போன்ற முகமும் பக்கங்களிற் குளிர்ச்சி பொருந்திய வெள்ளிய கிரணங்களைப் பரப்பவும், தேகத்தின் கண்ணுள்ள கஸ்தூரிவாசனை கமழவும் இருந்து அந்தப் பாலை நிலத்தைத் துன்பமுறாது இன்பமுற்றார்கள்.

692. **பாலையி லடைந்து பசியினா லிடைந்து**

பலபல வருத்தமுற் றதுவும்

வேலைவா ருதிபோல் வழிபிழைத் ததுவுங்

விழுந்தியான் முகமுடைந் ததுவுங்

கோலமார் புலிவந் ததுமுகம் மதையாங்

கூட்டிவந் துறுபவ மென்னச்

சாலவு முரைத்தா னீதியை வெறுத்த

தறுகணா னெனுமபூ சகுலே.

அப்பொழுது நியாயத்தை வெறுத்த தறுகண்ணனென்னும் அபூஜகிலானவன் நாமனைவோர்களும் இந்தப் பாலை நிலத்தின்கண் வந்து சேர்ந்துப் பசியினால் வசக்கேடுற்றுப் பற்பல துன்பங்களடைந்தும், நீர்த்திரைகளையுடைய சமுத்திரத்தைப் போன்ற பாதையானது தவறினதும், யான்பூமியின் கண் விழுந்து முகந்தகர்ந்ததும், அலங்காரமாகிய வேங்கையானது வந்து சேர்ந்ததும், இந்த முகம்மதென்பவனை நம்மோடு கூட்டிக் கொண்டு வந்ததினால் பொருந்திய பாவமென்று மிகவாக எடுத்துச் சொன்னான்.

693. **மூரிவெற் பனைய புயமுகம் மதுவை**

முன்னிலைத் தலைவரா நிறுத்தித்

தாரையிற் செலுநும் மிடர்களுந் தவிருந்

தழலெழும் பாலையுங் குளிர்ந்து

வேரியங் கமல வாவியங் கரையாம்

விரைவினிற் சாமடை குவமென்

றாரிதுக் குரைத்தார் தாதவிழ் மலர்த்தா

ரணிதிகழ் புயத்தபூ பக்கர்.

பின்னர் இதழ்கள் விரிந்த புஷ்பமாலையினது அழகு பிரகாசியாநின்ற தோள்களையுடைய அபூபக்கரவர்கள் பெருமைதங்கிய மலைபோலும் புஜங்களையுடைய நபிமுகம்மது முஸ்தபாறசூல்

சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை முன்னிலையின் நாயகராாக நிற்கச் செய்து நீங்கள் பாதையின்கண் செல்லுங்கள். உங்களுடைய துன்பங்களும் நீங்கும். அக்கினியானது எழும்பாநின்ற இந்தப் பாலை நிலமுங் குளிர்ச்சியடைந்து வாசனை பொருந்திய அழகிய தாமரைத் தடாகங்களின் கரைகளைப் போலாகும். நாமும் சீக்கிரத்தில் சாம்நகரத்தைப் போய்ச் சேருவோமென்று ஆரிதென்பவருக்குச் சொன்னார்கள்.

694. ஈதுநன் றெனவொத் தனைவரு மிசைத்தா

ரெழின்முகம் மதுவுமுன் னிலையாய்ப்

பாதையி னடப்பப் பெரியவ னருளின்

பணிகொடு சபுறயீ லிறங்கிப்

பேமற் றணுகி யொட்டகக் கயிற்றைப்

பிடித்தன ரரைநொடிப் பொழுதிற்

றீதற நெறியுந் தெரிந்தன நான்கு

திசைகளுந் தெளிதரத் தெரிந்த.

அவ்வண்ணம் அபூபக்கரவர்கள் கூறியவார்த்தைகளை யாவர்களுங்கேட்டு இதுவே நல்ல சமாச்சாரமென்று அனைவர்களும் சம்மதித்துச் சொன்னார்கள். பின்னர் அழகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் யாவர்கட்கும் முன்னிலையாய் அப்பாதையின்கண் நடக்கப் பெரியவனான ஜல்லஜலாலுஹுவத்த ஆலாவின் கிருபையினது கட்டளைகொண்டு ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வானலோகத்தை விட்டும் பூமியின் கண்ணிறங்கிப் பேதமில்லாது நபிகணாயகமவர்களின் ஒட்டகத்தை நெருங்கி அதன் நாணயக் கயிற்றைப் பிடித்தார்கள். அவ்விதம் பிடிக்கவே ஒரு அரைநொடிப் பொழுதிற் குற்றமறப் பாதையுந் தோன்றினது. தேர்ச்சியுறும்படி நான்கு திக்குகளுந் தெரிந்தன.

695. தலைமைமுன் னிலையாய் முகம்மது நடப்பச்

சாருநன் னெறியினைச் சார்ந்தோம்

நிலமிசை கரிய மேகமொன் றெழுந்து

நிழலிவர்க் கிடுவதுங் கண்டோ

மலைகடற் றிரைபோற் கானலில் வெதும்பி

யலைந்திடு வருத்தமுந் தவிரப்

புலனுறப் புனலும் பருகுவஞ் சிறிது

போழ்திலென் றனைவரும் புகன்றார்.

அப்போது அப்பாதையின் கண்ணுற்ற யாவர்களும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் முன்னிலையினது நாயகராய் நடக்கவே, நாம் அடையக்கூடிய நல்ல பாதையினையடைந்தோம். கருநிறத்தையுடைய மேகமொன்றெழும்பி இப்பூமியின் மீது அவர்களுக்கு நிழலிடுவதையும் பார்த்தோம். அலைகளையுடைய சமுத்திரத்தினது திரையைப் போல வெயிலினால் வாட்டமுற்று அங்கு மிங்கும் அலைந்து திரியும் துன்பமும் தீரும்படியாகவும், இந்திரியங் களுணர்ச்சியுறும்படியாகவும், இன்னங் கொஞ்ச நேரத்தில் தண்ணீருங் கொடிப்போமென் றொருவர்க் கொருவர் பேசிக் கொண்டார்கள்.

696. மந்தரம் பொருவா தெழுந்தபொற் புயத்து

முகம்மது மேறுவா கனத்தின்

கந்தரக் கயற்றை யசைத்திட வுளத்தின்

கருத்தறிந் தொட்டகங் களித்துச்

சுந்தரப் புவியில் வலதுகா லோங்கித்

தொட்டிடத் தொட்டவப் போதிற்

சிந்துநேர் கடுப்ப நுரைதிரை பிறங்கச்

செழித்தெழுந் ததுநதிப் பெருக்கே.

அவ்வாறு அவர்கள் பேசிக் கொள்ளவே மலைகளுந் தமக்கொப்பாகாதபடி யோங்காநிற்கும் அழகிய புயங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுந் தாங்கள் ஏறியிருக்கப்பட்ட வாகனமாகிய ஒட்டகையின் கழுத்தினது நாணயக் கயிற்றை அசைக்கவும், அவ்வொட்டகமானது அவர்களது மனத்தின் கண்ணுள்ள எண்ணத்தைத் தெரிந்து சந்தோஷமடைந்து அழகிய பூமியின்மீது தனது வலதுகாலை யோங்கித் தோண்டவும், தோண்டிய அந்தச் சமயமே சமுத்திரத்தைப் போல விரைவினில் நுரைகளும் திரைகளும் பிரகாசிக்கும்படி ஆற்றினது பிரவாகஞ் செழிப்புற் றெழும்பினது.

697. ஆறெழுந் தோடிப் பாலையைப் புரட்டி

யழகுறு மருதம தாக்கத்

தேறல்கொப் பிளித்து வனசமுங் குவளைத்

திரள்களுங் குமுதமும் விரிய

வேறுபட் டுலர்ந்த மரமெலாந் தழைத்து

மென்றழை குளிர்தரப் பூத்துத்

தூறுதேன் றுளித்துக் கனிகளுங் காயுஞ்

சொரிதரச் சோலைசூழ்ந் தனவே.

அவ்வாறு ஆறானது எழும்பி எவ்விடமும் ஓட்டமுற்றுப்பரவி அந்தப் பாலை நிலத்தைத் திருப்பி அழகு பொருந்திய மருதநிலமாக்கவே, தாமரைகளும் குவளைக் கூட்டங்களும் ஆம்பல்களும் மதுவைக் கக்கி மலர, வேற்றுமைப்பட்டுக் காய்ந்த விருட்சங்களனைத்தும் குளிர்ச்சியுறும் வண்ணம் மிருதுவாகிய தளிர்களைத் தளிர்த்துப் பூத்துப் பொழியாநிற்கும் தேனைச் சிந்திப் பழங்களும் காய்களும் சொரியும்படியாக நானாபக்கங்களுஞ் சோலைகள் சூழ்ந்தன.

698. வற்றுறாச் செல்வப் பெருக்கினி தோங்கும்

வகுதையும் பதியுசை னயினார்

பெற்றபே றிதுகொ லெனமுழு மணியாய்ப்

பிறந்தமெய்த் துரையபுல் காசீஞ்

சுற்றமுங் கிளையுஞ் சிறப்பொடு தழைத்துச்

சூழ்ந்திருந் தணிதிகழ் வதுபோற்

குற்றமி னதியி னிருகரை மருங்குங்

குறைவறத் தளிர்த்தன தருக்கள்.

அன்றியும் வற்றாத சம்பத்தின் மிகுதியானது இனிமையுடனோங்கா நிற்கும் அழகிய வகுதை நகரத்திலுள்ள ஹுசையின் நயினாரவர்கள் பெற்றபேறானது இதுவென்று சொல்லும்படி பூரணவிரத்தின மாயுதயமான சத்தியவதிகாரியாகிய இந்நூலின் கொடைநாயகம் அபுல் காசீமரைக்காயரவர்களை அவர்களின் உற்றார்களும் பந்துக்களும் தளிர்த்து சிறப்புடன் வளைந்திருந்து அழகு பிரகாசிப்பது போலக் குற்றமற்ற அவ்வாற்றினது இருகரைகளின் பக்கங்களிலும் விருட்சங்கள் குறைவில்லாது வளைந்துநின்று தளிர்த்துப் பிரகாசித்தன.

699. நாணமும் புழுகும் பாளிதக் குல

நறைகெட மிகுந்தவா சமதாய்த்

தேனினுங் கருப்பஞ் சாற்றினுந் திரண்ட

தெங்கிள நீரினு மினிதா

யூனமி னதியி னொருகைநீ ரருந்தி

யுடல்குளிர்ந் தரும்பசி யொடுங்கி

யானை மலர்ந்து முகம்மதைப் புகழ்ந்தங்

கனைவரு மதகளி றானார்.

அப்போது அவ்விடத்திலுள்ள யாவர்களும் கஸ்தூரி புழுகு பாளிதக்கூட்ட முதலியவைகளின் வாசனைகளும் கெட்டுப் போகும்படிப் பெருகிய வாசனையுடையதாய்த் தேன் கருப்பஞ்சாறு திரட்சியுற்ற தெங்கினிளநீர் இவைகளின் இனிமையைப் பார்க்கிலும்

வினாக்கள்

வ.எண்	ஐந்து மதிப்பெண் வினா	LOCF Mapping		
1	தேம்பாவணிஆசிரியர் குறிப்புதருக.	K2	CO2	PO4
2	சீறாபுராணம் விளக்குக.	K4	CO3	PO5
3	தமிழ் காப்பியமரபைஉள்வாங்கியபடைப்புகள் யாவை?	K1	CO4	PO1
4	நாட்டுப்படலம் கதைச்சுருக்கத்தினை கூறுக.	K5	CO5	PO2
5	சுரத்திற் புனலழைந்தபடலம் கூறும் செய்திகள் யாவை?	K3	CO4	PO3

வ.எண்	எட்டு மதிபெண் வினா	LOCF Mapping		
1	சுரத்திற் புனலழைந்தபடலம் கூறும் செய்திகளைவிவரிக்க?	K1	CO4	PO4
2	நாட்டுப்படலம் கூறும் செய்தியினைஆராய்க.	K4	CO2	PO6
3	தமிழ் காப்பியமரபைஉள்வாங்கியபடைப்புகள் பற்றிவிவரிக்க.	K3	CO1	PO5
4	தேம்பாவணி கதை அமைப்பைஎடுத்துரைக்க.	K2	CO5	PO6
5	சீறாபுராணம் கதைச்சுருக்கத்தினைதொகுத்துரைக்க.	K4	CO3	PO3

இனிமையுடையதாய்க் குறைபாடற்ற அவ்வாற்றினது ஜலத்தில் ஒரு சிறங்கை நீரைக் குடித்துச் சரீரங் குளிர்ச்சியடைந்து அரிய பசியானது ஒடுங்கி முகமலர்ச்சி பெற்று நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் துதித்து மதங்களைப் பொழியாநின்ற யானைகளை நிகர்த்தார்கள்.

அலகு 5

பாடுபொருள் அடிப்படையிலான வகைகள்

நாட்டிய நாடகங்களையும் வகைமை அடிப்படையில் வகைப்படுத்தலாம். நாட்டிய நாடகங்களைப் பாடுபொருள் அடிப்படையிலும், வடிவ நிலையிலும் வகைப்படுத்தலாம். இவ்வாறு வகைப்படுத்தப்படும் பொழுது இவைகளின் உள்ளீடுகளையும், இவற்றிடையே காணப்படும் சிறப்பு நிலைகளையும், பொது அமைப்புகளையும் உணர முடியும். இவ்வகை வகைமை ஆய்வால் நாட்டிய நாடகங்களை இனம் பிரித்து அறிய முடியும். நாட்டிய நாடகங்கள் பரந்த பரப்பிற்குட்பட்டன. இவற்றை ஒரு நிலைக்குள் கொண்டு வர இத்தகு ஆய்வுகள் தேவைப்படுகின்றன. முதலில் பாடுபொருள் வடிவ அடிப்படையில் நாட்டிய நாடகங்களைக் காண்போம்.

பாடுபொருள்

பாடுபொருள் என்பது உள்ளீட்டைக் குறிக்கும். இதனைக் கருத்து என்றும் அழைப்பர். கதைபொதி இலக்கியங்கள் ஒரு சிறப்பான கருத்தை வெளிப்படுத்தவே படைக்கப்படுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு என்ற பொருள்களின் அடிப்படையிலும், அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற உண்மைப் பொருள் அடிப்படையிலும், மனித குலம் மேம்பட, கடைப்பிடிக்க வேண்டிய ஒழுகலாறுகளின் அடிப்படையிலும், வாழ்பவனுக்கும், வாழ வேண்டியவனுக்கும் வழிகாட்டும் அடிப்படையிலும் அந்த இலக்கியங்கள் அமைகின்றன. தத்தம் சமயக் கருத்துகளை வெளிப்படுத்துகின்றன’ தாம் வழிபடும் தெய்வம் பற்றிய செய்திகளையும், சமயப் பெரியோர்கள் பற்றிய வரலாறுகளையும் கூறுகின்றன.

இதிகாசம்

ஆதி கவி என்று போற்றப்படும் வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணமும், வியாசரின் பாரதமும் இந்திய இதிகாசங்களாகப் போற்றப்படுகின்றன. வான்மீகியின் இராமாயணத்தை மொழி பெயர்த்தும், தழுவியும், ஒரு சில நிகழ்வுகளை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகங்கள் பல தோற்றம் பெற்றன.

கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் எழுதிய திருமுடி சூடிய திருவடி என்ற நாட்டிய நாடகம் இராமனின் பாதுகைகளைப் பெற்று வந்த பரதனுடைய நிலையை விளக்குகின்றது. இதுகுறித்து இந்நாட்டிய நாடக ஆசிரியர் குறிப்பிடும் பொழுது நாடறிந்த இராமகாதையின் பின்னணியில் தீட்டப் பெற்றது என்கிறார். இதைப்போல சீதா கல்யாணம், வாலி மோட்சம், சுந்தர காண்டம் போன்ற நாட்டிய நாடகங்கள் படைக்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன. கலைக்கோட்டு மாமுனிவர் வரலாறு, இராம இலக்குவர் வேள்வி காத்தல், பரசுராமர் வரலாறு, இரணிய வதை, சடாயு மோட்சம், இராமர் பட்டாபிடேகம் போன்ற நிகழ்வுகளை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன.

சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையை நாட்டிய நாடகமாக ஆடி வருகின்றனர். இதில் நாடகப் பாத்திரங்களின் கூற்றுகள் உள்ள பகுதிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர் தொடக்கப் பகுதியாகிய தோடயம் இடம் பெற்றுள்ளது.

தோடயம் தொடங்கிய பின்பு வசனத்துடன் அமையும் கட்டியம் இடம் பெறும். இதனைத் தொடர்ந்து நாட்டிய நாடகம் நடைபெறும்.

பாரதக் கதையை மையமாகக் கொண்டு நாட்டிய நாடகங்கள் பல உள. திரௌபதி திருமணம், பாஞ்சாலி, பீஷ்மர் மோட்சம், சுர்ண மோட்சம், கீதை உரைத்த கண்ணன், சுபத்திரா திருமணம் போன்ற நாட்டிய நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பாரதத்தில் கிளைக் கதைகள் மிகுதி. இக்கிளைக் கதைகள் மையமிட்ட நாட்டிய நாடகங்கள் பல தோற்றம் பெற்றன. அரக்கு மாளிகை நாட்டிய நாடகம், அரவான் களபலி, அருச்சுனன் தபசு, கிருஷ்ணன் தூது, தருமபுத்திர நாடகம், நளவிலாசம், விதுரன் குறம், துரோபதை குறம் போன்ற நாட்டிய நாடகங்கள் நடத்தப்படுகின்றன.

புராணங்கள்

இதிகாசங்களைப் போல மக்களால் பெரிதும் போற்றப்பட்ட புராணங்களின் அடிப்படையிலும் நாட்டிய நாடகங்கள் தோற்றம் பெற்றன. இந்திய நாகரிகத்தின் கருவூலமாகப் புராணங்கள் விளங்குகின்றன. பழமையான வரலாறுகள், செய்திகள், சமயக் கதைகள், சமயச் சடங்குகள் போன்றன இதில் இடம் பெறுகின்றன. பழமையான புராணங்கள் 18 என்று கூறுவர். இவை வைணவம் தொடர்பானவைகளாகவும், சைவம் தொடர்பானவைகளாகவும் உள்ளன. இவையல்லாமல், திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்ற சைவப் புராணங்களை மையமாகக் கொண்டும் நாட்டிய நாடகங்கள் உள்ளன.

சைவம்

சைவம் தொடர்பான புராணங்களில் திருவிளையாடற் புராணக் கதைகளும், பெரியபுராணத்தில் வரும் நாயன்மார் கதைகளும், கந்தபுராணத்தில் வரும் தெய்வானை, வள்ளித் திருமணங்களை மையமாகக் கொண்ட கதைகளும் நாட்டிய நாடகமாக நடிக்கப்பட்டு வருகின்றன.

திருச்சி பாரதன் எழுதிய கந்தன் காவியம் என்ற நாட்டிய நாடகத்தை, திருச்சி கலைமாமணி, ரேவதி முத்துசாமி குழுவினர் சுமார் 600 மேடைகளில் நிகழ்த்தியுள்ளனர். சென்னை இராசகணேசன் குழுவினரால் ஞானப்பழம் என்ற நாட்டிய நாடகம் நடத்தப்பட்டுள்ளது. திருமதி சித்ரா விசுவேசுவரனின் நாட்டியப் பள்ளியினரால் பெரியபுராண நாயன்மார்களுள் ஒருவரான திருநீலகண்டரின் வாழ்க்கை நாட்டிய நாடகமாகப் படைக்கப்பட்டுள்ளது.

வைணவம்

வைணவம் தொடர்பான நாட்டிய நாடகங்கள் பல அரங்கேற்றப்பட்டு வருகின்றன. திருமாலின் அவதாரச் சிறப்பினை விளக்கும் வகையிலும் நாட்டிய நாடகங்கள் படைக்கப்பட்டு வருகின்றனர்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற நாட்டிய நாடகம் ஆண்டாளின் வரலாற்றை மையமாகக் கொண்டது. இதில் ஆண்டாள் தன் தோழியருடன் பந்தடித்து விளையாடுகிறாள். தோழியருடன் விளையாடினாலும், அவள் மனம் அரங்கன் மீதே நிலைத்திருந்தது என்ற நிலையில் படைக்கப்பட்டுள்ளது.

திருவரங்கம் அரங்கன் மீது காதல் கொண்ட துலுக்க நாச்சியார் வரலாற்றை மையமாகக் கொண்ட துலுக்க நாச்சியார் நாட்டிய நாடகமும், கிருட்டிண அவதாரத்தை மையமாகக் கொண்டு கோகுலத்துக் கண்ணன், ருக்மணி கல்யாணம், சுபத்ரா கல்யாணம் போன்ற நாட்டிய நாடகங்களும், வைணவ அடியார்களின் வாழ்க்கையை ஒட்டித் திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், புரந்தரதாசர், வேதாந்த தேசிகர் முதலிய நாட்டிய நாடகங்களும் படைக்கப் பட்டுள்ளன.

வரலாறும் சமுதாயமும்

வரலாற்றின் அடிப்படையிலும் சமுதாயப் பிரச்சனைகள் அடிப்படையிலும் நாட்டிய நாடகங்கள் உள்ளன.

வரலாறு

தமிழக வரலாற்றின் சில சிறப்பு நிலைகளை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகங்கள் தோன்றியுள்ளன. சங்ககால மன்னர்களை மையமாகக் கொண்ட ஔவையார் அதியன் நட்பு, ஆதிமந்தி, ஆட்டனத்தி, கடையெழு வள்ளல்களான பாரி, பேகன், ஓரி, காரி, ஆய் அண்டிரன் போன்றோரின் வரலாறுகளை மையமாகக் கொண்டு நாட்டிய நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் சார்பில் ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று விலாசம் என்ற பெயரிலும் இரண்டு நாடகங்கள்என்ற பெயரிலும் உள்ளன.

பூலோக தேவேந்திர விலாசம்

சந்திரிகா ஆசை விலாசம்

விசுணு சாக ராச விலாசம்

சகசி குறவஞ்சி

காவேரி கல்யாணம்

இவை தஞ்சை மராட்டிய மன்னர் சகசியின் காலத்தில் (கி.பி. 1684-1712-இல்) தோன்றின. தஞ்சையிலும், திருவையாற்றிலும் இந்நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன.

சமுதாயம்

சமுதாயத்தின் தேவைகளையும், சமுதாய முன்னேற்ற நிலைகளையும் மையமாகக் கொண்ட நாட்டிய நாடகங்கள் தோன்றி வருகின்றன. அனிதா ரத்தினம் என்பவர் பெண்ணுரிமைக்குக் குரல் கொடுக்கும் நிலையில் ஒரு நாடகத்தைப் படைத்துள்ளார். சாதி ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பசுமைப் புரட்சி, மக்களாட்சி மகத்துவம் போன்ற நிலைகளை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகங்கள் படைக்கப்பட்டு வருகின்றன.

இராவண காவியம்

புலவர் குழந்தையின் இராவண காவியம் பழந்தமிழ் மரபைப் பின்பற்றி எழுதப்பட்ட காப்பியமாகும். பழைய யாப்பு மரபினைப் பின்பற்றிக் கலிவிருத்தம், கொச்சகம் முதலிய யாப்பு வகைகளால் இக்காப்பியம் யாக்கப்பட்டுள்ளது.

இக்காப்பியம் ஐந்து காண்டங்களால் ஆனது. அவை, 1) தமிழகக் காண்டம், 2) இலங்கைக் காண்டம், 3) விந்தக் காண்டம், 4) பழிபுரி காண்டம், 5) இலங்கைக் காண்டம்.

இக்காப்பியக் காண்டம் ஒவ்வொன்றும் பல படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நூலில் அமைந்துள்ள மொத்தப் படலங்கள் ஐம்பத்தேழாகும். பாயிரம் உட்பட ஐந்து காண்டத்திலும் உள்ள மொத்தப் பாக்கள் 3100.

இக்காப்பியத்தின் தொடக்கப் படலம் தமிழகக் காண்டத்தின் தமிழகப் படலமாகும். இக்காப்பியத்தின் நிறைவுப் படலம் போர்க் காண்டத்தில் உள்ள இறுவாய்ப் படலம் ஆகும்.

புலவர் குழந்தை தாம் படைத்த இக்காவியத்தைத் தமிழர்க்குக் காணிக்கையாக்கியுள்ளார். தமிழர்கள் தம் பண்பாட்டுச் சிறப்பை அறிந்து வாழ்வதற்காக இராவணனின் பெருமை படைப்பதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தமிழன் செந்தமிழ்க்காக வாழ்ந்தஇரா

வணன்பெருஞ்சீர் இனிது பேசும்

செந்தமிழின் பூங்காவாம் இராவணகா

வியம்எனும்இத் தேம்பா நூலைத்

தந்தமிழின் பண்பாட்டை அறிந்துநடைப்

பிடித்தினிது தகவே வாழப்

பைந்தமிழின் பேரேடா வருங்காலத்

தமிழர்க்குப் படைக்கின் றேனே

(செந்தமிழ்க்கா ஸ்ரீ செந்தமிழ்க்காக தேம்பா ஸ்ரீ இனிய பாக்களால் பேரேடா ஸ்ரீ பேரேடு ஆக)

ஆசிரியர்

புலவர் குழந்தை ஓலவலசுப் பண்ணைக்காரர்குடியில் 1-7-1906இல் பிறந்தார். முத்துச்சாமிக் கவுண்டர், சின்னம்மையார் என்பவர்களின் ஒரே மகனாவார். இவர் திண்ணைப் பள்ளியில் கற்ற காலம் மொத்தமாக எட்டு மாதங்களேயாம். இயற்கையிலேயே கவிபாடும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர். இசைப் பாடல்களே இவர் முதன் முதலாகப் பாடிய பாடல்கள். ஆசிரியர் உதவியின்றித் தாமே முயன்று தமிழ் கற்றுச் சீரிய புலமை எய்தினார். அதன் அடையாளமாக 1934இல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் புலவர் பட்டம் பெற்றார். ஆசிரியராகவும் தலைமைத் தமிழாசிரியராகவும் 39 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

தந்தை பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தில் புலவர் குழந்தை தம்மை இணைத்துக் கொண்டார். சுயமரியாதைக் கொள்கையில் உறுதியுடையவராய்த் திகழ்ந்தார். இறை

நம்பிக்கை இல்லாதவர். 1938, 1948 ஆகிய ஆண்டுகளில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டார். வேளான் என்னும் மாத இதழை நடத்தினார். விதவை மணம், கலப்பு மணம், சீர்திருத்தமணம் ஆகியவற்றை முன்னின்று நடத்தினார். திருக்குறள் குழந்தை உரை என்ற நூலினை இருபத்தைந்து நாட்களில் எழுதி வெளியிட்டார்.

புலவர் குழந்தை தமிழ்ச் செய்யுள் மரபினைச் சிதையாமல் காக்க வேண்டும் என்னும் கருத்துடையராவார்.

6. தாய்மொழிப் படலம்

எழுசீர் விருத்தம்

1. **ஊக்கமு முணர்வு முளமுதன் மக்க**
ளுயிர்மெயி னிருந்துதம் மவரை
நீக்கவு மொருவர்க் கொருவர்தங் கருத்தை
நினைத்தவா றெதிருரை யாடி
மாக்களி லிருந்து மக்களா யுயர்ந்து
வாழவும் வகைபட முதலில்
ஆக்கிய மொழிநந் தமிழ்மொழி யென்றா
லாரிதன் பெருமையை யறைவார்.

2. **பரிதியி லிருந்து சிதறிய வுலகப்**
பகுதியில் முதலினிற் குளிர்ந்து
பெரிதுயிர் வகைகள் முதன்முதல் தோன்றப்
பெற்றது பழந்தமி ழகமே'

வருதமி ழகத்து மக்களே யுலக
மக்களுக் கொருமுதல் மக்கள்
தருமுதல் மக்கள் பேசிய மொழிசெந்
தமிழெனில் இதற்கிணை யெதுவோ.

3. இனியசெந் தேனு மினியவான் பாலு
மினியதீஞ் சுவைநிறைந் தியலும்
கனியதன் சாறுங் கரும்பினின் சாறுங்
கனிவரு முதலவின் பருப்பும்
இனியவின் சுவையொன் றேயுளங் கேட்டற்
கினிமைநம் பாலிலை யென்று
கனியவுள் ளுருகிக் கவன்றிட விரங்கிக்
கைசெயுங் கனிதமிழ் மொழியே.

4. உரப்பியுங் கனைத்து முடிமுத லடிநாக்
குழறியுங் குழறியு முயிர்ப்பை
நிரப்பியுங் கழுத்தி னெஞ்சினி லிதழை
நெகிழ்த்துமுள் ளுயிர்ப்பது வெளியில்
வரத்துணை யின்றித் திணறியு மெழுத்தை
யொலித்திடும் வருத்தம தின்றிப்
பொருத்திய வாயைத் திறக்கவா றைந்தும்
புறப்படு மெளியசெந் தமிழே.

5. எழுத்தொலி வேறா வொவ்வொரு சொல்லி
னிடத்துமவ் வொலிகள்வெவ் வேறா
அழுத்தவோர் பொருளா நெகிழ்க்கவோர் பொருளா
வவற்றிடை நலியவோர் பொருளா
எழுத்தொரு பயனு மின்றியாங் கடுக்கா
வினையன வேற்றுமை பலவா
வழுப்பட லின்றி யெலாமொரு வகையா
வமைந்தது வண்டமிழ் மொழியே.

6. அம்முதல் னௌவீ றாகிய வெழுத்தை
யறிந்தவ ரெளிதினிற் றாமே
தம்முறு துணையாத் தடைசிறி தின்றித்
தமிழறி வுடையவ ராவர்
அம்முறை மேலு முயன்றிடிற் புலமை
யடைகுவ ரையமின் றிதைப்போற்
செம்மொழி வேறொன் றுளதெனப் புகல்வோர்
தெரிதர வுரைக்கமுன் வருவீர்.

7. சொற்றொறும் பொருளின் சிறப்புமப் பொருளிற்
சொற்பொருந் துறவமை சிறப்பும்
சொற்றொட ரமைவின் சிறப்புமத் தொடரிற்
சொற்பொரு ளமைதியின் சிறப்பும்
கற்றொறு முள்ளங் களிக்கவத் தொடரிற்
கருத்தமைத் திருக்குநற் சிறப்பும்
பெற்றுள தமிழ்த்தாய்க் கினியொரு சிறப்புப்
பேசுவ தெனதவாப் பெருக்கே.

8. ஒருமொழி யேனு மினையநாள் காறு
முலகெலாந் தேடியு மடையா
இருவகைக் கைகோ ளன்பினைந் திணையோ
டெழுதிணை யகம்புற மென்னும்
பொருளினை யுடைய பழந்தமிழ்த் தாயைப்
பொருளிலா ளெனப்புகல் பொய்யர்
மருளினை யுண்மைப் பொருளென மதிப்போர்
மதியினுக் குவமையம் மதியே.

9. பேசுநற் குணமு மெழுதெழில் வனப்பும்
பெரியர்சொற் கடந்திடா வொழுக்கும்
வீசொளி மணிப்பூண் பெருக்குமே வரிய
முதுமையோ டிளமையும் வேறோர்
ஆசிலாத் தனித்த நடையுமா கியவிவ்
வறுவகைச் சிறப்பொடு பொலிந்து
மாசிலா மணியா யொளிர் தமிழ்த் தாயை
வடகுட மாதரொப் பாரோ?

10. ஏயதங் கருத்தை யுரைத்திடும் பாட்டு
முரையுமா கியமுத லியலும்
மேயவப் பாட்டைப் பண்ணொடு திறனு
மேவுற விசைத்திடு மிசையும்
வாயவவ் விரண்டோ டுளப்படு கருத்தை
மனக்கொள நடிக்குநா டகமும்
ஆயமூ வுறுப்பி தனையுறுப் பறையென்
றறைகுவ ரறிவிலா வெறியர்.

11. ஒருவகை யொலிப்பு மிருவகை வழக்கு
முரியமுப் பெயருநாற் பாவும்
இருதகை வருமைந் தியலுமா றுறுப்பு
மெழுவகைத் திணையுமெண் வனப்பும்
மருவிய வொன்பான் சுவையும்பத் தழகும்
வகைபட வமைதமிழ் மொழியைத்
திருகிய மனத்தார் சிறப்பிலை யென்று
செப்பினொப் பவர்பொறுப் பவரே.

வீராயி குறுங்காவியம்

இருபதாம் நூற்றாண்டில் பல குறுங்காப்பியங்கள் தமிழில் தோன்றியுள்ளன. அவற்றுள் மூன்று குறுங்காப்பியங்கள் இந்தப் பாடப் பகுதியில் இடம் பெறுகின்றன. அவையாவன: வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பா, பாலபாரதி ச.து.சு.யோகியாரின் அகல்யா, கவிஞர். தமிழ் ஒளியின் வீராயி ஆகியவையாகும்.

குறுங்காப்பியங்கள்

இதிகாசங்களிலும் காப்பியங்களிலும் இடம்பெற்றுள்ள ஒரு கிளைக்கதை அல்லது ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு காவிய மாந்தர் இறவா வரம் பெற்று உலகில் நின்று நிலவுவது உண்டு. காலத்திற்குக் காலம், கால மாறுபாட்டைக் கருத்தில் கொண்டு படைப்பாளிகள் அந்தக் கிளைக்கதைகளையோ நிகழ்ச்சிகளையோ காவிய மாந்தர்களையோ மறுபடைப்பிற்கு உட்படுத்துவது உண்டு. பாரதியின் பாஞ்சாலி சபதம் அத்தகைய மறுபடைப்பாகும். அவ்வாறே வான்மீகியின் இராமாயணத்தில் உள்ள அகலிகையை வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியாரும், பாலபாரதி ச.து.சு.யோகியாரும் புதிய வார்ப்பில் உருவாக்கியுள்ளனர். தமிழ்ஒளி வீராயி என்னும் குறுங்காப்பியத்தின் வழியாக முதலாளித்துவத்தின் கொடுமையையும் சாதியக் கொடுமையையும் வெளிப்படுத்தியுள்ளார். இம்மூன்று குறுங்காப்பியங்களும் பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலமாக இருப்பதைக் காணலாம்.

வீராயி

கவிஞர் தமிழ்ஒளியின் காப்பியம் வீராயி. சிதைந்த சேரி, வீராயி தப்பினாள், நிலைபெற்ற உறவு, வாழ்வில் இடி, அண்ணன் எங்கேடி, கொலைகாரன், மன்றினில் வீரன், சிதறிய குடும்பம், தேயிலைத் தோட்டத்திலே, மாரி இறந்தான், காதலன் கிடைத்தான், கண்ணீர் வெள்ளம், கப்பல் ஏறினர், மங்கையுடன் வந்தான், பறைச்சியா?, பயப்படாதே, புரட்சி மணம், நாடு செய்த தீமை, முடிந்தது வாழ்வு ஆகிய உட்பிரிவுகளால் ஆனது.

இக்காப்பியத்தில் எண்சீர் ஆசிரிய விருத்தங்களும் ஆறுசீர் ஆசிரிய விருத்தங்களும் சிந்துப்பாக்களும் கலிவெண்பாவும் ஆசிரியமும் விரவி வந்துள்ளன.

ஆசிரியர்

கவிஞர் தமிழ்ஒளி 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் நாள் பிறந்து, 1965ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 29ஆம் நாள் 40 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார். தந்தை பொ.சின்னையா, தாய் செங்கேணியம்மாள். தலைமகன் ஆனதால் தன் தாயின் தாய் வீட்டில் (பாட்டி வீட்டில்) குறிஞ்சிப் பாடியை அடுத்த ஆடூரில் பிறந்தார். கவிஞரின் இயற்பெயர் விஜயரங்கம். பெற்றோர் செல்லமாக அழைத்த பெயர் பட்டுராசு. கவிஞர் அவராகச் சூட்டிக் கொண்ட தமிழ்ஒளி என்ற பெயர் அவரைப் புரட்சிப் பாவலராக அடையாளப்படுத்தியது.

கவிஞர் தமிழ்ஒளி புதுவைக் கல்வே கல்லூரியிலும் கரந்தைத் தமிழ்க் கல்லூரியிலும் பயின்றவர். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் அன்பிற்கு ஆட்பட்டவர்.

தமிழ் இதழ்களில் பணியாற்றிச் சிறந்த இதழாளராகவும் தமிழ்ஒளி திகழ்ந்தார். அவ்வகையில் குறிப்பிடத்தக்க இதழ்கள் முன்னணியும் ஜனயுகமும் ஆகும்.

கவிஞர் தமிழ்ஒளி பன்முகப் படைப்பாளியாகவும் கவிஞராகவும் விளங்குகிறார். அவரின் காவியப் படைப்புகள் கவிஞனின் காதல், நிலைபெற்ற நிலை, வீராயி, மேதின ரோஜா, விதியோ வீணையோ?, மாதவி காவியம், கண்ணப்பன் கிளிகள், புத்தர் பிறந்தார், கோசலைக்குமரி ஆகியனவாம்.

கவிஞர் தமிழ்ஒளியின் கவிதைத் தொகுப்புக்களான தமிழ்ஒளியின் கவிதைகள், மக்கள் கவிதைகள் ஆகியவை குறிப்பிடத்தக்கனவாம். குழந்தைக்கான பாடு பாப்பா என்ற கவிதைத் தொகுப்பும் அவருடையதாகும்.

கவிஞர் தமிழ்ஒளியின் சிலப்பதிகாரம் நாடகமா? காவியமா?, திருக்குறளும் கடவுளும், தமிழும் சமஸ்கிருதமும், தமிழ்ச் சமுதாயம் ஆகிய கட்டுரைகளும் சிறந்த படைப்புகளாகும்.

கவிஞர் தமிழ்ஒளி சிறுகதை படைப்பதிலும் தம் பங்களிப்பைச் செய்துள்ளார். அவையாவன அறிவூட்டும் 100 அற்புதக் கதைகள், குருவிப்பட்டி, உயிரோவியங்கள் என்பன. மாமாவின் சாகசம் என்ற குறுநாவலையும் படைத்துள்ளார்.

தமிழ்ஒளி நாடகங்களாகக் கவிஞர் விழா, சிற்பியின் கனவு ஆகியவற்றைத் தீட்டியுள்ளார்.

முதலில் திராவிட இயக்கத்திலும், அடுத்துப் பொதுவுடைமை இயக்கத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றிவர் கவிஞர் தமிழ் ஒளி.

காவிய மாந்தர்

இனி, காவிய மாந்தரைப் பற்றிக் காணலாம்.

வீராயி

கவிஞர் தமிழ்ஒளியின் வீராயி காப்பியத்தலைவி. காப்பியத் தொடக்கத்திலிருந்து முடிவு வரை துன்பமும் துயரமும் சூழ வாழ்ந்து முடிந்தாள். பிற கதைமாந்தர் அனைவரும் அவளது துன்பத்துக்குக் காரணமாகவோ அல்லது துன்பம் துடைப்பவர்களாகவோ உருவாக்கப்பட்டிருக்கின்றனர்.

மருதூரைச் சேர்ந்தவர்கள் வேடப்பனும் அவன் மகள் வீராயியும். வெள்ளத்தால் மருதூர்ச்சேரி அழிந்தது. வைக்கோற் போரில் ஏறி வேடப்பனும் வீராயியும் உயிர் பிழைத்தனர். வைக்கோற் போர் பயணத்தில் வேடப்பன் இறந்தான். வீராயி ஆதரவு அற்றவள் ஆனாள். அச்சூழலில் அவளுக்கு ஆதரவாக மாரியும் அவன் மகன் வீரண்ணனும் இருந்தனர்.

பருவவானில் வண்ணமதிபோல் வீராயி வளர்ந்தாள். அவள் அழகில் புதுப்பட்டி சமீன்தார் உள்ளம் இழந்தான். செய்த வேலைக்குக் கூலி வாங்கச் சென்றவிடத்தில் முரட்டுக் குணமும் காமமும் மதுக்குடியும் உடைய சமீன்தாரின் காம வேட்டைக்குப் பலியாக இருந்த அவள் வீரண்ணனால் காப்பாற்றப்பட்டாள். சமீன்தார் வீரண்ணனின் கோடரிக்கு இரையானான்.

வீரண்ணன் தக்க சமயத்தில் வந்து காப்பாற்றி இராவிடில் அவள் சமீன்தாரின் காம இச்சைக்கு இரையாகி இருப்பாள்.

வீரண்ணனுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டதை அறிந்து வீராயி துன்பமுற்றாள்' துடித்தாள். அடிபட்ட மானாக, ஒடிபட்ட கிளையாக, தழலில் பட்ட தளிராக, பெரும்பாம்பின் வாயில் அகப்பட்ட தவளையாக என்றெல்லாம் அவள் துயரம் பேசப்பட்டுள்ளதால் அவள் உற்ற துயரின் ஆழம் புலப்படுகிறது.

ஆதரவற்ற வீராயி மாரியுடன் பல இடங்களில் சுற்றித் திரிந்தாள். அவர்களை அன்புடன் ஆதரித்து உணவிடுவார் எவருமிலர். சொந்த நாட்டில் வாழ வழியின்றி உயிர் வாழ்வதை விடக் கடல்தாண்டி உழைத்துப் பிழைக்க எண்ணினாள். 'சுமையற்ற தொழிலும் சுகமான சம்பளமும்' கிடைக்கும் என்ற கங்காணியின் சொல்லை நம்பி ஆப்பிரிக்காவிற்குக் கப்பலில் புறப்பட்டனர் வீராயியும் மாரியும்.

ஆப்பிரிக்கா நாட்டில், முதலாளி ஒருவனிடம் வீராயியையும் மாரியையும் கங்காணி விலைபேசி விற்றுவிட்டான். அவர்கள் அங்குத் தேயிலைத் தோட்டத்தில் உழைத்தார்கள். வெள்ளை முதலாளி சவுக்கால் அவர்களை அடித்து விரட்டி வேலை வாங்கினான். வீராயியின் வாழ்க்கை கண்ணீரும் கம்பலையுமாய்க் கழிந்தது.

மாரியின் அன்பிலும் ஆதரவிலும் ஓரளவு ஆறுதல் கொண்ட வீராயி மற்றும் ஒருமுறை அனாதை ஆனாள். மாரி பாம்பு தீண்டி இறந்தான். அவள் துன்பத்திற்கு ஆளானாள்.

அண்ணன் இறந்தவுடன் - என்

ஆவி துறந்திருப்பேன்

புண்ணியத் தந்தையினால் - அதைப்

பொறுத்துக் கொண்டிருந்தேன்

கண்இரண் டில்லைஇன்று - பினர்

காட்சியும் தப்பிடுமோ?

மண்ணில் உயிர்விடுவேன் - என

மங்கை துணிந்துவிட்டாள் - (வீராயி, ப.57)

(அண்ணன் ஸ்ரீ மாரியின் மகன் வீரண்ணன்' புண்ணியத் தந்தை ஸ்ரீ வீரண்ணனின் தந்தை' காட்சியும் தப்பிடுமோ ஸ்ரீ காட்சி கிடைத்திடுமோ)

வீராயி, தன் இடையில் செருகி வைத்திருந்த சிறிய கத்தியை எடுத்துத் தன் நெஞ்சில் பாய்த்திட எத்தனித்தபோது ஆனந்தன் என்னும் மற்றொரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி அவளைத் தடுத்தான். அவன் 'நாளை கழிந்துவிட்டால் நம் நாட்டிற்குச் சென்றிடலாம்' எனக் கூறினான். ஆனால் அவளோ தன்னை மாய்த்துக் கொள்வதிலேயே கருத்தாக இருந்தாள். 'என்னைக் கொன்ற பின்னர் உன்னையும் மாய்த்துக்கொள்' என்று அவள் இருகால்களையும் பற்றிக் கொண்டான். அவள் சட்டெனக் குனிந்து அவன் கைகளை நீக்கிவிட்டு

கெட்ட உலகினிலே - உம்

கேண்மை சிறப்புடைத்தாம் !

தட்டிடேன் உங்கள்சொலை - இது

சத்தியம் என்றுரைத்தாள். - (வீராயி- ப.60)

வீராயி சாகும் எண்ணத்தை விட்டாள்.

முதலாளியின் கொடிய கண்களில் ஆனந்தனும் வீராயியும் அகப்பட்டுக் கொண்டனர். முதலாளி ஆனந்தனைச் சாட்டையால் அடித்தான். மேலும் அவன் தன் ஆட்களை வரச் செய்து ஆனந்தனைச் சிறையில் இடச் செய்தான். வீராயி வேலையை இழந்தாள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆனந்தன் அவளைத் தேடினான், முடிவில் அவளைக் கண்டான்.

தேடிய செல்வம் புழுதியில் - விழுந்து

எதிரில் கிடப்பதைக் கண்டதும்

ஓடி எடுத்து - (வீராயி- ப.63)

அவள் மேனியில் விழி ஒட்டி நின்றான். முதலாளி தன் கற்பைக் குலைக்க முனைந்ததையும் கூறிக் கதறினாள்.

ஆப்பிரிக்காவிலிருந்து தாயகம் புறப்படும் கப்பலில் ஆனந்தன் வீராயியை அழைத்துக் கொண்டு தன் ஊராகிய மருதூர்க்கு வந்தான். வீராயி ஆனந்தனோடு அவன் வீட்டில் இருந்தாள்.

புதுப்பட்டிக்காரர்கள் வீராயி மாரியின் மகள் என்றும் பறைச்சி என்றும் ஆனந்தனின் தந்தை செல்லப்பக் கவுண்டரிடம் கூறினர். அவரும் சாதியிலே தன்னை ஒதுக்கி வைத்துவிடுவார்கள் என்ற அச்சம் கொண்டார். மகனையும் வீராயியையும் வசை பாடினார். மனைவிக்கும் எச்சரிக்கை விடுத்தார்.

தொலையட்டும் கழுதையது பறைக்குட்டி யோடு !

துளியேனும் இடங்கொடுத்தால் உன்கழுத்து துண்டு - (வீராயி- ப.67)

வீராயியை ஆனந்தன் திருமணம் புரிந்து கொள்ள முடிவு செய்தான். கவுண்டருக்கும் பறைச்சிக்கும் திருமணம் என்ற செய்தி பரவியது. செய்தி கேட்ட கவுண்டர்,

வேரினிலே பிடிக்கின்ற புழுஇந்தப் பையன்

விடவேண்டாம் இருவரையும் கொல்லுங்கள் - (வீராயி- ப.71)

என்று தன் அடியாட்களுக்கு ஆணை இட்டார். அவர்கள் குடிசையைச் சூழ்ந்து கொண்டு சிதைத்தார்கள். ஆனந்தன் அஞ்சாமல் வீராயியை அணைத்த வண்ணம் நின்றான். குண்டர்களின் கொடுந்தாக்குதலுக்கு ஆளான வீராயியும் ஆனந்தனும் உயிர் துறந்தனர்.

தாழ்ந்த குலத்தில் பிறந்த வீராயி துன்பங்களை வாழ்நாள் முழுதும் எதிர் கொண்டாள். தன் கற்பைக் காத்துக்கொள்ளக் கடுமையாகப் போராடினாள். ஆனால் வாழ்க்கைப் போராட்டத்தில் இறப்பைத் தழுவிக் கொண்டாள்.

மாதிரி வினாக்கள்

1. காப்பியம் பற்றி சொல் விளக்கம் தருக.

2. தொடர்நிலைச் செய்யுள் என்றால் என்ன?

3. காப்பியத்தின் இலக்கணம் கூறுக.

5. ஐந்சிறுக்காப்பியங்களை கூறுக.

6. ஆச்சியர் குறவை பற்றி கூறுக.

7. மணிமேகலையின் வேறு பெயர்களைக் கூறுக.

8. மணிமேகலை காப்பியம் எத்தனைக் காதைகளைக் கொண்டது.

9. மணிமேகலை ஏன் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றினாள் என்பதை பற்றி விவரி.

10. சீவனசிந்தாமணியின் ஆசிரியர் யார்? குறிப்பு வரைக.

11. சீவகசிந்தாமணியில் இடம்பெறக் கூடிய இலம்பகம் எத்தனை?

12. சீவகன் எத்தனை பெண்களை மணந்தான் என்று கூறுக.

13. பூமகள் இலம்பகம் பற்றி கூறுக.

14. சூலாமணியில் உள்ள நகரச்சருக்கத்தைப் பற்றி விவரி.

15. கம்பராமயணத்தின் ஆசிரியர் யார்?

16. கம்பராமாயணம் எத்தனை காண்டம் கெண்டது.

17. கடல்தாவு படலத்தில் அனுமனின் செயல்களை கூறுக.

18. பெரியபுராணத்தை இயற்றியவர் யார்? குறிப்பு வரைக.

19. பெரியபுராணம் யாரைப் பற்றி கூறுகிறது என்பதை தொகுத்துரைக்க.

20. கண்ணப்பநாயனாரின் இயற்பெயர் என்ன?

21. கண்ணப்பநாயனாரின் பத்தி திறத்தை புலப்படுத்துக.

22. கண்ணப்பநாயணாரின் நண்பன் பெயர்களை கூறுக.

23. சுரத்திற் புனலலைந்தபடலம் பற்றி விவரி.

24. தேம்பாவணியில் உள்ள நாட்டுப்படலம் பற்றி விவரி.

25. இதிகாச பாடுபொருளினைப் பற்றி விளக்குக.

26. இராவணகாவியத்தில் தாய்மொழிப்படலம் கூறும் செய்தியினை விளக்குக.

27. வீராயி என்ற குறுங்காவியத்தில் நீவிர் அறிந்த செய்தியினை கூறுக.

28. குறுங்காப்பியத்தின் இலக்கணத்தை வரையறுக்க.

முனைவர் செ. சரவணப்பெருமாள்

உதவிப்பேராசிரியர்

தமிழியல் துறை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி - 12

மின் அஞ்சல் : saravanaperumalmsu@gmail.com

Ph: 9047929744

வினாக்கள்

வ.எண்	ஐந்து மதிப்பெண் வினா	LOCF Mapping		
1	இதிகாசபாடுபொருளினைப் பற்றிவிளக்கு.	K2	CO2	PO4
2	இராவணக் காப்பியத்தில் தாய்மொழிப்படலம் கூறும் செய்தியினைவிளக்குக.	K4	CO3	PO5
3	வீராயிஎன்றகுறுங்காவியத்தில் நீவீா் அறிந்தசெய்தியினை கூறுக.	K1	CO4	PO1
4	குறுங்காப்பியத்தின் இலக்கணத்தைவரையறுக்க.	K5	CO5	PO2
5	தற்காலகாப்பியமரபுகுறித்துஎழுதுக.	K3	CO4	PO3

வ.எண்	எட்டு மதிபெண் வினா	LOCF Mapping		
1	தமிழகக் காண்டம் செய்திகளைவிவரிக்க.	K3	CO4	PO4
2	இராவணக்காப்பியம் கதைஅமைப்பினைவிவரி.	K4	CO2	PO6
3	தமிழ் ஒலிவீராயிஎன்றகுறுங்காப்பியசெய்திகளைதொகுத்துரைக்க.	K1	CO1	PO5
4	தாய்மொழிபடலம் செய்திகளைஎடுத்துரைக்க.	K5	CO5	PO6
5	இதிகாசபாடுபொருளினைகட்டுரைக்க.	K6	CO3	PO3